# தேர்ந்த கட்டுரைகள்



வெளியீடு - 9

விடுதலைப் புலிகள்
ட்டு வாரியம்
ம.

JPL
C2185

# தேர்ந்த கட்டுரைகள்

பொதுசன நூலகம்
உடனுக்கவர்
25 05 1992
யாழ்ப்பாணம்
KOHA JPL

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வெளியீடு - 9

தேசிய நூலைப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

86650

21855C-C

86650C.C

தமிழீழ விடுதலைப் புலிகள்
வெளியீட்டு வாரியம்
தமிழீழம்
05-05-92

320.512/2

# தோழர்களுக்கு

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 9 ஆவது வெளியீடாகும்.

இக்கட்டுரைகள் வாயிலாக அறியப்படும் பல்வேறு பட்ட எண்ணங்களை சரியாக ஆய்வு செய்து உண்மைகளை கண்டறிய வேண்டியது வாசிப்பவர்களின் கடமையாகும்.

இக்கட்டுரைகளில் உள்ள தகவல்கள் எல்லாம் சரியானவையல்ல.

இந்நூலை நீங்கள் படிப்பதிலும் பேணிப்பாதுகாப்பதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் மேலும் ஊக்குவிர்கும்.

# பொருளடக்கம்

KOHA JPL

| பொருள் | பக்கம் |
|---|---|
| தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும் | 01-16 |
| விடுதலைப்புலிகளின் கடற்படை நடவடிக்கைகள் | 17-22 |
| இதயங்களின் சந்திப்பு ஜன்சுடன் கடிதங்கள் | 23-27 |
| தமிழ் மக்களிலிருந்து விடுதலைப் புலிகளைப் பிரிக்க முடியாது என்கிறார் தொண்டமான் | 28-34 |
| பானமாகக் கொள்ளக்கூடிய தேயிலையின் தோற்றம் | 35-37 |
| தாக்குதல் நடவடிக்கை 'சிக்சர்' புலிகளைத் தடுமாற்றத்தில் ஆழ்த்தியது | 38-42 |
| யெருசலேம்-நபிகன் நாயகத்தின் வீடு(மோட்சம்) | 43-46 |
| அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறையின் அடுத்த தலைமுறை அமெரிக்கா புதுவகை ஒற்றர்களைத் தேடுகிறது | 47-51 |
| மட்டக்களப்பும் இரண்டாம் உலகப் போரும் | 52-56 |
| ஏப்ரல் தாக்குதல்கள் | 57-61 |
| பாதுகாப்புப் படைகளின் புதிய மாற்றங்கள் | 62-66 |
| வளைகுடாப் போரில் வெளிவராது மூடி மறைக்கப்பட்ட விடயங்கள் | 67-71 |
| ஈராக்கிய ஜனாதிபதி சதாம் அவர்களைக் கொலை செய்வதற்கான திட்டம் | 72-75 |
| இசுலாமிய அடிப்படை வாதத்தைப் பரப்புவதே சூடான் நாட்டுத் தலைவருடைய குறிக்கோளாகும். | 76-80 |
| அரேபியாவின் மணலில் மறைந்த மாளிகை | 81-84 |
| தமிழ் நாட்டு அரசியலில் புலிகள் | 85-90 |
| பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் புதிய கட்டமைப்பு ஈரானுக்கும் சூடானுக்கும் இடையே வளர்ந்து வரும் நட்புறவுகளை யிட்டு ஐக்கிய அமெரிக்கா சந்தேகக் கண்களுடன் பார்க்கிறது | 91-94 |
| மக்களின் உள்ளங்களைக் கவரும் அதே வேளையில் இராணுவ நடவடிக்கை வவுனியாவில் ஜெனரல் கொப்பேகடுவா அவர்களை எமது நிருபர்கள் சந்தித்த போது அவர் கூறியவற்றில் சில | 95-103 |

8650

| | |
|---|---|
| ஐக்கிய அமெரிக்கா இப்போது உலகின் முன்னணி கருவி (ஆயுத) விற்பனையாளர் | 104-110 |
| அடுத்த சீர்குலைவு அமெரிக்காவிலா? | 111-115 |
| எத்தனை சொந்தங்கள்? | 116 |
| விடுதலைப் புலிகளைச் சாராத குழுக்களில் என்ன செய்வதென தெரியாத நிலை | 117-122 |
| கொலைக்குழுக்கள் | 123-126 |
| கிளர்ச்சியாளர்களின் தங்ககங்களை (முகாம்) இராணுவம் கைப்பற்றியது | 127-129d |
| திரு. திலக் பின்னணியில் இருந்து கொண்டு 'ஹெல உறுமய' என்ற அமைப்பை உருவாக்குகின்றார் | 130-134 |
| 'ஹெல உறுமய' கருத்து முரண்பாடு கைவிடப்பட்டது | 135-140 |
| தாக்குதல் நடவடிக்கை 'சிச்சர்' | 141-144 |
| இந்திய மாகடல் பகுதியில் உருவாகும் ஆதிக்க சமநிலை | 145-147 |
| எங்கே பஞ்சம்? | 148- |

# தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தவர் வண. தனிநாயகம் அடிகளார்

(வீரகேசரி 13.3.92 - கே. பி. நடனசிகாமணி)

கிறிஸ்தவத் துறவிகளான ஜி. யு. போப், கோல்ட்வெல், கிராசு போன்ற மேலைத்தேச அறிஞர்கள் பலர் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றி உள்ளனர். அந்த வழியில் இலங்கையில் வாழ்ந்தவர்களுள் மேல்நாட்டவ ரான பீட்டர் பேர்சிவலின் பணிகள் பாராட்டத்தக்கவை. இலங் கையைப் பொறுத்தவரையில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தனிநாயகம் அடிகள், தாவீது அடிகள் ஆகியோர் பணிகள் ஆரோக்கியமானவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இவர்களுள் தனிநாயகம் அடிகளின் பணிகள் தனித்தன்மை வாய்ந்தவை. யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பக்கல் வியை முடித்துக்கொண்டு ரோம் நகர் சென்று மறைக்கல்வி கற்ற இவர் அங்கிருந்து திரும்பி தூத்துக்குடியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ்கற்று முது கலைமாணிப் பட்டமும் பெற்றார்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கல்வித்துறை விரிவுரை யாளராகக் கடமையாற்றிய அடிகளார் 1960ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகம் சென்று பண்டைத்தமிழர் கல்விபற்றி ஆய்வு செய்து 'கலாநிதி' பட்டம் பெற்றார். 1959ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியின் வளர்ச் சியை எடுத்துக்காட்டும் தமிழ்நூல்கள் கண்காட்சி ஒன்றை யூன் 5ஆம் திகதி நடத்தினார்.

1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து காலிமுகத்திடலில் தமிழரசுக்கட்சி நடத்திய சத்தியாக்கிரகத்

தில் கலந்துகொண்ட இவர் தமிழ் மொழியும் அரச கருமமொழியாக ஆக்கப்படவேண்டுமென்று அரிய பல கட்டுரைகளை எழுதுனார். அன்றைய பிரதமரான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவைச் சந்தித்து பல மாற்று யோசனைகளை எடுத்துக் கூறினார். இதைத் தொடர்ந்து 1961இல் இடம்பெற்ற சத்தியாக்கிரகத்தை ஆதரித்து நாட்டின் பல பாகங்களிலும், கூட்டங்கள் நடத்தி நிதி திரட்டி உதவினார். இந்தசத்தியாக்கிரகம் வட-கிழக்கிலும் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவதற்கு அரசு எடுத்த முடிவை எதிர்த்து நடத்தப்பட்டது என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

1961 இல் மலேஷியாப் பல்கலைக் கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தியத் துறையின் பொறுப்பாளராகப் பதவியேற்று மலேஷியா சென்றனர். இந்தியத் துறையில் தமிழர் வரலாறு, இலக்கியம், பண்பாடு என்பவற்றையும் கற்பிக்க ஏற்பாடு செய்தும் கொடுத்ததன் மூலம் மலேஷியாத் தமிழர் வாழ்வில் ஒரு புதுயுகம் பிறக்க வழிவகுத்தார்.

1952 இல் அடிகள் தூத்துக்குடியில் இருந்த போது 'தமிழ்ப் பண்பாடு' என்ற ஒரு கால் ஆண்டு ஆராய்ச்சி ஏட்டை வெளியிட்டார். பல நாடுகளுக்கும் அடிக்கடி சென்று வந்த அவர் ஆங்காங்கே தமிழியல் ஆய்வில் திராவிடவியல் ஆய்வில் ஈடுபட்டிருந்த பல அறிஞர்களையும் சந்தித்தார். அவர்களின் ஆய்வு முடிவுகளை ஏனைய அனைவரும் படித்துப் பயன்பெற விரும்பியே 'தமிழ்ப் பண்பாடு' என்ற ஏட்டை வெளியிட்டார். அது மிக நல்ல பயனைத் தந்தது. தமிழாராய்ச்சி முடிவுகளினால் அறிஞர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் அதிக பயன் பெற்றனர். தமிழாராய்ச்சிக்குப் புதிய பரிமாணத்தை இது தந்தது. புதுப் புது ஆராய்ச்சிகளில் ஈடுபட இது தூண்டியது. உலகப் பல்கலைக் கழகங்களில் தமிழ், திராவிட ஆய்வு தொடர்பாக புதிய பல பிரிவுகள் தொடக்கப்பட்டன.

பதின்நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவந்த 'தமிழ்ப் பண்பாடு' ஏடு செய்த தாக்கத்தால் தமிழாராய்ச்சியும், தமிழாராய்ச்சி அறிஞர்களின் எண்ணிக்கையும் வளர்ச்சி பெற்றது. இதன் விளைவை உணர்ந்த அடிகளார், அவர்களை ஒன்று கூட்டி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தமிழாராய்ச்சி மாநாடுகளை நடாத்தத் தீர்மானித்தார்.

முதல் மாநாடு 1966 ஏப்ரல் மாதம் மலேஷியாவிலும் இரண்டாவது மாநாடு 1968 தை மாதம் சென்னையிலும், மூன்றாவதுமாநாடு 1970 ஆகஸ்ட் மாதம் பாரிசிலும் நான்காவது மாநாடு 1974 தை மாதம் யாழ்ப்பாணத்திலும், ஐந்தாவது மாநாடு 1981 தை மாதம் மதுரையிலும் ஆறாவது மாநாடு 1987 இறுதியில் மலேசியாவிலும் ஏழாவது மாநாடு 1989 இல் மொறீஷியஸ் நாட்டிலும் நடைபெற்றன

மதுரை மாநாட்டிலும் அரசியல் தன்மை கலப்பு இருந்தபோதிலும் மதுரை மாநாடு வரை ஆராய்ச்சித்தன்மை பேணப்பட்ட நிலையிலேயேமாநாடுகள் நடைபெற்றன. 1987மலேஷியாமாநாடும் 1989 மொறிஷியஸ் மாநாடும் முற்றிலும் அரசியல் கலந்தமாநாடுகளாக மாற்றப்பட்டு விட்டதாக அறிஞர்கள்பலர்கவலை தெரிவிக்கின்றனர். தரமான அறிஞர்களோ தகுதியான கட்டுரைகளோ இங்கு இடம்பெறவில்லை என்பதே பரவலான குற்றச்சாட்டுகளாகும்இதனைஉறுதிசெய்வதுபோல்இந்த இரண்டுமாநாடுகளின்கட்டுரைகளும் இதுவரை வெளியிடப்படவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும். மதுரை மாநாடுவரை கட்டுரைகள் ஒழுங்காக வெளியிடப்பட்டுள்ளன என்பதும் இங்குகுறிப்பிடத்தக்கதாகும்.

குண்டுச்சட்டியில் குதிரையோடியே பழக்கப்பட்ட நம்தமிழர்களின் குறுகிய பார்வையிலிருந்து விடுபட்ட தனிநாயக அடிகளார் தமிழுக்கு உலகரங்கில் ஓர் உன்னதமான மதிப்பான இடத்தைத் தேடித்தந்த உத்தமர். 'சேமரத் தமிழோசை உலகமெல்லாம்யாவும் வகைசெய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்கிய பண்பாளர்.

தமிழுக்கு புகழ்தேட, வளம் சேர்க்க புதியபாதை அமைத்த புரட்சித்துறவி. அவரின் ஆளுமை ஒரு காந்த சக்திகொண்டது எவரையும் அவர்பால் ஈர்க்கும் சக்தி கொண்டது. இனிமையான சுபாவமும் மனித நேயமும் கனிவான பேச்சும் களங்கமற்ற நெஞ்சமும் துணிவும் பணிவும் தூய்மையும் நேர்மையும் வாய்மையும் ஒருங்கேகொண்ட தனிநாயகம் அடிகள்ஒருதனி மனிதனல்ல 'ஒரு தத்துவம்' என்றே அறிஞர்கள் கூறிமகிழ்கின்றனர்

# கரும்புலி விடுதலை உணர்வது கேட்குதா?

கடல் அலையே நீ கொஞ்சம் நில்லு
தமிழ்ப்படை புலிப்படை வீரத்தை உலகெங்கும் சொல்லு!

அலை வற்றிக் கடல் அது சாகுமா?
புலிப்படை தோற்று தமிழீழம் வீழுமா?
கடல் அலையே நீ கொஞ்சம் நில்லு
இச்கதையை ஊரெங்கும் நீ போய்ச் சேரு!

விரைந்தது படகு அதை நீ கண்டாய்
எழுந்தது ஓசை அதில் நீ அதிர்ந்தாய்
வந்தவர் எங்கே போயினர்
கடல் அலையே தெரிந்தால் உலகுக்குச் சொல்லு!

ஆறடி மண்ணுக்குள் அடங்கிடோம்
எனும் கரும்புலி விடுதலை உணர்வது கேட்குதா?
கடல் அலையே உலகெங்கும் சென்று
தமிழன் வீரத்தின் எல்லையைத் தேடு!

கடல் போல் மக்கள் படை வரும்
அணி அணியாய் கடற்படை வலம் வரும்
அலை அலையாய் புலிப்படை எழும்
மலை மலையாய் எதிரிகள் தலை விழும்!

கடல் அலையே இது பெரும்படை
தமிழ்ப்படை மாண்பினை உலகெங்கும் சொல்லு!

# தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும்

(தவத்திரு சேவியர் எஸ் தனிநாயகம் அடிகள் 1980ஆம் ஆண்டு ஏப்ரலில் நடத்திய சொற்பொழிவில் இருந்து)

## பண்பாடு என்பது யாது?

மக்களியல் வல்லுனர் (*Anthropologists*) பண்பாடு எனும் சொல்லைக்கையாளும் பொருள்களைப்பற்றி நாம் குறிக்கவேண்டியதில்லை. அவர்களின் கருத்தின்படி பழைய மக்களின் வாழ்க்கையை விளக்கும் எல்லாத் துறைகளும் பண்பாடு என்னும் சொல்லில அடங்கும். சென்ற நூற்றாண்டில் மத்தியு ஆர்னல்ட் (*Matthew Arnold*) எனும் நூலாசிரியர் தாம் எழுதிய ஒரு நூலில் இக்காலததிற்கு ஏற்றவாறு பண்பாட்டுத் துறையை விளக்கினார். இந்த நூற்றாண்டு டீ. எஸ். எலியட் (*T.S Eliot*) எனும் ஆங்கிலப் புலவர் ''பண்பாட்டின் வரையறைபற்றிய குறிப்புகள'' எனும் நூலில் ''பண்பாட்டை'' இன்னும் விரிவாக விளக்கினார். பண்பாடு என்பது இனிமையும், ஒளியும் என்றும், சிந்தனையின் தொழில் என்றும், அழகிலும் மனித உணர்ச்சியிலும் ஈடுபாடு என்றும் கூறியுள்ளார். நம்மிலக்கியத்தில் பண்பாடு என்னும் சொல் இந்நூற்றாண்டில்தான் ஆங்கில மறிந்த தமிழ் அறிஞரால் உண்டாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இன்று நாம் பண்பாடு எனும் சொல்லால் குறிப்பிடும் துறைகளை நம் முன்னோர் பண்பு. பண்புடமை. சால்பு, சான்றாண்மை முதலிய சொற்களால் குறித்துள்ளனர். இச் சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறு சில பண்பாட்டுடன் தொடர்புள்ள பொருள்களைக் குறித்தாலும் பல இடங்களில் பண்பாட்டையே கருதுகிறது. கலித்தொகையில் ''பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுவது'' என்றும் வள்ளுவத்தில் ''பண்புடையார் பட்டுண்டு உலகம்'' என்றும் வருவதைக் காண்க. ''பண்பாடு உடையவரைச் சான்றோரென்றும், ஒழுக்கமுடையோரென்றும், ஒளியோரென்றும், மாசற்ற காட்சியுடையோர் என்றும் அழைத்தனர். ஆங்கிலத்தில் (*Culture*) எனப்படும் சொல்லிற்குத் தமிழில் பண்பாடு என்று குறிப்பிடுகின்றோம். ஆங்கிலச் சொல் எவ்வாறு இலத்தின் சொல்லாகிய (*Cultura Agr(i*) நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து பிறந்ததோ அதுபோல் தமிழ்ச் சொல்லாகிய பண்பும் நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து தோன்றியிருக்கவேண்டும்? உழவுத் தொழில் எவ்வாறு நிலத்தைப்பண்

படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பண் படுத்துவது பண்பு. இச்சொல்லைத்தான் பண்பாடு என்னும் பொருளில் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் நூலாசிரியர் பயன் படுத்தியுள்ளார்.

பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள், வாழ்க்கைமுறை கள், பழக்கவழக்கங்கள், சமூகச்சட்டங்கள், களவொழுக்கம், கற் பொழுக்கம், அகத்திணை புறத்திணை மரபுகள் இலக்கியமரபு கள், அரசியலமைப்புகள், ஆடை அணிகலங்கள், திருவிழாக் கள், உணவு பொழுதுபோக்கு விளையாட்டுகள், இவற்றை யெல்லாம் குறிக்கும். ஓர் இனத்தாரின் பண்பாட்டை நாம் அறிந்து கொள்வதற்கு உயர்ந்த இலக்கியம் பயன்படுவதுபோல நாடோடி இலக்கியமும் பயன்படுகின்றது. அதனை 'நாட்டுப் பாடல்களிலும், நாடோடி இலக்கியங்களிலும் பழமொழிகள், முதுமொழிகளிலும், இசையிலும், நாடகத்திலும் நாட்டியத்தி லும், செந்தமிழ் கொடுந்தமிழ் அமைப்பிலும், வளர்ச்சியிலும், காணலாம். மேலும் ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை முதலிய கலைகளிலும் ஓரினத்தாரின் பண்பாடு தோன்றும்

தமிழர் பண்பாட்டை ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளா கத் தமிழ் மக்கள் வளர்த்துவந்த இலக்கியங்களு, கவின்கலை களும் எடுத்துக்காட்டுகின்றன. ஆயினும் ஒருசில நூல்களை மட்டும் தமிழர் பண்பாட்டின் களஞ்சியங்களாகக் குறிப்பிட வேண்டுமாயின் ஐந்து நூல்களைக் குறிப்பிடுவேன். அவை தொல்காப்பியப் பொருளாதாரம், குறுந்தொகை, புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம் என்பன. தமிழர் பண்பாடு கால அடைவில் சிறிது மாறிவந்துள்ளது. ஆனால் அதனுடைய அடிப்படைக் கொள்கைகள் இத்துணை நூற்றாண்டுகளாக மாற் றங்கள் அடையவில்லை. ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்தகாலத் தில், சிறப்பாக அவர்களுடைய சமய - சமூகக் கொள்கைகள், தமிழ்நாட்டிலும் பரவின. சமணர், புத்தர், ஐரோப்பியர் தமிழ் நாட்டுடன்கொண்ட தொடர்பாலும் ஒரு சில மாற்றங்கள் ஏற் பட்டுள்ளன. ஆயினும் பிறநாட்டுச் சமயங்களும் மக்களும் தமிழ் நாட்டில் புகுந்த காலத்தில் தமிழ்மரபைக் காத்துவரப் பயின் றனர். தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் சமணர். தமிழ் ஒழுக்கத்தின் களஞ்சியமாகிய வள்ளுவத்தை இயற்றியவர் சமணர் என்றும் சிலர் கூறுகின்ற னர். தொல்காப்பியரும் சமணரென்பது பேராசிரியர் வையாபுரிப்

பிள்ளையின் கருத்து. ஆனால் அக் கருத்துக்கு அவர்போதிய சான்றுகள் தரவில்லை. இந்நூலாசிரியரும் வீரமாமுனிவர் போன்ற மேனாட்டாரும் தமிழ் மரபையே தழுவி வாழவும் பாடவும் முயன்றனர்.

நம் பண்பாட்டை அடிப்படையாகக்கொண்டே எக்காலத்திலும் புலவர்கள் பாடியிருக்கின்றனர் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டில் தமிழின் மலர்ச்சிக்குக் காரணமாயிருந்த எழுத்தாளர் பலர் ஆங்கிலத்தை நன்கு அறிந்திருந்தாலும், மேல்நாட்டு இலக்கியக்களையும், வரலாற்றையும் நன்கு பயின்றிருந்தாலும் அவர்கள் தமிழ்ப் பண்பாட்டை இழக்கவில்லை மாற்றவில்லை. மயிலாடுதுறை வேதநாயகம்பிள்ளை, சுந்தரம் பிள்ளை வி. ஜி. சூரியநாரயணசாஸ்திரி என்னும் பரிதிமால் கலைஞன், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை பேராசிரியர் மு. வரதராசன் போன்றவர்கள் தம் ஆங்கிலப் பயிற்சியால் தமிழர் பண்பாட்டை விளக்கினாரொழிய அதனை மாற்றவில்லை.

நாகரிகம் என்னும் சொல்லும் பண்பாடு என்னும் பொருளில் இக்காலத்தில் கையாளப்பட்டு வருகின்றது. திருக்குறளிலும் நற்றிணையிலும் முதல் முதல் தோன்றுமிச் சொல் நகரவாழ்கையின் அமைப்பையும் பயனையும் குறிக்கின்றது ஆங்கிலத்தில் (*Civiligation*) என்று கூறப்படும் பொருளைத்தான் நாகரிகமும் குறிக்கின்றது *City, Citigen, Civiligation* என்ற சொற்கள் இலத்தீன் மொழியின் *Civilitas, Civis Civilisation* எனும் சொற்களிலிருந்து தோன்றியவை அதேபோல இந்த இலத்தீன் சொற்கள் எக்காலத்தில் தோன்றினவோ அக்காலததிலேயே நகர் நகரநம்பியர், நாகரிகம் என்ற சொற்களும் தோன்றின. சங்க இலக்கியத்தில் நகர் நகரைக் குறிப்பதுடன் ஒரு பெரும் இல்லத்தையும் குறிக்கும். நகரில் சிறடைந்த மக்களை நகரநம்பியர் குறிக்கும். சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் நகரநம்பியர் வருவதைக் காண்க நகர் என்ற சொல் திராவிடச்சொல் தான். வடமொழிச் சொல் அன்று. ஆரியர் வட இந்தியாவைக் கைப்பற்றிய காலத்தில் திராவிட மக்கள் பெரும் நகர்களில் வாழ்வதைக் கண்டு வியப்பு அடைந்தனர். திராவிட மக்களிடமிருந்தே நகர்களை அமைக்கவும் ஆரியர் கற்றுக்கொண்டனர்.

இந்நூற்றாண்டில் நாகரிகம் என்னும் சொல்லையும் பண்பாடு என்ற பொருளில் கையாளுவது மரபாயிற்று. ஆனால்

நாகரீகம் நகர வாழ்வையும், நகரவாழ்க்கையால் பெறப்படும் நலன்களையும் குறிப்பதுடன் அறிவியல் துறையால் பொருளியல் துறையால் மக்கள் அடைந்துவரும் மாற்றங்களையும், முன்சினற்றங்களையும் குறிக்கத்தான் பயன்படுத்தப்படவேண்டும். லே வேளைகளில் பண்பாடு ஏது, நாகரீகம் ஏது என்று பிரித்துக் கூறுவது எளிதாக இராது. ரேணர்(Turner) என்பவர் The Great Culture Traditions என்ற நூலில் உலகின் பெரிய நாகரீகங்களையும், பண்பாடுகளையும் விளக்கியுள்ளார். ஆர்ணல்ட் ரொயிம்பி (ArnoldToynbee) என்பவர் (The Great Civiligalions) எனும் நூலில் பண்பாட்டையும் நாகரீகத்தையும் சேர்த்து விளக்கியுள்ளார். இவ்வாறு தமிழர் பண்பாடும் நாகரீகமும் என்று கூறுவதும் இயல்பாயிற்று பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களில் இந்து நாகரீகம்(Hindu Civiligation) கிறிஸ்தவ நாகரீகம் என்று கூறும் பொழுது பெரும்பாலும் பண்பாட்டையே கருதுகின்றனர். ஆகலால்தான் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் (Culture andCiviliga ion) என்று இணைத்து பாடத்திட்டத்தின் தலைப்பை வெளியிடுகின்றனர். ஆனால் இயன்ற மட்டும் இவ்விருதுறைகளையும் பிரித்து நோக்குவது பண்பாட்டினை ஆழ்ந்து ஆராய்வதற்கு வழிவகுக்கும்.

## தமிழர் பண்பாட்டின் கோட்பாடுகள் சில.

தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் சிலவற்றை சுருக்கமாகக் கூறவிரும்புகின்றேன். அவற்றை நம்இலக்கியங்கள் பலவற்றில் தெளிவாகக் காணலாம். பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை ஆதலால்தான் புறநானூற்றில் '' யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றும் வள்ளுவத்தில் ''யாதானும் நாடாமல் ஊராமால்'' என்றும் குறிப்பிட்டுள்ளன விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை. பிறரன்பு ஈகை தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு என் கடன் பணிசெய்து கிடப்பதே அகத்திணை புறத்திணை மரபு மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை மனத்தூய்மை விடாது முயலல் எனும் கொள்கை யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மனநிலை உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளென்றே கூறலாம்.

இவ்விலட்சியங்களைத் தமிழ் இலக்கியங்களில் பன்முறை தேற்றம் கொடுத்து வற்புறுத்துவதைக் காண்கின்றோம். எடுத்

துக்காட்டாக புறநானூற்றில் வரும் ''உண்டாலம்ம இவ்வுலகம் என்ற செய்யுளும் ''இம்மைக்காவது மறுமைக்காமென'' என்ற செய்யுளும் குறிப்பிடத் தக்கவை

நம்மிலக்கியங்களை நன்கு ஆராய்ந்தால் அவை பண்பாட்டுத்துறைகளை நன்கு பயன்படுத்துவதைக் காண்கின்றோம் தொல்காப்பியர் கருப்பொருளில் பண்பாட்டுத்துறைகள் சிலவற்றைக் கூறுகின்றார். அவற்றுள் வழிபாடும் இசையும் இசைக் கருவிகளும் சில அகத்திணையியலில் 20 ஆம் சூத்திரத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-

தெய்வம் உணர்வே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகை
அவ்வகை பிறவும் கருவென மொழிப

இவ்வாறே பண்பாட்டின் கொள்கைகளும் இலட்சியங்களும் எல்லாக் காலத்து இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.

தமிழர் பண்பாடு கால அடைவில் மாற்றங்கள் அடைந்துள்ளதா எனும் வினாவிற்கு மாற்றம் அத்துணை அடைந்ததில்லை. ஆனால் வளர்ச்சி அடைந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். வட ஆரியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்திலும் சமணர் ஐரோப்பியர் ஆகிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும் சமணரும் புத்தரும் ஐரோப்பியக் கிறிஸ்தவரும் மகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். இந்து சமயத்தின் வழிபாட்டு முறையும், இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம்பெற்றன வடமொழியிலுள்ள சமய இலக்கியங்கள் பல சங்கரர், இராமானுஜர், மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்கள் வடமொழியில் இடம் பெற்றன சுநீதிகுமார் சட்டர்ஜி, இந்திய பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு திராவிட பண்பாடு என்று குறிப்பிட்டுள்ளார். சமணரியற்றிய சிலப்பதிகாரத்தையும், புத்தரியற்றிய மணிமேகலையையும், வீரமாமுனிவரியற்றிய தேம்பாவணியையும், உமாறுப் புலவர் இயற்றிய சீறாப்புராணத்தையும் ஆராயுங் காலை இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும் தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளக்கியுளாரென்பதும் புலனாகின்றது.

இவை நிற்க, தமிழர் பண்பாட்டின் சிறப்பு இயல்புகள் சிலவற்றை ஒரு சிறிது ஆராய்வோம்.

## உலக மனப்பான்மை

பண்டைக்காலம் தொடங்கி தமிழ்மக்கள் மேற்றிசை நாடுகளோடும், கீழ்த்திசை நாடுகளோடும் இந்தியாவின் வடபாகத்தோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் தமிழ் நாட்டின் பட்டையும், மிளகையும், முத்தையும் இன்னும் பல பொருள்களையும் உலகம் விரும்பியுள்ளது. தமிழ் நாட்டின் புவியியல் அமைப்பு, அதனைப் பண்டமாற்றத்திற்கு ஏற்ற இடமாக அமைத்துள்ளது. கீழ்த்திசை நாடுகட்கு செல்ல வேண்டிய மேற்றிசைப் பண்டம், தமிழ்நாட்டில் இறக்கப்பெற்று வேறு மரக்கலங்களில் கீழ்த்திசை நாடுகட்கு அனுப்பப்பட்டது. இவ்வாறே கீழ்த்திசைப்பண்டமும் தமிழ்நாட்டில் வைத்து மரக்கலங்களில் மேற்றிசை நாடுகட்கு அனுப்பப்பட்டது. மேற்றிசை நூல்களே சங்கஇலக்கியத்தைப் போல் இவ்வணிகத்துக்குச் சான்றுதருகின்றன. எனவே இத்தாலிய நாட்டில் வாழ்ந்த ஸ்டொயிக் (*Stoic*) வாதிகள் உரோமையப் பேரரசு காலத்தில் எவ்வாறு ஓர் உலக மனப்பான்மையை வளர்த்தார்களோ அவ்வாறே சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி ஓர் உலக மனப்பான்மை தமிழ்நாட்டில் பரவியுள்ளது. ''யாதும்ஊரே யாவரும் கேளிர்'' என்றும் 'யாதானும் நாடாமல் ஊராமல்'' என்றும் கூறுவதற்கு இம்மனப்பான்மை ஊக்கமளித்தது.

மேலும் சமணம், புத்தம் போன்ற சமயங்களும் தமிழ் நாட்டில் வரவேற்கப்பட்டதால் இம்மனப்பான்மை விரிவாகியது. பார்ப்பனர், மொழிபெயர்தேயத்தார், யவனர், புலம்பெயர் மாக்கள் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள். இம் மனப்பான்மை ஒரு சில காலங்களில் சமயக்காழ்ப்பால் மாசு அடைந்ததாயினும், அது எக்காலத்திலும் தமிழ் மக்களிடம் வளர்ந்தே வந்துள்ளது. பிறமக்களின் நலத்தைக் கருதும் பண்பு தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்னும் தன்மை இச் சிறப்பை மேலும் வளர்த்தது. இம்மனப்பான்மை வட ஆரியர், கிரேக்கர் போன்றோருடைய பண்டைக்கொள்கைகளுடன் முரண் பட்டேயிருந்தது. பிளேட்டோ அரிஸ்ரோட்டல் போன்றோர் கிரேக்கர் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும் பிற மக்களை நாகரிகம் அற்றவர்கள் என்றும் கூறிவந்தனர். வடஆரியர் இமய மலைக்கும் விந்தியமலைக்கும் இடையேயுள்ள நிலம்தான் புண்ணிய பூமி என்று கருதினர்.

## கண்ணோட்டம்.

உலக மனப்பான்மையிலிருந்து தோன்றிய வேறொரு இயல்பினை கண்ணோட்டமென்று (*Tolerance Ecumenism*) அழைக்கலாம். தமிழ்நாட்டிற்கு அப்பாலிருந்து வந்த சமயங்களெல்லாம், தத்துவங்களெல்லாம் தமிழ்நாட்டில் தடையின்றிப் போதிக்கப்பட்டன. பெரும் விழாக்களில் தத்துவ வாதிகள், சமயவாதிகள் தத்தம் கொடிகளைப் பறக்கவிட்டுத் தம் கருத்துக்களைப்பற்றி உரை நிகழ்த்தினர். திருவள்ளுவர் தம் கருத்துக்களைப் பல மூல நூல்களிலிருந்து எடுத்திருக்க வேண்டும். சங்கநூல்கள் பல்வேறு கருத்துகளுடைய புலவர்களின் இலக்கியப் படைப்புக்களைக் கொண்டுள்ளன. சமணராகிய இளங்கோ அடிகள் தமிழர் தழுவிய பல பழக்க வழக்கங்களையும், வழிபாட்டு முறைகளையும் விரித்துக் கூறியுள்ளார்.

சமணரும் புத்தரும் இசைக்கலை, நடனக்கலை போன்ற கலைகளை வெறுத்தாராயினும் இளங்கோ அடிகள், திருத்தக்க தேவர் போன்றோர் தமிழ்க்கலைகளை நன்கு விரித்துக் கூறியிருக்கின்றனர். திருவள்ளுவர் சமணராக இருந்திருப்பார் என்ற கூற்றுக்கு அவருடைய காமத்துப்பாலும் இல்லறத்தைப் போற்றும் முறையும் முரண்பாடாக இருக்கின்றன. நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணிக்கு உரையெழுதியது போல சமணர் எனக்கருதப் படும் இளம்பூரணர் அகத்திணையியலுக்கு உரையெழுதியுள்ளார்.

இடைக்காலத்தில் வைணவர், சைவர் ஆகிய பார்ப்பன உரையாசிரியர் சமண நூல்களை எத்துணை ஆர்வத்துடன் அவை இலக்கிய நூல்களெனக் கருதி, அவற்றின் மூலங்கட்கு நுட்பமான உரைகளை எழுதியிருக்கின்றனர். பிற்காலத்தில் சமயசமரச கீர்த்தனைகள் என்றும், சமரசக் கொள்கைகள் என்றும் எங்கு உண்மையும் அழகும் உள்ளதோ அங்கிருந்து கருத்துக்களை நூலாசிரியர் எடுத்துத் தந்திருக்கின்றனர். பேராசிரியர் சேதுப்பிள்ளை திருகாவலூர்க் கலம்பகத்தைப் பற்றியும், தேம்பாவணியைப் பற்றியும், சீறாப்புராணத்தைப் பற்றியும் தந்த கருத்துக்களைப் போல வேறு எவரும் எழுதியதாக நான் அறியேன். திரு.வி. கல்யாணசுந்தர முதலியார், கிறிஸ்துவின் அருள்வேட்டல், புத்தரின் அருள் வேட்டல் போன்ற இலக்கியங்களைப்பாடி இன்புற்று வாழ்ந்தார். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை இயேசுவைப்பற்றி, புத்தரைப்பற்றி பாடியுள்ளார்.

பிறநாடுகளிலிருந்து வந்த சமயக் குரவர் தமிழர் பண்பாட்டைக் கடைப்பிடித்து இக்கண்ணோட்டத்துடன் தமிழர் மரபின்படியே இலக்கியங்களையும், இலக்கணங்களையும் யாத்தார்கள். வீரமாமுனிவர், கால்டுவெல்ஐயர், போப்பையர் போன்றவர்கள் இம்மனநிலையைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள்.

## பக்தி

தமிழ் பக்தியின் மொழி என்று நான் அடிக்கடி கூறிவருகின்றேன். ஏனெனில் தமிழிலுள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும், ஆழத்திலும் பரப்பிலும் இத்துணை இலக்கியம் வேறெந்த மொழியிலும் இருப்பதாக நான் அறியேன். பரிபாடல் முதலாக இராமலிங்க சுவாமிகளும், விபுலானந்த அடிகளும் ஈடாக பக்திப் பாடல்களைப் பாடிய புலவர்கள் எண்ணிறந்தவர்கள். பரிபாடலில்,

யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல, நின்பால் அன்பும், அருளும், அறனும் மூன்றும்.

விபுலானந்தருடைய,

வெள்ளை நிற மல்லிகையோ வெறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

அப்பர் சுவாமிகளின்,

மாசில் வீணையும் எனும் பாக்களைப்பாடி இன்புறாத தமிழ் மக்களில்லை.

இந்தப் பக்தி இலக்கியம் உண்டாகுவதற்கு நம் அகத்திணை இலக்கியம் ஒருவாறு துணையாக இருந்திருத்தல் வேண்டும். இன்று தமிழ் மொழியை ஆராயும்பொழுது பக்தியை உணர்த்தும் சொற்கள் பல அமைவதைக் காண்கின்றோம். ஆதலால் சமயப் பொருளற்ற பிறநூல்களிலும் இந்தமொழி ஒலிகிறது. எடுத்துக்காட்டாகப் பாரதி தாசன் பாடிய தமிழ்மொழி பற்றிய பாடல்கள் பக்திச் சொற்களை மிகுதியாகக் கொண்டவை. நாயன்மார் ஆழ்வார், சேக்கிழார், கம்பர் போன்றவர்களுடைய பக்திப்பண்பு உலகிலேயே நிகரற்றது.

இப்பக்திப் பண்பினை ஏனைய தமிழ்க் கலைகளிலும் காணலாம். தஞ்சாவூர்ப் பெரியகோவில், கங்கை கொண்ட சோழபுரம், இசைக்கலை, பரதநாட்டியம் போன்றவை பக்தியால் இயற்றப்பெற்றவை, அல்லது பக்தியால் வளர்ச்சியுற்றவை இப்பக்தி பிறநாடுகட்கும் பரவியது. இந்தோனீசியாவிலிருக்கும் பிறம்பாணான்பானாத்தரான் கோயில்கள் கம்புச்சியாவிலிருக்கும் சில அரண்மனைகள், சிற்பங்கள் தாய்லாந்தில் கொண்டாடப் படும் திருவெம்பாவைத் திருநாள் இத்தமிழ்ப்பக்தியின் பயனென்றே கூறவேண்டும். உலகம் போற்றும் ஆடவல்லாரின் வடிவம் இப்பக்தியின் பயனென்பதை யார் மறுப்பார்? தமிழர் பண்பாடு பிறநாடுகட்டுப் பரவுவதற்குப் பல்லவச் சோழர் படை வீரம் மட்டுமல்ல இப்பக்தியும் காரணமாக அமைந்தது.

## ஒழுக்கம்

தமிழர் பண்பாட்டில் பக்தி எங்ஙனம் சிறந்து விளங்கியதோ நீதியும் அவ்வாறே சிறந்து விளங்கியுள்ளது. பாரதியாரின் 'வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்து வான்புகழ் பெற்ற தமிழ்நாடு' என்னும் கூற்றைச் சிந்திக்கும்பொழுதெல்லாம் அதன் உண்மையை உணர முடிகின்றது. உலகநீதி இலக்கியங்களைச் சிறப்பாக ஆராய்ந்து அரும்பெரும் நூல்களை இயற்றிய அல்பேட் சுவைட்சர் என்னும் மகாத்மா திருக்குறளைப்பற்றி எழுதும் பொழுது "திருக்குறளைப்போல் உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட ஒரு நூலை இவ்வுலகில் காண்பது அரிது" என்று குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறளை அவர் ஜேர்மன் மொழிபெயர்ப்பில் படித்தார். தமிழ் மொழியில் அதனைப் படித்திருந்தால் இன்னும் பன்மடங்கு அதிகமாக அதன் பெருமையை உணர்ந்திருப்பார். திருக்குறளுக்குப்பின் தோன்றிய ஏனைய நூல்களைப்பற்றி நான் குறிப்பிடவேண்டியதில்லை. தமிழை முதற்கற்ற மேனாட்டார் அனைவரும் நம் நீதி நூல்களையே முதலில் மொழிபெயர்த்துத் தமிழ் மக்களுடைய வாழ்க்கை ஞானத்தைப் போற்றினார்கள். ஒழுக்கமென்பது தமிழர் பண்பாட்டின் ஓர் அடிப்படைக் கொள்கையாக அமைந்து இன்றும் தமிழர் வாழ்க்கைக்குப் பெரும் அழகையும்மனநிறைவையும் நல்குகின்றது. தமிழ்மக்கள் இத்துணை நூற்றாண்டுகளாகத் தனிநாடுகளில் வாழ்ந்து செழித்தோங்குவதற்குப் அரசியல் வாழ்க்கைக்கும் இவ்வொழுக்கமே துணையாக அமைந்தது. எனவே தான் போப்பையர் இத்துணை நீதி

நூல்களை இயற்றிய மக்களுக்குக் கடவுளின் சிறப்பான அருள் இருத்தல் வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் நலக் கொள்கை

இம்மக்கள் நலக் கொள்கையை ஆங்கிலத்தில் *Humanism* என்று அழைப்பர். *Terence* ரெறன்ஸ் என்னும் இலத்தீன் புலவர் ''நான் மனிதன்'' மனிதனுக்கு இயல்பான எதனையும் நான் வெறுப்பதில்லை.''எனக்கூறிய கூற்றை மேல்நாட்டார் இம்மக்கள் நலப் பண்பின் குறிக்கோளாகப் போற்றுவர். இப் பண்பு தம் பண்பாட்டில் ஓர் அடிப்படைக் கொள்கையாக அமைந்துள்ளது. மனிதனை என்றும் பேணவேண்டுமென்றும், ஒரு செயலால் வரும் பிற நலன்களைக் கருதாமல் நன்மையை, நன்மைக்காகவே செய்ய வேண்டுமென்றும் உணர்ந்த தமிழ்ப் புலவர்கள் பலர்.

'' இம்மைச் செய்தது மறுமைக்காமெனும்
அறவிலை வணிகனாயலன்'' ( புறம் 134 ) என்றும்
''மேலுலகம் இன்றெனினும் ஈதலே நன்று'' என்றும்
வற்புறுத்தியுள்ளனர் நம் புலவர்.

பண்டைக்கால இலக்கியங்களில் இவ்வுலக வாழ்க்கையும் மக்களோடு இன்புற்று ஒழுகுவதும், இல்லறத்தின் இனிய நலன்களைக் காண்பதும், வாழ்க்கையின் நோக்கங்களாகக் கருதப் பட்டன. புறநானூற்றில்

உண்டாலம்ம இவ்வுலகம் ; இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே ...
புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்.........
அன்ன மாட்சிய னையராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலும் உண்மையானே (புறம் 182)

என்ற செய்யுளில் தமிழர் பண்பாட்டின் அடிப்படைக்கொள்கைகளைக் காணலாம். சங்க இலக்கியத்துக்கும், வடமொழியில் இயற்றப்பெற்ற பழைய இலக்கியங்கட்கும் உள்ள பெரும் வேற்றுமை இம் மனித நலக் கொள்கையே. ஆதலால்தான் மேல்நாட்டு அறிஞர் தமிழ் இலக்கியத்தின் ''*Life Affirmation*'' வாழ்க்கை வலியுறுத்தல் எனும் பண்பைப் போற்றுகின்றனர்.

மக்கள் நல பண்பில் சிரிப்பென்பது மக்களின் சிறந்த ஓர் இயல்பு ஆதலால் தான் புலவர்கள் நட்பைப்பற்றியும். சிரிப்பைப்பற்றியும். எப்பொழுதும் போற்றிப் புசழ்ந்துள்ளனர். இந் நூற்றாண்டின் ஆங்கிலப் புலவர் ஒருவர் பாடுகின்றார்.

*"From quiet homes and first beginning*
*Out to the undiscovered ends*
*There's nothing worth the wear of winning*
*But laughter and the love of friends"*

திருவள்ளுவர் சிரிப்பைப் பற்றிக் கூறும் இடங்கள் நமக்கு வியப்பைத் தருகின்றன.

"நகல்வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற் பட்டன்று இருள்" (திரு. 999)

ஈராயிரம் ஆண்டுகட்கு முன் எந்நாட்டுப் புலவரும் இவ்வாறு கூறியிருப்பரோ என்பது ஐயம்தான்.

## பிறர் அன்பு

மனிதநலப் பண்பிலிருந்து பிறக்கும் ஓர் இயல்பு பிறரன்பு தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்னும் இலட்சியம் எக்காலத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுவே சான்றோருடைய பெரும் இயல்பு. என் கடன் பணிசெய்து கிடப்பதே எனப்பிற் காலத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வுலகம் உறுதியாக நிலைத்திருப்பதற்கு இத்தகைய கொள்கையுடைய சான்றோர் இருப்பதே காரணம். இந்நூற்றாண்டில் சாதிவேற்றுமைகளை ஒழிக்க வேண்டுமென்றும் மக்களினத்தின் ஒற்றுமையை நிலைநிறுத்த வேண்டுமென்றும் விளக்கும் இயக்கங்கள் இக் கொள்கையிலிருந்தே தோன்றின. பிறருக்குப் பணிசெய்யும் மனநிலை இப் பண்பின். பயனே.

## இயற்கை

தமிழ் மக்களுக்கு இயற்கையிலிருந்த ஈடுபாடும், இயற்கையை செய்யுளுக்குப் பின்னணியாக அமைக்கும் முறையும், நமக்குப் பெரும் வியப்பைத் தருகின்றது. சங்க இலக்கியத்தையும், இடைக்கால இலக்கியத்தையும் பயில்கின்றவர்கள் தமிழரின் இயற்கை ஈடுபாட்டை ஆழமாக உணர்வார்கள். தொல்காப்பியப்பொருளதிகாரம் இத்துணை நுணுக்கமாக இயற்கையைப் புலநெறி வழக்கிற்கு அமைத்ததுபோல வேறெந்த இலக்கியத்திலும் அமைந்ததாகத் தெரியவில்லை. ஐந்திணைக்குப் பண்டைத்தமிழர்

கொடுத்த பெயர்கள் அவர்கள் எத்துணை அளவிற்கு இயற்கை யோடு வாழ்ந்தார்கள் என்பதைக் காட்டுகின்றது.

மலையையும் மலைசார்ந்த இடத்தையும் குறிஞ்சி என்று அழைப்பதற்கு எத்துணை காலம் சென்றிருக்க வேண்டும். பன்னி, ரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை மலைச்சாரலில் பூக்கும் இச்செடியை மலைப்பகுதிகட்குப் பொருத்தமான ஒரு பெயராகக் கருதினார் கள். இவ்வாறே பிற நிலங்கட்கும் பெயரிட்டனர். மலர்களையும் மாலைகளையும் அவர்கள் பயன்படுத்திய முறை அவர்களுடைய அழகு ஈடுபாட்டைப் புலப்படுகின்றது அன்பிற்கும் மலர்களைக் கையுறையாகக் கொடுத்தனர். போரின் வெவ்வேறு பிரிவுகட்கும் வெவ்வேறு அடையாளப் பூக்களைக் கையாண்டனர். நம் பழைய இலக்கியங்களில் முல்லையைப் பற்றியும், காந்தளிர் பற்றியும் கொன்றையைப் பற்றியும் புகழும் செய்யுட்கள் பெருமின்பம் தருகின்றன. முல்லை சார்ந்த கற்பினள் என்றும், முல்லை நாறும் கற்பினள் என்றும் வருமடிகளில் முல்லைமலர் எவ்வாறு கற்பிற்கு அடையாளமலராக அமைந்தது என்பதைக் காட்டுகின் றது. முல்லைமலரை அணிசெய்யப் பலமுறைகளைக் கையாண்ட னர். புறநானூற்றில் வருமிந்தச் செய்யுள் நம் நினைவில் என்றும் நிலைத்திருக்கத் தகுதிவாய்ந்தது.

இளையோர் சூடார், வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான், பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க்கடந்த
வலவேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே (புறம் 12)

தமிழின் மறுமலர்ச்சிக் காலத்திலும் இவ்வியற்கை ஈடுபாடு குறையவில்லை. பாரதியார், பாரதிதாசன், தேசிகவிநாயகம் பிள்ளை போன்றோருடைய இயற்கை ஈடுபாடு அவர்கள் பாடல் களில் தெளிவாகத் தோன்றுகின்றது. வேதநாயகம்பிள்ளை மிக அழகாக இயற்கையையும் இறைவனையும் இணைத்துப் பாடி யுள்ளார்.

கதிரவன் கிரணக் கையாற்
கடவுளைத் தொழுவான் புட்கள்
சுதியொடும் ஆடிப்பாடி
துதிசெயும் தருக்கள் எல்லாம்
பொதி அலர் தூவிப் போற்றும்
பூதம் தம் தொழில் செய்தேத்தும்

அதிர் கடல் ஒலியால் வாழ்த்தும்
அகமே நீ வாழ்த்தா தென்னே

நம் மக்கள் நம் பண்பாட்டிலும் இயற்கை ஈடுபாட்டினை இழந்து விடுதலாகாது. மலர்களையும் மாலைகளையும் இறை வழிபாட்டிற்கும், வாழ்க்கையின் பல நிகழ்ச்சிகட்கும் தொடர்ந்து பயன் படுத்தி வருதல் வேண்டும். நம்மில்லங்களில் மல்லிகை முல்லை மலர்ச் செடிகளை வளர்த்துப் பேணுதல் வேண்டும்.

## நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும்

தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் இருந்த அரசுகள் வெவ்வேறு அரசுகளாக இயங்கித் தமக்குள் சில வேளைகளில் போரில் ஈடுபட்டிருந்த போதிலும் தாம் அனைவரும் ஓரினத்தைச் சார்ந்தவ ரென்றும் தமிழ்மொழி தம்மை இணைப்பதாகவும் கருதி வந்தனர். பெருநில மன்னரும் குறுநில மன்னரும் தம் எல்லைகட்குள் அரசு செலுத்தி வந்தாலும் தம்மனைவரின் நாட்டையும் தமிழக மென்றும், பொதுமை சுட்டிய மூவருலகமென்றும் அழைத்தனர். தமிழ்மொழியே அன்னாருடைய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுத்தது. தமிழ்நாட்டின் எல்லைக்கப்பால் இருந்த நாடுகளை ''மொழிபெயர் தேயம்'' என்று அழைத்தனர். புறநானூறும் சிலப்பதிகாரமும் இவ்வாற்றலைப் புலப்படுத்தும் இடங்கள் பல. கனகவிஜயர் தமிழர் வீரத்தை ஏளனம் செய்த காலை.

''தென்தமிழாற்றல் அறிந்திலராங்கு'' என்று கூறிச் சேரர் வடநாட்டின் மீது படையெடுத்தனர். தமிழ் மக்களுக்குத் தம் சேர்ந்த அரசின் பற்றோடு, தமிழ்நாட்டுப் பற்று என்னும் எல்லாத் தமிழ் அரசுகளையும் அடக்கியபற்று இயல்பாக அமைந்திருந்தது. தமிழ்ப்பாணரும் புலவரும் குறுநில மன்னரிடமும் பெருநில மன்னரிடமும் சென்று அன்னாரை வாழ்த்திப் பரிசில் பெற்றனர். இளங்கோ அடிகள் மூவேந்தரின் ஒவ்வொரு நாட்டின் சிறப்பையும் பாடியுள்ளார். நாயன்மார் ஆள்வார் வடமொழி இலக்கியத்திலிருந்து சமயக் கொள்கைகள் சிலவற்றைப் பயின்றாலும் தமிழ்நாட்டுப் பற்றையும் அவர்கள் தெளிவாகத் தம் பாடல்களில் காட்டியுள்ளனர். இவ்விருவகைப்பற்று நமக்கும் ஒரு பாடமாக அமைகின்றது. ஈழநாட்டில் வடபகுதியும், கிழக்குப்பகுதியும், மலைநாட்டுப்பகுதியும் தம் தனித்தனி இயல்புகளைப் பாராட்டி வந்தாலும் தமிழ் மக்கள் என்ற முறையில் பண்டைக் கால ஒற்றுமை முறையை நாம் தழுவ வேண்டும். தமிழ் மக்கள் இத்துணை நூற்றாண்டுகளாகத் தழுவிய சமயங்கள் பல. ஆதி

21856-C

னும் எச்சமயத்தைச் சார்ந்தாலும் தாம் தமிழ் மக்கள் என்று தமிழர் பண்பாட்டையும் கொள்கைகளையும் அவர்கள் கடைப்பிடித்தே வந்தனர். இன்றும் கடைப்பிடித்தே வருகின்றனர். நம்மிலக்கியத்திலும் கலைகளிலும் தோன்றும் தாய்மொழிப் பற்றினைப்பற்றி நான் விரிவாகக் கூறவேண்டியதில்லை. சேக்கிழாருடைய பெரியபுராணத்தை நான் படிக்கும் பொழுதெல்லாம் அவருடைய உருக்கம் நிறைந்த தமிழ்ப்பற்று என்னுள்ளத்தைக் கவர்கின்றது. தமிழ் என்ற சொல் வருமிடங்களிலெல்லாம் அழகும் அன்பும் நிறைந்த அடைமொழிகளை அமைத்தே கூறுவார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கிய மறுமலர்ச்சி இம்மொழிப்பற்றை இன்னும் விளக்கமாக எடுத்துக்காட்டியுள்ளது. வேதநாயகம்பிள்ளை, பரிதிமால்கலைஞன், சுந்தரம் பிள்ளை, மறைமலையடிகள் போன்றவர்கள் இப்பற்றினைத் தம் நூல்களில் தெளிவாகக் காட்டுகின்றனர். பேராசிரியர் சேதுப் பிள்ளையின் நூல்களில் தமிழின் இனிமை பக்கந்தோறும் இனிக்கின்றது. ஆயினும் இம்மொழிப்பற்றினைப் பாரதியாரும், பாரதிதாசனும் என்றும் மறக்க முடியாத செய்யுட்களில் பாடியிருக்கின்றனர்.

பாரதியாரின் ''செந்தமிழ் நாடென்னும்'' செய்யுள் வரலாற்று உண்மை நிறைந்த அரிய செய்யுள். அவருடைய 'யாமறிந்த மொழிகளிலே' என்னும் செய்யுள் தமிழர்களுக்கு எழுச்சி தரும் செய்யுள். இவ்விரு செய்யுட்களையும் நம் சிறுவருடைய பாடநூல்களிலே எதுகாரணம் பற்றிச் சேர்க்காமலிருக்கிறார்களோ நானறியேன். நம் மொழிப்பற்றையும் நாட்டுப் பற்றையும் குறைப்பதற்காகவே இவ்விருட்டடிப்பு ஒரு சூழ்ச்சி என்று கருதுகின்றேன்.

## அரசியலாட்சி

தமிழ் நாடும் தமிழ் அரசுகளும் இத்துணை நூற்றாண்டுகளாக உலக வரலாற்றில் சிறந்து விளங்குவதற்குக் காரணமாக இருந்தது. தமிழரின் நீதி தழுவும் ஆட்சி முறையே. ''நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' – என்ற குறிக்கோளும் ''மாதவர் நோன்பும், மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றாம்'' – என்ற கொள்கையும் ஆட்சிக்கு அடிப்படையாக இருந்த கோள்கைகள். தமிழராய்ச்சி முறைகளைக் கூறுவதென்றால் இச்சொற்பொழிவு

நீளும். ஆயினும் ஆட்சியமைப்பும் பண்பாட்டின் ஒரு பகுதியாத லால் அதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மார்க்கோபோலோ என்ற இத்தாலியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்தில் சேபழருடைய ஆட்சியையும் தமிழ்நாட்டு வணிகவளத்தையும் கண்டு "சோழநாடு இந்தியாவின் மிகப் பெருமைவாய்ந்த உன்னத அரசு" என்று குறிப்பிட்டார்.

## கவின் கலைகள்.

கவின்கலைகள் பண்பாட்டிற் சிறந்த இடம் பெறுகின்றன. தமிழ் மக்கள் எழுப்பிய கோயில்கள், அமைத்த கோபுரங்கள், செதுக்கிய சிலைகள், வளர்த்த இசையும் நாட்டியமும் அவர்களுடைய அழகுக் கலையின் ஈடுபாட்டுச் சான்றுகளாக மிளிர்கின்றன. ரொமான் என்னும் பிரான்சிய நாட்டுச் சிற்பிஆடவல்லாரின் சிலையை வியந்து போற்றியுள்ளார். இவ்வாறு நம்மெல்லாக் கலைகளும் உலகின் மதிப்பைப் பெற்றுள்ளன. நம் மக்களின் கலைஈடுபாடு குறைந்து வருவதற்கு நாம் ஒருபோதும் இடமளித்தல் ஆகாது. ஈழநாட்டில் எத்தனையோ கட்டடச் செல்வங்களை அந்நியராட்சிக் காலத்தில் நாம் இழந்துவிட்டோம் மீண்டும் அழகுச் சின்னங்களை நிறுவுவது ஒரு பெரும் தொண்டாகும். அத்தகைய ஒரு சின்னத்தைத் தந்தை செல்வாவின் நினைவுக்கு நம் தலைநகரில் நிறுவியது போற்றத்தக்கது.

## சிந்துவெளி நாகரிகம்

தமிழர் நாகரிகத்தையும் பண்பாட்டையும் சிந்துவெளி நாகரிகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தான் இந்திய வரலாறு தெளிவான விளக்கத்தை அடைகின்றது. ஒரு காலத்தில் சிந்துவெளி நாகரிகம் என்று நாம் அழைக்கும் நாகரிகம் இந்தியா எங்கும், இலங்கை எங்கும் பரவியிருந்தது என்பதை ஆராய்ச்சி மேலும் மேலும் காட்டுகின்றது. தமிழர் சமயம், தமிழர் கலைகள், பிற்காலத்தில் காட்டும் இயல்புகள், மொகஞ்சதாரோ, ஹரப்பா நகர்களின் கலைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது தெளிவாகின்றன. சென்ற சில ஆண்டுகளாக இந்தியப்பண்பாடும் நாகரிகமும் பெரும்பாலும் திராவிட மக்களுடைய பண்பாட்டையும் நாகரிகத்தையும் அடிப்படையாகக் கொண்டவை என்ற கருத்து இன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சுநீதிகுமார் சட்டர்ஜி தம்மிறுதி நாட்களில் இந்தியாவின் பண்பாடு எழுபத்தைந்து விழுக்காடு திராவிடப்பண்பாடு என்று கூறியுள்ளார். அவ்வாறே பிரான்ஸ் நாட்டு அறிஞர் பேராசிரியர் ஜான் பீலியோசா இந்தியாவிற்குத் திராவிடமக்களால் கொடுக்கப்பட்ட நன்மைகள் இன்னும் முற்றாக ஆராயப்படவில்லை என்று எழுதியுள்ளார்.

. தமிழருடைய பண்பாட்டைக் கிரேக்கர், உரோமர் போன்றோருடைய பண்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க நம்மக்கள் விரும்புகின்றார்கள். நம் பண்பாட்டினை பிறருடைய பண்பாட்டுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அத்துணை எளிதன்று. நம் மிலக்கியங்கள் பலவற்றையும், வரலாற்றுச் சின்னங்கள் பலவற்றையும் நாம் இழந்துவிட்டோம். தமிழர் பண்பாட்டின் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு இன்னும் எவ்வளவோ இடமுண்டு நாகரிகங்களை ஒப்பிடுவது எளிது. பண்பாட்டை ஒப்பிடுவது அத்துணை எளிதன்று. கிரேக்கர் இயற்றிய நாடகங்களைப் போல் நமக்கு நாடகங்கள் கிடைக்கவில்லை அவர் சில காலத்தில் நிறுவிய குடியாட்சியைப் போல் நம் தமிழ்நாட்டில் நாம் நிறுவியதாகத் தெரியவில்லை. அவர்களுடைய சிந்தனையாளர் பிளேட்டோ, அரிஸ்டோட்டில் எழுதிய உரைநடை நூல்களைப்போல் நமக்கு நூல்கள் கிடைக்கவில்லை. உரோமர் சட்டத்தை வளர்த்தவர்கள். மாபெரும் பேராசை நிறுவியர்கள்.

ஆயினும் நாமும் சோழராட்சியையும், திருவள்ளுவர், இராமானுஜர் போன்ற தத்துவ ஞானிகளையும் எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

பண்பாடு காலக்கிடையில் மாற்றம் அடைவதா என்று பலர் வினாவக்கூடும். பண்பாட்டைப் பேணிவராதிருந்தால் அது மாற்றம் அடைதல் கூடும். தமிழ் மக்களோடு அக்காலத்தில் தொடர்பு கொண்டு வணிகம் செய்த எத்தனையோ மக்களின் பண்பாடும், நாகரிகமும் அழிந்துபட்டன. எகிப்தியர், பபிலோனியர், அசிரியர் போன்றோருடைய பண்பாடு எங்கே? நாகரீகம் எங்கே? கீழ்த்திசை நாடுகளில் சரீம்பர் என்ற இனத்தவர் மாபெரும் மாளிகைகளையும், அரண்மனைகளையும் தமிழர் மரபினைத் தழுவி நிறுவினர். ஆனால் கம்புச்சியா இன்று இந்நிலையில் உள்ளது. தமிழரோ ஈராயிரத்துஐந்நூறு ஆண்டுகளாகத் தம் பண்பாட்டைக்காப்பாற்றி வந்துள்ளனர். அவர்களுடைய நாகரீகம் மேல் நாட்டுச் செல்வாக்கால் மாற்றமடைந்திருந்தாலும் பண்பாடு சிறியஅளவில்தான் மாற்றமடைந்துள்ளது.

# விடுதலைப் புலிகளின் கடற்படை நடவடிக்கைகள்

## தராக்கி

*(ஐலன்ட் 29-3-1992)*

**17-03-1992**இல் மந்திரி சபைக் கூட்டத்தின் பின் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கேர்ணல் சரத்முனசிங்ஹா கூறியதாவது: ''வான்படைக்குச் சொந்தமான வானூர்திகள் இன்று காலை வல்வெட்டித்துறை பட்டின கரையோரப்பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் 'கடற்புறா' என்று அழைக்கப்படும் முக்கிய முகாமை குண்டுவீசித் தாக்கின'' என்பதாகும்.

''கடற்புறா'' வல்வெட்டித்துறைக் கரையோரத்தில் அமைந்த சிறு கடற்படைத்தள அமைப்பு மாத்திரமல்லாமல் வடபகுதி கடற் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் கடற்தாக்குதல் திறமையை வளர்த்துக்கொள்ளவேண்டுமென்ற பேரவாவுடன் ஏற்படுத்தப்பட்ட முக்கிய திட்டமாகும். 1989 ஆம் ஆண்டு பிற்பகுதியில் தமிழ்தேசிய இராணுவம் முற்றாக யாழ்ப்பாணத்தில் அழிக்கப்பட்ட பின் கடற்படைத்தள அமைப்பு தொடங்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதியில் 1987 க்கு முன் சக்தி வாய்ந்த பிரதேசப் பொறுப்பாளராக இருந்த சூசை கடற்புறாத் திட்டத்தின் பொறுப்பதிகாரியாக்கப்பட்டார். துணைவலங்களால் வலுவூட்டப்பட்ட துறைமுகம், வள்ளக்கட்டுமான வேலை செய்யக்கூடிய வசதி கடல்கண்ணிகளை உற்பத்தி செய்வதற்கும் அவற்றை வளர்ச்சியடையச் செய்து பரீட்சிக்கும் வசதி கொண்ட படைக்கல வசதி, கடற்புறா வாகனங்கள், தனியான தொடர்பு சாதன அமைப்பு வசதிகள் கொண்ட உள்ளமைப்புகளை கொண்டதாக அது அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகள் பெருந்தொகை வளத்தை கடற்புறா திட்டத்திற்கு பயன்படுத்தியுள்ளனர்.

கடற்கரையிலுள்ள கடற்புறாத் தளப்பகுதிக்கு வல்வெட்டித்துறையிலுள்ள சிலர் மட்டும்தான் போக ஒப்புதல் தரப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு தொடக்கம் இத்திட்டத்தின் பயன்

கன் கிரமமான முறையில், நடைபெற்று வரும் போரில், விடுதலைப் புலிகளின் தலைமையால் செயல்படுத்தப்பட்டுள்ளது சிறிலங்காப் படைக் கப்பல்கள் கடல் கண்ணிவெடிகளில் சிக்கி இருக்கின்றன. கடலில் ரோந்துப்படகுகள் மீதும் தாய்க்கப்பல்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கடல் தரை மார்க்கமாக குடாநாட்டுக்குள் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற எதிர்பார்ப்போடு சூசையின் போராளிகள் பல இடங்களில் கண்ணிவெடிகளை நாட்டுள்ளனர்.

போரில் கடற்புறா விடுதலைப் புலிகளின் புதிய பரிமாண வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது. இராணுவ ரீதியாக வடக்கைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை மேலும் சிக்கலாக்கும் கடற்பலத்தைப் பெருக்குவதே புலிகளின் பெரும் திட்டமாகும். பிரபாகரனால் தனது கடற்படைத்திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பெயர் தமது தமிழ்த்தேசியக் கட்டமைப்பிற்கு புலிகள் எவ்வித நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் கொண்டுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

கடல்புறா என்பது அப்பெயரைக்கொண்ட நாவல் ஒன்றில் வரும் சோழப்பேரரசின் பெரிய போர்க்கப்பலாகும். அது சோழத் தளபதி கருணாகரத் தொண்டமானின் தலைமையின் கீழ் தென்கிழக்கு ஆசியாவிலிருந்த சிறி விஜய பேரரசை தோற்கடித்து கம்போடிய நாடுவரையில் உள்ள அரசர்களையும் கடற்கொள்ளைக்காரர்களையும் அடிபணியச் செய்தது.

இந்த நாவல் (1967-70) மூன்று ஆண்டு காலத்திற்கு தொடர்கதையாக தென் இந்திய தமிழ்ச் சஞ்சிகையான குமுதத்தில் வெளிவந்தது. அந்நாவல் மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட காரணத்தால் புதிய பதிப்புக்கள் தொடர்ந்து வெளியாகி வருகின்றது. அதன் ஆசிரியர் சாண்டில்யன் தமது முகவுரையில் கூறுவதைப் பார்த்தால் புலிகளின் மனத்தில் இருப்பதை ஓரளவுக்கு அறிந்து கொள்ளலாம்.

"எனக்குக் கிடைத்த தரவுகளிலிருந்தும் (சோழர்களின் கடற் பலம்பற்றிய) குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகளிலிருந்தும், தமிழர்கள் கடல்கடந்து சென்று வேறு நாடுகளுடன் வியாபாரம் செய்தார்கள் என்பது மட்டுமல்லாமல் கடல்களுக்கு அப்பாலும் சென்று போர்களை நடத்தினார்கள் என்பதை அறிந்து கொண்டேன். முதலாம் குலோத்துங்க சோழன் சிறிவிஜயநாட்

டின் முடிக்காக நடந்த பிணக்கில் இணக்கம் ஏற்படுத்தி சமா தானத்தை அங்கு (யாவா, சுமத்திரா முதலியன)கி பி. 1063க்கும் 1070க்குமிடை யில் ஏற்படுத்தினான். கி.பி. 1077 இல் ஒரு தமிழ்த்தூதுக்குழு சீனாவைச் சென்றடைந்தது அதற்கு தேவகுல என்பவர் தலைமை தாங்கினார். அது குலோத்துங்கன் தான். நான் அறிந்து கொண்டவற்றை எனது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினேன். அந்த முடிவு தான் ''கடல்புறா''(1ஆம் பாகம், 1974 மூன்றாம் பதிப்பின் முன்னுரை -பக்கங்கள் 12-13 ́

இப்புத்தகத்தை எழுதுவதற்கு உந்து சக்தியாயிருந்த இன்னொன்று கலிங்கத்தை வென்ற சோழத்தளபதி தொண்டமானின் வீரதீரச் செயல்களென்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

1956க்குப் பின்னர் வடக்கு கிழக்கில் கல்வி பயின்றோர் களில் சாண்டிலியனின் கடல்புறாவைப் படிக்காதவர்களோ அல்லது கேள்விப்படாதவர்களோ மிகக்குறைவாகவே இருப்பர்.

கற்பனைகள் நம்பிக்கைகள் வரலாறுகள் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டு தத்துவார்த்தப் பிணைப்பை உருவாக்குவதற்கு பிரபாகரனின் இராணுவ மூளை எவ்விதம் வழிவகுக்கிறது என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும்.

சூசையின் கீழ் இயங்கும் புலிகளின் கடல்புறாத் திட்டத்தின் தத்துவார்த்த நிலைப்பாடும் ஈழப்போரில் அதன் இராணுவ ரீதியிலான தாக்கும் செயல் திறன் போன்று முக்கியமானதாகும். 1989 இல் கடல்புறா திட்டம் உருவாகும் வரை தேவையோடு சம்பந்தமான வகையில் தான் கடற்பலம் உபயோகிக்கப்பட்டு வந்தது. இப்பவும் புலிகளின் கடல் நடவடிக்கைகள் ஆயுதங்கள் வெடிமருந்துகள் போன்றவற்றை வடக்குக்கும் கிழக்குக்கும் கொண்டுவருவதற்காகவே நடத்தப்படுகிறது.

தமது கடற்பலத்தின் ஒரு பகுதியை கடற்போர்ப்படையாக மாற்றியமைக்கும் புலிகளின் பாரிய திட்டம்தான் கடல் புறாவாகும். புலிகள் இதில் எவ்வளவு தூரம் வெற்றியடைவார்கள்? அதற்கு செலவிடப்படும் வளங்களைப் பார்க்கப் போனால் இதை ஒரு கற்பனைக் கனவு என கைவிட்டுவிடமுடியாது. அவர்களது கப்பல் போக்குவரத்து உட்பட அவர்களது கடல் நடவடிக்கைகள் யாவும் கிரமமான வகையில் விரிவாக்கப்பட்டு

நவீன மயப்படுத்தப்பட்டால் புலிகளின் தேவைகள் பூர்த்தி யாகும். அவர்கள் பெறும் வளங்களுக்குக் குறைபாடு ஏற்படா விட்டால் புலிகள் தங்கள் போர்த்தாக்குதல்களை குறைக்கத் தேவையில்லை. இதுதான் உண்மை நிலை. தமிழ் நாட்டில் புலிகளை அழிக்கும் நடவடிக்கையும் நடுக்கடலில் உரொங்கோ வாக் (Tongova) கப்பல் பிடிபட்டதும் புலிகளின் ஆயுதவழி களைத் தடை செய்துள்ளது என்ற கருத்து சரியானதாக இல்லை.

இந்நடவடிக்கைகள் நடந்தேறிய பின்னர் நடந்த சண்டை களில் புலிகளுக்கு குண்டுகள், தோட்டாக்கள் போன்றவற் றுக்கு குறையிருக்கவில்லை. தென்கிழக்காசிய கப்பல் கம்பனி யின் இயக்குனர் கே. பி. என்ற பிரபாகரனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆயுதக் கொள்வனவு காரரை சம்பந்தப்படுத்து வதில் இந்திய மேலாளர் அவ்வளவு தூரம் வெற்றியடைய வில்லை. புலிகளுக்குச் சொந்தமானதென ஐயப்படும் சகல கப்பல்களும் சட்டபூர்வமான சரக்குக் கப்பல்கள். அவைகள் இந்தியத் துறைமுகங்களுக்கும் சென்று வருகின்றன.

தகவினால் மாத்திரம் பிரபாகரனின் கப்பல் நடவடிக்கை களை முறியடிக்கக் கூடியனவாக இருக்கவில்லை எனத்தெரி கிறது. ஆயுதங்களுடனும் பெறுபவரின் ஒப்புதல் படிவமும் (End - user) ஏனைய ஆவணங்களும் இல்லாததுமான புலிக் கப்பல் ஒன்று அகப்படும் வரை இந்தியா காத்திருக்கவேண்டி வரும்.

கடல்புறாவின் அடுத்த அம்சம் அது வல்வெட்டித்துறை பருத்தித்துறை கடற்கரைப் பகுதியில் உள்ள உள்ளூர் கப்பல் போக்குவரத்து மரபுகளை பிரதிபலிப்பதாக உள்ளது. இம் மரபுகள் இப்பகுதிகளில் உள்ள கரையோர மக்களிடம் வெகு வாக ஊடுருவியுள்ளன. ''வல்வெட்டித்துறையிலிருந்து அமெ ரிக்காவுக்கு கப்பல் செலுத்திய தமிழர்கள்'' என்ற புத்தகத் தின் இரண்டாம் பதிப்பு லண்டனில் பலர் பங்குபற்றிய விழா வொன்றில் வெளியிடப்பட்டுள்ளது அப்புத்தகம் கப்பல்கள் — பாய்க்கப்பல்கள் — மரக்கலன்கள் — அக்கரை ஓரப்பகுதிகளில் கட்டும் விதங்கள் பற்றிக் கூறுகிறது.

இக்கப்பல்கள் லொயிட் அமைப்பால் (லண்டன்) கடலில் செல்லும் தகைமையுடையவையாக சிபார்சு செய்யப்பட்டன.

பர்மா தாய்லாந்துடன் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். 1982 இல் ஜலன்ட் பத்திரிகையில் இப்புத்தகம் குறித்து ஆய்வு வந்தது.

தென்கிழக்காசிய நாடுகளுடன் வியாபாரம் செய்ததன் மூலம் வல்வெட்டித்துறை பருத்தித்துறையில் உள்ள குடும்பங்கள் சரக்குக்கப்பல் கம்பனிகளை உருவாக்கி கப்பல்களை வாங்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். அப்பகுதிக் குடும்பங்கள் தென்கிழக்காசிய நாடுகளில் உள்ள கோவில்களுக்கு காணிகளை நன்கொடையாகக் கூட வழங்கினார்கள்.

இந்த கடல்துறைப் பண்பாட்டுடன் இணைந்துதான் தமது கடற்பலத்தை புலிகள் விருத்தி செய்கின்றனர். கடல்புறாத் திட்டம் படிப்படியாக இப்பண்பாட்டைப் பேணி சமர்புரிவதற்கும் பயன்படுத்த எண்ணியுள்ளனர்.

இந்தப் பாரம்பரியத்தில் உள்ளடக்கங்களை உபயோகிக்காமையும் ஏனைய குழுக்களின் வீழ்ச்சிக்கு ஓரளவுக்குக் காரணமாக இருந்தது. தொடக்ககாலத் திட்டத்தில் கடற்போர்த் திறன் வளர்த்தெடுத்து விரிவாக்கவேண்டுமென்ற எண்ணங்கள் பிரிவுவாத தமிழ்க் குழுவினருக்கு இருந்தது. உண்மையில் இந்தியாவில் ஐ.பி யினால் பயிற்றப்பட்ட முதல் தொகுதி இளைஞர்களுக்கு திருக்கோணமலைத்துறை முகத்துக்குவரும் கப்பல்களிலிருந்து தகவல்களை எவ்விதம் பெறுவது என்பதுபற்றி கற்பிக்கப்பட்டது. பின்னர் 87இல் கடலின் அடியில் வைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை தாக்குவதற்கு சில இளைஞர்களை 'றோ' பயிற்சிக்குள்ளாக்கியது. எல்லாத் தமிழ்க் குழுக்களும் 'கரைப்பொறுப்பு' என்ற ஒரு பிரிவை தமதகத்தில் வைத்திருந்தனர் இப்பிரிவு கரையோர ஆயுதக்கிடங்குகளுக்கும் பொருள்களையும் ஆட்களையும் பாக்குநீரிணைக்கு ஊடாக கொண்டு செல்வதற்கும்பொறுப்பாயிருந்தது.

எண்பதுகளின் நடுப்பகுதியில் இந்தியாவிலிருந்து அதிகரித்துவரும் விநியோக வழிகளின் காரணமாக நவீன கடல் மார்க்கப் பயணத்திறமையும் வசதிகளும் படிப்படியாக வளர்த்து எடுக்கவேண்டுமென்பதைத் தெரிந்திருந்தார்கள். புலிகளைத் தவிர்ந்த ஏனையோருக்கு பாரம்பரிய கடல்வழி முறைகளிலும் பட்டறிவு கொண்ட ஆட்கள் இல்லாமையால் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று.

இருந்தும் தமிழ்க் குழுக்களின் கடல் சார்ந்த நடவடிக்கைகளில் மிகச் சிறந்ததென சில வெளிநாடுகளில் உள்ள அரச எதிர்ப்புக் குழுக்கள் கணிப்பிட்டுள்ளன.

1985இல் ஒரு பெரிய ஆபிரிக்க நாட்டு ஆயுதம் தாங்கிய அரச எதிர்ப்புக்குழு தனது போராளிகளுக்கு கடல் போக்குவரத்து, (திசையறி கருவியில்லாத) பாரம்பரிய கடற்பயணம் ஆகியவற்றில் பயிற்சிகொடுக்கும்படி இடதுசாரித் தமிழ்க்குழு ஒன்றிடம் வேண்டுகோள் விடுத்தது.

எவ்வாறாயினும் புலிகளைத் தவிர வேறொருவருக்கும் கடல் நடவடிக்கையால் பெறக்கூடிய நன்மைகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிட்டவில்லை. சிலகுழுக்கள் நடுக்கடலில் கப்பல்களிலிருந்து இறக்கப்படும் ஆயுதங்களை வடகிழக்கில் உள்ள கடலோரங்களிலுள்ள தளங்களுக்குப் பாதுகாப்பாக கொண்டுவந்து சேர்க்கலாம் எனப்பெரும் கனவுகளைக் கண்டார்கள்.

ஆனால் புலிகள் மட்டுமே இதில் வெற்றிகண்டு இந்தியா ஆயுதவிநியோகத் தொடர்பு வழிகளை மறிப்பதற்குத் தீர்மானித்துள்ள வேளையிலும் தாக்குப்பிடித்து நின்று வெற்றி கண்டுள்ளனர்.

கடல்மார்க்க வளங்களையும் வசதிகளையும் வளர்க்காமல் நிலைத்துவைத்திருக்க விட்டமைதான் ஈ. பி. ஆர். எல். எவ், புளொட், ரெலோ, ஈரோஸ் ஆகியோரின் வீழ்ச்சியின் காரணங்களில் ஒன்றாகும். புலிகளின் சக்தி முக்கியமாக கடற்பலத்தில் உள்ளது.

புலிகளின் வேட்கையை கடல்புறா எடுத்துக் காட்டுகின்றது. சாண்டில்யனின் நாவலின் முடிவில் கடற்புறாவின் கடற்தளபதி கருணாகரத் தொண்டமான் ''சிறிவிஜய இராச்சியத்தை பணியவைப்பதற்கான இப்படையெடுப்பு சோழப் பேரரசின் நலனுக்காகவே நடத்தப்பட்டது எனக் கூறுகின்றார்.

# இதயங்களின் சந்திப்பு

# ஐன்சுடீன் கடிதங்கள்

எழுதியவர்:- யோன் நோபில் வில்போட்

(ஜலன்ட் – 29. 3. 1992)

சார்பியல் கோட்பாடு பற்றிய உமது பொதுவான தத்துவத்துக்கு ஆராய்ச்சி மூலம் உறுதி செய்யப்படாமல் இருந்ததால் உங்களது மனநிலை எவ்விதம் இருந்திருக்கும் என்று ஐன்சிடீனை கேட்ட பொழுது " நான் கடவுளைத்தான் குறை கூறுவேன் காரணம் எனது தத்துவம் சரி" என குறிப்பிட்டார்.

கடுமையான சில ஆராய்ச்சிகளால் தான் தனது தத்துவமும் புகழும் வெற்றி அல்லது தோல்வியைக் காணும் என்று தெரிந்திருந்த ஐன்சுடீன் தனது இளம் சகாவான ஏர்வின் பின்டலே பிறன்டிச்சின் வேலைகளை மிகவும் (Erwin Findlay Freund-l ich) அவதானமாகக் கவனித்து வந்தார்.

தனது தத்துவம் முழுமைப்படுத்தப்பட்டு பிரசுரிக்கப்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன் அதாவது 1916ல் பேர்லினில் உள்ள அரச அவதான நிலையத்தில் கடமையாற்றிய வானிலை அறிஞரான பிறன்டிச்சை தனது ஆகாயம் காலம், ஈர்ப்பு பற்றிய புரட்சிகரமான கோட்பாடுகளை நிருபிக்க அல்லது நிருபிக்க முடியாது என்பதை அறிவதற்கு வானிலை ஆராய்ச்சிகளை செய்யுமாறு அறிவுரை கூறி உற்சாகப்படுத்தினார்.

இதற்கு முன்னர் பிரசுரிக்கப்படாத ஐன்சிடீனிடமிருந்து பிறண்டிச்சுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களும் தபால் அட்டைகளும் முக்கியமாக ஐன்சுடீனுடைய மிகப் பெரிய எண்ண கருவாகத்தில் அவர்கள் இருவருக்கும் இடையிலிருந்த ஒத்துழைப்பின் தன்மையையும் முக்கியத்தையும் எடுத்துக் காட்டுவனவாக இருக்கின்றன. இவைகள் இப்போது நியுயோக்கில் உள்ள பியபொண்ட் மோாகன் நூல் நிலையத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளன. இந்தக் கடிதத் தொடர்புகள் தனிப்பட்டோர் கைகளில் இருந்ததால் பொதுவாக பொதுமக்களுக்கும், அறிஞர்களுக்கும் கிட்டவில்லை.

சிறப்பான செய்முறைகளாலும் அவதானிப்புகளாலும் ஈற்றில் சரியெனக் காணப்பட்ட மூன்று கோட்பாடுகள் உட்பட ஐன்சுடீனின் பொது சார்பியல் தத்துவத்தின் முக்கிய வளர்ச்சி களைக் காட்டுபவையாக இவ் ஆவணங்கள் உள்ளன.

ஒரு கடிதத்தில், அவருடைய தத்துவத்தில் கூறப்பட்ட படி காரண காரியமின்றி வான் கோள்வியலில் வெளிச்சத்தின் வளைவு கீறிக்காட்டப்பட்டுள்ளது.

பொது சார்பியல் கோட்பாடு ஈர்ப்புச் சக்தியை, பாரிய பொருட்களின் அண்மையில் அண்டவெளி அடையும் வளைவின் தன்மையை வைத்துக் கொண்டு விளக்குகிறது.

அத்தகைய வளைந்த அண்டவெளி ஊடாகச் செல்லும் வெளிச்சமும் ஒரு வளைவான பாதையில் தான் செல்லும் என்று ஐன்சுடீன் சொன்னார். இவரது இந்தக் கூற்று ஒரு நட்சத்திரத்தின் ஒளி பூமியை அடையும் வழியில் சூரியனுக்கு அண்மையில், ஏற்படும் விலகலைக் கொண்டு இது உறுதிப்படு த்தப்பட்டது.

ஐன்சுடீனின் தத்துவத்தின் அடிப்படையிலுள்ள இன் னொரு கோட்பாடு என்னவென்றால் ஒரு பாரிய பொருளை வெளிச்சம் தாண்டிச் செல்லும் போது அது சிவப்பு மயமாகும் என்பதாகும். அதே போல் அந்தக் கோட்பாடு ஒரு பாரிய பொருளுக்கு பக்கத்திலுள்ள ஒரு மணிக்கூடு அதிலிருந்து தூரத் திலுள்ள மணிக்கூட்டிலும் பார்க்க மெதுவாக ஓடும் என்பதை யும் கூறுகின்றது. இக் கோட்பாடுகளெல்லாம் நிரூபிக்கப்பட்டு ள்ளன

நூலகத்தின் கையெழுத்துப் பிரதிகளின் பொறுப்பாள ரான றொபாட் ஈபார்க் என்பவர் ஐன்சுடீன் தனது பொது சார்பியல் கோட்பாட்டுத் தத்துவத்தை உருவாக்கி அதனை ஆராய்ச்சி மூலம் நிரூபிக்க இருந்த 1911- தொடக்கம் 1921 வரையிலான நெருக்கடியான கால கட்டத்தில் எழுதப்பட்ட ஐன்சுடீன்'' கடிதங்கள்'' என்று இவற்றை வர்ணிக்கிறார்.

முன்னையிலும் பார்க்க இவை பிறண்டிச்சின் சீடத்தன் மையை விளக்கமாக எடுத்துக் காட்டுகின்றவையாகவும் ஐன்சு டீனின் தத்துவத்தின் அடிப்படைகளை தெரிந்து கொண்ட முதல் அறிவியலாளராகவும் அவர்களுடைய தத்துவங்கள் கூறிய

வற்றை ஆராய்ச்சி மூலம் நிரூபித்தவர் என்பதாகவும் இக்கடிதங்கள் காட்டுகின்றன.

ஒரு ஆராய்ச்சியில் பிரண்டிச்சின் முழுமையாக வெற்றி கண்டார். முக்கிய இன்னொரு ஆராய்ச்சியில் சூரியனைப் போன்ற பாரிய பொருளின் ஈர்ப்பு வலயத்தின் ஊடாக நட்சத்திர வெளிச்சம் செல்லும் போது உண்டாகும் வளைவு பற்றிய ஆராய்ச்சியிலும் முதலாவது உலகப் போர் வந்திராது போனால் வெற்றி கண்டிருப்பார்.

பிறண்டிச் இந்தக் கடிதங்களில் குறிப்பிட்டிருக்கும் ஆராய்ச்சிகள் பற்றிய விடயங்கள் ஈற்றில் சரியெனக் காணப்பட்டன. இருந்தாலும் பெயர் மற்றவர்களுக்கே கிடைத்தது.

யேல் சர்வகலாசாலை அறிவியல் வரலாற்றுப் பேராசிரியரான மாட்டீன் யோகிளின் என்பவர் ஐன்சுடீனின் முழுமையான ஆவணங்களை பிரசுரிக்கும் மூத்த ஆசிரியராவார். அவர் மோகன் நூல் நிலையத்திலிருக்கும் இந்தக் கடிதங்கள் ஐன்சுடீனின் தத்துவங்களின் வளர்ச்சியை அறிந்து கொள்வதற்கு மிகவும் முக்கியமானவை எனக் கூறுகிறார்.

இவர் ஐன்சுடீனை வாழ்க்கையில் ''சிறப்பான முற்பகுதியில் ஒத்துழைப்புக் கொடுத்த'' ஒருவர் என்ற முறையில் முக்கியமானவர் என பிரண்டிச்சை கூறுகிறார்.

ஐன்சுடீன் ஆவணக் காப்பகத்தில் சுமார் 50,000 ஆவணங்கள் உள்ளதென அறிஞர்கள் கூறுகின்றார்கள். பொஸ்டன் சர்வகலாசாலையால் வெளியிடப்பட இருக்கும் இவ் ஆவணங்கள் சுமார் 30 தொகுதிகளைக் கொண்டதாக இருக்குமென நம்பப் படுகிறது,

இரு தொகுதிகள் மாத்திரமே பிரசுரிக்கப்பட்டுள்ளன. மூன்றாவது அச்சில் உள்ளது 4,5 தொகுதிகள் இவ்வாண்டுக் கிடைசியில் அச்சுக்கு செல்லுமென கிளேன் கூறுகிறார்.

ஐன்சுடீன் சுய விபரம் எழுதுவோர் பிறண்டிச்சை சீடராகவும், ஆய்வாளராகவும் தெரிந்து கொண்டும் இக்கடிதத் தொடர்புகளை கருத்தில் எடுக்காது உபபோகிக்காது விட்டுள்ளார்கள்.

ஆனால் ஐன்சுடீனின் வாழ்வும் காலமும்'' என்ற புத்தகத்தை எழுதிய றோனால் கிளாக் என்பவர் இக்கடிதங்களை ஐன்சுடீனின் ஆரம்பகால வேலைகள் பற்றி அறிவதற்கு முக்கியமானது எனக் கூறி 1911ம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் ஐன்சுடீன் பிரெண்டிச்சுக்கு எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதியையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

வியாழக் கிரகத்தினால் வெளிச்சத்துக்கு ஏற்பட்ட கீழ் நோக்கிய திருப்பத்தை அறியும் முயற்சியில் பிரண்டிச் விரக்தி அடைந்திருக்கும் நேரத்தில் ஐன்சுடீன் அவருக்கு எழுதிய கடிதம் ஆறுதல் கூறுவதாகவும் தத்துவார்த்த ரீதியில் அமைந்ததாகவும் உள்ளது. ஐன்சுடீன் பிறேகு என்ற நகரிலிருந்து எழுதிய கடிதத்தில் '' வியாழக் கிரகத்தில் பார்க்க பாரிய கிரகம் இருந்திருந்தால் உன் ஆய்வு சுலபமானதாக இருக்கும். ஆனால் இயற்கை அக்கிரகத்தின் நியதிகளை நாம் அறிவதற்கு ஏற்ற வகையில் சுலபமான வழிமுறைகளைச் செய்யவில்லை'' என்று கூறியுள்ளார்.

மோகன் நூலநிலையம் பெற்றுள்ள கடிதங்களும், அஞ்சல் அட்டைகளும் ஐன்சுடீனால் எழுதப்பட்டவற்றின் ஒரு சிறு பகுதியே ஆகும். அவை பிரண்டிச்சியிடமிருந்து பெறப்பட்டன. இவற்றை கலிபோனியாவிலுள்ள மென்லோ பாக்கில் வசிக்கும் பொருளியலாளரும் அரிதான ஆவணங்களைச் சேர்ப்போருமான ரெஸ்லூட் புறொக்கினாவால் பிரண்டிச்சின் மனைவியிடமிருந்து பெறப்பட்டன.

புறொக் இவற்றை மோகன் நூல நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்தார். அதன் மூலம் புகழ்வாய்ந்த அறிவியலாளரின் ஆவணங்களுடன் இவையும் சேர்ந்து கொண்டன.

பார்க் என்பவர் கூறுவது போல் ஐன்சுடீன் கடிதங்களின் அனேகமானவை கையால் ''மிக அழகான ஒழுங்கான ஜெர்மன் பள்ளி மாணவனால் எழுதப்பட்டவை போல் இருக்கின்றன. அக்கால ஒழுங்குமுறைகளுக்கு அமைய அன்பான பிரண்டிச் என்று தொடங்கி அடியில் ஐன்சுடீன் அல்லது ஏ ஐன்சுடின் என கையொப்பம் இடப்பட்டு இருந்தன.

ஜெர்மன் தந்தைக்கும், கொட்டிலாந்து தாய்க்கும் ஜெர்மனியிலுள்ள பியதிறிசு என்னும் ஊரில் 1885 ஆம் ஆண்டில்

பிரண்டிச் பிறந்தார். கொட்டிங்கன் சர்வகலாசாலையில் கலா நிதிப் பட்டம் பெற்றபின் பேர்லினில் உள்ள வானிலை அவதான நிலையத்தில் வேலை செய்தார். அங்குதான் இன்னமும் வெளியிடப்படாத பொதுத் தத்துவத்துக்கு ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கக் கூடிய வான் கணிப்பாளர்களை தேடி அலைந்து கொண்டு இருந்த ஐன்சுடினுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்.

அவ்விதம் தான் இவர்களிடையே நெருங்கிய நடைமுறைச்சிநேகிதமும் கடிதத்தொடர்பும் 1911ஆம் ஆண்டுதொடக்கம் 1931ஆம் ஆண்டு வரையும் இடம் பெற்றது,

ருசியாவில் உள்ள கிறீமியாவுக்கு பிறண்டிச்சென்று கொண்டிருந்த நேரத்தில் தான் முதலாவது உலகப் போர் ஆகஸ்டில் தொடங்கியது.ஜெர்மனிக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்யப்பட்டதால் ருசியர்களால் சில காலம் இவர் சிறையில் வைக்கப்பட்டார்.

1918இல் பிரண்டிச் ஐன்சுடீன் முழுநேர உதவியாளரான முதலாவது உலகப் போருக்கு பின்னர் பொஸ்டாமில் ஐன்சுடீன் அவதான நிலையத்தை அமைப்பதற்கு பணம் சேகரித்த பின்னர் அவ் நிலையத்தின் முதல் இயக்குநராக ஐன்சுடீனுடன் இணைந்து வேலை செய்தார்.

1920களில் அவர்களிடையே நடந்த கடிதப் போக்கு வரவுகளில் காணப்படும் இடைவெளி காட்டுகிறது. 1931இல் கடிதப் போக்கு வரத்து திரும்பவும் தொடங்கிய போது இயற்கைச் சக்திகள் யாவற்றையும் ஒன்றிணைக்கக் கூடிய தன்னுடைய எண்ணங்களை ஐன்சுடீன் விளக்கியுள்ளார். அந்த முயற்சியை இன்றும் அறிவியலாளர்கள் வெற்றி காணவில்லை.

ஜெர்மனியின் கிட்லர் ஆட்சிக்கு வந்ததும் ஐன்சுடீனும் பிரண்டிச்சும் ஜெர்மனியை விட்டு அகன்றார்கள். அதன் பின் அவர்களின் கடிதத் தொடர்பு நின்று விட்டது.

பிரண்டிச் தனது தாயாரின் ஊரான கொட்லாந்தில் உள்ள சென் அன்றூசு சர்வகலாசாலையில் வானிலை அறிஞராக கடமையாற்றி 1964இல் இறந்தார் ஐன்சுடீன் 1955இல் இறந்தார்

# தமிழ் மக்களிலிருந்து விடுதலைப்புலிகளைப் பிரிக்கமுடியாது என்கிறார் தொண்டமான்

(சண்டே ரைம்ஸ் 22.3.92)

இந்த வாரம் தென்னாபிரிக்காவின் வெள்ளைக்கார அரசு தனது கொள்கைகளை மாற்றி கறுப்பின மக்களுடன் செயலுரிமை பரவலாக்கலுக்கு ஒத்துக்கொண்டது போல் இலங்கையும் தனது கண்களைத் திறந்து இயல்பு நிலையை உணர்ந்து இனப் பிரச்சினை தொடர்பான விடயங்களில் நல்ல முடிவுக்கு வர வேண்டுமென அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு தலைவருமான திரு. சௌ. தொண்டமான் தனது நீண்டகால வாளாமையை (மௌனம்) கலைத்துக்கொண்டு கூறினார். தமிழ் மக்களிலிருந்து விடுதலைப் புலிகளைப் பிரிக்கமுடியாது எனத் திரு. தொண்டமான் வலியுறுத்திக் கூறினார்.

## பத்திரிகையாளரின் நேர்காணலில் சில பகுதிகள்

(1) கேள்வி:- நீங்கள் தற்போது வாளாமையாக இருப்பதனால் பல ஊகங்கள் வெளிவருகின்றனவே. இதற்கு யாதேனும் காரணங்கள் உண்டா?

பதில்:- எனது இணக்க கருத்துக்களைப் பற்றி வெளியில் பேசவேண்டாமெனப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து ஒரு கடிதம் அனுப்பப்பட்டதனால் நான் எனது இணக்கக் கருத்துக்களைப் பற்றி இப்போது பேசுவதில்லை. அதனால் நான் வாளாமையாக இருக்கின்றேன் என்று பொருள் கொள்ளப்படாது. நானும் பாராளுமன்றத்தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதால் பேசாமல் இருக்கின்றேன்.

(2) கேள்வி:- விடுதலைப் புலிகளுடன் எதுவித பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதையும் இந்தியா எதிர்ப்பது போல் தெரிகிறதே? அத்துடன் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்

கலையும் நாடுகடத்தும்படி கோருகின்றது. இந்த நிலையை நீங்கள் எப்படி நோக்குகின்றீர்கள்?

பதில்:- எங்கள் நாடு ஒரு சுதந்திரநாடு. எங்கள் நாட்டு நலன்களைப் பாதுகாக்கும் வகையிலேயே நாம் எங்கள் சிக்கல்களை பார்க்கவேண்டும். மற்றைய நலன்களெல்லாம் இரண்டாவதாக இருக்க வேண்டும். இந்தியாவுடன் நல்லுறவைப் பேண வேண்டும். ஆனால் எங்கள் தேசிய நலன்களே மிக முக்கியமானவை.

(3) கேள்வி:- பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் விடுதலைப் புலிகளைப் போரில் தோற்கடிக்க வேண்டும் அல்லது அவர்களின் வலிமையை அடக்கவேண்டுமென ஒரு சாரார் கருதுகின்றனரே? இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்:- நீங்கள் எண்ணுவதுபோல் விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பது என்பது வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு தமிழரையும் தோற்கடிப்பதற்கு இணையாகும் என்பது எமது கருத்தாகும். ஒன்று வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது. அனைத்துத் தமிழ் மக்களிலிருந்தும் விடுதலைப் புலிகளைப் பிரிக்க முடியாது. விடுதலைப் புலிகளை அழிப்பதென்பது தமிழர்களை அழிப்பதற்கு ஒப்பாகும். தமிழ் மக்கள் இருக்கும் வரை விடுதலைப் புலிகளைப் போன்று கடும் போக்காளர்களும் இருக்கத்தான் செய்வார்கள். விடுதலைப் புலிகள் சரியாகவோ அல்லது வேறு வகையிலோ தமிழர்களின் வேட்கைகளை பிரதிபலிக்கிறார்கள் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

(4) கேள்வி:- அதிகமான தமிழர்கள் மட்டுமல்லாது தமிழ் அரசியல் கட்சிகளும் விடுதலைப் புலிகளைத் தமிழர்களின் தலைவர்களென ஏற்க மறுக்கின்றனவே? இதை எப்படி விளக்குவீர்கள்?

பதில்:- தமிழர்களின் பிரச்சினைகளில் இறுதியாக விடுதலைப் புலிகள் மாத்திரம்தான் முன் நிற்பார்கள்.

(5) கேள்வி:- அவர்கள் தவறுகளைப் பற்றி?

பதில்:- அவர்கள் தவறு செய்கிறார்கள். யார் தான் தவறு செய்யவில்லை? விரும்பியோ விரும்பாமலோ புலிகள் விடுதலைப் போராளிகளாக வளர்ச்சி பெற்றுள்ளனர். அவர்கள் தங்கள் குறிக்கோளில் தடுமாற்றம் இல்லாத போராளிகளாக இருக்கின்றார்கள். மற்றைய தமிழ்க் கட்சிகள் சண்டையில் களைப்புற்றோ அல்லது கொள்கை நடைமுறைகளில் உறுதியற்றோ இருப்பதுமல்லாமல் தாங்கள் எதற்காகக் கட்சியைத் தோற்றுவித்தார்களோ அந்த இலட்சியத்தை அடையுமுன்பே களைத்துவிட்டார்கள்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைப் பற்றிக் கேட்டீர்கள். முதலாவதாக இந்தப் போருக்கான சரியான காரணத்தை ஆராயவேண்டும்.

(6) கேள்வி:- அவர்களுடைய ஈழக்கோரிக்கை சிங்களப் பெரும்பான்மையினரால் ஏற்கக்கூடியதல்லவே?

பதில்:- ஈழம் என்றோ, தமிழர்களின் வேணவா என்றோ அல்லது வேறு எந்தப் பெயரிலும் நீங்கள் அழைத்தாலும் அது தான் அவர்களின் இலட்சியமாகும். அரசியல் யாப்புக்கமைய அவர்களுடைய வேட்கைகளை முழுமை செய்வதற்கு நாங்கள் வழிவகைகளைக் கண்டறிதல் வேண்டும். தற்போது அதைத்தான் செய்வதற்கு நாம் எத்தனிக்கிறோம்.

தென்னாபிரிக்காகூட நல்ல வழிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டது. நீண்டகாலப் பாரம்பரியமும், நாகரிகமும், பண்பாடுமுள்ள நாம் எங்கள் அறிவுக் கண்களைத் திறந்து பார்க்கவில்லை. இது சோகமானது. எல்லோருக்கும் சமாதானம் தேவைப்படுகின்றது. ஆனால் ஒரு நடைமுறைச் சாத்தியமான தீர்வை எவரும் முன்வைக்கிறார்களில்லை. பாரா

ளுமன்றத் தெரிவுக்குழு நல்ல ஒரு தீர்வை முன்வைக்கும் எனவும் எல்லாம் நல்லபடியாக நடக்கும் எனவும் நம்புமோமாக.

(7) கேள்வி:- உங்கள் நடவடிக்கைகள் மேல் சிங்கள மக்கள் ஐயம் கொள்கிறார்கள். இந்த ஐயத்தை நிவர்த்தி செய்ய உங்களின் செயற்பாடுகள் என்ன?

பதில்:- சிங்கள மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு என்மேல் ஐயமில்லை என்பதை நான் தங்களுக்குச் கூற விரும்புகிறேன். இவர்களில் சிலர் எங்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் அங்கம் வகிக்கின்றனர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் தொழிலாளர்களின் நலன்களுக்காகப் பாடுபடுவதால் இந்த நாட்டுக்கு எது உகந்தது என்பது அதிகமான சிங்கள மக்களுக்குத் தெரியும் என்பதை நான் கண்டுள்ளேன்.

உள நிறைவற்ற சில சிங்கள அரசியல்வாதிகளும், பக்கம் சார்ந்த சில பத்திரிகைகளுமே என்மீது ஐயம் கொள்கின்றன. பாரம்பரியங்களாலும், குடும்பப் பின்னணியினாலும் சில பௌத்தமதத்தலைவர்கள் துரதிர்ஷ்டவசமாக இவர்களை ஆதரிக்கின்றனர்.

திரு. காமினி ஜெயசூரியாவைப் பாருங்கள். அவர் என்னுடைய உற்ற நண்பன் அத்தோடு நல்லநோக்கங்களைக் கொண்டவர். இந்திய இலங்கை இணக்க ஒப்பந்தத்தை எதிர்த்து அவர் பாராளுமன்றத்தில் இருந்து விலகியபோதும் அவருக்கு நாட்டில் ஆதரவு கிடைக்கவில்லை. அவர் அவசரப்பட்டுப் பதவியிலிருந்து விலகினார் என நான் நினைக்கிறேன்.

(8) கேள்வி:- பதுளையையும் மத்திய மாகாணத்தையும் உங்கள் உரிமைப்பாட்டுள் கொண்டுவரும் வழிமுறைகளில் நீங்கள் இறங்கியுள்ளீர்கள் எனப் பயப்படுகிறார்களே? இதையிட்டு உங்கள் கருத்து என்ன?

பதில்:- முதலில் எனக்கு இதைச்சொல்லுங்கள். தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் இந்தப்பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் சென்ற 50 ஆண்டுகளாக என்ன செய்துள்ளன? சிங்கள மக்களில் ஆதிக்கம் செலுத்தவோ அல்லது அப்படிப்பட்ட

ஆசைகளோ எனக்கு இருக்கின்றதென்று திரு. ஜெயசூரியா போன்றவர்கள் நினைப்பது சரியல்ல. ஐந்து சதவீத இந்திய வம்சாவளி மக்களைக் கொண்ட என்னால் எப்படி அப்படிச் செய்ய முடியும் சிங்கள மக்களைப் பாதுகாப்பதாகப் போட்டிபோட்டுக்கொண்டு செயல்படுகின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியாலோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியாலோ சிங்கள மக்களின் மேல் உரிமைப்பாட்டை செலுத்த முடியாதிருக்கிறது நான் தனிமனிதனாக இருந்து கொண்டு உரிமைப்பாடு செலுத்துவதென்று நினைப்பது மடத்தனம். என் சொல்லைக் கேட்டு நடக்கச் சிங்கள மக்கள் மடத்தனமானவர்கள் அல்லர்.

(9) கேள்வி:- முஸ்லிம் கட்சிகள், சிங்கள ஆரக்சக சங்விதான போன்ற இனவாரியான கட்சிகளைத் தடை செய்வது நல்லது என நினைக்கிறீர்களா?

பதில்:- கட்டாய தேவைகளினால் இக்கட்சிகள் எழுச்சி பெறுகின்றன. இவைகளின் குறைகளை களைந்தால் இக்கட்சிகள் வளரமாட்டா. இக்கட்சிகளும் விடுதலைப்புலிகள் போன்றவையேயாகும். இக்கட்சிகளை உருவாக்குவதற்கு இருக்கும் காரணிகளைக் கண்டறிந்து தீர்த்து வைக்கவேண்டும்.

(10) கேள்வி:- இந்தியத் தமிழர்களை மீண்டும் நசுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று கூறிச் சில நாட்களுக்கு முன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் கூட்டத்தில் கண்ணீர் வடித்தீர்களே? ஏன்?

பதில்:- நான் இதை ஏன் கூறினேன் என்றால் அரசாங்கத்திற்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையைச் சீர்குலைக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது சிலர் இந்த ஒற்றுமையைக் கண்டு பொறாமைப்படுகிறார்கள்.

50 வருடங்களாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒதுக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. இன வெறுப்பைத் தூண்டக்

கூடிய பிரசாரத்துக்கு அஞ்ச அரசாங்கம் இந்தியத் தமிழர்களு க்கு உதவுவதைத் தவிர்த்துக் கொண்டு வந்தமையால் அண்மைக் காலம் வரை இந்தியத் தமிழர்கள் நாடற்றவர்களாகவே இருந்த னர்.

தற்போது அரசாங்கம் இந்தியத் தமிழர்களுக்கு உதவியது டன் அவர்களை இலங்கைக் குடிமக்களாகவும் மற்றவர்களுக்கு இணையாகவும் ஆக்கியுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் இது மட்டும் போதாது அவர்களை மேம்படுத்த துரித நட வடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இன வெறுப்பைத் தூண்டுவோர் இந்தியத் தமிழர்களால் ஏற்படப் போகும் அச்சுறுத்தல்கள் என்ற ஒரு மாயையை உருவாக்கி அதை வைத்தே இப்பேது அரசியல் இலாபம் தேட முனைகின்றார்கள்.

இந்தியத் தமிழர்களைப் பொறுத்த வரை அரசாங்கம் இன்னமும் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. எனக்குப் பின் இவர்களுக்காகப் போராடுபவர் யார்? ஜனாதிபதி எங்கள் பிரச்சி னைகளைப் பற்றி நன்கு அறிந்துள்ளதுடன், அவர் தன்னாலான வற்றைத் தீர்த்து வைத்திருந்தும், இன்னும் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. மூன்று மாதங்களாகப் போராடி இந் தியத் தமிழர்களது வருவாயை அதிகரிக்கச் செய்துள்ளேன். இந் தியத் தமிழர்களுக்கு வருவாயை அதிகாரித்த போது, இந்த அதிகரி ப்பு தெனியாய, காலி ஆகிய இடங்களிலுள்ள சிங்களத் தொழி லாளர்களுக்கும் கிடைத்துள்ளன என்பதை ஏன் இந்த மக்கள் உண ர்கிறார்களில்லை.

இந்தியத் தமிழர்களின் நிலைமையை முன்னேற்ற அரசா ங்கம் தன்னிச்சையாக எந்த நடவடிக்கைகளிலும் இறங்கவில்லை. ஜனாதிபதி எங்கள் சிக்கல்களை நன்கு அறிந்துள்ளதோடு அவற் றைத் தீர்ப்பதற்கு அவர் எடுக்கும் முயற்சிகளை முறிபடிப்பத ற்கு ஒரு குழு அவருக்கெதிராக இயங்குகின்றது. கடந்த நாற்ப தாண்டுகளாக இருந்து வரும் இச்சிக்கல்களுக்கு முகம் கொடுக்கும் தலைவர்களில் எங்கள் ஜனாதிபதி மாத்திரம் ஒருவர் அல்ல. இந் தியத் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எடுத்த நட வடிக்கைகளுக்கு இனக்காழ்ப்பாளர்கள் தடங்கல் ஏற்படுத்தியுள் ளனர். இந்தியத் தமிழர்களின் பிரச்சினைகள் தேசியப் பிரச்சி னைகளாகக் கருதி அவற்றைத் தீர்க்கத்தக்க வகையில் நடவடி க்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இன்னல்களுக்கு நடுவில் போராடிப் படிப்படியாக முன்னேறியுள்ளேன்.

(11) கேள்வி:- மத்திய மாகாணசபை அரசாங்கத்தில் உங்கள் மகன் அமைச்சராக இருக்கிறாரே இது உங்களுக்கு உதவுவதாகத் தெரியவில்லையா?

பதில்:- இதில் என்ன சிறப்பு இருக்கிறது அவர் ஒரு குடிமகன் மற்றையோரைப் போல் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதன் மூலம் அவருக்குக் கிடைக்க வேண்டியதைப் பெற்றுக் கொண்டார். அதில் ஒரு சிறப்பும் இல்லை.

தமிழ்நாடு சங்ககாலத்தில் மக்கள் ஒழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஐந்து நிலங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. கடற்கரையை சார்ந்த நெய்தல் நிலத்தில் உள்ளவர் பரதர் எனப்பட்டனர். மலைகளிலும், மலைசார்ந்த நிலமாகிய குறிஞ்சியில் வாழ்ந்தவர் குறவர் எனப்பட்டனர், காட்டு நிலமாகிய முல்லையில் வாழ்ந்தவர் ஆயர் எனப்பட்டனர். அவர்கள் இடையர்கள். ஆற்றோரங்களைக் கொண்ட மருத நிலத்தில் உழுதுண்டு வாழ்பவர் உழவர். பாலைவனப் பகுதியில் வேட்டையாடியும், கொள்ளையடித்தும் வாழ்ந்து வந்தவர் எயினர்.

(நன்றி: தமிழர்சார்பு)

# பானமாகக் கொள்ளக்கூடிய தேயிலையின் தோற்றம்

(டெயிலி நியூஸ் – 4.31992)

கடும் வெய்யில் நீண்டநேரம் உழைத்துச் சோர்வுற்ற ஒரு தொழிலாளியின் சோர்வை நீக்கி உற்சாகத்தைக் கொடுக்கும் பானமாக விளக்குவதும் சமூக வைபவங்களில் பெரிதும் விரும்பிப் பருகப்படுவதுமான தேயிலை எப்படி, எங்கிருந்து வந்தது.

அதிலும் 'லிப்டனுடைய தேயிலைத்தோட்டம் (Liqtons Tea Garden) என அழைக்கப்படும் இலங்கையில் வாழும் எங்களுக்கு தேயிலை எப்பொழுது, யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதற்கு விடை காண்பது மிகவும் முக்கியமானதாகும்.

தேயிலை உற்பத்தி இலங்கையில் ஒரு கைத்தொழிலாக மாறுவதற்குக் காரணமாய் இருந்தது யாது? சென்ற பல ஆண்டுகளுக்கு முன் நல்ல விளைச்சலையும், வருவாயையும் கொடுத்ததும் ஆரம்பத்திலிருந்தே பயிரிடப்பட்டதுமான கோப்பிப் பயிரின் இடத்தை இது பிடித்துக் கொண்டது எப்படி?

பல இலட்சக்கணக்கான மக்களுக்குப் புதிய வாழ்க்கை முறை ஒன்றை உருவாக்கிக் கொடுத்த தேயிலை பிரித்தானியா மற்றும் அமெரிக்கச் சந்தைகளில் ஓர் உன்னத இடத்தைப்பிடித்துக் கொண்டது எப்படி?

தங்கள் நாடுகளின் நலன்களைக் கருத்திற் கொண்ட சில நாடுகள் சர்வதேச சமூகத்தை ஏமாற்றி இதன் பாவனையை வளர்த்துக் கொண்டதன் காரணமாகவும், தனிப்பட்டவர்கள் தங்கள் சுயநலன் கருதி மேற்கொண்ட தந்திரமான மற்றும் துணிகரமான நடவடிக்கைகள் காரணமாகவுமே தேயிலையின் பாவனை உன்னத நிலையை அடைந்தது.

தேயிலை எப்படி அறிமுகப்படுத்தப்பட்டது என்பதைப் பற்றி யாரும் இப்பொழுது எண்ணுவதில்லை. சீனாவின் மலைச்சாரல்களிலேயே தேயிலைச்செடி முதன் முதலாக வளர்ந்திருக்கக் காணப்பட்டதாகப் பல ஆண்டுகளாக மக்கள் நம்பியிருந்த போதிலும் இச்செடி இந்தியாவின் தற்போதைய வடகீழ் மாநில

மான அசாம் (*Assam*) பிரதேசத்திலும் அக்காலத்தில் வளர்ந் திருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்ததாகப் பின்னர் அறிய முடிகின்றது.

தேயிலை எங்கிருந்து எப்படி வந்தது என்ற கேள்விக்குச் சரியான பதில் கொடுக்க முடிந்தாலென்ன அல்லது முடியாவிட் டால்தானென்ன இதன் பதில் தேயிலை ஒரு சர்வதேச வியா பாரப் பொருளாக வந்துள்ளது என்பது ஒரு விதத்திலும் பாதிக்காது.

குறிப்பாகக் கூறின் சீனதத்துவஞானி அல்லது ஆட்சியாள ரான திரு. சென் நுங் (*Chen Nung*) அவர்கள் தேயிலை ஒரு பானமென கிறித்துவுக்கு 2700 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டு பிடித்தார் என அறியமுடிகின்றது.

ஐம்பது நூற்றாண்டுகளுக்குப் பின் தேயிலை உலகின் தலைசிறந்த வியாபாரப் பொருள்களில் ஒன்றாக வளர்ச்சியடைந் திருப்பதை நோக்குகையில் இதே நிலை மேலும் தொடருமாகில் எதிர்காலத்தில் இது உன்னத வளர்ச்சியுறும் என்பது சந்தேக மற்றதாகும்.

தேநீர் குடிக்கும் பழக்கம் பலநூற்றாண்டுகளுக்கு முன் தென் கிழக்காசியாவில் உள்ள சில பகுதிகளில் இருந்திருப்பினும், கிழக்கு இந்தியக் கம்பனி என்ற நிறுவனத்தினால் மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாகவே 17ஆம் நூற்றாண் டின் பிற்பகுதியில் அல்லது 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இது ஒரு மனிதனின் நாளாந்த தேவைக்கு வேண்டிய பொரு ளாக மேற்குலகில் பரவியது.

பல்தரப்பட்ட விற்பனைகளையும் மற்றும் ஏற்றுமதி இறக் குமதி ஆகியவற்றையும் தனது பிரதான தொழிலாகக்கொண் டிருந்த அதே வேளையில் பலதரப்பட்ட முயற்சிகளில் ஈடுபடக் கூடிய தகுதியும் தனக்குண்டென மெய்ப்பித்த டச்சு கிழக்கிந் திய கம்பனி சர்வதேச வியாபாரத்திலும் ஈடுபட்டதன் மூலம் வரலாற்றில் தனக்கென ஒரு நிலையான பெயரை நிலை நாட்டியது.

டச்சு கிழக்கிந்திய கம்பனி தேயிலை வியாபா தொடக் கத்திற்கு முன்புதான் வியாபாரங்களில் பெருமளவில் ஈடுபட்டு

வந்தது. பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனி மூலம் பிரித்தானியரும், மற்றும் பிரான்சு வியாபாரிகளுமே தேயிலையை ஒரு சர்வதேச வியாபாரப் பொருளாக மேம்படச் செய்தனர்

16ஆம் நூற்றாண்டில் அல்லது 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே தேயிலை உற்சாகம் தரும் ஒரு பானம் என ஐரோப்பியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தேயிலை வர்த்தகத்தில் ஈடுபாடுடைய ஒரு பிரயாணி கொண்டு வந்த தேயிலையை அதன் மருத்துவ மகிமையை அறியும் பொருட்டு ஐரோப்பிய மண்ணில் முதன் முதலாக வடித்துப் பரிசோதித்தனர். மேற்றுலக நாடுகளுக்கு அனுப்பப்பட்ட முதலாவது தேயிலை அடங்கிய பொதி 1610இல் ஒல்லாந்தில் இறக்கப்பட்டதெனவும் அங்கேயே அதன் பாவனையை மேற்குலகில் பரப்புவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் ஒல்லாந்தர்கள் கூறுகிறார்கள்.

பச்சைத் தேயிலையிலிருந்து பெறப்பட்ட தேநீர் வாய்க்குருசி இல்லாததன் காரணமாகத் தேயிலையை மருத்துவ தேவைகளுக்கே நாலாம் நூற்றாண்டிலிருந்து இறக்குமதி செய்தார்கள்.

தனக்கென ஒரு நிலையான இடத்தைத் தேயிலை பிடித்துக் கொண்டதும், பெருஞ் சந்தைப் பொருளாக அன்று விளங்கிய கோப்பி மற்றும் குடிவகைகளுடன் இது போட்டி போடக்கூடியதாயிருந்தது.

பெரும் இலாபத்தை ஈட்டித்தரும் தேயிலையை பிரித்தானிய வர்த்தக சமூகமே தீவிரமாக ஆதரித்தது. இலங்கையின் வர்த்தகப் பயிராகத் தேயிலை விளங்க ஆரம்பித்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் திரு. தொமஸ் காராவே (*Thomas Garaway*) இதனுடைய மருத்துவ மகிமையை விளம்பரப்படுத்தி லண்டன் சந்தையில் இதை 1657ஆம் ஆண்டு விற்பனைக்கு விட்டார்.

தேயிலை பிரித்தானியாவிலேயே பெரும் விற்பனைப் பொருளாக அறிமுகப்படுத்தப்பட்ட போதும் மற்றைய நாடுகள் போல் பிரித்தானியாவும் 1860ஆம் ஆண்டு தேயிலை இறக்குமதிக்கு வரிவிதித்ததன் காரணமாக இது பெரும் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது, இருப்பினும் இது இப்பொழுது ஒரு உன்னத நிலையை அடைந்துள்ளது.

# தாக்குதல் நடவடிக்கை 'சிக்சர்' புலிகளைத் தடுமாற்றத்தில் ஆழ்த்தியது

(சண்டே ரைம்ஸ் 22 03-1992)

வெலி ஓயாவென்று தற்போது சிங்கள அரசினால் அழைக்கப்படும் மணலாற்றின் கிழக்குப்பக்கக் காட்டுப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான படை வீரர்களுடன் நாமும் இருந்தோம். ''ஒப்றேசன் கயபாற'' என்ற குறியீட்டைக் கொண்ட படை வீரர்களின் தாக்குதல் நடவடிக்கை ஈழப்போரின் பலப்பரீட்சையாக அமைந்தது. இப்பயங்கரக் காட்டுச்சமர் விடுதலைப் புலிகளின் பலத்த பாதுகாப்பைக்கொண்ட, மதிப்பும் சிறப்பும் வாய்ந்த தொடர்தளங்களில், 1 4 தளங்களின் தலைவிதியை தீர்மானிக்கப் போகின்றது.

புலிகளின், எரிந்து கொண்டிருக்கும் குடிசைகளைப் பார்க்கும் நோக்கத்துடன் இந்த அதிர்ச்சியூட்டுவதும் பேரிடர் நிறைந்ததுமான காட்டுக்குள் நானும் என்னுடன் வந்த இராணுவ வீடியோப் படப்பிடிப்பாளரும் சென்ற போது எனக்கு அதிர்ச்சியூட்டும் நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது.



இந்தப் புதர்க்காட்டில் இருந்து யார் அங்கே? என்று படைவீரன் ஒருவன் அதட்டும் குரல் கேட்டது. சில யார் தூரத்திலுள்ள படைவீரர்கள் எதிர்பார்த்த சங்கேதச் சொல் என்னவென்பது எனக்குத் தெரியவில்லை. 25 அடி தூரத்தில் புதர்க்காட்டிற்குள் சென்று கொண்டிருந்த (என்னுடன் வந்த) கோப்றலை (Corporal) அழைத்தேன். என்னுடைய அபாய அழைப்பு அவருக்குக் கேட்கவில்லை. நேரம் சென்று கொண்டிருந்தது. யாது அங்கே? என்று மீண்டும், அதட்டும் குரல் கேட்டது. இது இறுதி எச்சரிக்கை என்பதை அறிந்து கொண்ட நான், என்னை நோக்கிக் குண்டுகள் வருவதைக் கற்பனை செய்து பார்த்தேன். இறுதி எச்சரிக்கையைக் கேட்ட எனது சகபாடி சுடாதே இது தான் ...... ... (*Dont shoot, This is*) என்று தங்கள் சங்கேத மொழியில் கூறினான்.

நாட்கள் முடிவதும் தோன்றுவதும் படைவீரர்களின் அன்றாட நிகழ்ச்சியாகும் ஆனால் எனக்கு அப்படித் தோன்றவில்லை. நான் மார்ச் மாதம் 19 ஆம் திகதி அரசபடை அணியினருடன் இருந்தபோது சிறப்பாக கூறுவதற்கு எதுவும் நடக்கவில்லை. கடும் எதிர்ப்பைச் சந்திக்கும் நோக்குடன், தயார் நிலையில் இருந்த படையினர், மெது மெதுவாக முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர்.

தந்திரோபாயங்களின் நிமித்தம் விலகிச் செல்லும் புலிப் படைப் போராளிகள் கடும் எதிர்ப்பின் நடுவில் மார்ச் மாதம் 16 ஆம் திகதி, அதாவது முதலாவது நாட் தாக்குதலன்று புலிப் படையினரின் 14 முகாம்களில், குமரன், அரி என்ற இரு முகாம்களையும் அரச படையினர் கைப்பற்றினர்.

ஆறாம் இலக்கைக் கொண்ட படைப்பிரிவினரின் கூட்டமைப்பில் உள்ளோரே இந்த அதிரடிப் படைக் கூட்டணியில் இருந்தனர். இதனாலேயே இந்த நடவடிக்கையை ஆறாவது என்று அழுத்தம் கொடுத்து அழைக்கின்றனர். ஆறு பிரிகேடை சேர்ந்த படைப்பிரிவின் இரு கூறாகப் பிரிந்து விடுதலைப் புலிகளின் இரு முகாம்களைத் தாக்கினர்.

ஆயுதம் தரித்த சுமார் 25 பேரைக் கொண்ட விடுதலைப் புலிப்படை அணியொன்று குமரன் தளத்தைவிட்டு வெளியேறுவதைக்கண்ட வான்படை உலங்கு வானூர்தி ஒன்று சுடத்தொடங்கியதும் காதைப்பிளக்கும் பலத்த சத்தங்கள் முதன்முறையாகக் கேட்கத் தொடங்கின. ஒபறேசன் சிக்சரின் தொடக்கமே பலத்த

ஆரவாரத்துடன் தொடங்கியது. இது தொடரப்போகும் பலப் பரீட்சையின் போக்கை முன்கூட்டியே தெரிவிக்கும் வகையில் அமைந்திருந்தது. விடுதலைப் புலிகளின் மதிப்பையும் பெருமையையும் எடுத்துக்காட்டும் வகையில் தங்கள் தளத்தின் பின்புறமாக வரும் அரச நடவடிக்கை 'சிக்சர்' படைப்பிரிவினரை எதிர்கொள்ள, அவர்கள் (விடுதலைப் புலிகள்) தயார் நிலையில் இருந்தனர்.

இக்காட்டுப் பிரதேசத்தில் சக்திவாய்ந்த இந்திய அமைதி காக்கும் படையினர் (*IPKF*) எடுத்த ஒவ்வொரு தாக்குதல் நடவடிக்கைகளையும் விடுதலைப்புலிகள் முறியடித்துள்ளனர். இவ்விடத்தில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய அமைதி காக்கும் படையினரின் ஒரு கம்பனி அணி ஒன்றை விடுதலைப் புலிகள் முற்றுமுழுதாக அழித்துள்ளனர். இதனால் இந்த 1-4 தளம் அமைந்துள்ள காட்டுப்பிரதேசத்திற்குள் உட்புகமுடியாததென்று, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகளின் மாண்புமிகு தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனின் நீண்டகாலத் திட்டத்தில் 1-4 தளம், முக்கிய தளமாக அமைந்துள்ளது. இந்தக் காட்டிலுள்ள தளத்தை கிழக்கில் உள்ள தலைமைப் பணிமனையாக மாற்றிய தோடல்லாமல் இது ஓர் அவசரகாலத் தலைமையகமாகவும் செயல்படக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்திற்கு இடர் ஏற்படும் வேளையில் தான் வந்து தங்கக் கூடியதாக சகல வசதிகளையும் கொண்ட தளமாக இந்த 1-4 தளத்தை திரு. பிரபாகரன் அமைத்துள்ளார் என மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ விளக்கம் கொடுத்தார்.

ஒரு அதிரடித்தாக்குதலின் மூலம் விடுதலைப் புலிகளின் மூன்று முக்கிய தளங்களை சென்ற வருடம் கைப்பற்றி திரு.பிரபாகரனின் திட்டங்களை இராணுவத்தினர் முறியடித்தனர். பலத்த பாதுகாப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள 1-4 தளத்தை விடுதலைப் புலிகள் கைவிட முடியாது. அதனால் விடுதலைப் புலிகள் மீண்டும் தங்கள் முகாம்களுக்கு வந்து 1-4 தளத்தை கைப்பற்றும் முயற்சியில் மும்மரமாக ஈடுபடுகின்றனர்.

வெலிஓயா என்று தற்போது சிங்கள அரசால் அழைக்கப்படும் மணலாற்றுக்காடுகள் கிழக்கு மாகாணத்திற்குச் செல்லும் பாதையாக புலிகளுக்கு விளங்குகிறது. கிழக்கின் இராணுவத்தளபாடத் தேவைகளை முழுமை செய்வதற்குபுலிகளுக்கு முக்கியமாக இப்பகுதி தேவைப்படுகிறது. இம்முறை புலிகளைக்கிட்ட நெருங்கவிடமாட்டோம் என்கிறார் இந்த அதிரடி நடவடிக்கைக்கு முழுப்பொறுப்பையும் ஏற்றிருக்கும் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ.

வெலிஓயாப்பகுதியிலுள்ள இராணுவத் தளங்களைத் தாக்குவதற்கு பாரிய நடவடிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் எடுக்கவிருப்பதாக ராணுவப் புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது. ஆனால் இந்நடவடிக்கையை விடுதலைப்புலிகள் எடுக்குமுன் தாக்குதல் நடவடிக்கைக்கு'சிங்சர்' அணியினரைக் கொண்ட அதிரடிப்படையினர் காட்டிற்குள் சென்றுவிட்டனர். இம்முறை எமகள் குறிக்கோள்கள் நிறைவேறும் வரை நாம் விலகப்போவதில்லை என்று சமரின் முன்னணியில் இருந்துகொண்டு இவ்வதிரடிப்படைப் பிரிவிற்குப் பொறுப்பாக உள்ள கொமாண்டர் பிரிகேடியர் றோகான்தலுவத்தை கூறுகிறார்.

முதலாம் நாட் சமரின்போது ஒருகவசவாகனம் (APC) எதிரிகளின் காப்பரண்களை நோக்கி முன்னேறிச் சென்றது. சடுதியாக விடுதலைப் புலிப்படையினர், சுழல் துப்பாக்கிகளாலும் பீரங்கித் துப்பாக்கிகளாலும் தாக்கத் தொடங்கினர். இவர்களின் (விடுதலைப்புலிகள்) பீரங்கிப்படை அணியினர் தங்கள் நிலைகளிலிருந்து, தங்கள் முகத்தைச் சாக்குகளால் மறைத்துக்கொண்டு இக்கவசவாகனத்தை நோக்கிச்சுட்டனர். ஏழு ஆர் பி யி (RPG) எறிகணைகள் இந்தக்கவசவாகனத்தைத் தாக்கின. இத்தாக்குதலில் ஒரு அரசபடைவீரன் இறந்தான், இருவர் எரிகாயங்களுக்கு உள்ளாகினர் என்கிறார்.

இத்தரைப்படைப் பிரிவிற்குப் பொறுப்பான ஓர் இராணுவ மேலாளர் ஆர்.பி.யி தாக்குதல்களும் அருள் 89 தாக்குதல்களும் ஒரு தனிப்பட்ட தாக்குதலுக்கு ஒருபோதும் இல்லாதவாறு அதிக அளவில் பாவிக்கப்பட்டன. இதிலிருந்து புலிகள் தங்கள் நிலைகளை கைவசம் வைத்திருப்பதில் தீவிரமாக இருக்கிறார்கள் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது எனக்கூறினார்.

நவீன ஆயுதங்கள் பெருமளவில் வைத்திருப்பதனாலும் இப்போருக்கென வாங்கப்பட்ட ரி 55 ரக தாங்கிகள் பாவிப்புக்

குக் கிடைத்துள்ளதனாலும் அரசபடையினர் விடுதலைப்புலிக ளின் இரண்டு தளங்களையும் கைப்பற்றுவதற்கு வசதியாக இருந் தது. முதல்நாள் சமரீ ஒரு தென்னந்தோட்டத்தில் தான் நடந் தது என்பது குறிப்பிடத்தக்கது

அரச அதிரடிப்படையினர் விடுதலைப் புலிகளின் பாதுகாப் பரண்களை ஊடுருவிச் செல்லும் பொழுது இயற்கைவளம் அரச படையினருக்கு எதிராக அமைந்திருந்தது. புதர்க்காடுகளில் தெளி வாக பார்க்க முடியாதிருந்தது. வான்படையினருக்குப் புலிகளின் நிலைகளை அறியமுடியாதிருந்தது.

நிலத்தைச் சீர்செய்யும் வாகனங்கள் (Bull dozers) முன்னே பாதைகளை வழி அமைத்துச் செல்ல இராணுவ வாகனங்களும் படைவீரர்களும் மெதுவாகவும் உறுதியாகவும் இவ் வாகனங்கள் பின், முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர்.

இச்சமர் தொடங்கி நாலாவது நாள், அரச படையினர் கொக்குத்தொடுவாயிலிருந்து வடக்கே 4 கி.மீ தூரம்வரை முன் னேறி இருந்தனர்.

ஆனையிறவுச் சமரில் மும்முரமாகச் செயல்பட்டு தனது பெருமையை நிலைநாட்டிக் கொண்ட வீரரான மேஜர் சனத் கருணாரத்தின இந்தச் சமரில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். ஆனையிறவுச் சமரில் தனது திட உறுதியினால், பலவேகயப்படை கள் விடுதலைப்புலிகளின் முற்றுகையை முறியடிக்கும்வரை அத் தளம் புலிகளின் கைகளில் விழாமல் காப்பாற்றியவர் இந்தக் கருணாரத்தினாவேயாவர்.

நாங்கள் முன்னேறிக்கொண்டிருக்கின்றோம். இப்புதர்க் காட்டில் சண்டையில் ஈடுபடுவது சிரமம், ஆனால் எங்கள் பையன் கள் உறுதியுடன் இருக்கின்றார்கள் என்கிறார் இந்த இராணுவ மேலாளர். சில நாட்களில் கடும் சமர் ஏற்படும் அறிகுறிகள் தென்படுகின்றன. மேலதிக படையினரை அனுப்பும்படி புலிகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிய செய்தியை இராணுவம் இடை மறித்து அறிந்துள்ளது 500 புலிப்படையினரை அனுப்புவதாக யாழ்ப்பாணத்திலிருந்து வந்த செய்தியையும் அறிய முடிந்தது. அண்மையிலோ சில காலத்தின் பின்னரோ புலிப்படை வீரர்களை எதிர்கொள்ள அரசபடையினர் தயார் நிலையில் உள்ளனர்.

# யெருசலோம் - நபிகள் நாயகத்தின் வீடு (மோட்சம்)

- சித்திக்கோசு -

(ஐலன்ட் பத்திரிகை 27.3.92)

சோவியத் ருசியாவின் வீழ்ச்சிக்குப் பின் இன்று இசுலாமிய நாடுகள் உலககவனத்தை ஈர்த்துள்ளன. மேலும் மேற்குலக நாடுகள் இசுலாமிய நாடுகளிலுள்ள இசுலாமியரின் எழுச்சியைக் கண்டு ஆழ்ந்த கவலை அடைந்துள்ளார்கள்.

இன்றைய கோடானு கோடி முசுலிம்கள் முகம்கொடுக்கும் மிகவும் பெரிய சிக்கல் 1967ஆம் ஆண்டிலிருந்து இசுறேலினால் வன்கவரப்பட்ட யெருசலோம் பகுதியே. இவ் வன்கவர்வை ஐ.நா.சபை பலமுறை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியும் உள்ளது. ஆனால் இசுரேலிய வன்கவர்வாளர்கள் உலகக் கருத்தை மதிப்பதாக இல்லை.

## கீழ்ப்படிய மறுப்பு

இசுலாமிய கொடியின் கீழ் உலக இசுலாமிய நாடுகளின் ஒருமித்த வற்புறுத்தலில் என்றோ ஒருநாள் இசுரேல் கீழ்ப்படியத்தான் வேண்டும். அராபிய தேசியவாதந்தாலோ அல்லது ஏதாவது மதச்சார்பற்ற ஆற்றலின் கீழோ ஒருபொழுதும் அதை விடுவிக்க இயலாது. இசுலாமிய மறுமலர்ச்சியும், முசுலிம்களிடையே மதச்சார்பற்ற முசுலிம்தலைவர்களினால் ஏமாற்றமும் வல்லரசுகளில் உள்ள நம்பிக்கையீனமும் யெருசலோமை மீட்பதற்கு உண்மையான காரணிகளாக அமையும்.

யெருசலோம் இசுலாமிய எழுச்சி வரலாற்றோடு மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டது. புனிதத்தன்மையில் நபிகளின் பள்ளியான கபாவுக்கு அடுத்ததாக யெருசலோமிலுள்ள அக்குசா பள்ளி விளங்குகிறது.

யெருசலத்திலிருந்து தான் பரிசுத்தமுகமது நபி அவர்கள் மோட்சம் அடைந்தார்கள்.

புனிதகுரானில்(17:1) இன்சுரா அல் இசுரா அதில் சொல்லப்படுவதாவது. அல்லாவின் புகழ். பரிசுத்த பள்ளியிலிருந்து

மிகவும் தூர இடத்தில் உள்ள பள்ளிக்கு அல்லா ஆனவர் இரவு நேரத்தில் தனது பணியாளனை அழைத்துச் செல்வாராம். அவ்விடத்தை நாம் சமிக்ஞைகள் மூலம் வாழ்த்துகிறோம் எல்லாம் தெரிந்த அல்லாவுக்கு நாம் செய்வது தெரியும். தூரத்தில் உள்ள பள்ளி என கூறப்பட்டது தான் யெருசலோமிலுள்ள மசீட் அல் அக்குசா(*Masyid-al-aqsa*)

வரலாற்று ரீதியாக யெருசலேம் பலத்தீனத்தின் முக்கிய பகுதி ஆகும். அது புகழ்பெற்ற காலிப உமாபின் அல்கட்டாப்பின் காலத்தில் இசுலாமிய ஆட்சியின் கீழ் வந்தது. 1099 ஆம் வருடம் (கிறித்தவகாலத்தில்) சிலுவைப்போரில் பலத்தீனத்தை கைப்பற்றப்படும்வரை இசுலாமிய ஆட்சியில் நாலரை நூற்றாண்டு காலமாக இருந்தது. கிறித்தவ ஆட்சி ஒரு நூற்றாண்டுக்கு குறைவாக இருந்தது. 1187 (கி.ஆ)ல் திரும்பவும் சலாவுத்தின் அயூபி [சல்தீன்] ஆட்சியைக் கைப்பற்றினான். கிறித்தவ காலத்தைவிட முசுலிம்கள் யெருசலோம் தொடர்ச்சியாக எட்டு நூற்றாண்டுகளும் எல்லாமாக பதின்மூன்று நூற்றாண்டு காலமாகவும் ஆட்சி செய்துள்ளார்கள்.

## நோக்கம்

யெருசலோம் மீது ஆட்சி செலுத்தியோர் தங்கள் சமயத்துக்கு மாறானவர்கள் மீது வேறுபாடான நடைமுறைகளைக் கைக்கொண்டதாக வரலாற்றுச் சான்றுகள் உண்டு. மசிடோனியா, பபிலோனியா, றோமேனியர் ஆகியோரால் யூதர்களின் கோயில்கள் அழிக்கப்பட்டன. கட்ரியான் யூதர்களை யெருசலோமுக்கு வருவதற்கு தடைசெய்தான். சிலுவைப்போரி செய்தோரால் யூதர்கள் மிகவும் கொடூரமான முறையில் நடத்தப்பட்டார்கள்.

பலத்தீனத்தில் யூத வணக்க இடங்களை அமைக்கவும் யூத குடியேற்றங்களை நிறுவவும் முசுலிம்கள் ஆட்சிசெய்த காலத்தில் ஒப்புதல் தரப்பட்டார்கள் இதை இசுலாமிய பொற்காலம் எனலாம். யூதர்களுக்கு சமய வழிபாட்டிற்கு ஒப்புதல் அளித்தது போல் கிறித்தவர்களுக்கும் வழங்கப்பட்டது முசுலிம் சமய அடிப்படையில் யாரையும் துன்புறுத்தவில்லை. பல எழுச்சிகளையும், வீழ்ச்சிகளையும் கண்ட யெருசலத்தின் நகரின் நடுவில் உள்ளதும் சீட்-அல் அச்சா.

கியூபற் அல்சக்ரா என்றும் ஆங்கிலத்தில் குன்றின் குவிந்த கூரை என அழைக்கப்படும் கட்டடம் 691 (கி. ஆ)ஆண்டு உமாயட்

காலிப் அப்துல் மாலிக் பின் மேர்வான் அவர்களால் கட்டப்பட்டது. காராம் அல் சாறிப் இசுலாமிய கலைநுட்பத்தின் நுண்ணிய உதாரணம் மாத்திரமல்லாது இசுலாத்தின் வணக்கத்துக்குரிய பண்பாடும் புதைபொருள் வீடுமாக அமைந்துள்ளது ஆத்மீக எழுச்சியின் வடிவமாக காராம் அல்காறிய யெருசலத்தில் திகழ்கிறது.

இசுரேலிய வன்கவர்வால் இன்று யெருசலம் சியோனிய ஆட்சியின் கீழ் உள்ளது. அது ஒரு வன்கவரப்பட்ட பூமியாகவும் இஸ்ரேலிய குடியேற்றத்துக்குள்ளாக்கப்பட்டும் உள்ளது. புனித மசுயிம் அல் அக்சா பள்ளிவாசலை உடைத்து அவ்விடத்தில் யூதக் கோயில் ஒன்று அமைக்கும் தம் எண்ணத்தை இசுரேலியர்கள் தெளிவாக வெளிக்காட்டியுள்ளனர்.

முன்னாள் இசுரேலிய பிரதமரா னபென்கூரியன் யெருசலம் இல்லாத இசுரேல் இல்லை. அதுபோல் யூதக்கோயில் இல்லாத யெருசலமும் இருக்க முடியாது என்று தெளிவாகக் கூறியுள்ளார். பள்ளிவாசல்களிலும் மற்றும் வரலாற்றுப் பெறுமதிவாய்ந்த இடங்களின் அடி அத்திவாரத்துக்குள் கிண்டப்படும் கிடங்குகளும் அகழ்வாராய்ச்சிகளும் அல் அக்சா பள்ளிக்கு உடைந்து கொட்டுண்ணும் பேரிடரை ஏற்படுத்தியுள்ளது அவற்றிற்கு அருகாமையில் உள்ள இசுலாமிய பின்னணி கொண்ட இடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. யெருசலத்தைச் சுற்றி தமது குடி இருப்பிடங்களை அமைப்பதன் மூலம் இசுரேலியர்கள் தமது பிடியை இறுக்குகிறார்கள்.

## திட்டங்கள்

இவர்களின் இத்தகைய திட்டங்கள் அவர்களின் நண்பர்களான ஐக்கிய அமெரிக்கா உள்பட பல பகுதிகளிலிருந்தும் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளனஅப்படியிருந்தும்இசுரேலியர்கள் கவலையின்றி தொடர்ந்து அவ்விதமே நடக்கிறார்கள். ஐ நா· வின் 465-வதுதீர்மானம் அவர்களது குடியிருப்புக்களை அகற்றவும் புதியவற்றை செய்யவேண்டாமென்பதுமாத்திரமல்லாமல் இசுரேலினால் யெருசலமின் பூகோள குடியியல் அமைப்புக்களை மாற்றும் நடவடிக்கைகள் யாவும் செல்லுபடியற்றனவென்றும் கூறுகிறது.

ஆனால் இசுரேலியர்கள் இதை ஒருவித தண்டனைக்கும் தாம் ஆளாகமாட்டோம் என்ற துணிவுடன் தட்டிக்கழிக்கிறார்கள். தனது சகாவான அவர்களுக்கு எதிராக ஐக்கியஅமெரிக்கா

கூட்டு நடவடிக்கை ஒன்றிலும் ஈடுபடவில்லை. காரணம் தனது காங்கிரசில் யூதர்களின் ஆதரவு தமக்கு இல்லாமல் போய்விடு மென்பதாகும்.

யெருசலமும் மசுகிட் அல் அக்சாவும் இசுலாமிய மதத்துடன் மிக நெருக்கமான உறவையுடையன என்பதை எல்லா முசுலிம்களும் தெளிவாக அறிந்து கொண்டு இப்புனிதத் தலங்களை யூதர்களின் உரிமைப்பாட்டிலிருந்து விடுபடுவது தமது கடமை என உணரவேண்டும்.

அந்த விடுவிப்பு இசுலாத்தின் பதாகையின் கீழ்தான் நடைபெறப்படவேண்டுமேயன்றி வேறு பி. எல். ஓ அல்லது வேறு அந்நிய சித்தாந்தங்கள் மூலம் செய்ய முடியாதென்பதையும் முசுலிம்கள் அறிந்து கொள்ள வேண்டும். முசுலிம்கள் நூறு கோடிப்பேர்களுக்கு அதிகமாக உள்ளனர். அல்லாவின் மீது கடும் நம்பிக்கை வைத்து இருக்கும் பெருந்தொகையான ஆட்பலம் பொருள்பலம் தார்மீகப்பலம் ஆகியவற்றுடன் ஒருபெரும் அணியாக மாறி யெருசலத்தில் இருந்து யூதர்களை துரத்த முடியும்.

இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் மத்திய கிழக்கு இணக்க பேச்சுவார்த்தைகள் மேற்கு நாடுகளால் நடாத்தப்படும் ஏமாற்றுவித்தை என்பதையும் அது முசுலிம்களை பணியவைக்கத்தான் நடைபெறுகின்றதென்றும், முசுலிம்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

முசுலிம்கள் லெபனானிலிருந்து பாடம் படித்துக்கொள்ள வேண்டும். அங்கு இஸ்ரேலியர்கள் இருதடவைகள் இசுலாத்தின் பதாகையின் கீழ் இசுலாமிய புனித போர்ப் போராளிகளால் தோற்கடிக்கப்பட்டார்கள்.

# அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறையின் அடுத்த தலைமுறை அமெரிக்கா புதுவகை ஒற்றர்களைத் தேடுகின்றது

(நியூஸ் வீக் - 10.02.92)

அமெரிக்காவின் யேல் (*Yale*) பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் வெள்ளைக்கார அங்கிலோ சாக்சன் புரட்டசு தாந்தியரே ஒற்றர் வேலைக்கு ஏற்றவர்கள் என கருதி அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை (*CIA*) யினர் அவர்களையே முன்னர் தங்கள் ஒற்றர் சேவையில் வேலைக்கு அமர்த்தினர். கிறித்தவ சமயத்தின் ஒரு பிரிவினரான மோர்மன் (*Mormon*) களைத் தற்போது ஒற்றர் வேலைக்கு அமர்த்தும் பொருட்டு நயமாகவும் விநயமாகவும் பேசி தங்கள் பொறியில் விழச்செய்கின்றனர். மூன்றாம் உலக நாடுகளில் கிறித்தவ சமயத்தைப் பரப்பும் பாதிரிகளாகச் சேவையிலீடுபடும் இந்த இளம் மோர்மர்களின் மென்மையான நல்ல பின்னணி ஒற்றர் வேலைக்கு உகந்ததாகவுள்ளது. அத்துடன் மத்திய புலனாய்வுத்துறைக்கு அத்தியாவசியமான பிற மொழி அறிவும் அவர்களுக்கு உண்டு. சோவியத் ஒன்றியம் இருக்கும் வரை, அந்த நாடே அமெரிக்காவின் பொது எதிரியாக இருந்து வந்தது. இந்த ஒன்றியம் சீர்குலைந்து சிறு நாடுகளாகப் பிரிந்துள்ளதால், இந்நாட்டுக்கெதிரான ஒற்றர் வேலை தேவையற்ற தொன்றாக மாறியுள்ளது. தற்போதைய நிலையில் ஒற்றர் சேவையில் ஈடுபடுத்த பல்மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்கள், அறிவியல் நிபுணர்கள் ஆகியோர் தேவைப்படுகின்றனர். இப்படி ஒற்றர் சேவையில் அமர்த்தப்பட்ட புதிய தலைமுறையினரையே மத்திய புலனாய்வுத்துறையினர் வெளிநாடுகளில் ஒற்றர் வேலையில் ஈடுபடுத்துகின்றனர். அமெரிக்கா தனது உளவறியும் முறைகளை மாற்றியமைக்க ஆரம்பித்துள்ளது. அமெரிக்காவின் மேல்சபை (*Senate*) யின் புலனாய்வுத்துறைத் தலைவராக இருக்கும் திரு டேவிட் போறென் (*David boren*) இந்த வாரம் புலனாய்வுத்துறையின் 30 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் பொழுது அத்துறையை மாற்றி அமைக்கும் ''சட்டங்களையும்'', செலவைக் குறைக்கும் ''திட்டங்களையும்'' வெளியிடுவார். மத்திய புலனாய்வுத்துறைத் தலைவர் திரு. பொப்கேற்ஸ் ( Bob Gates), 21ம் நூற்றாண்டில் புலனாய்வுத்துறையின் செயற்பாடுகள் பற்றி அடுத்த திங்கள்

வெள்ளை மாளிகைக்கு அறிவிப்பார். போதைப்பொருள் கடத்தல், அணு ஆயுத உற்பத்திப்பரவல், பயங்கரவாதம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் புலனாய்வு செய்யும் என்பதை மத்திய புலனாய்வுத்துறை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தும். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக மத்திய புலனாய்வுத்துறையினர் தமது சேவையில் சிறப்புத்திறமையுள்ள ஒற்றர்களை அதிகரித்து வந்துள்ளனர் என்பது யாவருக்கும் தெரியாது. 1989 ஆம் ஆண்டுக்குப்பின் அமெரிக்க காங்கிரஸ் நூற்றுக்கணக்கான மில்லியன் டாலர்களை புலனாய்வு இயக்குனர் சபைக்கு இரகசியமாகக் கொடுத்து வந்துள்ளது. இந்தச்சபையே மறைமுகஒற்றர் சேவையை நிர்வகித்து வருகின்றது. இன்னால் எவ்வளவு அதிகமானோரை ஒற்றர் சேவையில் ஈடுபடுத்த முடியுமோ. அவ்வளவு தொகையினரை ஒற்றர் சேவையிலீடுபடுத்துவதற்குத் திரு கேற்ஸ் உத்தேசித்துள்ளார் எனக்கூறுகின்றார் புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர்.

கெடுபிடிபோர் நிலவிய காலத்தில் ஒற்றர் வேலைகளுக்கு மனிதர்களில் அதிகம் தங்கியிராது செய்மதி மற்றும் மின்னியல் ஒட்டுக்கேட்கும் சாதனங்கள் மூலம் பெரும்பாலான விபரங்கள் சேகரிக்கப்பட்டன. உன்னத தொழில்நுட்பங்கள் சோவியத்தின் போர்த்திறனாற்றல் மற்றும் திட்டங்களையும் ஊடுருவி அறிவதற்கு இவை உதவின. ஆனால் இன்றைய தேவை, அந்தந்த நாடுகளிலே தங்கியிருந்து உளவு அறிய வேண்டியவையாகவுள்ளது. மூன்றாம் உலகநாடுகளிலுள்ள அணுஉலைகளின் புற அமைப்பைப் படமெடுக்கச் செய்மதிகள் உதவும். ஆனால் அவ்வணு உலைகளில் யூரேனியம் செறிவூட்டப்படுவதை நிறுவ அக்கட்டடத்தின் வெளியிலுள்ள மண்வளத்தை ஆராய்ந்து யூரேனியம் கெக்சாபுளோரைட் (Hexafluoride) இருப்பதை அறிவதற்காகச் சிறிய அளவு மண்ணைப் பரிசோதனைக்காகச் சேகரிக்க மனிதர்களே தேவைப்படுகின்றனர். தகுந்த இடத்தில் ஒரு ஒற்றனை நிலைநிறுத்துவதனால், அந்த ஒற்றன், பொருளாதார விடயங்களைப் புலனாய்வு செய்வதோடு, அரசாங்கங்களோடு வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்போது, வாசிங்டன் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவுவதோடல்லாமல், வெளிநாட்டு ஒற்றர்களால் அமெரிக்க வர்த்தகர்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கவும் உதவுவான். கைத்தொழில்தேவைக்கு உளவு வேலை செய்வதில் மத்திய புலனாய்வுத்துறை ஒரு வரையறையை வைத்திருக்கின்றது. எங்கள் நாட்டுக்காக உயிரைக் கொடுக்கத்

தயங்கமாட்டோம். ஆனால் நிறுவன ங்களுக்காகவல்ல எனத்தமது ஒற்றர்கள் கூறியுள்ளதாகத் திரு கேற்ஸ் கூறுகின்றார்.

புதிய உளவுத் தேவையை முழுமை செய்வதற்காக மத்திய புலனாய்வுத் துறையினர் அணுவியல் பற்றி அறிவு படைத்த பௌதீகவியலாளர்களையும் வர்த்தகக் குறியீடுகளைப் புரிந்து கொள்ளக் கூடிய வர்த்தகப் பட்டதாரிகளையும் சேவையில் ஈடுபடுத்துகின்றனர். புதியதாக சேவையில் ஈடுபடுத்துபவர்கள் தங்களுக்குத் தேவையான முகவர்களை எப்படித் தேர்ந்தெடுப்பதென்றும், செய்திகளை எப்படி மற்றவர்களுக்குப் புரியாமல் பரிமாற்றம் செய்வதென்றும் அவர்களது தொழிற் பயிற்சியின் போது வேர்சினியாவின் வில்லியம் பேர்க்குக்கு (Williamsburg) அருகாமையில் அமைக்கப்பட்டிருக்கும் மத்திய புலனாய்வுத் துறையின் பியரிமுகாமில்(Camp Peary) கற்றுக் கொள்கிறார்கள். இந்தப் பயிற்சி முகாமில் அவர்களுக்குத் தேவைப்படும் சகல நுணுக்கங்களும் போதிக்கப்படுகின்றன. அதன் பின் அவர்களில் அதிகமானோர் மொழிப் பயிற்சி பெறுவதற்காக பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். சேவையிலீடுபடுத்தப்பட்ட மேலாளர் தொழில் நுட்ப அறிவை வளர்ப்பதற்காக மேலும் கல்லூரிகளுக்கு மாறி மாறி அனுப்பப்படுகின்றனர். ஜோன் லா காறி (John Le Carre) என்ற நாவலில் வரும் ஒற்றனைப் போன்றவர்கள் எமக்குத் தேவைப்படுகின்றனர் என்று கூறும் புலனாய்வுத் துறையினர், தற்போது அதில் வரும் ஒற்றனான ''சோர்சு சிமைலி'' யப்பானிய மொழியையும் கற்றிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

## புனைகதை.

ஒரு உளவு பார்க்கும் செய்மதியை உலகை வலம் வரச் செய்யும் செலவீனங்களிலும் பார்க்கக் குறைந்தளவு செலவீனங்களையே மனித ஒற்றர்களைச் சேவைக்கமர்த்துவதற்காக, அறிவுழைப்பினருக்கு (Humint) செலவழிக்கப்படுகின்றது. இதை நடத்தும் செயல் முறை இயக்குனர் குழுவுக்கு குறைந்தளவு செலவே முடிகின்றது. மூன்றாம் உலக நாடுகளிலுள்ள முகவர்களைக் குறைந்த செலவில் சேவைக்கு அமர்த்திக் கொள்ளலாம். பனாமாவின் சர்வாதிகாரி மானுவேல் நொறிக்கா (Manuel Noreiga), தன் நாட்டில் செல்வாக்கு மிகுந்தவராக இருந்த சமயத்தில் திங்களொன்றுக்கு 1500 டாலர்களை மாத்திரமே தன்னை உளவுவேலையில் அமர்த்தியவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்

பாரம் பாரியமாக இந்த உளவு வேலைகளில் ஈடுபடுபவர்கள் வெளிநாட்டுத் தூதுவர்களின் பணிமனைகளில் கடமையாற்றுப வர்களாக மாறு வேடத்தில் இருந்தனர். ஒரு வெளிநாட்டு அரசா ங்கம் நினைத்தால், இராசாங்க அமைச்சின் வழிகாட்டிகள் (State Department Directories) மூலம் பரிசீலித்து இவர்களைச் சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். நினைத்த உடன் தொடர்பு கொள்ளக் கூடிய தொடர்பு சாதனங்களும், கணனி (Computer) யுமுள்ள இந்த காலத்தில் இவர்களைச் சுலபமாக அடையாளம் காணமுடியும். ஆனால் அரச அலுவலர்களாக இல்லாமல்மறை முகமாக (Ncos) செயல்படுபவர்களை கண்டு பிடித்தல் மிகக் கடி னமான காரியமாகவுள்ளது. ஒருவரை மாறு வேடத்தில் செயல் பட வைப்பதற்கு இப்போது இரண்டு ஆண்டுகள் மத்திய புல னாய்வுத் துறைக்குத் தேவைப்படுகின்றது. அனைத்துலக வர்த் தக சமுதாயத்திற்குள் ஊடுருவும் நோக்குடன் அரச அலுவலர் கள் இல்லாதோரின் மறைமுக சேவையை விரிவாக்கத் திரு கேற்ஸ் விரும்பியுள்ளார் என நியூஸ் வீக் பத்திரிகைக்குச் செய்தி எட்டியுள்ளது. பல்தேசிய நிறுவனங்களின் தலைவர்களின் ஒத்து ழைப்புடன் மத்திய புலனாய்வுத் துறை மத்திய தர வர்த்தக முகாமையாளர்களை அந்தப் பல்தேசிய நிறுவனங்களில் சேவை க்கு அமர்த்தியுள்ளது. இவர்கள் மத்திய புலனாய்வுத் துறையின் தலைமைப் பீடமான இலாங்கிலே (Langley) க்குள் நுழையா மலே வேறு இடங்களில் வைத்துப் பயிற்சியளிக்கப்பட்டு உலகம் பூராவுமுள்ள பல்தேசிய நிறுவனங்களில் சேவைக்கமர்த்தப்பட் டுள்ளனர் என அமெரிக்காவிலிருந்து வரும் செய்தி ஒன்று கூறு கின்றது.

உளவு அமைப்பின் விரிவுபடுத்தப்பட்ட செயல்பாடுகளில் குறைபாடும் உள்ளது. இந்த அமைப்பின் செயல்பாடுகள் மத் திய கிழக்கு நாடுகளில் இப்பொழுதும் பலமற்ற நிலையிலேயே உள்ளன. ஈராக் குவைத்தின் மீது படையெடுக்கு முன் சதாம் குசேனின் படைகளை எங்கே உள்ளன என்பதைச் செய்மதி மூலம் அவதானிக்க முடிந்தது. ஆனால் ஈராக்கில் இருந்த அமெ ரிக்க ஒற்றர்கள் யாரும் சதாம் குசேன் இந்தப் படைகளை வைத்து என்ன செய்யப் போகின்றார் என்பதை அறிய முடியவி ல்லை. போதைப் பொருட்கள் கடத்தல் காரர்கள் பற்றி விபர ங்களைச் சேகரிப்பதில் இலாங்கிலே கஞ்சத்தனமாக நடந்து கொள்கின்றதெனச் சட்ட வல்லுனர்கள் கூறுகின்றனர். தங்கள் சூழல்களில் நடக்கும் குற்றச் செயல்களை முன்னர் கவனியாதிரு ந்த மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் இப்போது அவை

களைக் கண்டறிவதற்கான சட்டப் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். உளவு வேலைகளில் மனநிறைவு கிடைக்காதவர்கள், உளவு வேலையை விட்டு அதிக சம்பளம் கிடைக்கும் வர்த்தகத் துறைக்குச் சென்று விடுவார்களோ என புலனாய்வுத் துறையினர் கவலையடைகின்றனர். 'கெடுபிடிப் போர் இருந்த காலத்தில் புலனாய்வுத் துறையில் ஒரு பிடிப்பு இருந்தது. அது முடிவுற்றதும் இவர்களை வேலைக்கு வைத்திருப்பது பெருஞ்சிரமமாயுள்ளது, 'என்கிறார் மக்கள் சபையின் புலனாய்வுக் குழுத்தலைவர் திரு டேவ் மக்கார்தி அவர்கள். 90ஆம் ஆண்டுகளின் மனித ஒற்றர்களின் உளவு வேலையின் பெறுபேறுகளை மத்திய புலனாய்வுத் துறை அறிந்து கொள்ள ஐந்து ஆண்டுகள் எடுக்கும் என புலனாய்வுத் துறையைச் சேர்ந்த மேலாளர் கூறுகின்றனர். இது சரியான நடைமுறைக்கு வந்த பின் கெடுபிடிப்போரின் போது இது ஆற்றிய சேவையிலும் பார்க்கத் திறமையாகச் சேவையாற்றும் என உலகம் நம்புகின்றது.

(Human Intelligence (Humint)
(Non Official Covers (Ncos)

கோட்டையின் பல கூறுகளும், உறுப்புக்களும் சங்க நூல்களில் இருந்து புலப்படுகின்றன. பகைவர் சேர்தற்கரிய திரண்ட காவற்காடும், ஆழத்தினை உடைய கிடங்கும், நெடிய மதிலும், நிரையாகவுள்ள ஞாயிறும் அரணின் உறுப்புக்கள். இவ்உறுப்புக்களில் மதிலைக் குறிப்பதற்கு எயில், இஞ்சி, நொச்சி, புரிசை என்ற சொற்கள் வழங்கப்படுகின்றன. ஞாயில் என்பது படை எடுத்துவரும் பகைவர் மீது மறைந்து நின்று அம்பு எய்வதற்குரிய அறையாகும். இது பிற்காலத்தில் ஏவறை, சூட்டு, குருவித்தலை என்ற பெயர்களால் வழங்கியது. அகழி ஆழ்ந்த இடம் கிடங்கில் எனப்படும்.

(தமிழர் சால்பு நூலிலிருந்து)

# மட்டக்களப்பும் இரண்டாம் உலகப்போரும்

- ஆன் காசிநாதர் -

(டெயிலி நியூஸ் 20.03.92)

இரண்டாவது உலகப் போரில் சேவையாற்றிய பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் அண்மையில் சிறிலங்காவுக்கு வருகைதர இருக்கின்றார்கள் எனப் பத்திரிகைச் செய்திகள் வாயிலாக அறிகின்றோம்.

இரண்டாம் உலகப்போரின் வரலாற்றுப் புகழ்வாய்ந்த நினைவுச் சின்னங்கள் மட்டக்களப்புப் பகுதியில் உள்ளதால், மட்டக்களப்பு இது விடயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இங்கு வருகைதரும் முன்னாள் படைவீரர்கள் மட்டக்களப்புக்குப் பயணஞ் செய்தால், வரலாற்றுப் புகழ் பெற்றதும்

தற்போது மட்டக்களப்பின் மையமாக விளங்குவதும், இப்பொழுதும் அரச செயலாற்றுகை மையமாக விளங்குவதுமான ஒல்லாந்தரின் கோட்டையை இவர்கள் காணலாம்.

இந்தக் கோட்டையின் முன்வாசலில் பழங்காலப் பீரங்கிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இரண்டாவது உலகப் போரின் போது யப்பானியப் போர் வானூர்திகள் இதை ஒரு இராணுவக் கோட்டையெனத் தவறாக நினைத்து குண்டுமாரி பொழிந்து அழிக்க எத்தனித்தன.

வெடிமருந்துகளை நிரப்பிக் குண்டுமாரிபொழிந்த பிரித்தானியரின் ஆதிகாலப் பயங்கரத்தோற்றமுள்ள பீரங்கிகள் கோட்டைக்கு வெளியே எல்லோரும் பார்க்கத்தக்க வகையில் வைத்திருக்கப்பட்டன. இவைகளில் ஜீ.ஆர் (G R) எனப்பொறிக்கப்பட்டுள்ளது. இது ஜோர்ஜ் றெக்ஸ் (George Rex) எனப் பொருள்படும். இப்பீரங்கிகளைப்பார்த்த யப்பானிய விமானிகளுக்கு இவை நூதனசாலைப் பொருட்கள் எனஎப்படிவிளங்கும்?

வெளியே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த இந்தப் பீரங்கிகளினால் மட்டக்களப்புக்கு அபாயம் ஏற்பட இருப்பதை அறிந்த

அப்போதைய அரசாங்க அதிபர், தொழிலாளர்களின் உதவியுடன் அப்பீரங்கிகளை இரவோடிரவாக அடுத்தநாள் விடியுமுன் எரித்து அழித்துவிட்டார்.

மட்டக்களப்புக் கரைக்கு அப்பால் தரித்து நின்ற பிர மாண்டமான பிரித்தானியரின் கிழக்குப்பகுதி கடற்படைக் கப் பல்களுக்குத் தலைமைதாங்கிய எச். எம். எசு ஹேர்மசு (Hms. Hermes) என்ற வானூர்தி தாங்கிக்கப்பலை யப்பானிய வானூர்தி தாங்கிக்கப்பலில் இருந்து வந்த வானூர்திகள் தாக்கி மூழ் கடித்தன.

பேர்ள் துறைமுகத் (Pearl Harbour) தாக்குதலுக்குத் தலைமைவகித்த கடற்படைத் தளபதி அட்ரமில் நகுமாவே (Admiral Naguma) சிறிலங்காவைத் தாக்க வந்த யப்பானிய கடற்படைக்குத் தலைமை தாங்கினார்.

மட்டக்களப்புக் கடலைப்பற்றி நன்கறிந்த முன்னாள் மாலுமி ஒருவரை வசப்படுத்தி, இந்த வானூர்தி தாங்கிக் கப் பலின் அழிவுகளைக் காண்பிக்குமாறு வேண்டினேன். அங்கு சென்று பார்த்தபோது அக்கப்பலின் வெளிப்புறம் மாத்திரம் தெரிந்தது. பல ஆண்டுகளாக மட்டக்களப்பு மீனவர்கள் வெடி வைத்து இக்கப்பலின் பலபாகங்களைத் தகர்த்து அகற்றியது அப்போது தெரியவந்தது.

பிரபல பத்திரிகையாளரான திரு. சிட்னி றெனோல்ட்ஸ் 1976ஆம் ஆண்டு 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இக்கட்டுரையில் ஒவ்வொரு ஆண்டும் இக்கப்பல் மூழ்கிய நாளில் இதில் கடமையாற்றிய கப்பல் செலுத்தும் மூத்த அதிகாரியான திரு. எல். கே. ஏ. பிளாய்க் ஒரு விளம் பரம் கொடுத்து வந்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். அவ் நினைவுகூருகின்றோம். எச். எம். எசு. ஹேர்மசு எனது அன்புக்கும், மதிப்பிற்குமுரிய எனது மீகாமனையும் சக கப்பல் தொழிலாளர் களையும் - என் (N) என்று விளம்பரம் கொடுத்துள்ளார் திரு. பிளாய்க்குடன் வேறும் பத்துப்பேர் இந்தக் கப்பலில் இருந்து நீந்திக் கரைக்கு வந்துசேர்ந்தனர். பின்னர் அவர்கள் இங்கிலாந் துக்குப் பயணமானார்கள்.

என் (N) என்ற எழுத்து கப்பல் செலுத்தும் அதிகாரி யைக் குறிப்பிடுகின்றது. இந்த அதிகாரியின் பெயர் எல். கே. ஏ. பிளாய்க் (L.K.A. Black) என்பதாகும். கண்டி மருத்துவ

மனை அக்காலத்தில் அவுஸ்திரேலியர்களினால் பேணப்பட்டு வந்தது. முதலில் கண்டி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட திரு. பிளாய்க் பின்னர் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.இங்கிலாந்தில் படிப்படியாக முன்னேறி உயர்பதவி வகித்த திரு. பிளாய்க் ஒல்டு பெய்லியில் (Old baily) நீதிவானாகவும் ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இக் கப்பலைச் செலுத்திய மேலாளரின் குறிப்புப்படி முற்பகல் 10.30 மணியளவில் மட்டக்களப்பு வெளிச்சவீட்டுக்கு அப்பால் கப்பலைச் செலுத்தி துறைமுகம் நோக்கி 90 °பாகை நேர்கோட்டில் வரும்பொழுது மேலே நோக்கிப் பார்த்தபோது,எதிரிகள் கிழக்கு வானத்தில் முதலாவது தாக்குதலுக்கு எத்தனிப்பது தெரியவந்தது. முதலாவது குண்டுத்தாக்குதல் நடந்த 25 நிமிடங்களின் பின் அதாவது முற்பகல் 10.55 மணிக்கு எங்கள்வலிமை பொருந்திய ஜேர்மசு வானூர்தி தாங்கிக் கப்பல் மட்டக்களப்பிற்கு சில கல் தூரத்துக்கப்பால் கடலில் மூழ்கியது.

இப்பிரமாண்டமான கப்பல், மட்டக்களப்பின் காலிமுகம் என்றழைக்கப்படும் டச் பாரு (*Dutch bar*) க்கு அப்பால் யப்பானிய குறிபார்த்து இலக்குகளைத் தாக்கும் குண்டு வீச்சு வானூர்திகளால் 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ஆம் திகதியன்று கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

இந்தப் பெரிய ஜேர்மசு கப்பலுடன், அவுஸ்திரேலியாவின் நாசகாரிக்கப்பலான ஏச். எம். ஏ. எசு வாம்பயர் (*H. M. A. S. Vampire*) என்ற கப்பலும், நில நெய் கொண்டுசெல்லும் பிரித்தானிய சார்ஜன்ட் (*British Sergeant*) என்ற தாங்கிக் கப்பலும், இரண்டு வழித்துணைக்கப்பல்களான ஹொலிஹொக் (*Hollyhook*), அதிசுரேன் (*Atheistane*) ஆகிய கப்பல்களும் நீரில் மூழ்கின. பிரித்தானிய கடற்படைக்கப்பல் கப்டன்களின் பரம்பரை அடிச்சுவட்டைப் பின்பற்றி கப்பலின் கப்டன் ஒன்சிலோ (*Capt.Onslow*) ஜேர்மசு கப்பலுடன் தானும் மூழ்கி இறந்தார்.

சிலருடைய சடலங்கள் மட்டக்களப்புக் கரைக்கு மிதந்து வந்தன. இவற்றில் மூன்று சடலங்கள் மாலுமிகளுடையவை. இருவருடைய மணிக்கட்டுக்களில் காணப்பட்ட உலோகத் தகடுகள் மூலம் அவர்களுடைய அடையாளங்கள் தெரியவந்தது. மூன்றாமவருடைய அடையாள உலோகத்தகடு கழன்றிருக்க வேண்டும்.

மட்டக்களப்பு நகர மக்கள் குழுமியிருக்க இந்த மூன்று மாலுமிகளினது சடலங்களும் மட்டக்களப்பிலுள்ள ஆலடிச் சோலை இடுகாட்டில் அடக்கஞ்செய்யப்பட்டு, அவைகளின் மேல் மூன்று எளிமையான சிலுவைகள் வைக்கப்பட்டன. அடையாளங் காணப்பட்டவர்கள் திருவாளர்கள் வாட்சரி, லூயிசு என்பவர்கள் ஆவர். மூன்றாமவர் அடையாளங் காணப்படாதவராகப் புதைக்கப்பட்டார்.

எனது மாமனார் இந்த மூன்று சடலங்களும் புதைக்கப்பட்ட இடத்தைப் படமெடுத்து ஒரு அவுஸ்திரேலிய புதினத்தாளுக்கு அனுப்பிவைத்தார். அவுஸ்திரேலியப் பத்திரிகையில் இப்படங்கள் வெளிவந்ததும், அடையாளங்காணப்படாதவர் தங்களது மகனாக இருக்கலாம் என்ற எண்ணத்தினால் பலர் எனது மாமனாருக்குக் கடிதங்களை அனுப்பினர், மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள் பலர் கடமையாற்றினார்கள்.

இதன் பின்பும் மட்டக்களப்பு இரண்டாம் உலகப்போரில் தனது பெயரைப் பதித்துக்கொண்டது புகையிரதப் பாதையைத் தாக்குவதற்காக வந்தயப்பானியப் போர் வானூர்திகள் தங்களது இலக்கைத் தவறவிட்டு மட்டக்களப்புக்குப் பதினைந்து கல் தொலைவில் மட்டக்களப்பு-பொலநறுவைப் பாதையில்,சித் தாண்டியிலுள்ள தென்னந்தோட்டங்களையும் சிறு குடிசைகளையும் குண்டு வீசி அழித்தன.

கடல்கண்ணிகளை அகற்றும் கப்பலின் சிதைந்த மிதப்புப்பாகமொன்று (*OberessaFloat*) காத்தான்குடிக்கருகேயுள்ள பாலமுனைக்கடலில் மிதப்பதைக் கண்டு,அதனை எடுத்துவந்து மட்டக்களப்புக் கச்சேரியில் வைத்துள்ளனர்.

இரண்டாவது உலகப் போர் நடந்துகொண்டிருந்தபோது மட்டக்களப்பிலுள்ள-பாடசாலைகள் எல்லாவற்றிலும் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன் போர்க்காலச்சூழ் நிலைக்கேற்ப வானூர்தி தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் பயிற்சியும் கொடுக்கப்பட்டதுடன் காதுகளை அடைக்கப் பஞ்சும்,வாய்களில் பென்சில்களைவைத்திருக்கப் பயிற்சியுமளிக்கப்பட்டது.

இரண்டாவது உலகப் போரின்போது கொண்டுவரப்பட்ட அபாய அறிவிப்பு இயந்திர ஒலி(Siren)இப்பொழுதும் காலை6.00

மணிக்கும் மாலை 6,00மணிக்கும் நேரத்தை அறிந்துகொள்ள உதவுகின்றது.

மட்டக்களப்பு மைதானத்தில் பிரித்தானிய அரசின் வான் படைத்தளம் இருந்தது உள்ளூர் விளையாட்டு வீரர்களும் வான் படைவீரர்களும் ஒருங்கிணைத்து கால்பந்து விளையாடியுள்ளனர். இவர்களுடன் விளையாடிய வீரரான திரு. ஜென்னிங்சு ஒரு அனைத்துலக கால்பந்து விளையாட்டு வீரராவர்.

முன்னாள்படைவீரர்களை நாம் நினைவுகூரும் பொழுது பெருமைவாய்ந்த, காலஞ்சென்ற, கனடிய வான் படை அணித் தலைவர் திரு.பர்ச்சால் அவர்களை எம்மனதிலிருந்து அகற்றமுடியாது. தமது இன்னுயிரைத் தற்கொடை செய்து யப்பானிய கடற்படை நம் நாட்டைத் தாக்குவதற்கு வருகின்றது என்பதை முன்கூட்டியே அறிவித்தவர் அவராவர்.

முன்னாள் போர்வீரர்களைப் பொறுத்தமட்டில் போர் ஓய்ந்துவிட்டது. அதேபோல் இன்று எமது துன்பங்கள் துயரங்கள் நீங்கப்பெற்று நம் நாட்டு மக்கள் வளமாக வாழ,போர் ஓய்ந்து விட்டது என நினைக்கக்கூடிய சூழல் ஏற்பட நாம் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சங்ககாலத்தில் தமிழர் தமது பிள்ளைகளின் மார்பில் ஐம்படைத்தாலி அணிந்து இன்புற்றனர். சங்கு, சக்கரம், தண்டாயுதம், வாள், வில் ஆகிய ஐந்து கருவிகளின் உருவங்கள் அமைந்த இத்தாலியை பிறந்த ஐந்தாம் நாளில் பிள்ளைகளுக்கு அணிந்தனர்.

(தமிழர் சால்பு நூலிலிருந்து)

# ஏப்ரல் தாக்குதல்கள்

டெய்லி நியூஸ்– 27-03-1992

இலங்கையை யப்பானியர் கைப்பற்ற எண்ணவில்லை ஜெர்மனியர் அவர்கள் அப்படி செய்வதை ஊக்குவித்தார்கள். பிரிட்டிசாரோ அப்படி செய்துவிடுவார்களோ என பயந்தார்கள்.

எனவே சரியாக ஐம்பது ஆண்டுகளின் முன், அந்த ஈஸ்டர் ஞாயிறு அன்று கொழும்பு வான்களில் யப்பானின் குண்டு வீச்சு வானூர்திகள் தோன்றிய போது யாரும் ஆச்சரியப்படவுமில்லை அதே வேளை அதை எதிர்கொள்ள ஆயத்தமாகவும் இல்லை.

1942— 45 ஆண்டுகளில் ரோயல் வான்படையில் உயர் மேலாளராக கடமையாற்றிய மைக்கேல் தொம்லின்சன் நேரில் கண்டவற்றை நினைவு கூர்கிறார்: அவர்கள் 120 பல்வேறு விதமான வானூர்திகளில் வந்திருப்பார்கள் அவற்றை இரத்மலானை. கொழும்பு குதிரைப்பந்தய திடல் தளம் முதலியவற்றில் இருந்து புறப்பட்ட 20 பிரிட்டிசு போர் வானூர்திகள் (Hurricane) எதிர் கொண்டன ஆனால் நாம் மோசமாக பாதிக்கப்பட்டோம்.

பிரிட்டிசு, கனேடிய, அவுத்திரேலிய, டச்சு தேசங்களை சேர்ந்த சுமார் 144 இரண்டாவது உலகப் போர் வீரர்களில் தொம்லின்சன் ஒருவர். இவர்கள் ஏப்ரல் தாக்குதல்களின் ஐம்பதாவது ஆண்டை நினைவு கூர இலங்கை வந்துள்ளார்கள்.

கூட்டு பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இப்போர் வீரர்கள் கொக்கலை ஏரிக்கரையில், இலங்கையில் இரண்டாவது உலகப் போரின் போது முதல் குண்டுகள் விழுந்த ஏப்ரல் 5ஆம் நாள் நினைவு நிகழ்ச்சியில் பங்கு கொள்வார்கள். ஒரு முறையேனும் தாக்கப்படாத கொக்கலை ஏரி கூட்டுப்படைகளின் ஒரு வானூர்தித் தளமாகும். அங்கு கூட்டுப் படைகளின் கடல் வானூர்திகள் (Seaplanes) மறைக்கப்பட்டிருந்தன.

78 வயதுடைய மைக்கேல் தொம்லின்சன் ரோயல் வான் படையில் இருந்து இளைப்பாறி, தொடர்ந்து இலங்கையில் டிக்கோயாவில் தோட்டத் துரையாக 1969 வரை இருந்திருக்கிறார் 'பெரும் இடையூறுக் கட்டம்' எனும் இலங்கையில் யப்பானிய

தாக்குதல்களையே விபரித்து எழுதப்பட்ட நூலின் ஆசிரியர் இவரே.

யப்பானுக்கு இலங்கை கீழ்படியாமையின் முக்கியத்துவம். தொம்லின்சன் கூற்றுப்படி தாக்குதல்கள் நடைபெற்ற சில ஆண்டுகளின் பின்பே தெரிய வந்தன.

யப்பானின் இலங்கைத் தாக்குதல், இரண்டாம் உலக போரில் பெரும் இடையூறான கட்டம் என பின்பு சேர் வின்சுடன் சேர்ச்சில் அவர்களால் சொல்லப்பட்டது. அதுவே தொம்லின்சனின் புகழ்பெற்ற நூலின் தலைப்பாயிற்று

இக்கால கட்டத்தில் யப்பானியர் தங்க முக்கோணப் பகுதி, மலேசிய குடியேற்றங்களை கைப்பற்றி தமது ஆளுமைக்குள் கொண்டிருந்தனர். இந்திய கடல்பகுதியை தமது ஆதிக்கத்தில் வைத்திருக்க இலங்கையை மட்டுமே கைப்பற்ற வேண்டி இருந்தது.

இலங்கை கைப்பற்றப் பட்டு அதன் வழி இந்திய கடல் யப்பானியரின் உரிமைப்பாட்டுக்குள் வந்து எகிப்தையும் ஜெர்மனியர் வெற்றி கொண்டால், கூட்டுப்படைகளின் முன்னேற்றம் தடைப்பட்டு, அவர்கள் முயற்சிகள் பயனற்றுப் போகும் என சேர்ச்சில் நம்பினார்.

ஆனால் யப்பானியர் இலங்கையை கைப்பற்ற முற்படவில்லை. அவர்களின் இலக்கு, பிரிட்டிசு கீழைத்தேய கடற்படை அணி அவ்வணியை தேடி அழிக்கவே அவர்கள் முனைந்தார்கள் என்கிறார் தொம்லின்சன்.

பிரிட்டிசு கீழைத்தேய அணியின் பொறுப்பு கவர்ச்சிகரமான, நட்புமிக்க, இளகிய உள்ளம் கொண்ட அதே சமயம் கடுரமான, சோர்வுறாத நுறுக்கு புத்தியுள்ள சேர் யேம்சு சோம்ரீவில் என்ற(Jamessomerville) மனிதரிடம் இருந்தது,

சோமாவில் யப்பானியர் தாக்குதல் பற்றி எச்சரிக்கப் பட்டிருந்தார். அவர் தமது கப்பல்களை கொழும்பிலிருந்து வெளியேற்றி 450 மைல்களுக்கு அப்பாலுள்ள ''அடுஅதோல்'' (Addu Atoll) என்னும் இடத்தில்'மறைத்து' வைத்திருந்தார்.

1942 ஆம் ஆண்டு மார்ச் 28ம்திகதி அரைகுறையாக செவிமடுக்கப்பட்ட யப்பானிய இரகசிய தகவலின்படி கொழும்பு திருக்

கோணமலை, முடியுமானால் இரண்டும் ஏதாவது ஒருநாள் தாக்கப்படலாம் என சோமர்வில் அறிந்தார்.

1944ல் ஒலிபரப்பான பி பி சி பேச்சு ஒன்றில் அட்மிரல் குறிப்பிட்டார். யப்பானியர் என்ன பலம் கொண்டு எம்மைத் தாக்குவார் என தெரிந்திருக்கவில்லை இரண்டு, மூன்று சண்டைக் கப்பல்களுடன் சில காவல் கப்பல்களுடனும் வேறு சில விமானம் தாங்கிகளுடனும் அதிகாலை விமானத்தாக்குதல் நடத்தி விட்டு ஓடி மறைந்து விடலாம் என எதிர்பார்த்தோம். இதன் மூலம் இலங்கைத் தரையிலிருக்கும் வானூர்திகளின் தாக்குதல்களில் இருந்து தப்பலாம். உண்மையாக எம்மிடம் சொற்ப வானூர்திகளே தரையில் இருந்தன. யப்பானியர் இதை தெரிந்திருக்க மாட்டார்கள் என எண்ணினோம்.

காந்தியும், நேருவும் இந்திய தேசிய காங்கிரசும் இந்தியாவில் பிரிட்டிசாருடன் ஒத்துழைக்காவிடினும் இலங்கை யப்பானிடம் சரணடைவதை விரும்பவில்லை ஆனால் இலங்கையில் தலைவர்கள் டி.எஸ். சேனநாயக்கா, சேர் ஒலிவர் குணதிலக்கா, சேர் ஜோன் கொத்தலாவலை போன்றோர் பிரிட்டிசாருக்கு முழு ஒத்துழைப்பு வழங்கினார்கள்

கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் வெகு விரைவில் வான்படைத்தளம் அமைவதற்கு அப்பொழுது பொது வேலைகளுக்கு பொறுப்பு வகித்த மந்திரி டி.எஸ் சேனநாயக்கா காரணமானார். இது பின்பு யப்பானிய தாக்குதலின் போது முக்கிய பங்கை வகித்தது

பேர்ள் துறைமுகத்தில் தாக்குதலில் ஈடுபட்ட அதே மனிதர்கள் கொழும்பிலும் அதையே செய்ய முற்பட்டார்கள் என மேலும் தொம்லிம்சன் கூறினார்.

ஏப்ரல் தாக்குதல்களை பேர்ள் துறைமுக கதாநாயகர்களான வைஸ் அட்மிரல் சுய்சி நகுமோவும் கொமாண்டர் மிட்சோ புசிட்டாவுமே முன்னின்று நடத்தினார்கள் இவ்விருவருமே பலம் வாய்ந்த அமெரிக்க பசிபிக் அணிக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தியவர்கள்.

1942 ஏப்ரல் 5 காலை 7 30 மணி ஈஸ்டர் ஞாயிறு கொழும்பு வானில் கொமாண்டர் புசிட்டா, 120 வானூர்திகள் கொண்ட அணியைக் கொண்டு தாக்குதலை நடத்தினார். இவற்றில் நாற்பதுக்கு மேற்பட்ட ''சிரோ'' சண்டை வானூர்திகளும் (Zero

Fighters) ரோபிடோ (Torpedo) சூழுப் பாய்வுக் குண்டு வீச்சு வானூர்திகளும் அடங்கும் (Dive Bombers)

அவர்களின் வரவு எதிர்பார்க்கப்படாததல்ல, ஏனெனில் சில மணித்தியாலங்களுக்கு முன் கொழும்பு இவ்வரவுபற்றி கண்டு எச்சரிக்கப்பட்டிருந்தது.

ரோயல் வான்படை உயர்மேலாளர் லெநாட் பிர்சல் பின்பு ஓர் கொமாண்டோரி கொக்கலையிலிருந்து வேவுபார்க்கும் வானூர்தியை சென்று தீவிலிருந்து தெற்கே 350மைல் தூரத்தில் இவ்வணியை கண்டு கொழும்புக்கு வானொலி மூலம் அறிவித்தார். யப்பானியரின் சீறோ போர்வானூர்திகள் பிர்சலின் (Zero Fighters) வானூர்தியைச் சுட்டுவீழ்த்தி அவரை கைதாக்கினர்.

ஐம்பது ஆண்டு வைபவத்திற்கு இங்கு வந்திருக்கும் பிர்சல் போர் முடியும் வரை கைதியாக இருந்ததோடு போர் குற்றவாளிகளின் விசாரணைகளில் சாட்சியாகவும் இருந்தார்

யப்பானியர்கள் வந்தடைந்த போது எதுவித பெரிய சண்டை கப்பல்களையும் துறைமுகத்தில் காணவில்லை. இது அவர்களுக்கு ஏமாற்றத்தை கொடுத்திருக்கும் என்கிறார் தொபிலின்சன்.

பின்பு நடந்தவை இலங்கை வரலாற்றில் பகுதியாக அடிக்கடி நினைவு கூரப்பட்டுள்ளது. சுமார் இருபது பிரிட்டிக சண்டை வானூர்திகள் பறந்து கொழும்பு வானில் வான்போர் நடந்தது. ஒரு யப்பான் வானூர்தி செண் தோமசு விளையாட்டு மைதானத்தில் வீழ்ந்தது. ரோயல் வான்படை வானூர்தி ஒன்று காலிமுகத்திடலில் அவசரமாக தரை இறங்கியது கிலிகொண்ட இலங்கையர் மேலும் வானூர்தி தாக்குதல்கள் தொடரும் என அஞ்சி நகரைவிட்டு மலைப்பிரதேசத்தை நோக்கி நகர்ந்தனர்.

இத் தாக்குதலில் 30 பொதுமக்கள் காயமடைந்தனர். அங்கொடை மனநோய் மருத்துவமனையில் வீழ்ந்த குண்டுகளால் 15 நோயாளர்கள் இறந்தனர். இத்துன்ப நிகழ்ச்சியானது கீழே விழ இருந்த யப்பானிய வானூர்தி தன்னிடம் இருந்த குண்டுகளை விழ முதல் வெளியே கொட்டிவிட நினைத்ததாலேயே நடந்தது எனப் பின்னர் அறியப்பட்டது.

இத்தாக்குதலின் போது நிலையாப் பிரகாரம் கொழும்பு வந்த 6 ரோயல் வான்படை சிறு விமானங்கள் (Swordish) யப்பானிய சீரோ வானூர்திகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

யப்பானியர்களின் முக்கிய இலக்கான கொழும்புத்துறைமுகம். சண்டைக்கப்பல் இல்லாதிருந்தும் தாக்குதலில் இருந்து தப்பவில்லை இங்கு தாக்கப்பட்டவைகளில் வாக்கர்ஸ் திருத்து முனையில் சீரமைக்கப்பட்டுவந்த பிரிட்டிச நாசகாரியும் அடங்கும்.

இரண்டாவது யப்பானிய குண்டுவீச்சு அணி அதிர்ஷ்டமடைந்ததும் அவை இரு பிரிட்டிசு கப்பல்களான கோன்வல் (Cornwall) டோசெற்சயர் (Dorsetshire) ஆகியவற்றை கொழும்புக்கு அண்மையில் மூழ்டித்தனர்.

பிரிட்டிசு கிழைத்தேய அணியை கொழும்பில் காணாத யப்பானியர் திருக்கோணமலை நோக்கித் திரும்பினர். கொழும்பு தாக்குதலின் நான்கு நாட்களின் பின், கொமாண்டர் பியுசிடா திருக்கோணமலை துறைமுகத்தை நாடினார். ஆனால் அங்கு பிரிட்டிசு கப்பல் இல்லை.

சீனன்குடாவிலுள்ள சில பாரிய எண்ணெய்க் குதங்களும் ரோயல் வான்படை கொட்டகைகளும் தாக்கப்பட்டன இரண்டாவது அணி யப்பானிய குண்டுவீசிகள் மட்டக்களப்பு வரைக்கு அப்பாலுள்ள பிரிட்டிசு கெர்மசு கப்பலை மூழ்கடித்தன. அந்த மாபெரும் வானூர்தி தாங்கி ஏற்கனவே எல்லா வானூர்திகளையும் இலங்கையில் விட்டிருந்தது.

கொழும்பில் சீனன்குடா தாக்குதல்பற்றி அறிந்ததும் 9 ரோயல் பிளன்கிம்சு (Blenheims) குண்டுகள் ஏவப்பட்டன அவை யப்பானிய வானூர்தி தாங்கிக் கப்பலை கண்டுபிடித்து தாக்கின. ஆனால் நடந்த சமரில் 4 வானூர்திகள் சுட்டுவீழ்த்தப்பட்டன. அட்மிரல் சோமர்வில் யப்பானிய அணியை கண்டுபிடித்து தாக்க திட்டமிட்டார் என்கிறார் தொம்லின்சன்.

ஆனால் யப்பானியர் தொடர்ச்சியாகவும் வெற்றிகரமாகவும் இப்பகுதியில் பிரிட்டிசு சண்டைக் கப்பல்களை தாக்கியதால் பிரிட்டிசு உயர்பீடம் பெறுமதிமிக்க கப்பல்களை துணிந்து இடருக்கு உட்படுத்துவதில்லை என தீர்மானித்தது.

எமது அணி எதிர்ப்பு நெரிக்கப்படாது என கட்டளையிட்டு, கென்யாவிலுள்ள மொம்பாச சென்றது பிரிட்டிசு கிழைத்தேய அணி இந்திய கடலை விட்டு அகன்றதும் இப்பகுதி மீண்டும் யப்பானிய அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பாகியது.

# பாதுகாப்புப் படைகளின் புதிய மாற்றங்கள்

சமீந்திர பேர்டினன்டோ.

(ஐலண்ட் - 5. 04. 1992.)

அரசாங்கம் இராணுவ ரீதியாக புலிகளை தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பாதுகாப்புப் படையினதும் காவல்துறையினதும் ஆணைக்கட்டுப்பாட்டு அமைப்புகளில் பெரிய மாற்றங்களை செய்துள்ளதாக இராணுவ வட்டாரம் கடந்த வாரம் வெளியிட்டது புலிகளை ஒழித்து வடகிழக்கை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் நோக்குடன் செய்யப்பட்ட எதிர்பாராத மாற்றங்களின் ஒரு பகுதியாக சிறப்பு அதிரடிப் படை உட்பட காவல்துறையையும் எல்லா போர்ப்படையினரையும் மூன்று இராணுவத் தளபதிகளின் கீழும் காவல்துறை அதிபரின் கீழும் கொண்டு வந்துள்ளது இதன் மூலம் கூட்டுப்படைத் தலைமை இராணுவத்தின் மீது கொண்டிருந்த கட்டுப்பாட்டை இல்லாமல் செய்யப்பட்டுள்ளதென இவ்வட்டாரங்கள் மேலும் கூறின.

மூன்று கூட்டுப்படை தளபதிகளான லெப்டினன் ஜெனரல் சிசில் வைத்தியரட்ண றெயர் அட்மிரல் கிளான்சி பெர்ணந்து ஏயர்வைஸ் மார்சல் ரெறன்ஸ் குணவர்த்தனாவும் காவல்துறை மா அதிபர் ஏணஸ்டு பெரேரா ஆகியோர் அரசாங்கத்தின் இராணுவ படைஎடுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றும் வண்ணம் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் தனது படைகளை கடல் மார்க்கமாக புலிகளின் நடவடிக்கையின் இருதயமாக விளங்கும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற ஆயத்தமாக உள்ளது என்ற ஊகங்கள் எழுந்துள்ள வேளையில் இந்த மாற்றங்கள் வந்துள்ளன.

பாதுகாப்புப் படையினரின் உரிமைப்பாட்டிலும் கட்டுப்பாட்டமைப்பிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள பாரிய மாற்றங்களை ஜனாதிபதி இரணசிங்கா பிரேமதாசா அவர்களாலேயே உத்தர விடப்பட்டு அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரும் காவல்துறையினரும் போர் முனையில் உயர்மட்ட அளவில் திட்டமிடப்பட்ட புதிய தந்தி

ராபாயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் திறமையான பலாபலன்களைப் பெறலாமென இராணுவ மேலாளர்கள் நம்புகிறார்கள். புதிய தந்திரோபாயத்தின் ஒரு பகுதியே ஆணையிலும் கட்டுப்பாட்டு அமைப்பிலும் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் என்று அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த மாதம் இம் மாற்றங்கள் ஏற்படும்வரை போர்ப் படையினரும் காவல்துறையினரும் எல்லா போர்த்திற நடவடிக்கைகளுக்கும் கூட்டுப்படை தலைமையின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார்கள் இனிமேல் அப்படியில்லை.

இப்புதிய மாற்றமைப்பால் கூட்டுப்படைத் தலைமை பெருமளவு பலவீனமடைந்துள்ளது. ஆனால் கூட்டுப்படைத் தலைமை தேசிய பாதுகாப்புச் சபைக்கு பரிந்துரைகள் வழங்கலாம். மூன்று இராணுவத் தளபதிகளும், காவல்துறை மா அதிபரும் தேசிய பாதுகாப்புச் சபையில் உறுப்பினர்களாகவும் இருக்கின்றார்கள். தேசிய பாதுகாப்புச் சபையின் முன் ஒப்புதலின்றி கூட்டுப்படைத் தலைமை இராணுவ தளபதிகளினதும், காவல்துறை மா அதிபரினதும் போர்த்திட்டங்களில் ஒருவித மாற்றங்களையும் செய்ய முடியாது.

முப்படைத்தளபதிகளாலும் காவல்துறை மா அதிபராலும் நடாத்தப்படும் போர்முறைகளில் தேசிய பாதுகாப்புச் சபை மாற்றங்களை ஏற்படுத்தும் நிலைமை மிகவும் அரிது.

இந்நேரத்தில் இராணுவத்துக்கும் காவல்துறையினருக்கும் முதன்மை படைத்தளபதியாக விளங்கும் ஜனாதிபதி இரணசிங்க பிரேமதாசா ஆணையிலும் கட்டுப்பாட்டமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தி உத்தரவுகளை பிறப்பித்தது என்ன காரணத்துக்கென்று விளங்கவில்லை நம்பிக்கையான வட்டாரங்கள், அரசாங்கம் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிப்பதற்கு உறுதி பூண்டுள்ளது என்று கூறுகின்றன. அப்படியானால் அரசாங்கம் பலாபலன் அடிப்படையிலான ஓர் தந்திரோபாயத்தைக் கையாண்டு பாதுகாப்புப்படைகளின் பின்னால் முழு நாட்டு மக்களையும் அணிதிரட்டினால் அன்றி இது ஒரு சுலபமான வேலையாக இருக்காது.

அரசாங்க பாதுகாப்புப் படையினரும் காவல்துறையினரும் குறிப்பாக கடந்த இரு ஆண்டுகளில் புலிகளின் தாக்குதலால் பெருமளவில் இழப்புக்களை அடைந்திருக்கின்றார்கள். இராணுவதங்க

கங்கள் (முகாம்) பறிக்கப்பட்டன. சமரில் 1500 பேருக்கு அதிகமானோர் கொல்லப்பட்டனர். அதே அளவு எண்ணிக்கையானோர் காயமுற்றுள்ளனர். கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான பொருட்கள் அழிந்தன. இவற்றுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் உண்மை நிலைமையை அறிந்தவர்களாக இருந்திருந்தால் இவ்விழப்புகளை தவிர்த்து இருக்கலாம் என்று பலர் எண்ணுகிறார்கள்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தை ஒருவரும் கொழும்பிலிருந்து நடத்த முடியாது. இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சிசில் வைத்தியரெட்ன அண்மையில் போர் முனையில் நிற்கும் துருப்புக்களின் நிலைமைகளை அறிந்து கொள்வதற்கு வடபகுதியில் போர் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கும் அரங்குகளுக்கு இரு வெவ்வேறு குழுக்களை அனுப்பியிருந்தார். இக்குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மனநிறைவு தருபவையாக காணப்படவில்லை.

வடக்கில் குறிப்பாக குடாநாட்டிலேயே பெரிய இராணுவ தாக்குதல் நடைபெறும் என்ற வெளிப்படையான நிலையின் நடுவில் தமிழ் முசுலிம் மன்றயத்திடையே (சமூகம்) பதற்ற நிலையை ஏற்படுத்தும் நோக்கத்துடனே புலிகள் இராணுவ நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளார்கள். கடந்த வாரம் மட்டக்களப்பில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான பேருந்து ஒன்றை ஏறாவூரில் வைத்து ஒரு முசுலிம் இளைஞர் தாக்கிய அப்பிரதேசத்தில் பதற்ற நிலையை அதிகரித்து உள்ளது என்று இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

அவ்வாகனத்தின் மீது உள்ளூர் தயாரிப்பான வெடிபொருளை எறிந்து தாக்கியவரை காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர் என்று இராணுவதளபதி கூறினார். இவ்வட்டாரங்கள் புலிகள் தொடர்ந்து எமது மன்றாயத்திற்கு செய்துவரும் இம்சைகளுக்கு எதிராகத்தான் இம்முசுலிம் இளைஞர் ஏறாவூர் தாக்குதலைச் செய்தார் என்று கூறுகின்றனர்.

கிழக்கில் உள்ள முசுலிம் கிராமங்களில் புலிகள் தாக்குதல்களைச் செய்வார்களென்று இராணுவம் கவலைப்படுகின்றது. ஒரு ஆண்டுக்கு முன்னர் வடக்கிலிருந்து முசுலிம்கள் புலிகளால் துரத்தப்பட்டனர். ஏறாவூர் நிகழ்ச்சி முசுலிம் இளைஞரால் செய்யப்பட்டதால் அவர்களது கிராமங்களை புலிகள் தாக்கலாமென இவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முசுலிம் இளைஞர்கள் நடுவிலே தீவிரவாதம் வளர்ந்து வருவது புலிகளுக்கு தலையிடியாக இருக்கின்றதென சிலர் கூறுகின்றனர். அத்துடன் முசுலிம் இளைஞர்கள் பாதுகாப்புப் படையிலும் காவல்துறையிலும் ஊர்காவல்படையிலும் சேர்ந்து கொள்வதற்கு தாமாகவே முன்வந்துள்ளனர். கிழக்கில் முசுலிம் ஊர் காவல்படையினர் கொடுமைகள் செய்வதில் புகழ் பெற்றவர்களாக விளங்குகின்றார்கள். இவர்களால் அரசாங்கத்துக்கு வருங் காலத்தில் சிக்கல் ஏற்படும்.

இரு மன்றாலயத்திற்கு இடையிலே பதற்ற நிலை அதிகரித்துள்ள வேளையில் புலிகளின் தலைமை முசுலிம்கள் கூடுதலாக வாழும் பகுதிகளில் புதிய நடவடிக்கைகளை நடாத்துமாறு கூறியுள்ளது.

சென்ற வாரம் காத்தான்குடி காவல் துறை நிலையத்தின் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் இதற்கொரு நல்ல உதாரணம்.

செங்கலடியில் 15 இராணுவத்தினர் இறந்தமையும் இன்னொரு உதாரணமாகும் கூட்டுப்படை தலைமையகம் குறைந்த பட்சம் 250 பயங்கரவாதிகளைக் கொண்ட குழு ஒன்றுடன் நடந்த சமரில் இப்படையினர் இறந்தனர் என கூறியுள்ளது.

கொழும்பிலுள்ள பாதுகாப்புப் படை மேலாளர் ஒரு இடத்தில் தாக்குதல் நடவடிக்கைக்கு 250 பயங்கரவாதிகள் ஒன்று கூடினர் என்று வெளிப்படையாக ஒத்துக் கொண்டால் நிலைமை பேரச்சம் தரக்கூடியது. கிழக்கில் சீரான நிலை ஏற்பட்டு விட்டதென்று அவர்கள் கூறுவார்களேயானால் எவ்விதம் கப்டன் வேலுப்பிள்ளை பிரபாகரன் 250 பேரை அனுப்பி பாதுகாப்புப் படையினரின் வியூகத்தின் ஊடாக சென்று 15 பேரைக் கொன்று விட்டு மேலதிக படையினர் வந்து அவர்களை இடைமறிக்க முன்னர் தப்பிச் செல்ல முடியும்?

பாதுகாப்புப் படையினரின் ஆணையிலும் கட்டுப்பாட்டு அமைப்பிலும் செய்யப்பட்டுள்ள புதிய மாற்றங்களையும் தந்திரோபாயங்களையும் கடைப்பிடிப்பதன் மூலம் மூன்று படைத் தளபதிகளாலும் காவல்துறைமா அதிபராலும் ஒன்றிணைந்து செயற்படுத்தப்படும் போர் நடவடிக்கைகளில் போர் முனையில் உள்ள வீரர்கள் திறமையாக செயற்படலாம் என மேலாளர் கருதுகின்றார்கள்.

2185 C.C.

வடகிழக்குப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் பேரில் செயல்படும் வீரர்களிலும் தளபாடங்களிலும் மாற்றங்களை பெரும்பாலும் செய்வார்களென்று ஐலன்ட் பத்திரிகை அறிகிறது. போரில் ஈடுபட்ட பல இராணுவ அணிகள் கடும் வேலைப்பழுவை தாங்குவதாக பலர் எண்ணுகின்றனர். போர்முனையில் திறமையாக போர்புரிபவர்களென பெயர் பெற்ற அணிகள் திரும்பத் திரும்ப போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றன. போர் நடவடிக்கைப் பகுதிகளில் கடமையாற்றும் மேலாளர்கள் இடைவெளியின்றி தமது வீரர்களுக்கு தலைமை தாங்கி இட்டுச்செல்ல வேண்டியவர்களாய் உள்ளனர்.

போர் ஆணையில் ஏற்படும் மாற்றங்கள் புலிகளை தோற்கடிப்பதற்கு அரசாங்கம் பெரும் நம்பிக்கையுடன் நடாத்தும் இராணுவ நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும். அரசியல் இராணுவ தலைமைகள் இளம் படையினரை வடக்கில் சாவை அணைக்க அனுப்பாது இப்போரை வெல்லுவதற்கு தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும் நூற்றுக்கணக்கான இளைஞர்களின் உயிர்கள் குண்டுகளாலும் சன்னங்களாலும் அழிக்கப்பட்டுள்ளது.

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு இணக்க பேச்சுக்கு வரமாட்டார்கள் என்று இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன. இணக்கப் பேச்சு வார்த்தைகள், (சில வேளைகளில் இந்தியாவின் தரகு வேலை மூலம்) புலிகளின் நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. அதனால் அரசாங்கத்துக்கு புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட வேண்டியவர்களே என்பதை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்த குருமார்கள் 1990 யூனில் போர் தொடங்குவதற்கு யார் காரணமாக இருந்தார்களென்பதை கண்டு கொள்ளத் தவறிவிட்டார்கள். புலித்தலைமை வடகிழக்கில் நடக்கும் போரை முடிவடையச் செய்வதற்கான பேச்சு வார்த்தை தொடங்குவதற்கு முன்னர் ஆயுதங்களை கீழே வைக்க தயார் இல்லாத நிலையில் அரசாங்கத்தை பேச்சு வார்த்தை நடத்தும்படி கேட்பது அர்த்தம் அற்றது என்று சில வட்டாரங்கள் கூறின.

இம் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் பாதுகாப்புப் படையினரின் போர் தயார் நிலையை மேலும் கூட்ட அரசாங்கம் எண்ணி உள்ளது. எதிர்வரும் இரண்டு கிழமைகளுக்குள் மேலும் அதிக மாற்றங்கள் ஏற்படலாம்.

# வளைகுடாப் போரில் வெளிவராது மூடிமறைக்கப்பட்ட விடயங்கள்

**பா**க்தாத்தின் (*Baghdad*) மீது மேற்கொள்ளப்பட்ட பாலை வனப்புயல் (*Desrtstorm*) என அழைக்கப்படும் இராணுவநடவடிக்கையின் ஓர் ஆண்டு காலம் முடிவுற்ற இன்று. மிகமுக்கியமாகக் கருதப்படும் பாரசீகக்குடாப் பிரதேசத்தைச் சீர்குலைக்கக்கூடிய நிலையில் இருந்த திரு.சதாம்குசைன் அவர்களின் ஆற்றல், வெகுவாக அழிக்கப்பட்டுள்ளது பெரும் அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஈராக்கிய ஆயுதங்கள் அநேகமாக அழிக்கப்பட்டுள்ளன. போர் நடந்திருக்காவிடில் இந்தவேளையில் ஈராக்கிய அறிவியலாளர்கள் அணுகுண்டொன்றைத் தயாரித்திருப்பார்கள் அப்படி ஒரு குண்டை அவர்கள் தயாரித்திருப்பின் அதை திரு.சதாம்குசைன் பயன்படுத்தமாட்டார் என எண்ணமுடியாது.

வளைகுடாவில் அமெரிக்கா பெற்ற வெற்றி முழுமையானதல்ல இப்பொழுதும் திரு.சதாம்குசைன் எதிர்ப்புணர்ச்சியைக் காட்டிவருகின்றார். ஈராக்கியத் தலைவரின் பலத்தைச் சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்ட அமெரிக்க அதிபர். புலனாய்வுத் துறையினர் மறைமுக நடவடிக்கைகளில் ஈடுபட ஒப்புதல் தந்துள்ளார். திரு சதாம்குசைன் எதிரணியினரால் வீழ்த்தப்படுவாராகில் இராணுவநடவடிக்கையைத் தவிர்த்து மேற் கொள்ளவேண்டிய மற்றைய நடவடிக்கைகளை ஓர் அறிக்கை மூலம் கூட்டுப்படைத் தளபதிகள் அதிபர் புஷ் அவர்களுக்குச்சமர்ப்பித்துள்ளார்கள். எதிரணியினர் திரு சதாம்குசைனை அவருடைய பதவியிலிருந்து வீழ்த்தும் சாத்தியக்கூறுகள்தென்படவில்லை. அதேவேளையில் அணுவாயுதங்களை தாங்கள் விரைவில் தயாரிக்கப் போவதாக ஈராக்கிய அறிவியலாளர் வெளிப்படையாகவே கூறியுள்ளார்கள்.

ஈராக்கிய போர்க்களத்தில் நடைபெற்ற விடயங்களுக்கும் தொலைக்காட்சியில் காட்டப்பட்ட விடயங்களுக்கும் இடையே பெரும் முரண்பாடு உள்ளமையை 'உண்மையான வெற்றிஇன்றியே நம் ஈட்டிய வெற்றி' (*Triumph Without Victory*) என்ற நூல் வாயிலாக அறியமுடிகின்றது,

இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கிய ஆய்வுகளில் சில கீழே தரப்பட்டுள்ளன,

திரு சதாம் ஹுசைனைக் குறிவைத்தே தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன என்ற குற்றச்சாட்டை திரு புஷ் அவர்களின் அரசாங்கம் மீண்டும் மீண்டும் மறுத்தபோதிலும் இவரைக் கொல்லும் இறுதிமுயற்சியாக போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு ஒரு சிலமணி நேரத்திற்கு முன் எவ் -111 எப் (F111F) குண்டு வீச்சு வானூர்திகள் பாக்தாத்துக்கு 15 மைல்களுக்கு அப்பால், வடமேல் பக்கமாக உள்ள ஈராக்கிய இராணுவத்தினரின் பதுங்குகுழிமேல் இதற்கென சிறப்பாக தயாரிக்கப்பட்ட 5000ம் இறாத்தல் நிறையுள்ள குண்டுகளை வீசின.

## தீர்மானம்

★ தாக்குதல் நடவடிக்கைகளில் ஆயுதப்படையினரை ஈடுப டுத்த செயலுரிமை அளிக்கும் அமெரிக்கக் காங்கிரசினதும் அதன் அரசியல் யாப்பினதும் செயலுரிமையை புறக்கணிக்க வேண்டு மென்ற சூழ்ச்சித் திட்டங்கள் காரணமாகவே ஈராக்குக்கு எதி ரான தாக்குதலை மேற்கொள்ள ஐ.நா.சபையின் அங்கீகாரத்தை திரு.புஷ் நிர்வாகம் பெற்றுக்கொண்டது. முன்னதாகவே ஐ.நா சபைக்கு சென்றதன் மூலம் ஜனநாயக கட்சியினரை சமாளித்து விட்டதாக ஒரு மூத்த நிர்வாக மேளாளர் கூறினார்.

★ தனது அரசைப் பாதுகாக்க அமெரிக்க இராணுவத்தை சவுதிஅரேபியாவுக்கு அழைக்கவேண்டுமென மன்னர் வாகிட் தூண்டப்பட்ட அதே வாரத்தில் அமெரிக்கப் படையணிக்குத் தலைமை தாங்கிய ஜெனறல் எச் நோமன் சுவாசுகோப் (General, H. Norman Schwarz Kopt) அவர்களால் ஈராக்கிய படை யெடுப்புக்கு முன் இரகசியமாக குவைத் நகரத்துக்கு அனுப்பப் பட்ட அமெரிக்க புலனாய்வு மேலாளர் ஈராக்கிய குடியரசுக்கா வல் படையினர் சவுதி அரேபியாவில் எல்லையிலிருந்து ஈராக்கின் தென் பகுதியை நோக்கி நகரத்தொடங்கியுள்ளதாக அறிவித் தார்; இந்தப் புலனாய்வு மேலாளர் ஈராக்கைப்பற்றிய குவைத் தில் வாரக்கணக்கில் தங்கியிருந்து ஈராக்கிய துருப்புக்களின் நட வடிக்கைகளை அமெரிக்காவுக்கு அறிவித்ததன் மூலம் திரு. சுவாத் கோப் அவர்களின் உயிர்நாடியாக விளங்கினார்

★ அமெரிக்கக் குண்டுவீச்சு வானூர்திகள் முதன்முறையாக பாக்தாத்தின் மீது குண்டுவீசிய 1991 ஆம் ஆண்டு சனவரி 17 ஆம் திகதிக்கு முன்னுள்ள சில வாரங்களுக்கு முன், ஈராக்கின் வான் பாதுகாப்புச் சாதனங்களைக் கட்டுப்படுத்தவும் அவற்றுடன்

தொடர்பு ஏற்படுத்தவும் அமைக்கப்பட்ட பிரமாண்டமான கணணிகளை செயலிழக்கச் செய்வதற்கு அமெரிக்க புலனாய் வுத்துறையினர் அவற்றுள் நுண் அழிவு ஆற்றலை (Computer Virus) மிகவும் சாதுரியமாக உட்புகுத்தினார்கள். ஈராக்கின் வான் பாதுகாப்பை சீர்குலைப்பதற்கு உருவாக்கப்பட்ட இந்த நுண் அழிவு ஆற்றல் தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றி யுள்ளது.

## போர்த்திட்டம்

★ அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளின் படைகள் பாக்தாத் துக்குள் நுழைவது மடைமைத்தனம் என சிலர் விமர்சித்த போதும், கூட்டுப்படைகளின் கமாண்டர் ஜெனறல் நோமன் சுவாத்கோப் அவர்களின் போர்த்திட்டம் ஈராக்கிய குடியரசுக் காவல்படையினரை அவர்களின் (Republican Guard) காப்பிடங் களில் தாக்கி அழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்ததுடன் அவருடைய தரைப்படைகள் ஈராக்கிய தலைநகரை நோக்கிச் செல்வதற்குப் பதிலாக பாரசீகக் குடாவை நோக்கி கிழக்குத் திசைக்கு விரைவாகத் திரும்பிச் செல்லவும் செய்தது. லெப். ஜென புறடெறிக் பிறாங்க்சு அவர்களின் தலைமையிலான அமெ ரிக்க ஏழாவது படைப் பிரிவும், பிரித்தானிய முதலாவது, கவச அணியும், பசிறா (Basra) வுக்குத் தெற்காகவும், குவைத் நகருக்கு வடக்காகவும் உள்ள 'பிசிறா பொக்கற்' (Basra Pocket) றிலுள்ள ஈராக்கிய படைகளின் பெரும்பகுதியினரை மடக்குவதற்கு அத் திட்டம் இடம் கொடுத்தது.

ஆனால் இந்த போர் நிறுத்தம் திரு பிறாங்ச்ஸ் அவர்க ளின் போர்த்தந்திரத்தை நடைமுறைப்படுத்த தடையாக இருந் தபடியால் பெரும்பாலான ஈராக்கிய குடியரசுப் படைகள் தங் கள் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றனர். இப்படிச் சென்ற படை யினரே பின்னர் தென் ஈராக்கிலுள்ள ஈராக்கிய சியா (Shiites) இனத்தவர்களினதும் வட ஈராக்கிலுள்ள குர்திஷ (Kurds) இனத் தவர்களினதும் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு உதவியாக இருந் தவர்கள் ஆவர் சில மைல்களுக்கு அப்பால் நிலை கொண்டி ருந்த அமெரிக்கப்படைகள் உதவிக்குச் செல்லமுடியாதிருந்த அந்த வேளையில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருந்த இரு இனங்களை யும் சேர்ந்த ஆயிரக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் ஈராக்கிய படைகளால் கொல்லப்பட்டனர் என அறிக்கைகள் கூறுகின்றன.

★ தரைப்போரை 144 மணித்தியாலங்களுக்குப் பின் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற ஜெனறல் சுவாசுகோப் அவர்களின் திட்டம் சவுதி அரேபியாவும் எகிப்தும் கொடுத்த நெருக்குதல் காரணமாகவே 100 மணித்தியாலங்களாக மாற்றப் பட்டது. எரிபொருள் தீர்ந்து போனதன் காரணமாகத் தனது படையினர் திட்டமிட்டபடி முதல் நாள் மாலை தங்கள் குறிக் கோள்களை எட்டமுடியாதிருந்தமையாலேயே மேலும் தரைப் போரை தொடர காலநேரம் கேட்டு திரு சுவாசுகோப் வேண்டுகோள் விடுத்தார். அமெரிக்க விமானிகள் குவைத் நகரத்திலிருந்து பசிறாவரை தேவையற்ற படுகொலைகளில் ஈடுபட்டுள்ளவர் என அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் எழுந்த குற்றச்சாட்டுகள் காரணமாகவே இங்கு இறந்தவர்களின் தொகை உண்மையாகவே குறைவாக இருந்தபோதிலும் போரை நிறுத்த வேண்டியிருந்தது.

## மேலாண்மை

★ முன்னர் விபரமாகத் தெரிவிக்கப்படாதிருந்த போதும் தற்போதைய தாங்கிச் சமரை நோக்குகையில் அமெரிக்காவின் தாங்கிகளும் அதன் போர்யுத்திகளும் முன்னாள் சோவியத் ஒன்றியத்தைவிட திறமை வாய்ந்தன என்பதைக் காணமுடிகின்றது முன்னர் எதிர்பார்க்கப்பட்டது போலன்றி அமெரிக்க எம் 1 ஏ (M 1 AL) தாங்கிகள் சுமார் 3200 மீற்றர் தூரத்திலுள்ள ஈராக்கிய ரி— 72 தாங்கிகளை அழித்துள்ளன.

முழுமையாக இந்தப் போரைச் சீர்தூக்கிப் பார்த்தால் வியட்நாமிய அமெரிக்க போரின் பின்னர் துரிதம், தந்திரம் மற்றும் ஏமாற்றல் ஆகியவற்றைக் கையாளும் அமெரிக்காவின் புதிய இராணுவயுத்தி சோவியத் பயிற்சியாளர்களால் போதிக்கப் பட்ட நெருங்கி மோதல், நேரடி முன்னேற்றம் போன்றவற்றைக் கடைப்பிடிக்க வலியுறுத்தும் ஈராக்கிய யுத்திகளிலும் பார்க்க சிறந்ததென தெளிவாகக் காணக்கூடியதாயிருக்கிறது.

## குறைந்த அளவினரே

★ வேறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது போல் குவைத் போரில் ஈடுபடுத்தப்பட்ட ஈராக்கிய படைகளின் எண்ணிக்கை அமெரிக்க இராணுவத் தலைமைப்பீடமான பென்ரகன் (Pentagon) கூறியிருந்ததிலும் பார்க்க குறைவானதாகவே இருந்தது.

ஜெனறல் சுவாசிகோப் கூறிய தொகையான 632,000 இன் அரைவாசிக்குக் குறைவாகவும் பென்ரகன் மதிப்பீடு செய்த 540,000க்கு குறைவாகவும் சுமார் 300,000 படையினரையே போர் தொடங்கும் போது குவைத்தில் ஈராக் ஈடுபடுத்தியது.

இதே போல் இறந்த ஈராக்கிய படையினரின் தொகை அமெரிக்கப் பாதுகாப்புப் புலனாய்வுத் துறையினர் மதிப்பிட்ட 100,000லும் பார்க்கக் குறைவானதாகவே இருந்தது, 43 நாட்கள் நடாத்தப்பட்ட குவைத்போரில் உண்மையாகவே சுமார் 80000 ஈராக்கிய படைவீரர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என இப்புத்தகம் கூறுகின்றது.

# திராவிட மொழிகள்

தமிழ்,மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு கூர்க்கரு, கோண்டு, துதம், கோதம், இராசமகால்.ஒரா வோன், பிராருவி ஆகிய பன்னிரண்டு மொழிகளை பேசும் மக்களின் மூதாதையரையே அறிஞர் திரா விடர் என அழைத்தனர். பிராருவி என்னும் மொழி இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள பலுக்கிசு தானில் இன்னும் வழங்கி வருகின்றது.

# ஈராக்கிய ஜனாதிபதி சதாம் அவர்களைக் கொலை செய்வதற்கான திட்டம்

(ஐலண்ட் - *17-3-92*)

திரு. சதாம் குசைனின் படையினருக்கு எதிரான போர் நடவடிக்கைகள் முடிவுறவிருந்த 1: மணித்தியாலங்களுக்கு முன் பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி மாலை 7.19இல் அமெரிக்க வான்படையைச் சேர்ந்த சி. 141 ரக (C 141) போக்குவரத்து வானூர்தி ஒன்று சவுதி அரேபியாவின் பாலைவனத்தின் மத்தியிலுள்ள இருள்சூழ்ந்த வானூர்தி தளமொன்றில் தரை இயங்கியது. வான்படை ஆயுதங்களில் திறமை பெற்ற ஒருவர் அதற்குள்ளிருந்து வெளியே வருவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருந்தார். மிகவும் பாதுகாப்பான விமானக் கொட்டகை ஒன்றிற்கு இவரை அழைத்துச் செல்வதற்கு ஒருவாகனம் ஓடுபாதையில் தயாராக நின்றது.

## அசாதாரணமானது

இந்த சி 141 போக்குவரத்து விமானத்திலுள்ள பொதிகள் வைக்கும் இடத்தில் அசாதாரணமான இருகுண்டுகள் இருந்தன. வான்போர் ஆரம்பித்து மூன்று நாள் முடிவுற்ற சனவரி 19-ம் திகதி வரையும் வானூர்திப்படையினரால் மேற்கொள்ளப்படாத அதிரடித் தாக்குதலை நடத்தும் போது பாவிப்பதற்காகவே இக்குண்டுகள் கொண்டுவரப்பட்டன. திரு. சதாம்குசைன் மற்றும் அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான சகாக்கள் மறைந்திருக்கத்தக்கதாக அமைக்கப்பட்டதெனச் சந்தேகிக்கப்பட்டதும், ஆழமானதும், பலம்வாய்ந்ததுமான பதுங்குகுழிக் காப்பரண்களைத் தாக்கி அழிக்கக்கூடியதாக இக்குண்டுகள் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டவை. உத்தியோகப்பற்றற்ற முறையில் இக்குண்டுகள் ''பங்கர் பச்ரர் (*Bunker buster*) (பதுங்கு குழிப்புயல் வேகத்தாக்குதல்) என அழைக்கப்பட்டது. இதன் உத்தியோக பூர்வமான பெயர் யி. பி யூ-28 (*Gbu-28*) என்பதாகும். யி.பி.யூ என்பது வான்படையினரால் வழக்கமாகச் சூட்டப்படும் புனைபெயரில் ஒன்றாகும். யி. பி. யூ என்பதன் அர்த்தம் கிளைட் பொம் யூனிற் (*Glide bomb unit*) என்பதாகும். பாக்தாத் மீது எவ்117 ஏ கிரீல்த் (*Stealth*) ரக வானூர்திகளி

லிருந்து வீசிய யி. பி. யூ 27 குண்டுகளின் நிறை 2000 இறாத்தல்களாகும். யி. பி. யூ 28 ரக குண்டுகள் 5000 இறாத்தல் நிறையுள்ளவையாகும்.

இந்தப் போரின் போது உண்மையிலேயே எந்த இடத்தில் திரு. சதாம்குசைன் மறைந்திருக்கிறார் என்பது அமெரிக்கப் புலனாய்வு மேலாளருக்குத் தெரியாது. வான்போர் ஆரம்பித்த முதல் இரவான சனவரி 16இல் ஈராக்கிய படையினரின் பதுங்கு குழி அனைத்தின் மீதும் 2000 இறாத்தல் நிறையுள்ள குண்டுகளை எப் 117 ஏ. போர் வானூர்தியின் வீசுவதை யெனறல் சுவாசு கோப் நிச்சயப்படுத்திக்கொண்டார். பாலைவனப்புயல் என அழைக்கப்பட்ட இத்தாக்குதலை வகுத்தவர்களும் இதை வழிநடத்தியவர்களுமான அமெரிக்கப்படைப்பிரிவின் நடுவன் தலைமைப்பீடத்தளபதிகள் இந்தப் பதுங்கு குழிகளில் ஒன்றில் திரு. சதாம்குசைன் இருக்கவேண்டும் என விரும்பியதுடன் அதையே எதிர்பார்த்தார்கள். அது திரு. சதாம்குசைனைக் கொல்லும் இலக்காக இருக்காது என பாலைவனப்புயலின் விமானத்தளபதியான லெப். ஜென. சால்சு கோனர். (*Lt. Gen. Charles Horner*) கூறினார். தன்கடமை நிமித்தம் அங்கு இருக்கும் திரு. சதாம்குசைனும் கொல்லப்படுவார் என்று கருதியமையாலேயே, கட்டளை பிறப்பிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் முக்கியமான வசதிகளை இலக்குவைத்துக் குண்டு வீசப்பட்டதாக இவர் மேலும் கூறினார்.

## இறுதித்தாக்குதல்

திடீரென மறைந்து தன்னைக்காப்பாற்றும் திறமை வாய்ந்த திரு. சதாம் அவர்கள்ளைக் கொல்லும் இறுதி முயற்சியை மேற்கொள்ளவே நடுவன் இராணுவத்தலைப்பீடம் சி141 போக்குவரத்து வானூர்தி மூலம் இரண்டு குண்டுகளை அனுப்பி வைத்தது. ஈராக்கிய தலைவரைக் கொல்ல இக்குண்டுகளை அனுப்பவில்லை என அமெரிக்க அதிபர் புசு அவர்களும் தளபதிகளும் கூறியிருந்த போதிலும் யி. பி. யூ - 28 பங்கர் பசுரர் என அழைக்கப்படும் இவற்றை தயாரித்த மேலாளர் ஈராக்கிய தலைவரைக் கொல்வதை நோக்கமாகக் கொண்டே இவை தயாரிக்கப்பட்டது என கூறுகிறார்கள். இந்த இரண்டு புதிய குண்டுகளையும் வீசும் தீர்மானத்தை மேற்கொள்ளும் பொறுப்பை வகிக்கும் நடுவன் படைப்பிரிவைச் சேர்ந்த ஒரு மூத்த மேலாளர் இவற்றைத் தயாரித்ததின் நோக்கம் ஈடேறாது இருக்க முடியாது எனக்கூறியுள்ளார்.

86650

திரு. சதாம்குசைன் அவர்களைக் கொல்ல இந்தக் குண்டுகள் தயாரிக்கப்படவில்லை என நான் கூறின் நான் உங்களுக்குப் பொய்யையே கூறுகின்றேன் என இந்த மேலாளர் மேலும் கூறினார்.

ஈராக்கியத் தலைவர் எந்த இடத்தில் மறைந்திருப்பார் என நன்கு ஊகித்து அறிந்த பின்பே பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி மாலையில் தாக்கவேண்டிய இடம்தெரிவு செய்யப்பட்டது என விடயமறிந்த மேலாளர் கூறினார். பாக்தாத்துக்கு வட மேற்கே சுமார் 15 கல் தூரத்தில் உள்ள அல் தாயி (Al-Taji) வானூர்தித் தளத்திலுள்ள பலம் பொருந்திய பதுங்குகுழி அரண் மீது ஏற்கனவே 2000 இறாத்தல் நிறையுள்ள குண்டுகள் மூன்று முறை வீசப்பட்டிருந்தது. இருப்பினும் 200 அடி சதுரமானதும் பல அடுக்குகளைக் கொண்டு மிக ஆழமாக அமைக்கப்பட்டதுமான இந்தப் பதுங்குகுழி சிறிய சேதங்களுக்கே உள்ளாக்கப்பட்டிருந்ததென அமெரிக்க வான்படை மற்றும் புலனாய்வு மேலாளர்கள் கூறினர். போரின் இறுதி இரவில் தங்குவதற்கு இதுவே பாதுகாப்பான இடம் என திரு. சதாம்குசைன் நினைத்திருக்கக் கூடும் என அமெரிக்கர்கள் நம்பினர்.

## விமானிகள்

பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி மாலையில் இந்த இரு புதிய குண்டுகளை வீசுவதற்கு நியமிக்கப்பட்ட விமானிகளுக்கு நன்கு அறிவுறுத்தப்பட்டது இரண்டு யீ பி.யு 28 குண்டுகளுடன் வந்த சி 141 விமானம் தரையிறங்கிய சில நிமிடங்களுக்குள், இக்குண்டுகளுடன் சவுதி அரேபியாவுக்கு வந்துள்ள சக்றமென்தோ (Sacraments) விலுள்ள மக்கிலேலன் விமானப்படைத்தளத்தில் (Mc Clellan Air Force base) 431 வது ஆய்வு மற்றும் மதிப்பீட்டுப்படைத்தளதில் ஆயுதங்களுக்குப் பொறுப்பான மேலாளர் சதாம் குசைனைக் கொலை செய்யும் இறுதிப்பணியை நிறைவேற்றுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விமானிகளுக்கு அறிவுரைகள் வழங்கிக் கொண்டிருந்தார். இங்கிலாந்திலுள்ள லக்கன் கீத் (Laken Heath) விமானத்தளத்தின் 48 வது அதிரடிப்போர்ப் பிரிவைச் சேர்ந்த (TacticalFighter Wing) எப்- 111 ரக விமான ஓட்டிகள் இருவரும் அவர்களுடைய ஆயுதங்களுக்குப் பொறுப்பான மேலாளருமே இந்த அறிவுறுத்தல்களைப் பெற்றவர்கள் ஆவர்.

## பணி

அறிவுறுத்தலைப் பெற்றதன் பின் வானூர்தி மேலே எழுவதற்கு முன்னால் மேற்கொள்ள வேண்டிய சோதனைகள் யாவும் முறிவுற்றதும் வானூர்தியில் தங்கள் இருக்கைகளுக்கு இவர்கள் சென்றனர். இரண்டு பெரிய குண்டுவீச்சு வானூர்திகளும் பேரச்சம் தரும் சத்தத்துடன் அந்த இராப்பொழுதில் மேல் எழுந்து சென்றன. பல மணித்தியாலங்களுக்குப்பின் முதலாவது எப் - 111 எப் விமானம் அல் தாயிலுள்ள ஈராக்கிய பதுங்குகுழி மேல் சென்று கொண்டிருக்கையில், ஆயுதத்துக்குப் பொறுப்பான மேலாளர் குண்டைப் பாதுகாப்பாகப் பொருத்தி வைத்திருக்கும் நாலு பட்டிகளையும் கழற்றிவிட்டார்.

## அழிக்கப்பட்டது

முதலாவது எப் - 111 வானூர்தியைத் தொடர்ந்து சென்ற இரண்டாவது விமானியும் அவ்விடத்தில் தன்னுடைய வானூர்தியின் யி பி.யு 28 குண்டை கழற்றிவிட்டார். வானூர்திகளிலிருந்த ஆயுதங்களுக்குப் பொறுப்பான இரண்டு மேலாளரும் தங்கள் ஒளிக்கீற்றுக் கட்டுப்பாடுகளின் (*Laser Controls*) துணையுடன் குறித்த பதுங்குகுழியின் மேற்பக்கத்திள்ள பதுங்குழிக்காற்று செல்லும் பாதையூடு குண்டுகள் செல்லத்தக்கவாறு நெறிப்படுத்தினர்.

ஒன்றன் பின் ஒன்றாக 5000 இறாத்தல் நிறையுள்ள குண்டுகள் பதுங்குகுழியினை உடைத்து உட்சென்றன: பல வினாடிகளுக்குப் பின் பதுங்குகுழியின் ஆறு நுழை வாசல்களிலுமிருந்து புகை மண்டலம் எழத்தொடங்கியது. இறுதியில் பதுங்குகுழி அழிக்கப்பட்டது. பல மணித்தியாலங்களுக்குப்பின் இந்தப் பதுங்குகுழிக்குள் திரு சதாம் குசைன் இருக்கவில்லை என்பதை அமெரிக்க மேலாளர் உறுதிப்படுத்திக் கொண்டனர்.

# இசுலாமிய அடிப்படைவாதத்தைப் பரப்புவதே சூடான் நாட்டுத் தலைவருடைய குறிக்கோளாகும்

-ஜேன் பெர்லேஸ்

(ஐலண்ட் - 3.3.92)

நகர்ப்புறத்தவரும், மேற்குலகில் கல்வி கற்றவருமாகிய திரு கசன் துறாபி (Hassen Turabi) சனநாயக மற்றும் சர்வாதிகாரம் வழிமுறை மூலம் சில காலம் மந்திரி சபையில் இருந்த போதும் சில காலம் சிறையிலிருந்த போதுங்கூட இசுலாமிய அடிப்படைவாதத்தைச் சென்ற 40 ஆண்டுகாலமாக சூடானில் பரப்புவதற் நடவடிக்கை மேற்கொண்டு வந்துள்ளார்.

இவருடைய தேசிய இசுலாமிய முன்னணி தற்போது கார்டுமில் (Khartoum) இராணுவ ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருப்பதால், மற்றவர்களால் கவரப்படக் கூடியவராக விளங்குபவரும், தந்திரசாலியுமான திரு. துறாபி மிதவாத அராபிய நாடுகளிலும் மற்றைய ஆபிரிக்க நாடுகளிலும் இந்த இசுலாமிய அடிப்படைவாதத்தைப் பரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார்.

சதிப்புரட்சி மூலம் 1989-ம் ஆண்டு இராணுவ ஆட்சியை அமைத்த ஜெனரல் ஓமர் கசன் பசிர் (Oman Hassan Bashir) சூடானின் தலைவராகப் பெயரளவில் இருந்தபோதும், திரு. துறாபியே அதன் உண்மையான தலைவராக விளங்குகின்றார்.

மேற்குலக நாடுகளின் தூண்டுதல்களினால் தோற்றுவிக்கப்பட்ட ஆபிரிக்கப் பொதுவுடைமைக் கோட்பாடு மற்றும் அராபிய தேசியவாதம் ஆகியன தோல்வியுற்றதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு இந்த இசுலாமிய அடிப்படைவாதம் எழுச்சி பெறுவது தவிர்க்க முடியாதது எனத் திரு.துறாபி கூறுகின்றார்.

கார்ட்டுமில் மேல்மட்டத்தில் உள்ளோர் வசிக்கும் நகரங்கள் ஒன்றில் அமைந்துள்ள வீட்டில், தனது மரபுவழிக் கவர்ச்சி தரும் வெள்ளை அங்கியை அணிந்து கொண்டிருந்த திரு. துறாபி "உலகின் இந்தப் பாகத்தில் இசுலாம் என்ற ஆற்றல் மாத்திரமே

நிலைத்திருக்கின்றது'' எனக் கூறினார். இளைஞர்களுக்கு எழுச்சியூட்டுவதற்கும், அவர்களை ஒன்று திரட்டுவதற்கும், அவர்களை நல் நோக்குள்ளவர்களாக மாற்றுவதற்கும், அவர்களைப் பற்றுள்ளவர்களாக ஆக்குவதற்கும் இந்த ஆற்றலினால் அன்றி வேறு எந்த ஆற்றலினாலும் இயலாது என இவர் மேலும் கூறினார்.

## சுதந்திரம்

ஈரானில் கீழ் மட்டத்திலுள்ளோர் இஸ்லாமிய முன்னணியை வழிநடத்தியது போலன்றி சூடானில் மேல்மட்டத்தில் உள்ளோர் அதை வழிநடத்தி ஒரு மிதவாத அமைப்பை உருவாக்குவதற்கு ஏற்ற சூழ்நிலையும், சுதந்திரமும் இருந்தது எனத் திரு. துறாபி கூறுகின்றார்.

சூடானின் வடபகுதி அராபியர்களின் ஆதிக்கத்தில் இருப்பதாலும் அதன் தென்பகுதி கறுப்பின ஆபிரிக்கர்களுடைய ஆதிக்கத்தில் இருப்பதாலும் அராபிய நாடுகளிலும், ஆபிரிக்காவிலும் இசுலாமிய அடிப்படைவாதத்தைப் பரப்புவதற்குச் சூடான் ஒரு சிறந்த தளமாக விளங்குகின்றது என இவர் கூறுகின்றார்.

சமயத்தாலும், பொருளாதாரத்தாலும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்ற ஒரு இசுலாமிய உலகை உருவாக்க வேண்டும் என்ற திரு. துறாபியின் நோக்கு இரண்டு காரணங்கள் இல்லாதுவிடின் அதிகம் அக்கறை கொள்ளக் கூடியதல்ல எனச் சிலர் வாதிடுகின்றனர்.

வறியவர்களையும் சமயப் பற்றுள்ளவர்களையும் இசுலாமிய அடிப்படை வாதம் கவருகின்றது என இவர்கள் கூறுகின்றார்கள்.

அடுத்ததாகச் சூடானில் நிலவும் பொருளாதாரச் சீர்குலைவு அதை எந்த விதத்திலும் ஒரு தளமாகக் கொள்ள இடங்கொடுக்காதபோதிலும், ஈரானியர்களை நாட்டுக்குள் வரவழைத்து நிலநெய்யிலிருந்து இராணுவப் பயிற்சி போன்ற பல துறைகளிலும் அவர்களுடைய உதவியைப் பெற்று நாடு பொருளாதார மேம்பாடு அடைய அனைத்தையும் திரு. துறாபி செய்துள்ளார் எனவும் கூறுகின்றார்கள்.

1989-ம் ஆண்டில் நடத்தப்பட்ட சதிப்புரட்சியின் பின் எழுச்சி பெற்ற திரு. துறாபியினுடைய இசுலாமிய அடிப்படை வாதம் சனநாயகத்துக்கு எதிரானதெனவும், மனித உரிமைகளை மதியாத ஒன்றெனவும், சர்வதேச பயங்கரவாதக் குழுக்களின் பாதுகாவலன் எனவும் கார்ட்டூனில் உள்ள அமெரிக்க இராச தந்திரி ஒருவர் கூறினார்.

## தடை செய்யப்பட்டது

இராணுவம் ஆட்சிக்கு வந்ததும் சூடானில் செல்வாக்கைப் பெற்ற அரசியல் கட்சிகளைத் தடை செய்ததுடன் அர சாங்கத்துக்கு எதிரானவர்களெனச் சந்தேகிக்கப்படுவோரைச் சிறையிலிட்டது. அத்துடன் தடுப்புக் காவலில் உள்ளோரைச் சித்திரவதை செய்துள்ளதாகவும் சர்விதேச மனித உரிமைகள் அமைப்பு கூறுகின்றது.

இருப்பினும் சோர்போன் (Sorbonne) லண்டன் (London) மற்றும் கார்ட்டும் (Khartoum) பல்கலைக்கழகங்களில் சட்டத்துறையில் பட்டம் பெற்றவரும், அரபு, ஆங்கிலம், மற்றும் பிரஞ்சு மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவருமான 59 வயதுடைய திரு துறாபி சூடானை இசுலாமிய மயமாக்கும் தனது கொள்கை மென்போக்கானது எனக் காட்ட முயல்கின்றார்.

ஆயுதம் தாங்கிய கொள்ளையர்களின் உறுப்புக்களை துண்டாட இடமளிக்கும் சாரியா (Sharia) என்னும் இசுலாமியச்சட்டம் தற்பொழுது பொறுப்புணர்ச்சியுடன் நடைமுறைப்படுத்துகின்றது எனவும், அப்படியான ஒரு வழக்கை விசாரணை செய்வதற்கு நீண்ட காலம் எடுப்பதால் சமீப காலம் வரை அப்படியான தண்டனை வழங்கப்படவில்லை எனவும் திரு. துறாபி கூறினார்.

திரு. காவர் நிமெய்றி (Gaffar Nimeiry) அவர்களின் அரசாங்கத்தில் 1983இல் சட்டமா அதிபராகப் பதவி வகித்த திரு துறாபி அவர்களே, பொதுமக்களின் முன் பலரின் உறுப்புக்களை துண்டாடக் காரணமாயிருந்த சாரியா போன்ற சட்டங்களை உருவாக்கியவர், நிமெய்றி இப்படியான விடயங்களில் விருப்ப முடையவராக இருந்தாரென்றும், இவற்றிற்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் திரு துறாபி கூறுகின்றார்.

இசுலாமியப் பெண்களுக்கென அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆடை அணிகள், சட்டம், நல்லொழுக்கத்தை வளர்

க்கும் கல்விமுறை மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனத் திரு. துறாபி கூறினார். பெரும் எண்ணிக்கையினரான வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் அதற்குத் தேவையான நிதியை இஸ்லாமிய வறிய மக்கள் வரிச்சட்டம் மூலம் அரசாங்கம் பெறவிருப்பதாகத் திரு துறாபி மேலும் கூறினார்.

தனது கோட்பாட்டை தந்திரமாகக் கையாண்டதன் மூலம் அதிகாரத்துக்கு வந்த திரு. துறாபி அவர்களின் திறமையைச் சூடான் நாட்டுக் கல்விமான்கள் மெச்சிய போதும் சூடான் நாட்டு அரசின் செயற்பாட்டுக்கும் திரு. துறாபி அவர்களின் கூற்றுக்குமிடையே நிலவும் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்ட அவர்கள் தவறவில்லை.

சென்ற பத்து ஆண்டுகளுக்கு மேலாக அத்துமீறிக் குடியிருந்த சுமார் 2, 50, 000 வறிய மக்களின் குடிசைகளை கார்ட்டும் வீடமைப்பு அதிகாரசபை சென்ற டிசம்பர் மாத முற்பகுதியிலிருந்து தரைமட்டமாக்கி விட்டதென சூடான் நாட்டவர்களும், உதவி வழங்கும் மேற்குலக மேலாளர்களும் கூறுகின்றார்கள்.

## நியாயப்படுத்தப்பட்டது

சுற்றாடலைச் சுத்தப்படுத்துவதற்காகவே இந்தக் குடிசைகள் அழிக்கப்பட்டதென மேலாளர் தங்கள் செய்கையை நியாயப்படுத்தினர். அத்துமீறிக் குடியிருந்தோர்களில் பலர் கிறிஸ்தவர்களாகவும், தென்பகுதியிலுள்ள ஆன்மவாதிகளாகவும் இருந்ததால் அவர்களிடம் இருந்து எழக்கூடிய எதிர்ப்பை முறியடிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் வேறு சிலர் கூறுகிறார்கள்.

பண்பான வழிமுறைகளின் மூலம் பெண்கள் ஆடை அணிவதில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் திரு. துறாபி கூறியபோதிலும் பெண்கள் இந்த மாற்றத்தைப்பற்றி வேறு விதமாகக் கூறுகிறார்கள். தங்கள் தலைகளிலிருந்து கணுக்கால்கள் வரை மறைக்கக்கூடியவாறு ஆடைகளை அணியவேண்டும் அல்லது அவர்கள் தங்கள் தொழில்களை இழக்க நேரிடும் என அரசாங்கச் செயலகங்களில் பணிபுரியும் பெண்களுக்குக் கூறப்பட்டு வருகின்றது.

கேணல் பதவியை வகித்த திரு நிமெய்றி அவர்கள் 1969ம் ஆண்டில் மேற்கொண்ட சதிப்புரட்சிக்குப் பின் 1960ம் ஆண்டுகளில்

சட்டசபை உறுப்பினராக விளங்கிய திரு துறாபி அவர்களை ஆறு ஆண்டுகளுக்குச் சிறையிலிட்டார். கேணல் மொகமட் கடாபியின் அரசாங்கத்துக்கு இசுலாமிய அடிப்படைவாதம் இப்பொழுது அச்சுறுத்தலாக இருக்கின்றதென முன்னர் நாடு கடந்து லிபியாவில் வாழ்ந்து வந்த திரு துறாபி மிகத் திருப்தியுடன்கூறுகின்றார்.

பின்பு இவர் திரு நிமெய்றியுடன் தனக்குள்ள கசப்புணர்வை நீக்கி மீண்டும் 1985ம் ஆண்டில் இவ்விருவருக்கும் இடையே பகைமையுணர்வு ஏற்படும்வரை திரு நிமெய்றியின் ஆட்சியின் கீழ் சட்டமா அதிபராகப் பணியாற்றினார்.

பிரதம மந்திரி திரு சாதிக் மாதி (*sadiq Mahdi*) அவர்களின் சனநாயக அரசாங்கத்தில் இவரது இசுலாமிய தேசிய முன்னணி 20% விகித உறுப்பினர்களைக் கொண்டு விளங்கிய போதிலும், குறுகிய காலம் சட்டமா அதிபராகப் பதவி வகித்த திரு துறாபி தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்.

## பரந்துபட்ட விடயங்கள்

இவருடைய இசுலாமிய முன்னணி தனக்கென ஒரு நிரந்தரமான இடத்தைத் தாய்நாட்டில் பெற்றுவிட்டதால், இப்பொழுது, இவர் இதை மற்றைய இசுலாமிய நாடுகளில் பரப்புவதில் தீவிர அக்கறை காட்டுகின்றார். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அராபிய இசுலாமிய அமைப்பின் செயல் அதிபரான இவர் தான் பயணங்களைமேற்கொள்ளும் போதெல்லாம் தன்னுடைய இசுலாமிய அடிப்படைவாதத்துக்கு மேற்குலக நாடுகளில் எப்படியான எதிர் விளைவுகள் ஏற்படுகின்றது என்பதைக் கவனித்து வருகின்றார்.

சூடான் நாட்டின் எல்லையில் உள்ளதும் முசுலிம்களை அரைவாசிச் சனத்தொகையாகக் கொண்டதும் எதியோப்பியாவிலிருந்து பிரிந்துசென்றதுமான எரித்திரியாவுக்கு இவர் அண்மையில் சென்றிருந்தார்.

எதிர்காலத்தை இவர் தூரநோக்குடன் பார்க்கின்றார். அல்யீரியாவில் இசுலாமிய அடிப்படைவாதிகள் அரசியலில் வெற்றியடைந்த பின்னர் இராணுவம் அரசாங்கத்தைக் கைப்பற்றியதையிட்டுத் தான் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை, மேற்குலகம் எதைச் செய்தாலும் இசுலாம் அவற்றையெல்லாம் முறியடிக்கும் என்பதால் தான் இதைப்பற்றி கவலைப்படவில்லை எனவும் இவர் கூறுகின்றார்.

# அரேபியாவின் மணலில் மறைந்த மாளிகை

— றிச்சாட் என். ஒஸ்லிங் —

வாசனைத் திரவியங்களுக்கும், பாவச்செயல்களுக்கும் பெயர்போன 4000 ம் ஆண்டுகளுக்கு முந்திய நகரத்தைக் கண்டுபிடிக்க அகழ்வாராச்சியாளர்களுக்கு வானவெளிகால ஆராய்ச்சி நுண்கருவிகள் உதவுகின்றன.

பண்டைய அராபியாவிலுள்ள புகழ்பெற்ற கர்ணபரம்பரைக் கதைகளில் உபார் (Ubar) நகரத்தைப் பற்றிய கதையே முதன்மையானது. இந்தக் கதையில், இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட தென்பகுதிப் பாலைவனத்துப் பசும் புற்றரையில் சுவர்க்கபுரியைப் போன்ற இந்நகரம் சடாட் இபின் அட் (Shaddad ibn Ad) அவர்களால் உருவாக்கப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது. இஸ்லாம் மதத்தினரின் புனிதப் புத்தகமான கோறானில் (Koran) அழகே உருவான உயர்ந்த தூண்களைக் கொண்ட இந்த நகரத்தை இறாம் (Iram) என அழைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த நகரத்துக்கு ஈடாக உலகில் வேறு எந்தநகரமும் இருக்கவில்லை என கோறான் மேலும் கூறுகின்றது. இந்த நகரத்தை இசுலாமியரின் பாவச்சின்னம் (Islams Sodom) எனவும் கூறுவர். இந்த நகரத்தில் வாழ்ந்த மக்களின் எல்லையற்ற பாவச் செயல்களில் இறைவன் இந்நகரத்தை அழித்தான். ''இந்த உபார் நகரத்தை கண்டுபிடிக்கும் எவரும் மனநோயினால் பீடிக்கப்படுவார்கள்'' என்றொரு சாபக்கேடு இருப்பதாக அராபியர்கள் எச்சரிக்கின்றார்கள். அராபிய இரவுகள் (Arabian Nights) என்னும் கதைகளில் ''அல்லா இந்நகரத்துக்குச் செல்லும் பாதையை அழித்துள்ளார்'' எனக் கூறப்பட்டுள்ளது.

பல நூற்றாண்டுகளாக உபார் நகரத்துக்குச் செல்லும் வீதி அழிந்து போயிற்று என்றே உலகம் நினைத்தது. அரேபியாவின் லோறன்ஸ் (Lawrence of Arabia) என்றழைக்கப்படும் ரீ. ஈ. லோறன்ஸ் இந்த மறைந்துபோன நகரத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமெனக் கனவு கண்டார். அவர் இந்த நகரத்தைப் பண்டைக்

காலத்தில் ஒப்பற்ற நகராகத் திகழ்ந்த அற்லான்ரிசு நகரத்துக்கு ஒப்பாக மணற்றரையிலுள்ள அற்லான்ரிசு (Atlantis of the Sands) என அழைத்தார். அவர் இந்த நகரத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்குமுன் இறந்துவிட்டார். இந்த நகரத்தைக் கண்டு பிடிப்பதற்காக 1947 லும், 1953 லும் வேறுபலர் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. பண்டையகால சான்றுகளுடன், தற்போதைய விண்வெளிகால ஆராய்ச்சி நுண்கருவிகள் மூலம் தாங்கள் இந்த நகரத்தைக் கண்டுபிடித்ததாக கலிபோர்ணியாவிலுள்ள இரு இளம் அகழ்வாராய்ச்சியாளர்கள் சென்றவாரம் அறிவித்துள்ளனர்.

செய்திப்படங்கள் தயாரித்துப் பரிசில்களைப் பெற்றவரான திரு. நிக்கலஸ் கிளாப்பின் கைகளுக்கு உபார் நகரப் பாதையைப் பற்றிய அகழ்வாராய்ச்சியாளர்களின் சில குறிப்புகள் 1982 ம் ஆண்டில் கிடைத்ததுடன், இந்த நகரத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற முயற்சி ஆரம்பமானது. கலிபோர்ணியாவிலுள்ள கன்ரிங்ரன் நூலகத்திலுள்ள (Huntington Library) புத்தகங்களிலிருந்து மேலும் இது பற்றிய தகவல்களைச் சேகரித்தபின் அவர் சோர்ச் கெட்செசு என்ற சட்டத்தரணியுடன் சேர்ந்து இந்த அகழ்வாராட்சிக்குத் தேவையான பணத்தைச் சேகரித்ததோடல்லாமல், இந்த முயற்சிக்குத் தேவையான பொருட்களையும் ஆட்களையும் ஒழுங்குபடுத்தினார். அத்துடன் அராபியாவைப்பற்றி ஆராய்ந்து அதில் நிபுணத்துவம் பெற்ற அமெரிக்காவிலுள்ள தென்மேற்கு மாநிலமான மிசூறியிலுள்ள அரச பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அகழ்வாராய்ச்சியாளரான யூரிசு சாறின்சு அவர்களையும் பிரித்தானிய அகழ்வாராய்ச்சி நிபுணர் சேர் றுனுள்ப் பியன்னசு அவர்களையும் அவர் தங்களுடன் சேர்த்துக் கொண்டார்.

எகிப்திலுள்ள பாலைவனங்களின் நிலத்துக்கடியில் மறைந்துபோன ஆற்றுப்படுக்கைகளைக் கண்டறியும் நோக்குடன் செய்மதி ஒன்றில் இணைக்கப்பட்ட விண்வெளிப்படங்களைத் தயாரிக்கும் இராடர் (Space Imaging Radar) ஒன்றைப்பற்றித் திரு. கிளாப் அறியநேரிட்டபோது இதில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. மனிதனின் கண்களுக்குப் புலப்படாத பொருட்களை செய்மதியிலுள்ள ஒளிப்படங்களை எடுக்கும் நுண்கருவிகள் உள்ளகத்தின் சிவப்பு (Infrared) ஒளியின் மூலம் படமெடுக்க உதவின. இப்படங்கள் மூலம் தகவல்கள், குறியீடுகளைக்கொண்டு 160 கி. மீ பாதையை உருவாக்க அறிவியலாளருக்கு உதவியது. இந்தப் படங்களைக் கணனிகளின் உதவியுடன் ஆராய்ந்தபோது மேலும்

பல விபரங்கள் வெளியாகின. அகழ்வாராய்ச்சியாளர்களின் கண்களுக்குப் புலப்படாத தெருக்கள் ஆற்றுப்படுக்கைகள் என்பன. நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் உயரத்திலிருந்து செய்மதியினால் எடுக்கப்பட்ட படங்களில் தெளிவாகத் தெரிந்தன.

கலிபோர்ணியாவிலுள்ள பொறியியல் கல்லூரியின் ஜெற் உந்து சக்தி ஆய்வுகூடம் (Jet Propulsion Laboratory) ஆரம்பத்தில் விருப்பமில்லாதிருந்த போதும், பின்னர் சலேஞ்சர் (Challenger) செய்மதி தென்கிழக்கு அரேபியாவின் மேலாக வரும்போது இரு உருவகப்படங்களை எடுப்பதற்குச் சம்மதித்தது. இப்படங்களை ஆராய்ந்தபோது வெள்ளைக்கோடுகள் போன்று நூற்றுக்கணக்கான கிலோமீற்றர் தூரமான ஒற்றையடிப்பாதைகள் தென்பட்டன. இதில் தென்பட்ட சிலபாதைகள் மணல்மேடுகளுக்கடியே இருந்தன. பலநூற்றாண்டுகாலமாக இப்பாதைகள் மணலிற் புதைந்திருந்தமையால் இம் மண்மேடுகளில் சில 183 மீற்றர்கள் உயர்ந்து காணப்பட்டன.

திரு. தாலமி (Ptolemy) அவர்களால் கி. பி 2 ம் நூற்றாண்டில் வரையப்பட்ட படத்தில் 'ஓமானும் எம்போறியம்' (Omanum Emporium) என்று குறிக்கப்பட்டுள்ள ஓமானிலுள்ள சந்தைப் பகுதியை நோக்கி அநேகமான பாதைகள் செல்வதை அவதானிக்க முடிந்தது. இந்த இடம் ஓமானிலுள்ள பாதைகள் அற்ற வெற்றுச் சதுக்கத் (Empty Quarter) தில் உள்ளது இங்கே விசப்பாம்புகளும், கொடும் விசத்தையுடைய சிலந்திகளும், உருவத்தில் பெரிய பேன்வகைகளும் உள்ளன. இந்தத் தடைசெய்யப்பட்ட பிரதேசத்தை 1990 ம் ஆண்டில் நன்கு அலசி ஆராய்ந்த பின் கடந்த நவம்பர் மாதத்தில் அகழ்வு வேலைகள் மும்முரமாகத் தொடங்கப்பட்டன. ஆறு வாரங்களுக்கு முன் எங்கள் முயற்சியை முற்றாகக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. என்கிறார் கிளாப். இதன் பின்னர் அசு–சிசார் (Ash Shisar) என்ற நீர்த்தேக்கத்துக்கருகேயுள்ள பண்டைய பாழடைந்த கோட்டையைப் பரிசோதிக்க இக்குழுவினர் விரும்பினர் நிலத்துக்கடியிலுள்ளவற்றை எடுத்துக் காட்டக்கூடிய இராடர் (Ground Penetrating radar) களினாலும், ஒலிப்பிரயோக நுண்கருவிகளினாலும் (Sounding devies) நிலத்துக்கடியில் பலத்த இடிபாடுகள் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் அறிந்தனர்.

சிலவார அகழ்வாராய்ச்சிகளின் பின்னர், கோறானில் கூறப்பட்டது போன்ற 9 மீற்றர் உயரமுள்ள தூண்களையும், கோபுரங்களையும் கொண்ட எண்கோண வடிவமைப்புள்ள மாளிகை

தென்பட்டது. இந்த மாளிகையில் 150 பேர்வரை இருக்கக்கூடியதாகத் தென்பட்டபோதும், இதன் சுற்றுவட்டாரத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடாரங்களில் வாழ்ந்திருப்பார்கள் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். பாலைவனத்துள் புதைந்துள்ள நகரமான உபார் நகரத்தின் அழிவுகளைக் கர்ணபரம்பரைக் கதைகளைக்கொண்டு விபரிக்கக்கூடியதாகவுள்ளது. சில வேளைகளில் கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்க காலத்தில் இந்த உபார் நகரத்தின் சுவர்கள் பாரம் தாங்கமுடியாத நிலையில் அருகேயுள்ள 12 மீற்றர் ஆழமுள்ள பள்ளங்களில் வீழ்ந்து அழிந்து போயிருக்கலாம். இந்த நகரம் இரத்தினக்கற்களால் நிரம்பியது. என்பதெல்லாம் இதுவரை பரம்பரை கதையாகத்தான் இருக்கின்றது.

கல்வெட்டுக்கள் கிடைக்கக் கூடியதாக இருந்தாலொழிய இந்த நகரத்தை உபார் என்று திடமாகக் கூறமுடியாது. இங்கே கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்கள் கி. மு. 2000 வருடத்துக்கு முந்தியவை என்பது தெரியவருகின்றது. இதனால் மெசப்பத்தோமியா (Mesopotamia) போன்ற குடியேற்றங்கள் இருந்த காலத்தில் அராபியாக்குடா நாட்டிலும் குடியிருப்புகள் இருந்தது என்பது புலனாகின்றது. இந்தப்பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற மரப்பட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட வாசனைத்திரவியங்களும் (Frankincense) நெய்வகைகளும் இவ்விடங்களுக்குச் செல்வத்தை ஈட்டிக்கொடுத்தது. இப்போதைய வாசனை நெய் வகைகளுக்கும், வாசனைத்திரவியங்களுக்கும் ஒப்பான இந்த வாசனைத் திரவியம், மருந்து, வாசனைப் பொருட்கள், இறந்தவர்களின் உடல்களைப் பதனிடுதல், ஆப்பிரேதங்களை எரிப்பது ஆகியவற்றிற்கு உபயோகிக்கப்பட்டது. விவிலிய நூலில் கூறப்படும் சேபா (Sheba) மகாராணி சொலமன் (Solomon) அரசனுடன் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்தபடியால், யெருசலேத்திலுள்ள கோவிலில் உபார் நகரத்து நெய் விளக்கு எரிப்பதற்கு ஒழுங்காக உபயோகிக்கப்பட்டிருக்கலாம். குழந்தை இயேசுவைச் சந்திக்க வந்த மூன்று ஞானிகளும் (Magi) தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் மணலினால் மூடப்பட்டிருந்த மாளிகையில் இருந்து இந்த வாசனை நெய்யை கொண்டுவந்திருக்கவும் கூடும்.

# தமிழ்நாட்டு அரசியலில் புலிகள்

— நாரகி — (ஐலண்ட் 5. 4. 92)

தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையின் பழநித் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்கு திருமதி சுப்புலெட்சுமி யெகதீசனை திராவிட முன்னேற்றக்கழகம் வேட்பாளராக நியமித்துள்ளது. கருணாநிதியின் அரசாங்கத்தில் ஒரு அமைச்சராக இருந்த இவ் வேட்பாளர் தற்போது சிறையில் இருக்கிறார். பயங்கரவாத சீர்குலைவுத் தடைச்சட்ட (தடா)த்தின் கீழ் இவர் புலிகளுக்கு உதவினாரென கைதுசெய்யப்பட்டு மதுரைச்சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார். தங்களது வேட்பாளரின் இக்கட்டான நிலையை எடுத்துக் கூறியும் காட்டியும் தி. மு. க. வினர் தடாச் சட்டத்துக்கு எதிராக கோட்பரப்புரை (பிரச்சாரம்) செய்ய திட்டமிட்டுள்ளனர். இப்பழநித் தொகுதி தேர்தல் வெற்றி சாதிஅடிப்படையில் போடப்படும் வாக்குகளால் தான் தீர்மானிக்கப்படுகிறது.

திருமதி சுப்புலெட்சுமி யெகதீசன் பழநித் தொகுதியில் பெரும்பான்மையாக இருக்கும் கவுண்டர் சாதியை சேர்ந்தவரானபடியால் அவர்கள் சாதிப்பெண் மறியலில் இருக்கின்றாரே என்ற அடிப்படையில் பெரும்பான்மை சாதி அனுதாப வாக்குகளைப் பெறலாமென தி. மு. க வினர் எதிர்பார்க்கிறார்கள்.

கடந்த தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளரான சேனாதிபதி கவுண்டர் வெற்றி பெற்றார். இத்தேர்தல் ஒரு சிக்கலானது. ஏனென்றால் தி. மு. க வேட்பாளர் வெற்றி அடைவாரேல் தனது அரசாங்கத்தில் தமிழ் தேசியவாதிகளை அடக்குவதற்கு ஜெயலலிதாவால் பாவிக்கப்படும் முக்கிய கருவியான தடாச்சட்டத்துக்கு எதிரான மையமாக மாறும். அதுவுமல்லாமல் இவ்வெற்றி,

1) ஈழக்கோரிக்கையின் அனுதாபிகள்,
2) விடுதலைப் புலிகளை வெளிப்படையாக ஆதரிப்போர்.
3) ஈழத் தமிழர்களை ''வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்புதலுக்கு'' எதிரானோர் (சென்ற ஆண்டு சிறிலங்காத் தமிழர்களை திருப்பி அனுப்புவதற்கு எதிராக சென்னையில் உள்ள அம்பத்தூர் என்னும் இடத்தில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்ட 56 பேரை ஜெயலலிதா அரசாங்கம் கைதுசெய்தது.)

ஆகிய இவர்களுக்கு சார்பான தமிழ் நாட்டிலுள்ள கட்சிகள் தனிநபர்கள் ஆகியோரின் நிலையில் அரசியல் ரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

தமிழ் நாட்டிலிருந்து அப்படியான கட்சிகளையும், தனி நபர்களையும் இல்லாது ஒழிக்க ஜெயலலிதா விரும்புகின்றார். தடாச் சட்டம் இருந்தும் கூட சட்டரீதியான தடைகள் இருப்பதன் காரணமாக இன்னும் அவர் தனது நோக்கத்தை அடைய முடியாதவராக இருக்கின்றார். தமிழ்நாட்டு தேசிய வாதத்தின் தீவிரவாத முனையை புலிகளைத் தடைசெய்வதென்ற ஒரே வழியினால் தான் அழிக்க முடியும் என்று அவரும் டெல்லியில் உள்ள நடுவன் அரசும் நம்புகிறார்கள். அவர்கள் எவ்வளவு தூரம் வெற்றி அடைவார்கள்? தமிழ் நாட்டில் கூடிய விற்பனையைக் கொண்டதும் இங்குள்ள தமிழர்களால் பரவலாக வாசிக்கப்படுவதுமான சென்றவார ஆனந்த விகடன் இதழில் ( 9. 03. 92) புலிகளின் தடையையே தனது அட்டைப்படக் கதையாக பிரசுரித்துள்ளது. அதில் வாழப்பாடி இராமமூர்த்தி, எம். பி. சிவஞானம், சோ. இராமசாமி, டாக்டர் இராமதாசு, பண்டுருட்டி இராமச்சந்திரன், பி. நெடுமாறன், முன்னைய காவல்துறை அதிபர் மோகனதாசு போன்றோரின் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த விடயம் பற்றி சில சட்ட வல்லுனர்களின் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளது. புலிகளை இந்திய மண்ணிலிருந்து ஒழிக்க வேண்டும் என்ற பொருளில் பெருமளவு சிக்கல் இருப்பதை இக்கருத்துகள் வெளிக்காட்டுகின்றன.

வாழப்பாடி இராமமூர்த்தி ''விடுதலைப் புலிகளுக்கும் அவர்களது சார்பானவர்களுக்கும் ராஜீவ் காந்தியின் கொலையுடன் தொடர்பு உண்டு என்பது நிறுவப்பட்டுள்ளது. ஆகவே இந்த இயக்கம் தடை செய்யப்பட வேண்டும். பிரபாகரனையும் பொட்டு அம்மானையும் கைதுசெய்து விசாரணை செய்ய வேண்டியது இந்தியாவின் தார்மீகக் கடமையாகும். இன்னொரு நாட்டில் தீவிரவாதம் வளர்ச்சியடைந்து வன்முறைக்கு வழிவகுக்குமானால் வேறொரு நாடு அத்தகைய நாட்டுக்குள் தனது படையை அனுப்புவது இப்போது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நடைமுறையாகும். உதாரணத்துக்கு அமெரிக்கப்படை பனாமா நாட்டுக்குள் சென்று நொறிகாவை கைது செய்யவில்லையா? பொட்டுஅம்மானையும் பிரபாகரனையும் தாக்கிக் கைதுசெய்வது சர்வதேச ஒழுங்குகளுக்கு அமைவதாக

இருக்கும். இதைச் செய்யாதுவிடில் தமிழ் நாட்டில் சச்சரவுகள் தீராது?

எம். பி. சிவஞானம்: ''சிறிலங்கா நாட்டிலே தமக்கென ஒரு அரசு வேண்டுமென்று கோரி அதை அடைவதற்கு வன்முறையில் ஈடுபட்டுவருவதால் விடுதலைப்புலிகளை தடைசெய்ய வேண்டும் என்பது சரியானதாகும். ஆனால் அது சிறிலங்கா நாட்டுக்குரிய சிக்கல். அவர்களை நாம் தடை செய்வதென்பது ஐயப்பாட்டுக்குரிய செய்தி. அது ஒரு சட்டப்பிரச்சினை. நாங்கள் உடனடியாகச் செய்யவேண்டியது யாதெனில் புலிகளுக்கு சார்பாக இங்குள்ள குழுக்களைத் தடைசெய்வதேயாகும்'' (இச் சந்தர்ப்பத்தில் எம். பி. சிவஞானம், ஐம்பதின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தை உள்ளடக்கிய சுதந்திரமானதும், இறைமையானதுமான ''பாரிய தமிழ்நாடு'' ஒன்றை அமைப்பதற்கான குறிக்கோளைக் கொண்ட ஒரு பிரிவினைக் கட்சியின் ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவராவார்.)

சோ. இராமசாமி ''நான் விடுதலைப் புலிகளை தடை செய்யவேண்டும் என்று நெடுங்காலமாகச் சொல்லிவருகின்றேன்.

இங்குள்ள சிலர், இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஒருவரை கொலை செய்த கும்பல் ஒன்றுக்கு சார்பாக பேசுகிறார்கள். இது சட்டதுக்குப் புறம்பானது. இக் கும்பலை (விடுதலைப் புலிகள்) தடை செய்தால் பின்னர் ஒருவரும் அவர்களுக்காக இங்கே பேசமுடியாது. அவர்களை புரப்பதும் (ஆதரிப்பதும்) அடைக்கலம் கொடுப்பதும் குற்றச் செயல் என்று பிரகடனப்படுத்தினால் அவர்களை நசுக்குவது காவல்துறையினருக்கு சுலபமாகிவிடும். எவ்வளவு விரைவில் தடைவிதிக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கு நாட்டுக்கு நன்மை ஏற்படும்''.

பண்டுருட்டி இராமச்சந்திரன் 'இந்தியாவின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எதிராக செயற்படும் ''தல்கல்சா'' போன்ற ஒரு அமைப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லாதபடியால் அவர்களை சட்டபூர்வமாகத் தடைசெய்ய முடியாது. அண்மையில் காவல்துறை உயர்வகுப்பு இரண்டாம் ஆண்டில் பயிலும் பையன் ஒருவன் உட்பட பன்னிரண்டு பேரை கைது செய்தார்கள். இந்தியாவிலிருந்து தமிழ் நாட்டை பிரிக்க எத்தனித்தார்கள் என்று அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. அவ்விதம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளினால் அச் செயலைச் செய்யத் தூண்டப்பட்டனர் என்று நிறுவப்பட்டால் சில வேளை தடைசெய்யலாம்.

பிரிவினைவாதம் மக்களின் பெருமளவு ஆதரவின்றி வளர முடியாது. அவ்விதநிலை தமிழ் நாட்டில் ஏற்படாது. தமிழ் நாட்டு அரசு தன் நாட்டில் உள்ள தமிழர்களின் நலன்களில் அக்கறை காட்டுவது அல்லாமல் உலகில் உள்ள தமிழர்கள் எல்லோருடைய நலன்களிலும் அக்கறை கொண்டதாக இருக்கவேண்டும். சிறிலங்காவிலுள்ள தமிழர்களை பாதுகாப்பதற்கு வழிவகை செய்யாது "நான் புலிகளை தடை செய்வேன்" என்று கூறுவது பெரிய மடமைத்தனமானது. அவ்வித மடமைத்தனமான நடவடிக்கைகளைச் செய்தால் எமது வருங்கால மன்பேராயம் (சமுதாயம்) தமிழர்களின் இனப்படுகொலைக்கு உதவியவர்கள் என்று எம்மீது பழி சுமத்தும்" பி. நெடுமாறன்; "பிரபாகரனும், விடுதலைப்புலிகளுக்கும் சி. பி. ஐ யினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். இது நீதிமன்றத்தில் நிறுவப்படவேண்டும். அதன் பின்னர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவேண்டும். இது செய்துமுடிந்த பின்னர் தான் குற்றவாளி யார் என்பதை எடுத்துக் கூறலாம். ஆனால் சி. பி. ஐ அவர்களை குற்றம் சாட்டிய உடனேயே முதலமைச்சரும் அவரது சகாக்களும் விடுதலைப் புலிகளைக் குற்றவாளியாகக் கண்டுசட்டத்தின் பெருமைக்குக் கரிபூசியுள்ளார்கள். குற்றம் சாட்டப்பட்டவருக்கும், குற்றவாளியாகக் காணப்பட்டவருக்கும் இடையிலான வேறுபாட்டை அறிந்துகொள்ள முடியாத பொறுப்பு வாய்ந்த கடமையைச் செய்யும் முதல் அமைச்சரின் இவ்வித கூற்றுக்கள் நீதிமன்ற நடவடிக்கைகளைக் கூட பாதிப்பவையாக அமையும். சி. பி. ஐ கபடமான அரசியல் நோக்கங்களுடன் மகாத்மாகாந்தியின் கொலை வழக்கில் வீரச் சவர்க்காரரை குற்றஞ் சாட்டியது. ஆனால் நீதிமன்றம் அவர் சுற்றவாளி எனக்கண்டது நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பை வழங்கும் முன்னரே "நாங்கள் புலிகளை தடை செய்வோம்" என்று கூறுவது ஒரு சனநாயக விரோதச் செயலாகும். இன்னொரு நாட்டில் செயல்படும் ஒரு அமைப்பை இந்திய அரசாங்கம் தடைசெய்வதற்கு ஒரு உரிமையும் இல்லை. இத்தடை மக்களைத் திசை திருப்புவதற்கான ஒரு கட்டுக்கதையாகும்.

டாக்டர் இராமதாசு (பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர்) "பலத்தீன விடுதலை இயக்கத்தையும், ஆபிரிக்க தேசிய காங்கிரசையும் இந்தியா அங்கீகரித்து அவர்களின் சார்பில் பேசுகிறது. யாசீர் அரபாத்தையும், நெல்சன் மண்டிலாவையும் கௌரவித்துள்ளது. சிறிலங்கா தமிழர்களின் சிக்கல் இவற்றிலும் பார்க்க வேறுபட்டது அல்ல. விடுதலைக்காக போராடி பல தற்கொலைகளை ஈழத்தமிழர் செய்து கொண்டிருக்கும் இவ் வேளையில் உணவு, மருந்துவகைகள், பெற்றோல், டீசல், போன்றவைகளை

அவர்களுக்கு அனுப்புவதில் ஒரு பிழையும் இல்லை. காயமடைந்த புலிகளை இங்கு வைத்து மருத்துவம் செய்வது தேசிய ஒற்றுமைக்கு இடராக அமையாது வேண்டுமென்று கொள்ள, ஆட்கடத்தல் போன்ற குற்றங்களைச் சுமத்தியும் ஒரு விசாரணையில்லாமல் ராஜீவின் கொலையை பிரபாகரன் தூண்டிவிட்டார் என்று கூறியும் புலிகளைத் தடைசெய்வது எவ்விதம் சரியானது என்று கூறலாம். தமிழ் நாட்டில் படித்த இளைஞர்கள், மாணவர்கள் நடுவில் புலிகளுக்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறதென்பதை ஒரு வாக்கெடுப்பின் மூலம் அவர்கள் அறிந்துகொள்ளலாம். அப்பொழுது உண்மை நிலை வெளியாகும். மோகனதாசு (எம். ஜி. ஆர். காலத்திலிருந்த முன்னாள் காவல்துறை அதிபர்) "புலிகளைத் தடைசெய்வது சரியான முடிவல்ல அவ்விதம் தடைசெய்தால் திருப்திகரமான முறையில் நடைமுறைப்படுத்த முடியாது. அதற்கு பல காரணங்கள் உண்டு. தமிழ் ஏதிலிகளுக்கும் புலிகளுக்கும் இடையில் வேறுபாடு காணமுடியாது. கடந்த ஒன்பது ஆண்டு காலத்தில் அவர்கள் தமிழ் நாட்டுடன் சரியாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர். புலிகள் மக்களுடன் கலந்துவிட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது கடினம். நாங்கள் எதைத் தடை செய்கிறோமோ அது எதிர் விளைவை உண்டாக்கும் என்று கண்டிருக்கிறோம். உதாரணமாக மதுபானத்தடையை எடுத்துக் கொள்ளுவோம். பெயரளவில் தடை என்று சொல்லிக் கொண்டு அதை முழு அளவில் நடைமுறைப்படுத்த முடியாமல் கடினப்படுகின்றோம்.

ஒரு சட்டவல்லுநர் (பெயர் தரப்படவில்லை) "பாலத்தீன விடுதலை இயக்கம் சர்வதேச ரீதியில் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. ஐ. நாவில் பார்வையாளர் நிலை அதற்கு உண்டு. அதை ஒரு காலத்தில் அமெரிக்க அரசாங்கம் தடை செய்திருந்தது. அது போலவே ஆப்கானிஸ்தானின் தீவிர அமைப்பொன்றை சோவியத் யூனியன் தடை செய்திருந்தது. இதைப்போல் நாங்களும் விடுதலைப் புலிகளைத் தடை செய்யலாம். இத்தடை மூலம் நாங்கள் எதையும் பெரிதாக சாதித்துவிட முடியாது." ஒரு பேராசிரியர்" (தமது பெயரை குறிப்பிட விரும்பவில்லை) இப்படியான சிக்கல்களுக்கு சட்டத்தில் தீர்வுகள் இல்லை. தீர்வு அரசியலிற்றான் காணப்படவேண்டும். அசாமில் உள்ள யூ. எல். எப். ஏ இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு எதிராகப் போராடுகிறது. அரசாங்கம் அதை ஒரு இயக்கமாக அங்கீகரித்து அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறது. (யூ. எல். எவ். ஏ ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பு) சிறிலங்கா அரசின் ஒருமைப்பாட்டிற்கு எதிராக போராடும் புலிகளை தடை செய்ய தீர்மானித்தால் அது

ஒரு அரசியல் தீர்மானம் ஆகும். தனது அரசியல் தீர்மானங்களுக்கு ஏற்ப சட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவது ஒரு அரசிற்கு கடினமான வேலையல்ல.

இது தமிழ்நாட்டின் பிரதான சஞ்சிகை ஒன்றில் வெளிவந்த பொதுக்கருத்துக்கள். புலிகளை 'உடனடியாக' தடை செய்வது பற்றி உள்ள மிகத் தீவிரவாதக் கருத்துக்கள் என்ன? புலிகளுடன் சேர்த்து ஜெயலலிதா தடை செய்யவிரும்பும் தமிழ்நாட்டின் இளைஞர் அமைப்பொன்றின் சஞ்சிகையான ''புதிய ஜனநாயகம்'' கீழ்வருமாறு கூறுகிறது. ''சி. பி. ஐ ராஜீவின் கொலையில் சிவராசனும், பிரபாகரனும் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்றும், அவரைக் கொலை செய்யும்படி பிரபாகரனே உத்தரவிட்டுள்ளாரென்றும் நிறுவுவதற்கான பொய்யான சான்றுகளை தயாரிப்பதில், ஈடுபட்டுள்ளனர். இப்பொழுது ஈழப்போராளிகளிடையேயும் அவர்களது அநுதாபிகளிடையேயும் பொய்யான ஒப்புதல் வாக்குமூலம் (அப்புறுவல்) கொடுக்கக் கூடியவர்களை சி. பி. ஐ பிரிவு தேடுகின்றது. தனது படையை சிறிலங்காவிற்குள் அனுப்பி பிரபாகரனை கைதுசெய்ய முடியாத பட்சத்தில் இரகசியப் படையை அனுப்புவது அல்லது முடியுமானால் இரு நாடுகளும் இணைந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவது போன்ற விடயங்களில் நடுவன் அரசும், தமிழ்நாட்டு அரசும் ஈடுபட்டு வருகின்றன. இதற்கான அடித்தள வேலைகளில் பிராமணீய பத்திரிகைகளான இந்து, தினமலர் போன்றவைகள் ஈடுபட்டுள்ளன. இந்திய இராணுவத்தின் ஈழம் மீதான ஆக்கிரமிப்பு தோல்வியிலும் அபகீர்த்தியிலும் முடிவுற்றது. அத்துடன் பிராமணீய பாசிசக் கும்பல் தனது தலைவரையும் (ராஜீவ்) இழந்தது. இன்னொரு முறை ஈழ ஆக்கிரமிப்பில் இறங்கினால் அதுவும் நம்பிக்கையாக ஒரு கேலிக்கூத்தாகவே முடியும். இந்தியாவில் விடுதலைப் புலிகள் தடைசெய்யப்படுவதும் அதை நடைமுறைப் படுத்துவதற்கான சட்டபூர்வ வழிவகைகளும் கட்டாயமாக தமிழ்நாட்டில் பெரும் பாதிப்பை உண்டாக்கும் என்பது மேற்கூறிய கருத்துக்களில் இருந்து விளங்குகிறது. அவ்வித தாக்கம் தமிழ் நாட்டு அரசியலிலும் பழநித்தொகுதி தேர்தலிலும் ஒரு சிறிய அளவினதாக இருந்தாலும்கூட விடுதலைப் புலியினர் பலம்வாய்ந்த தமிழ் தேசியவாத சக்தியாக உரு எடுப்பதற்கு எதிராக இந்தியா தனது அழுத்தத்தை இறுக்கமாக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் புதிய கூட்டமைப்பு ஈரானுக்கும் சூடானுக்கும் இடையே வளர்ந்துவரும் நட்புறவுகளையிட்டு ஐக்கிய அமெரிக்கா சந்தேகக் கண்களுடன் பார்க்கிறது

(நியூசுவீக்- 24.02.1992)

இந்த இரு நாடுகளின் நட்புபூர்வமான நடவடிக்கைகள் மற்றவர்களை அச்சுறுத்தக்கூடிய தொடக்க நடவடிக்கையா? சென்ற டிசம்பர் மாதம் ஈரானிய ஜனாதிபதி அலி அக்பர் கசாமி றவ்சாங்சனி ( Ali Akbar Hasheni Rafsanjani ) சூடான் நாட்டு இசுலாமிய அடிப்படைவாத அரசைக் கௌரவிக்கும் முகமாக அந்நாட்டுக்கு ஒரு பயணத்தை மேற்கொண்டார். ஆயிரத்துக்கு மேற்பட்ட புதுமணத்தம்பதியினருக்கு நடந்தேறிய விவாகச் சமயச் சடங்குகளில் கலந்துகொண்ட ஈரானிய ஜனாதிபதி அங்கு உரையாற்றும்போது சூடான் நாடு புரட்சிகர இசுலாமிய அடிப்படைவாதத்தைப் பின்பற்றுவதை பாராட்டிப் பேசினார். ஜனாதிபதி றவ்சாங்கனியுடன் அவருடைய பாதுகாப்பு அமைச்சர் புரட்சிப்படைத் தளபதி, புலனாய்வுத்துறைத் தலைவர் ஆகியோர் உட்பட 100 க்குமேற்பட்ட அரசியல் மேலாளர் வந்துள்ளனர். சிறியரக ஆயுதங்கள், சில பீரங்கிகள், தாங்கிகள், வாகனங்கள் ஆகியவற்றை ஈரான் சூடானுக்குக் கொடுத்துதவியுள்ளதாக மேல்நாட்டு இராசதந்திரிகள் கூறுகின்றனர். இந்த இரு நாடுகளும் வருங்காலத்தில் இராணுவ ஒத்துழைப்பில் ஈடுபடப்போகின்றன என்று கூறும் ஜனாதிபதி றவ்சாங்சனி, மேலைநாட்டு இராசதந்திரிகளின் கூற்றை உண்மைக்குப் புறம்பாகப் பேசும் சாத்தானின் கொள்கை பரப்புகை எனத்தூக்கி எறிந்து பேசினார்.

இந்த இரு நாடுகளுக்குமிடையே வளர்ந்துவரும் நட்புறவை அயல்நாடுகளுக்கு அச்சத்தை உண்டாக்கியதோடல்லாமல் வாசிங்டனையும் உசார் நிலையில் செய்துள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகள் கார்ட்டுமில்(Khavtoum)இருந்து ஆரம்பமானதெனத் தெரியவந்தால் அது பேரச்சம்தரும் பின்விளைவுகளை ஏற்படுத்தும் என றவ்சாங்சனியின் பயணத்துக்குச் சில நாட்களுக்கு முன் அமெரிக்க இராசாங்க அமைச்சு சூடானிய அரசாங்க மேலாளரை எச்சரித்துள்ளது. மேற்குலக நாடுகளின் ஆதரவாளராயி

ருந்த யபார் நிமேரி (*Jaafar Nimeiry*) 1985 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குப் பயணமொன்றை மேற்கொண்ட போது அவருடைய அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. அதுவரை சூடான் அமெரிக்காவின் நட்புறவு நாடாகவே இருந்து வந்தது எட்டு ஆண்டு உள்நாட்டுப் போரினால் சூடானில் பஞ்சம், பசி, பட்டினி ஆகியவற்றுடன் பொருளாதார வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இசுலாமிய அடிப்படைவாதிகள் 1989 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் அரசாங்கத்தைக் கைப்பற்றிய பின் ஆகக்குறைந்தது நான்கு சதிப்புரட்சிகளை அரசு அடக்க வேண்டி நேரிட்டது. அரசியல் எதிர்ப்பாளர்களை அரசாங்கம் சிறையிலடைத்து சித்திரவதை செய்து வருகின்றது. சென்ற ஆண்டு இசுலாமிய சட்டம் இந்த நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது இந்த இசுலாமியச் சட்டப்படி மது அருந்துபவர்களுக்கு நாற்பது சவுக்கடி வழங்கப்படும்.

இந்த ஈரான்— சூடான் கூட்டு மேற்குலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்குமா? இதைப்பற்றி இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாதிருக்கின்றது. கார்டும் அரசு, வளைகுடா போரின் போது ஈராக்கிய அதிபர் சதாம் குசேனுக்கு வழங்கிய ஆதரவினால் இந்த இரு நாடுகளிடையேயும் நட்புறவு மலர்ந்தது. ஈராக்கிற்கு சார்பாக இருந்தமையினால் குவைத்தினதும், சவுதி அரேபியாவினதும் சார்பை சூடான் இழந்தது லெபனானில் ஈரானின் செல்வாக்குக் குறைந்து வருவதனால், ஈரான் சூடானுடன் நட்புறவை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் உருவாகியது. ஈரானிலிருந்து இராணுவத் தளபாடங்களை இறக்குமதி செய்து இராணுவ மேம்பாட்டை ஏற்படுத்தி அயல்நாடுகளுக்கு அச்சுறுத்தலாக சூடான் இருக்கும் நிலை தற்போதைக்கு எழமாட்டாது. ஈராக்குடன் நடந்த எட்டு ஆண்டு போரின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையே தெகிரான் சூடானுக்கு கொடுத்துள்ளதாக அறிய வருகின்றது. தெருக்களைச் சீரமைப்பதற்குரிய உபகரணங்களையும், மலிவு விலையில் நிலநெய் வழங்குவதையும் மாத்திரமே பொருளாதார உதவியாக ஈரான் சூடானுக்கு வழங்கி வருகின்றது.

சென்ற மாதம் அல்யீரியாவில் நடந்த நிகழ்ச்சிகளினால் அராபிய நாடுகள் இன்றும் திகைப்படைந்த நிலையில் உள்ளன. இராணுவம் நடவடிக்கை எடுக்க முதல் இசுலாமிய அடிப்படைவாதிகள் அல்யீரியாவில் நடந்த தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளனர். இந்தத் தேர்தல் வெற்றி இந்தப் பிராந்தியத்தில் மக்களை அடக்கி ஆள்பவர்களையும், மென்போக்குடைய அரசி

யல்வாதிகளையும் சிந்திக்க வைத்துள்ளது. சனநாயக வழியில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை வீழ்த்தி அரசைக்கைப்பற்றிய சூடானிய இசுலாமிய அடிப்படைவாதிகள் மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் தங்கள் கோட்பாடு இந்தப் பிராந்தியம் முழுவதும் பரவுவதை ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

சூடானின் முன்னைய நண்பனானஎகிப்து தனது தெற்குபகுதி எல்லைப்புறப் பாதுகாப்பை பலப்படுத்தியதோடல்லாமல், தனது உள்நாட்டுவிடயங்களில் தலையிடுவதை சூடான்நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும்எச்சரிக்கை விடுத்துள்ளது.எகிப்திய சனாதிபதி கோஸ்னி முபாராக்(HosniM ubarak)சூடானின் இராணுவப் புரட்சிக் குழுவின் உபதலைவர் மேஜர் ஜெனரல் சுபைர் முகமட்சலேக்கு MaiGenZubairMuhammabsa'eh)ஈரானின் பிடிகளிலிருந்து விலகும் படி கோரியுள்ளார். அத்துடன் தேசிய இசுலாமிய முன்னணியின் NIF)செயலதிபரான மேலைநாட்டில் கல்விகற்ற கசன் அல் தூறபியோடுHassanAlLuradi)

உறவு வைக்காமல் தூரவிலகி நிற்கும்படியும்மேலும்கூறியுள்ளார். இந்தத் துறாபி பயங்கரவாதிகளை எகிப்துக்குள் செல்லத் தூண்டுவதாக சனாதிபதி முபாராக் அடிக்கடி கூறிவந்துள்ளார் சூடானுக்கு குறைந்தவிலையில் நிலநெய் வழங்கும் லிபியாவே சூடானின் நடவடிக்கைகளை வரவேற்கவில்லை இந்தப்பதவியில் இசுலாமிய அடிப்படைவாதம் வளரும் வேகத்தை கண்டு முகம்மது கடாபி பயன்படுகின்றார் என்று அமெரிக்க இராசாங்க அமைச்சரைச் சேர்ந்த மேலாளர் ஒருவர் கூறுகின்றார். ரியூனிசியா தனது தூதுவரைச் சூடானிலிருந்து திருப்பி அழைத்துள்ளது. ரியூனிசியாவின் இசுலாமிய அடிப்படைத் தீவிரவாதிகளின் அமைப்பின் தலைவரான சேக் றாசெட் அல் கனோச்சி (sheikrachebaI Ghanncuchi)க்குச் சூடான் இருமுறை இராசதந்திரக் கடவுச்சீட்டுக்களை வழங்கியதோடல்லாமல் அவருக்குப் போலி ஆவணங்களையும் கொடுத்து உதவியிருக்கின்றது.

## பயங்கரவாதிகளுக்கு ஆதரவு

சூடானுடன் நட்புறவு வைத்திருப்பவர்களையிட்டு வாசிங்டன் சூடானுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது ஈரானிய புலனாய்வுத்துறையினரும். புரட்சி இராணுவத்தினரும் மற்றவர்களுக்குத் தெரியாமல்பயங்கரவாதிகளுக்கு இரகசியங்களையும்இராணுவ நுணுக்கங்களையும்அத்துடன் அவர்களுக்குத்தேவைப்படும் உதவிகளையும் சூடானிலிருந்து செய்ய முடியும் என அமெரிக்கப் பகுப்பாளர் ஒரு

வர் கூறுகின்றார்.லிபியாவிலும்'சிரியாவின் கட்டுப்பாட்டிலுள்ள லெபனானிலும் இதுவரை காலமும் இருந்துவந்த பலத்தீன அடிப்படை வாதிகளையும் இசுலாமிய தீவிரவாதிகளையும் டமாசுக சும்திரிப் பொலியும் மேற்குலகநாடுகளின் நன்மதிப்பைப் பெறும் வகையில் வெளியேற்றியுள்ளன.இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதுடன்சகலவித உதவிகளையும் சூடான் செய்து வருகிறதென.வேறு சில இராசதந்திரிகள் சந்தேகிக்கின்றனர். இதை.ஒரு மடைத்தனமான பேச்சு என்கிறார் சூடானின்தலைவர் அல் துறாபிAlTurabi) இங்குள்ள இராசதந்திர வட்டாரங்கள் சான்றிலாச் செய்திகளை நம்புவதால் சூடானுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் கூறினார்.

தேசிய இசுலாமிய முன்னணியினரின் பயிற்சி தங்ககம் ஒன்றைச் சூடானியக் காவல்துறை சென்ற ஆண்டு தற்செயலாகக் கண்டுபிடித்தது. இந்த முகாமில் பலத்தீனியர், சூடானியர், எகிப்தியர் ஆகியோர் அடங்கியிருந்தனர். இவர்களிடம் ஆயுதங்களும், வெளிநாட்டுப் பணமும் இருக்கக் காணப்பட்டது. "இவர்கள் ஒன்றுமறியாதவர்கள். இவர்கள் ஆப்கானிஸ்தானின் இசுலாமிய முசாகுதீன் போராளிகளுடன் சேர இருந்தவர்கள்' இவர்கள் பின்னர் நாடுகடத்தப்பட்டனர்!! என்கிறார் அல்துறாபி அவர்கள். அத்துடன் 'இது ஒரு அமைதியான நாடு' என அவர் மேலும் கூறுகின்றார். அல்துறாபி தனது வாக்கைக் காப்பாற்றுவாரா என அமெரிக்காவும் அதனது நட்பு நாடுகளும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றன.

# மக்களின் உள்ளங்களைக் கவரும் அதேவேளையில் இராணுவ நடவடிக்கை. வவுனியாவில் ஜெனரல் கொப்பகடுவா அவர்களை எமது நிருபர்கள் சந்தித்தபோது அவர் கூறியவற்றில் சில

ஒப்சேவர்–(08. 03. 1992)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆரம்பித்திய இராணுவ நடவடிக்கையான மூன்றாவது வன்னிவிக்ரம்(Wanni Wickrama iii) இராணுவ நடவடிக்கையில் இப்போது இராணுவம் ஈடுபட்டுள்ளது. அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட ரீ 85 (85) ரக வாகனங்களின் துணையுடன் சமர் புரிவதற்குக் காலாட்படையினர் பழக்கப்பட்டு வருகின்றனர். தங்களது மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் இன்றுவரை விக்கி, பூட்டோ என அழைக்கப்பட்டு வரும் விடுதலைப் புலிகளின் தளங்களை இராணுவம் கைப்பற்றியுள்ளது. அத்துடன் அவர்களுடைய வழங்கல் தளமொன்றையும் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளார்கள். வன்னியிலுள்ள இராணுவத்தை வழிநடத்தும் வடபிராந்தியத் தளபதியாகிய ஜெனரல் டென்சில் கொப்பகடுவா படையினர் வன்னியில் அடைந்த முன்னேற்றத்தை எமது நிருபருக்கு சமர் நடந்த பகுதியில் வைத்தே கூறினார்.

கேள்வி:- படையினர் தற்பொழுது வவுனியாவில் எதில் ஈடுபட்டுள்ளனர் என்பதை உங்களால் விளக்க முடியுமா?

பதில்:- ஒரு பகுதியை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. அவற்றில் இந்திய அமைதிகாக்கும் படை செய்தது போல் ஒரு பிரதேசத்திற்குள் ஊடுருவிச் சென்று முகாம்களை அமைத்து அந்த முகாம்களைத் தளங்களாக்கி அவைகளிலிருந்து கட்டுப்பாட்டை ஏற்படுத்துதல் ஒரு வழியாகும். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகாத வகையில் பாதுகாப்பு எல்லை ஒன்றை உருவாக்குவது இரண்டாவது வழியாகும்.

மறுபுறத்தில் கூறுவதாகில் பாதுகாப்பு எல்லைக்குப் பின்னால் இருந்து அல்லது அதைக் கடந்து வந்த விடுதலைப்புலிகளோ அல்லது வேறு யாரோ தாக்குதலில் ஈடுபடமுடியாது. விடுதலைப்புலி உறுப்பினர் என இனங்காணமுடியாத ஒருவர் அந்தப் பிரதேசத்திற்குள் வரமுடியும். ஒருவர் கண்ணிவெடியையோ, குண்டையோ வைத்துவிட்டுப் போக முடியும். அதை இங்கு மட்டுமல்ல இலங்கையின் எந்தப்பாகத்திலும் செய்ய முடியும். ஆனால் பயங்காரவாதிகள் நேரடியாகச் சண்டை செய்ய முடியாது. விடுதலைப் புலிகள் பெரும் எண்ணிக்கையில் வரப்போவதில்லை என்பதால் பாதைகளைப் பற்றி நாங்கள் அக்கறை கொள்ளத் தேவையில்லை. வெறுமனே இரண்டு அல்லது மூன்று இராணுவத்தினரை அனுப்பினால் போதுமானது. இது ஒரு சிறிய நடவடிக்கையாகும்.

கேள்வி:- யாழ்ப்பாணத் தீவுக்கூட்டங்களிலும் இப்படியான பாதுகாப்பு எல்லைகள் உருவாக்கப்பட்டுள்ளனவா?

பதில்:- இல்லை. இப்படியான பாதுகாப்பு எல்லைகள் அத்தீவுக் கூட்டங்களில் இல்லை. அங்கு அவதானிப்பு நிலையங்கள், கரையோரக் கண்காணிப்பு நிலையங்கள், பலம் வாய்ந்த அரண்கள் எங்களுக்குள்ளதால் பயங்கரவாதிகள் தீவுக்கூட்டங்களை நெருங்கமுடியாதுள்ளனர்.

கேள்வி;- எச்சந்தர்ப்பதிலும் அவர்கள் உட்புகமாட்டார்களா?

பதில்:- மற்றவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் இரவில் உட்புக முடியும். அப்படி அவர்கள் உட்புகுந்தால், எந்தப் பகுதிக்குள்ளும் எங்களால் விரைவாகச் செல்ல முடியுமென்பதாலும், கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருப்பதாலும், அவர்களால் இலகுவில் வெளியே சென்றுவிட முடியாது, எங்களுடைய தீவிர கண்காணிப்பின் காரணமாகப் பயங்கரவாதிகளைத் தீவுகளுக்கப்பால் வைத்திருக்க முடிகின்றது.

## பாதுகாப்பு அரண்.

கேள்வி:- உங்களுடைய பாதுகாப்பரண்கள் தகர்க்கமுடியாதவையா?

பதில்:- பாதுகாப்பு அரணைத்தாக்கலாம் ஆனால் உட்புகமுடியாது. அவர்கள் அப்படித் தாக்கினால் எந்த இடத்திலும் சந்திக்க நாம் தயார் நிலையில் உள்ளோம். முன்பு ஏற்படுத்தியது போல் இப்பொழுதும் அவர்களால் எங்களுக்கு இழப்புக்களை ஏற்படுத்தமுடியும். அவர்கள் சில பாதுகாப்பரண்களை முன்னர் தாக்கியிருந்த போதும் பாதுகாப்பு எல்லையை அவர்களால் தாண்ட முடியவில்லை. அவர்கள் சுமார் முப்பது யார் வரை பாதுகாப்பு எல்லைக்குள் முன்னேறிய நேரத்தில் இராணுவத்தைப் பலப்படுத்த மேலதிக துருப்புக்கள் அனுப்பப்பட்ட பொழுது, தங்களில் இறந்தவர்களையும் தூக்கிக் கொண்டு சென்றுவிட்டார்கள், இப்படி இரண்டு மூன்று நிகழ்ச்சிகள் நடந்துள்ளன.

கேள்வி:- பாதுகாப்பு எல்லையிலிருந்து எப்படி முன்னேறுகிறீர்கள்? பின்பு அங்கிருந்து எப்படி முன்னேறுகின்றீர்கள்?

பதில்-: பாதுகாப்பு எல்லையைக் கூடுதலாக மக்கள் வாழும் இடங்கள் வரையிலும் விவசாயம் செய்யும் இடங்கள் வரையிலும் மாத்திரம் விரிவாக்கமுடியும். பாதுகாப்பு எல்லையில் கூடுதலான படையினரை வைத்திருக்க நாம் விரும்பவில்லை. ஒரு பகுதியில் சாதாரண நிலையை ஏற்படுத்திய பின் நாங்கள் அவ்விடத்தை விட்டுச்செல்வோம். அப்பகுதிக்குள் விடுதலைப்புலிகள் மீண்டும் வருவார்களாயின் நாம் திரும்பி வந்து அவர்களைத் தாக்குவோம். இப்பகுதிகளில் என்ன நடக்கின்றன என்பதைப்பற்றிப் போதுமான தகவல்கள் தற்பொழுது வந்துகொண்டிருக்கின்றன. வவுனியாவுக்கு மேற்குப் பக்கத்திலுள்ள விவசாயிகள் நாங்கள் எங்களுடைய முன்னிலைப் பாதுகாப்பரணை விரிவாக்குகின்றோம் என நினைத்தார்கள். நாங்கள் அப்படிச் செய்யாததால் அவர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள். இதைக்

கொண்டு எதிர்காலத்தில் நாங்கள் அங்கு செல்லமாட்டோம் எனக்கருதமுடியாது.

## பலப்படுத்தத் தேவைப்படும் மேலதிக படைகள்

கேள்வி:- விரிவாக்குவதே உங்கள் நோக்கம் எனக் கொழும்பில் பேசப்படுகிறதே?

பதில்:- இது அதன் ஒரு பகுதி என நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம். இந்த இடத்துக்கு முன்னர் நாங்கள் சென்றிருந்தபோதும் நாங்களாகவே இந்த இடத்தைவிட்டு விலகிச் சென்றோம். விடுதலைப்புலிகள் இங்குவந்து தங்ககம் (முகாம்) அமைப்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஒருசில தங்ககங்கள் இருக்கின்றன என்பதும் எமக்குத்தெரியும். சாஸ்திரி கூழாங் குளத்திற்கு அப்பாலுள்ள விடுதலைப்புலிகளின் விக்கி தங்ககத்தை சற்று முன் கைப்பற்றியுள்ளோம்.

கேள்வி:- உங்கள் பாதுகாப்பு எல்லையிலிருந்து அது எவ்வளவு தூரத்தில் உள்ளது?

பதில்:- ஐந்து கிலோ மீற்றர்களுக்கு அப்பால்.

கேள்வி:- சாத்திரி கூழாங்குளத்துக்கு நீங்கள் முன்பு சென்றிருக்கிறீர்களா?

பதில்:- ஆம், சாஸ்திரி கூழாங்குளத்துக்கு முன்பு நாம் சென்றிருந்த போதும் விக்கி தங்ககத்திற்கு சென்றிருக்கவில்லை. உண்மையாகவே நாம் கூடுதலான தகவல்களைப் பெற முயல்கிறோம். நாம் இப்பொழுதிலிருந்து எல்லாவற்றையும் ஒன்று திரட்டி விக்கி தங்ககத்திலிருந்து தகவல்களை அறிந்து கொள்வதற்காக பிற்பகலில் இருள் பரவுமுன் ஒரு தேடுதலை நடாத்தவுள்ளோம். இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் மீட்பதற்கு வந்த விடுதலைப் புலிகள் எறிகணை மற்றும் விமானப்படைத் தாக்குதல்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

கேள்வி:- உண்மையிலே பார்க்கும்பொழுது உங்கள் நடவடிக்கையானது முன்னேறுவதும் அதன்பின் திரும்பி வருவதும் தானா?

பதில்:- படைகளை பின்நோக்கி நகர்த்தும்படி நான்கூறவில்லை, பின்பு விரிவாக்குவதற்குமாக முன்னுக்குள்ள பிரதேசங் களை எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே முன்னணிப் பாதுகாப்பு அமைப்பதன் நோக்கமாகும். நாங்கள் செய்யப்போகின்ற விரிவாக்கத்தைநீங்கள் பின்பு பார்ப்பீர்கள். எங்கள் பாதுகாப்பு எல்லைகளைவிரிவு படுத்துவது கடினமானவிடயமல்ல.நாம் சின்னத்தம் பனைக்குச் சென்றுஅதைக்கடந்து குள்ளியங்குளத்துக்குச் சென்று துருப்புக்களை அங்கு நிலைகொள்ளச்செய்ய மூன்று நாட்கள் போதுமானது. அது ஒரு சுலபமான விட யமாகும். ஆனால் உண்மையாக நிலைகொண்டிருப்ப பதற்குமேற்கொள்ள வேண்டியநடவடிக்கைகளைச் செய் து முடிப்பதற்கு அதிக காலம் எடுக்கும் நிலப்பரப்பு மிகப் பெரிதாக இருப்பதால் இந்நடவடிக்கைகளை மேற்கொள் ளமுடியாது நிலப்பரப்பைக் கைப்பற்றி அதைப்பாதுகாப் திலும் படைகளைத் தாக்குதல் நிலையில் வைத்திருப்பது நல்லது என நான் நினைக்கிறேன்,

கேள்வி:- கடைசியாக உங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கையின் போது நடந்ததென்ன?

பதில்:- கடைசியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது அவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள், என்ன செய்கி றார்கள் என்பதை நாம் அவதானித்து வந்தோம் இன்று மேற்கொண்டதுபோல் மேலும் உட்சென்று நடவடிக்கை களைமேற்கொள்ளக்கூடிய சில பகுதிகள் இருக்கின்றன ஒரே மாதிரியான நடவடிக்கையாக இருந்தபோதிலும் இம்முறை அவர்கள் எங்களை பக்கவாட்டில் தாக்குவார் கள். என நாம் எதிர்பார்த்த பொழுது அவர்கள் அப்படி யே தாக்கினார்கள். ஆகையால் வடக்கு திசையில் விடுத லைப்புலிகளுக்கு ஒரு தங்ககம்இருக்கிறதெனஎங்களுக்குக் கிடைத்த தகவல் சரியானதாக இருந்தது,கடைசி தாக்கு தலில் எங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெறுவ தில் வெற்றி கண்டுள்ளோம்.

## பல காரணிகள்

கேள்வி:- எத்தனை புலிகள் இந்தப் பிரதேசத்தில் இந்த நடவ டிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளார்கள் என நினைக் கிறீர்கள்?

பதில்:- இதைப்பற்றி விமர்சிப்பதற்கில்லை. வேண்டுமாகில் இதை நான் பின்பு கூறுகின்றேன். இப்பொழுது கூற மாட்டேன்.

கேள்வி:- இன்றைய நடவடிக்கையின் போதும் சென்ற இரு நாளைய நடவடிக்கைகளின் போதும் ஒரே விடயம் தான் நடந்துகொண்டிருக்கின்றதா?

பதில்:- ஆம்.

கேள்வி:- பத்திரிகைகளில் கூறப்படுவது போல் உண்மையாகவே நீங்கள் யாழ்ப்பாணத்தின் மேல் நடவடிக்கை எடுக்க இருக்கின்றீர்களா?

பதில்:- என்ன செய்யப்போகின்றோம். எதை எங்கே செய்யப் போகின்றோம் என்பவற்றை உங்களுக்கு என்னால் கூற முடியாது இருப்பினும் நாங்கள் இப்பொழுது நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் முன்னிலைப் பாதுகாப்பெல்லையின் வடக்கே வடக்கிலுள்ள யாழ்ப்பாணமோ, மன்னாரோ, முல்லைத்தீவோ என்ற தகவலை இராணுவ மேலாளரான என்னிடமிருந்தோ அல்லது அரசாங்கத்திடமிருந்தோ பெறமுடியாதுமல்லாமல் இதைப்பற்றி எவரும் பேசவும் மாட்டார்கள். தற்போது நிலவும் அரசியல் போக்கை வெளிக்காட்டும் நோக்கில் நாம் மேற்கொள்ளப்போவதைப் பொதுவான முறையில் அவர்கள் கூறியபோதும் இதற்கான உண்மையான பதிலை எதிர்பார்க்கமுடியாது. உண்மையிலேயே நாங்கள் எடுக்கும் நடவடிக்கையைப்பற்றி நான் கூறமுடியாது.

கேள்வி:- பாதுகாப்பு எல்லைக்குப் பின்னால் உள்ள பிரதேசங்களை வளர்ச்சி அடையச் செய்வதற்கு எவ்வளவு காலமென எண்ணுகிறீர்கள்?

பதில்:- இதை நிறைவேற்றுவதாகில் பல விடயங்கள் செய்து முடிக்கப்படவேண்டும். தேவையான நிதியைப் பெற வேண்டியிருப்பதுடன், மற்றத் தேவையான மூலவளங்களும் கிடைக்கப்பெற்று மக்களும் இங்குவந்து தங்களுடைய வீடுகளை மீளமைப்புச் செய்யவேண்டும். மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான பொருளாதார மேம்பாட்டை அவர்கள் அடையத்தக்க வகையில் அவர்களுக்கு

மறு வாழ்வை நாங்கள் அளித்தல்வேண்டும். தங்கள் பொருளாதார மேம்பாட்டுக்கு மீன்பிடித் தொழிலையே நம்பி வாழும் மன்னார்த்தீவு மக்கள் அழிக்கப்பட்டுள்ள தங்கள் படகுகள் போன்ற பொருட்களையேவிரும்புகின்றார்கள்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளுக்குத் தேவையான உதவிகளை அமைச்சுகள் வழங்கிவருகின்றபோதும், இந்தவிடயங்கள் யாவற்றையும் கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளது. ஒரு தெருவை அமைக்க எவ்வளவு காலம் செல்லும்? நீண்ட காலம் எடுக்கும் தற்பொழுது கொடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய யாவும் நடந்தேறும் என நான் நினைக்கவில்லை. இந்தப் பிரதேசத்தை மறுசீரமைக்க உண்மையாக எவ்வளவு காலம் எடுக்கும் என நாங்கள் அறியத்தக்க விதத்தில் பணிப்புரைகள் தரப்படுவது நல்லது.

கேள்வி:- நெலுங்குளத்தில் இதை மேற்கொள்வதற்கு ஏன் இவ்வளவு காலம் சென்றது?

பதில்:- டிசம்பர் மாதத்திலேயே இது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்துக்கு வந்தது. இங்கேஒருவேளை விடுதலைப் புலிகள் இல்லாதிருந்தாலும் கூட டிசம்பரிலேயே இது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசமாக வந்ததைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் இந்த இடத்து மக்களைத் திரும்ப இங்கு வரச்செய்து புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்கவேண்டியதாயிருந்தது. ஆகவே கட்டிடவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத இடங்களிலும் கிராமங்கள் இயங்குகின்றன. வடமாகாணத்தின் எல்லாப் பாகங்களிலும் கிராமங்கள் இயங்குகின்றன. இதைக் கொண்டு நிலைமை சீராக வந்துள்ளதாகக் கருத முடியாது. கட்டிடங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் வவுனியாவில் கூடுதலாக இருக்கின்றன. நெலுங்குளப் பாதையிலுள்ள பல கட்டிடங்கள் சேதப்பட்டுள்ளன. இவை 1985லேயே சேதப்படுத்தப்பட்டவை. இப்பொழுது அங்கு மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி:- நெலுங்குள அகதிமுகாமிலுள்ள அகதி ஒருவர், தாங்கள் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளாரே?

பதில்:- அப்படியான நிலை தற்காலிகமாக இருந்தது. அவர்கள் தங்கள் வயல்களுக்குச் செல்லலாம் ஆனால் தங்கள் வீடுகளுக்குச் செல்லமுடியாது. மடுவிலிருந்து ஏதிலிகளாகப் பெருந்தொகையான மக்கள் இந்த முகாமுக்கு வருகின்றார்கள். ஆகையால் நீங்கள் சொல்வதை நான் ஏற்க முடியாது.

கேள்வி:- இராணுவத் தாக்குதல்கள் இடம்பெறும்பொழுது அரசியல் தீர்வு எப்படி ஏற்படும் என நினைக்கிறீர்கள்?

பதில்:- அதை நீங்கள் அரசாங்கத்தையே கேட்கவேண்டும். அரசாங்கத்தின் தீர்மானத்தையே நாம் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

கேள்வி:- அரசாங்கம் போரை நிறுத்தும்படி கேட்டவேளைகளில் நீங்கள் அதை நிறுத்தினீர்கள். இப்பொழுதும் நீங்கள் அதைச் செய்வீர்களா?

பதில்:- அரசாங்கத்தின் தீர்மானம் என்றால் அரசாங்கத்தின் தீர்மானமே ஆகும். இது எங்கள் நாட்டின் அரசாங்கம் என்பதனால் அதன் கட்டளைக்கு நாங்கள் கீழ்ப்படிய வேண்டும்.

கேள்வி:- தற்பொழுது நீங்கள் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கை என்ன?

பதில்:- தாக்குதல் நடவடிக்கையான மூன்றாவது வன்னி விக்கிரம் ஆகும்.

## சாதாரண போர்த்தந்திரம்

கேள்வி:- மக்களின் உள்ளங்களையும், இதயங்களையும் கவரும் நடவடிக்கை எனக்கூறுகின்றீர்களே, அதை உங்களால் விளக்க முடியுமா?

பதில்;- இது ஒரு சாதாரணமான தந்திரமாகும். இராணுவ ரீதியாக விடுதலைப்புலிகளுடன் போரிட்டுஅவர்களை அழிப்பதும் அதே நேரத்தில் அவர்களை வெளிக் கொணர நெருக்குதல் கொடுப்பதும் ஒரு வழியாகும். விடுதலைப்

புலிகளின் நடவடிக்கைகள் எதிலும் தொடர்பில்லாத குற்றமற்ற பொதுமக்களின் உள்ளங்களை யும் கவர்வது அடுத்த வழியாகும். விடுதலைப் புலிகளே பலம் வாய்ந்த வர்களெனவும், அவர்கள் மாத்திரமே தமிழ் மக்களுடைய பாதுகாவலர்கள் எனவும் நம்பவைக்கப்பட்ட மக்களும், ஆதரவாளர்களும் இருக்கக்கூடும். எங்களையும் அரசாங் கத்தையும் மக்கள் விரும்பத்தக்கவகையில் அவர்களுக்கு ஆகக் குறைந்த இழப்புகளே இருக்கத்தக்கவகையில் நட வடிக்கை எடுக்கவேண்டி இருக்கின்றது. பொதுமக்கள் பாதிக்கப்படுவார்களேயானால் முன்னேறுவதைவிட்டு பின்வாங்குவது உதாரணத்துக்கு ஒரு தெரு தடை செய் யப்பட்டிருக்கும் வேளையில் அங்குள்ள ஒரு இராணுவ வீரன் மக்களுடன் பேசும் முறை அவர்களது உள்ளத்தைக் கவரத்தக்கதாயிருத்தல் வேண்டும். போர்முனையில் காயப் பட்டவர்களுக்கு மருத்துவம் செய்வதிலிருந் துதெருவைத் தடை செய்பவர்கள்வரையில் உள்ளவர்கள் மக்களின் உள்ளங்களையும் கவரத்தக்கவகையில் பரந்துபட்டதாய் இரு கருத்தில் இருக்கவேண்டும், பொது மக்களுடைய நல் வாழ்வை உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக்கட்டமைப்பை உருவாக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும், மக்களைப்பராமரிக்கஅரசாங்கம் இருக்கின்றது. முன்பு எங்களைக் கண்டபோதெல்லாம் பொதுமக்கள் தங்களுடைய கைகளை மேலே உயர்த்தினார்கள். நீங் கள் உங்களுடைய கைகளை உயர்த்த வேண்டாம் உங்கள் நாளாந்தக் கடமைகளைச் செய்யுங்கள் என நாங்கள் அவர்களுக்குக் கூறியுள்ளோம். விடுதலைப் புலிகள் இல்லாதது அங்கு சுமுகநிலை நிலவுவதைக் காட்டுகின் றது. ஆகையால் அவர்கள் தங்களது நாளாந்தக் கருமங்களில் ஈடுபட்டிருந்தார்கள். நாங்களும் அவர்க ளுக்கு ஒரு தீங்கும் இழைக்காது அந்த இடங்களுக்குச் சென்று வந்தோம்.

# ஐக்கிய அமெரிக்கா இப்போது உலகின் முன்னணி கருவி (ஆயுத) விற்பனையாளர்

*பிரெடெரிக் கிலோயாமொன்ட் - ஐலண்ட் 31.03.92*

வளிப்போரின் முடிவு அமெரிக்கா உலகளாவிய முன்னணி கருவி (ஆயுத) விற்பனையாளராவதற்கு உதவியுள்ளது. 1991இல் அமெரிக்க கருவி விற்பனை என்றுமில்லாத சாதனையான 33பில்லியன் டொலரை எட்டியுள்ளது. இதில் கணிசமான விற்பனை மேற்காசியாவிற்கே. அங்கு வளைகுடா போரின் போது இடம்பெற்ற அழிவு விவரிக்க முடியாதது ஊழிக்காலத்தை நினைவு கூர வைக்கக் கூடியது.

1945 முதல் மூன்றாம் உலக நாடுகளிலே 125 சமர்களில் பலகோடி மக்கள் இறந்துள்ளனர். அதில் முக்கால் வாசிப்பேர் நேரடியாக சமரில் ஈடுபடாதோர்கள். இந்த வகையில் அண்மையில் நடந்த செரபி— குரோசிய சமர் படுகொலைகளும் அடங்கும்.

போர்கள் மரபுவழி கலன்களுடன் நடைபெறுகின்றது பண்டமாற்றுக்கோ பணத்திற்கோ இருகடும் போட்டியிடும் எதிரணிகளிடம் இவை வாங்கப்படுகின்றன இவ்வணிகள் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளும் கட்டுப்படுத்தும் செயலுரிமை பொருளாதாரங்களுமாகும் (Admino Command Economies) எண்பதுகளில் உலகளாவிய ஆயுத செலவினங்கள் சுமார் நூறாயிரங்கோடி டாலர்களை எட்டியது. இவ்வருடாந்த தொகையின்படி ஒரு நிமிடத்திற்கு 20 இலட்சம் டாலர்கள் முதலாளித்துவ அதிகார வர்க்க ஏகபோகங்களுக்கு பெரிய கொண்டாட்டம் தான்.

இப்பெருந் தொகைகள் 1991 இல் சற்று குறையத் தொடங்கினாலும் இக்குறைவு முக்கியத்துவமான சர்வதேச சாவு வணிகர்களால் ஒருவரான (International Death Merchants) முன் நாள் சோவியத் அமைப்பின் வெளியேற்றம் காரணமாகும். அதனுடைய இடத்தை மற்றவர்கள் எடுப்பார்கள் இப்பொழுதே அமெரிக்கா மாபெரும் வழிநடத்துநராக அக்கும்பலின் முன்னணியில் செயல்படுகிறது ரீகனால் ''துட்ட பேரரசு எனக்கருதப்பட்ட ருசியாவின் இழந்த சந்தைப்பங்கு சர்வதேச ஆயுதவிருந்தில் உரிமை பெற்ற நரிகளான பிரான்சையும் ஜேர்மனியையும் பாதிக்கக்கூடிய விதத்தில் தாக்கத்தை உருவாக்கும்.

பெற்றோலிய வளங்கள் காரணத்தாலும் தங்களிடையே இயற்கையாகவேயுள்ள போட்டி மனப்பான்மை சார்ந்த அதிகார வர்க்கங்கள் முரண்படுதலும் வெளியார்களின் உந்துதலும், மூன்றாம் உலக நாடுகளில் மத்திய கிழக்கு சர்வதேச சாவு வணிகர்களின் மையமாக விளங்குகிறது. மூன்றாம் உலக நாடுகளில் இடம்பெறும் கொடூரங்களில் மத்திய கிழக்கு பிரதேசம் தவிர்க்க முடியாத ஓர் 'எரிமலையாக' விளங்குகிறது.

புஸ்சின் போரில் 85, 000 துருப்புக்கள் 90, 000 அணுவாயுதமல்லாத, மரபுவழி ஆயுதங்களால் ஈராக்கையும், குவைத்தையும் பொழிந்து தள்ளினார்கள். போரின் போது பென்டகனால் கூறிவரப்பட்ட சிறிய தாக்கம் கடுமையான தாக்கம் என்ற போலியான பாகுபாடு கண்மூடி திறப்பதற்குள் சிதறடிக்கப்பட்டது. கட்டுப்பாடற்ற முறையில் இச்சாவு இயந்திரங்கள் பிரயோகிக்கப்பட்டமை மைக்கேல் கிலேயர் கூறுவது போல், ஐந்து கிரோசிமாக்களுக்கு சமமான அழிவை உண்டாக்கின;

சி. என். என் (CNN) அமைப்பு அத்துடன் போட்டியிடும் ஏனைய அமைப்புகளும் புச்சின் கூட்டணியின் புகழ்களை அழகாக விபரித்தமை கோடிக்கணக்கானோரின் வீடுகளுக்கு எல்லோருக்கும் பழக்கப்பட்ட இராணுவ வன்முறைகளை எடுத்துக்காட்டின. அவைகளில் ரொமர்கோர்க்(Tomahawk) ஏவுகணைகள், லேசரால் உந்தப்படும் குண்டுகள் சுப்பர் பி 52 (Super B52) விமானங்களின் பெரிய வயிற்றுக்குள் புகுத்தப்பட இயலாத அளவிற்கு பெரிதான மேகா (Mega) வானில் வெடிக்கும் குண்டுகள் அடங்கும்.

நியூயோர்க்கில் நடைபெற்ற வெற்றி விழா அணிவகுப்பில் பங்குபற்றிய ஒருவர் கூறுகிறார். ''ஓ மனிதா எல்லாம் வெற்றியே? ''கலேசாயா'' உண்மைதான். மத்திய கிழக்கில் நடைபெறும் போரின் தன்மை திரும்பவும் ஒரு போதும் இப்படி இருக்கமாட்டாது. இது ஒரு சகாப்தத்தின் முடிவையும், தனது சந்தைப்படுத்தும் ஆற்றலுக்கும் திறமைக்கும் மேலாதிக்கத்திற்கும் எதிராக ஒருவருக்கும் ஒப்புதல் தரமாட்டேன் என்ற ஒரு புதிய அழிவுகாரன் தோன்றுகிறான் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இது இன்னொரு வியட்நாம் ஆகாது. 1990 நவம்பர் 30இல் புசு குதூகலத்துடன் ''ஒரு போர் வீரன் சமருக்கு செல்ல வேண்டி ஏற்பட்டால் அந்தப்போர்வீரனுக்கு சமரைவெல்வதற்கு தேவையான ஆற்றல் அவர் பின்னால் இருக்கும் ...... நான் ஒரு

போதும், எப்பவேனும் ஓர்அரைகுறையான செயற்பாட்டிற்கு ஒப்பேன்'' 135,000 பேர் இறந்தமை அவர் கூற்றை நிரூபித்து. அவர் ஒரு லின்டன்- யோஹ்ன்சன் ஆகவோ சுவாஸ் கோவ் இன்னொரு வெசுட்மோர்லன்ட் ஆகவோ மாட்டார்கள் என்று காட்டியது. வியட்நாம் தோல்வி மனப்பான்மை அழிக்கப்பட்டது. அதனால் ஏற்பட்ட படிப்பனை ஒருபோதும் மறக்கப்படமாட்டாது.

மறுபக்கமாக பார்க்கும் போது, நாம் இதுவரை கண்டதோ படித்ததோ ஈராக்குக்கு ஏற்பட்டுள்ள இவ்வகையானஅழிவு ஏற்படு மென்று எதிர்பார்க்குமளவுக்கு எம்மைத் தயார் செய்ய வில்லை. இவ்வாறு 1991 மார்ச் 21இல் ஐ. நா பார்வையாளர் குழுமனவருத்தத்துடன் கூறியது. 1991 சனவரி வரை இயந்திரமயப்படுத்தப்பட்ட உயர்ந்த நகரப்புறச் சூழலைக் கொண்ட கட்டமைப்பிற்கு அண்மையில் நடந்த போர் முழுமையான அழிவை ஏற்படுத்தியுள்ளது. இப்போது நவீன வாழ்க்கையின் அடித்தளமே அழிக்கப்பட்டுள்ளது.

## கருவிச்சந்தை

1960 பதுகளின் நடுப்பகுதியில் உலக இராணுவ மூதலீடு சுமார் 570 பில்லியன் டொலராக இருந்தது. 1990இல் இது 950 பில்லியன் டொலராகக்கூடி கால் நூற்றாண்டு காலத்திற்கு 70% சதவீத அதிகரிப்பை காட்டிற்று. பெரிய கறுப்பு மற்றும் சந்தைகளாலும் (சேவியோ-குரோசிய ஆயுத கொடுக்கல் வாங்கல்களை கவனிக்குக) எல்லா நாடுகளிலும் ஆயுதச்செலவினங்களையும் ஆராய்ச்சிகளையும் குறைத்துக் காட்டுவதனாலும், இவ் உத்தியோகபூர்வ கணிப்பீடுகள் குறைந்த மதிப்பீட்டின் அடிப்படையில் ஆனவையே. இப்புள்ளிவிபர கணிப்பீடுகளை விட ஆயுத பரிவர்த்தனையின் அதிகரிப்பு வீதம் பற்றி ஒரு அறுபது ஆண்டு காலப்பகுதியில் பார்ப்பது நல்லது. சர்வதேச சங்கத்தின் தரவுகளின்படி 1930 களில் ஆயுதசந்தை 4.5 பில்லியன் டாலர்களை எட்டியது. (இன்றைய பணக்கணக்கில் அத்தொகை 50-60 பில்லியன் டாலர்களாகும்) ஆனால் இப்பொழுது உலகம் சுமார் 950 பில்லியன் டாலர்களைச் செலவிடுகிறது. இது 15 மடங்கு அதிகரிப்பாகும்.

பனிப்போரின் முடிவு ஆயுத உற்பத்தியிலும் விற்பனையிலும் எதுவித குறிப்பிட்ட அளவிலான குறைப்பையும் ஏற்படுத்த வில்லை. இது சமாதானத்திற்கான ஊக்குவிப்புகளை பின்ன

டையச் செய்கிறது. 1980 களில் செலவழிக்கப்பட்ட நூறாயிரம் கோடி டாலர்களில் (1 Trillion) 860 பில்லியன் டாலர்கள் முதலாளித்துவ நாடுகளாலும் கட்டுப்படுத்தும் பொருளாதாரங்களாலும் (Command Economies) செலவழிக்கப்பட்டு மிகுதி 140 பில்லியன் டாலர் 3 ஆம் உலக நாடுகளால் செலவாகியுள்ளது. இங்கு காட்டப்பட்ட வரைபடத்தில் உள்ளபடி 3ஆம் உலக நாடுகள் தான் முக்கிய சர்வதேச சந்தையும் ஆகும் (55%)

ஆயுதங்கள்:-மூன்றாம் உலகநாடுகளின் இறக்குமதி 1989 -1991

| | ஐக்கியஅமெரிக்கா | சோவியத்யூனியன் |
|---|---|---|
| 1989 | 34 | 37 |
| 1990 | 29 | 40 |
| 1991 | 59· | 14· |

மூலம் :- ஐ. நா. தரவுகளிலிருந்து கணக்கிடப்பட்டது.

★ ஆக்கியோனின் மதிப்பீடுகளின் படி.

மூன்றாம் உலகநாடுகளின் ஏற்றுமதி சந்தையின் 3/2 பங்கை (1983-90) ஆக்கிரமித்துக் கொண்டிருந்த இரு வல்லரசுகளின் ஆதிக்கத்தில் இருந்து ஆயுத சந்தையானது வளங்களாலும் சேவைகளாலும் இறுக்கமாக்கப்பட்ட ஓர் சந்தையாகும். மூன்றாம் உலக நாடுகளுக்கான ஆயுத விற்பனைகள் (1983-90) 301 பில்லியன் டாலர்களிலும் கூடியதாய் இருந்தது. இதில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விற்பனை 50 வீதத்திற்கு அதிகமாக இருந்தது.

இன்னும் விரிவாகப் பார்த்தால் சவூதி அரேபியாவும் (57.3 பில்லியன்) ஈராக்கும் (30.4 பில்லியன்) மட்டும் மூன்றாம் உலக நாடுகளின் கொள்வனவில் 1/3 பங்கைப் பெற்றன.

வெளியாகவும் மறைமுகமாகவும் மத்திய கிழக்கு நாடுகள் சர்வதேச ஆயுத வியாபாரத்தின் மையமாக விளங்குகின்றது

இவ்வியாபாரத்தில் கேள்விக்கிடமில்லாது அமெரிக்காவே முதன்மைபெற்றிருக்கிறது. மத்திய கிழக்கு நாடுகளை (300 அணுபோர் கலன்கள் கொண்ட இசுரேல் உட்பட) இராணுவ மயப்படுத்துவதற்கு அமெரிக்காவின் கொள்கைகள் பெருமளவில் உதவியுள்ளன. 1991 பெப்ரவரி 6இல் பேக்கர் உள்ளுறுத்தலுடன் 'மத்திய கிழக்கில் அழிவுப்பாதையை தழுவிய இராணுவப் போட்டியை தவிர்த்து, ஏற்கனவே அதிகளவு இராணுவ மயப் படுத்தப்பட்ட அப்பகுதிக்கு மேலும் ஆயுதங்கள் சென்றடைவதைக் குறைப்பதற்குமான வேளை வந்துவிட்டது'' என்று காங், இரசின் வெளியுறவு குழுமுன் கூறினார்.




* ஐ.அமெ,சோவியத் ஒன்றியம், கனடா, யப்பான், அவுஸ்திரேலியா ஐரோப்பாவிற்கான விற்பனை உள்ளடக்கப்படவில்லை

சான்று: காங்கிரசு, காங்கிரசு ஆய்வு சேவை நூலகம்

மத்திய கிழக்கு நாடுகளின் ஆயுதங்களின் எண்ணிக்கைகளை குறைக்கவேண்டும் என்ற போலிப் பரிவும் அதேவேளை சர்வதேச சாவு வணிகர்களின் லாபத்தேவைகள் மறுபுறமாக இருக்கின்றது. பேக்கர் பேசிய அதே மாதத்தில் பென்டகன், அமெரிக்க ஆயுத விற்பனை [(1991) என்றுமில்லாத சாதனையாக 33 பில்லியனை

(டாலர்கள்) அடையும் என்றும் அதிலும் அரைப்பங்கு மத்திய கிழக்குக்கு செல்லுகிறது என்றும் செனேட்டுக்கு அறிவித்தது. அதே மார்ச்சில் பாதுகாப்பு செயலாளரான றிச்சட்செனி அமெரிக்க மத்திய கிழக்கிற்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் அதிகளவு (எதுவிதத்திலும் குறைந்த அளவிலான) ஆயுதங்களை விற்பனை செய்யுமென்று திட்டவட்டமாக கூறியுள்ளார்.

இந்த சந்தை கணிப்பீடுகளின்படி பார்த்தால் சர்வதேச சாவு வணிகர்களின் கூட்டத்தில் ஏற்கனவே மூதற்பந்திக்கு வந்துள்ளன சீனா ஈரானுக்கான தனது விற்பனையை ஏன் கைவிட வேண்டும்?

மீண்டும் யி.எம்மின(GMs) சார்லி வில்சனின் தர்க்கத்தின் திரிபுதான், பென்டகனுக்கு எது நல்லதோ அது ஏனைய நாடுகளுக்கு கட்டாயமாக நன்மைபயக்கக்-கூடியதாக இருக்க வேண்டிய தில்லை. பாரிசில் 1991 ஜூலை பேச்சுகளின்போது பேசப்பட்டவை வெற்றுரைகளாகவே இருக்கின்றன. இது அமெரிக்காவையோ அல்லது கூறப்போனால் எவருக்கோ ஆயுத விற்பனையை பொறுத்த மட்டில்,ஒருவித கட்டுப்படுத்தும் ஒழுங்கு விதிகள் இல்லை என்பதில் இருந்து தெரிய வரும்.

முழு ஏற்றுமதிகளில் 85முதல் 90 சதவீதம் பெரிய ஐந்து நாடுகள் உட்பட பத்து நாடுகளான சோவியத் ஒன்றியம் ஐக்கிய அமெரிக்கா, பிரான்சு,பிரிட்டன் மேற்குஜெர்மனி,சீனா,செக்கோசிலவேக்கியா போலாந்து,இத்தாலி,சுவிற்சிலாந்து ஆகியவற்றிலே தங்கியுள்ளது. எதிர்மறையாக 15பெரிய மூன்றாம்உலக நாடுகளி. ஏழு நாடுகள் ஆயுத இறக்குமதியில் பெரும் பகுதியை பெற்றன மத்திய கிழக்கில் ஏழும் இந்திய உபகண்டத்தில் இந்தியா,ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய மூன்றும்.

## சோவியத் ஒன்றியம்.

ஆயுத வர்த்தகத்தில் (வரைபடம் பார்க) இரண்டு முன்னணி சர்வதேச சாவுவணிகர்களும் 1983ல் சரிசமமாக நிற்கிறார்கள்.அதன் பின்பு சோவியத் ஒன்றியம் முன் சென்றது ஆனால் அவ்ஆண்டு இறுதியில் இந்த நிலை முழுமையாக மாறுபட்டது.

அவ்வாண்டு ஆகஸ்ட்டில் நடந்த இரு சம்பவங்கள். அமெரிக்காவின் ஆயுத விற்பனைக்கு சக்திவாய்ந்த முன்னெடுப்பை கொடுத்ததாலும் மூன்றாம் உலகநாடுகளிலும் மத்திய கிழக்கிலும்

அமெரிக்காவின் சந்தைப்பங்கு அதிகரிப்பு அதற்கு முன்னரே தெரியத்தொடங்கிவிட்டது. இது ஓர் எதிர்பாராத நிகழ்வு அல்ல இதுவே பென்டகனின் தெளிவான சந்தை நோக்கு. இனி மேல் முன்நாள் சோவியத் அமைப்பின் ஒதுக்கம், அதன் ஆயுதத்துறையில் இருந்த ஆயிரக்கணக்கான உயர்தர தொழில்நுட்பவாளர்களும், அறிவியலாளரும் வளங்கள் பெருகிய நாடுகளை நாடிச் செல்வது கதை மேலும் புண்படுத்துவதாக அமையும். வரைபடம் விற்பனை சக்தியின் மாற்று உருவமைப்பை எடுத்துக்காட்டுகிறது.

தனது நலிந்த ஒற்றுமையை பேணுமென்ற நம்பிக்கையுடையதாக இருந்தாலும் யெல்சனின் உருசியா முன்னைய சோவியத் அமைப்பின் சந்தை பங்களவை இனிமேல் பெறக் கூடும் என்பது மிகவும் சந்தேகத்துக்குரியதே. அந்த இடைக்காலத்திற்குள் புதிய நடிகர்களும் புதிய கொள்ளைக்காரர்களும் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு மாற்றங்களும் தோன்றி தமது தனித்துவத்தை காட்டிவிடுவார்கள்.

ஆண்டுதோறும் 250 சதவீத பணவீக்கத்தை சுமந்து சிரழியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் சீர்திருத்தம் செய்யப்படும் கட்டுமான மறுசீரமைப்புகள் பெரும் இடர்களை தரவே செய்யும் இருந்தாலும் இவ்விதமாற்றம் ஒரு முன்நடவடிக்கையாகும.

இவற்றிற்கெல்லாம் நன்மையான பக்கமும் உண்டு.

அதன் வளம்பொருந்திய இராணுவ கட்டமைப்பிற்கு அப்பால் ஒரு வெற்றுக்கோதாக மட்டுமே இருந்த முன்னைய உருசியாவின் ஆற்றல் வாய்ந்த நிலையின் அழிவுக்குப் பின் இன்றைய நிலையிலோ அல்லது வேறெந்த மாற்று நிலையிலோ, புதிய பரிமாணங்களிலான வளர்ச்சியும் அபிவிருத்தியும், இரண்டாம் உலகப்போரின் பின்னதாக ஜெர்மனியிலும் யப்பானிலும்நடந்தது போன்றதாகவே இருக்கும். சோவியத்அமைப்பு, தன்னுள்ளேயே உடைந்ததும் சர்வதேச சாவு வணிகர்களின் கூட்டிலிருந்து விலக்கப்பட்டவையும் முரண்பட்டமையுமாக தோன்றினாலும் கூட அந் நடவடிக்கைகள் அமெரிக்காவிற்கு நடக்கவிருப்பதற்கு முன்னராக நடந்த வரலாற்று நிகழ்வுகளாகும்.

# அடுத்த சீர்குலைவு அமெரிக்காவிலா?

## பிறட்டறிக் கிளையர்மொன்ட்

(ஐலன்ட் - 1-04-92)

முன்னைய சோவியத் ஒன்றியத்தின் சீர்குலைவு அதனால் சர்வதேச ஆயுத வியாபாரத்தில் ஏற்பட்ட தாக்கம், உலக வியா பாரச் சுற்றோட்டத்தில் வீழ்ச்சி ஏற்பட்டு மிகுந்த குறைக்கப் பட்ட விலையில் கூட ஆயுதங்கள் வாங்கமுடியாத வகையில் மூன்றாம் உலகிலும் மற்றும் இடங்களிலும் வளங்கள் குறைந் துள்ள வேளையில் வெளிப்படையாகியுள்ளது.

சர்வதேச சாவு வணிகர்களின் வியாபாரத்துக்குச் சொர்க்க பூமியெனக் கூறப்படும் சவுதி அரேபியா உட்பட மத்திய கிழக்கு நாடுகள் வரையறுக்கப்பட்ட சந்தையாக இருந்தாலும் ஒரு இலாபகரமான சந்தையாகும். அதுவும் இப்போது குறைந்து கொண்டு வருவது போல் தோன்றுகிறது. இந்த உலக முதலா ளித்துவ பின்னடைவு அதற்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இன் னொரு நடவடிக்கையும் நடைபெறுகிறது. அதுதான் மூன்றாம் உலகநாடுகள் தன்னிறைவு இலக்கை நோக்கி முனைவதாகும். இதற்கு ஈரான், இந்தியா, பாகிஸ்தான் முக்கிய உதாரணங் களாகும். அத்துடன் அநேகமான முன்னணி மூன்றாம் உலக நாடுகள் (கடந்த இருபது ஆண்டுகளாக மரபுவழி ஆயுதங்களை இறக்குமதி செய்த பெரிய நாடுகள்) மரபுவழி ஆயுதங்களி லிருந்து நோய்க்கிருமி, அணு, இரசாயன வகைகளைக்கொண்ட மரபுவழியல்லாத ஆயுதங்களுக்கு மாற்றுவதும் நடைமுறைக்கு வந்துள்ளது.

மூன்றாம் உலக நாடுகளில் உண்மையான மொத்த உள்ளூர் உற்பத்தி 4.3% (1988) சதவீதத்திலிருந்து 2.9% (1989)க்கும் 2.2% (1990)க்கும் பின்னர் 1991இல் 1% சதவீதத்துக்கும் குறைவாகச் செல்லலாமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவும் ஏனைய சர்வதேச சாவுவணிகர்களும் தங்களால் இயன்ற முறையில் சந்தைத் தந்திரோபாயங்களைப் பாவித்து ஆயுத விற்பனையை அதிகரிப்பார்கள். அந்த அதிகரிப்பு உச்சக் கொள் அளவிற்குத்தான் ஏற்படமுடியும். ஆனால் அந்த உச்சக் கொள் அளவு நிலை இப்போதே ஏற்பட்டுவிட்டதாகக் கருதப் படுகிறது.

27885 C.C
86650

மூன்றாம் உலகநாடுகளின் முதன்மை வியாபாரப்பண்டங்களின் (நிலநெய் உட்பட) விலையில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சிகளும் அவர்களுக்கு ஆண்டுதோறும் 8.10% சதவீதம் அதிகரித்துக் கொண்டு செல்லும் இமாலயக்கடன்களும் இவற்றிற்குக் காரணமாயிருக்கின்றன.

அநேகமான மூன்றாம் உலக நாடுகள் கடன் வட்டி கொடுக்க வேண்டியிருப்பதும் அவைகளின் இராணுவ முதலீட்டுப் பராமரிப்பும் நடுவண் அரசுகளின் வருமானங்களில் 50-70./. சதவீத அளவுக்கு மேலாக செலவாகிறது. கடன் வட்டிக் கொடுப்பனவுகள் 1980 இன் பிற்பகுதிகளில் 160-170 பில்லியன் டொலர்களிலிருந்து 1992 இல் 200 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கும். அதைவிட ஆயுதங்களின் விலைகளும் அதிகரிக்கும். இரண்டாவது உலக போருக்குப் பின்னர் அமெரிக்க தொழில் நுட்ப ஆயுதங்களின் விலைகள் 200 மடங்கு அதிகரித்துள்ளன. ஏனைய பொருள்களின் விலை ஏழுமடங்கே அதிகரித்துள்ளது. இந்தக் காரணிகளின் கூட்டுத்தாக்கத்தைப் பார்க்கும் போது 1990 களில் சர்வதேச சாவு வணிகர்களுக்கு மூன்றாம் உலக நாடுகள் தொடர்ந்தும் ஆயுதச்சந்தைகளாக இருக்கக் கூடிய சாத்தியக் கூறு குறைவாகத் தென்படுகிறது.

## ஐக்கிய அமெரிக்கா

புச்சின் பனிப்போர் வெற்றியின் ஒரு அங்கமான பாலைவனப்புயல் திரும்பத் திரும்ப நடத்த முடியாததொன்றாகும். இக்குறுகிய காலத்தில் கூட சர்வதேச சாவு வணிகத்தில் அபகரிக்கப் பட்டிருந்த சந்தைப்பங்கு விரயமாக்கப்பட்ட முதலீடாகும். முன்னைய சோவியத் ஒன்றியத்தினதும், பிரான்ஸ், யேர்மனியினதும் அவை போன்ற சிறிய நாடுகளின் சந்தைகளைக் கைப்பற்றியமை ஐக்கிய அமெரிக்காவிற்கு ஏற்றுமதியை ஊக்குவிப்பதாக இருந்தாலும் அதை இன்னொரு நோக்கில் வைத்து ஆராயவேண்டும். அதாவது உலக வியாபாரத்தில் ஆயுத வர்த்தகம் 2.6 /. என்பதை வைத்துக்கொண்டு பார்க்க வேண்டும்.

நாங்கள் அழுத்திக் கூறுவது போல் 3 ஆம் உலக நாடுகளும் மத்திய கிழக்கு நாடுகளும் லேசர் கதிராலும் தொலைக்காட்சி மூலமும் இயங்கும் குண்டுகள், கணணிமயப்படுத்தப்பட்ட ரேடார்கள், பேற்றியற் (*Patriot*) ஏவுகணைகள் போன்றவற்றை வாங்கக்கூடிய சக்தி. ஒரு உச்சவரம்பிற்கு உட்பட்டதாகும்.

அதுவுமல்லாமல் ஒரு உணர்வுபூர்வ அம்சமும் மக்கள் மத்தியில் செயல்படுகிறது. வெறுக்கத்தக்க வெளிப்பாடுகளைக் கொண்ட சகல இராணுவ நடவடிக்கைகளுக்கும் எதிரான உலகக் கருத்து பெருமளவு வளர்ந்து வருகிறது.

உத்வேகத்துடன் வளர்ந்துவரும் இச்சக்தியை இஸ்ரேலினாலோ நிலநெய்வள ஆதிக்க நாடுகளாலோ அல்லது அவர்களைப் போன்ற 3ஆம் உலக நாடுகளாலும் அசட்டை செய்து விட முடியாது.

புச்சின் வெளிவிவகார நிதி ஈடுபாடு ஆதாளபாதாளத்திலிருக்கும் பொருளாதாரக் குறைபாடுகளைக் கண்டு கொள்ளாதவாறு மக்களைத் திசைதிருப்பி இருந்தது. ஆனால் அண்மையில் நடாத்தப்பட்ட கருத்துக்கணிப்பீடுகள் மூலம் மக்களின் மநோநிலை பெருமளவு மாறி வருவது தெரிகிறது. இவ்விடயம் அவருக்காக அவரின் தேர்தலைக் கையாளுபவர்களும் தெரிந்துள்ளார்கள். பிரதானமாக உலகச் சந்தைகளைப் பெறுவதிலும் அவற்றை தம் வசம் வைத்திருப்பதிலும் தான் அமெரிக்கப் பொருளாதார அடித்தளம் தங்கியுள்ளது என்பது தெரியவருகிறது

ஆனால் இது நடைமுறையில் இல்லை. முன்னேற்றமின்றி அதே நிலையில் இருக்கும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் பார்க்க அனேகமாக எல்லா வளர்ச்சியும் கடந்த வருடத்தில் 3ஆம் உலக நாடுகளைச் சார்ந்தே நடந்துள்ளது. மானிய ஆயுத விற்பனைக்கும் டொலர் நாணய மாற்று வீதத்தில் திருகுதாளம் செய்வதும் பயனைத் தராது.

## பீடிப்பு

காலத்திற்குபொருந்தாத போர் இயந்திரங்களைத் தான் வைத்திருக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருப்பதே அமெரிக்க உயர் அதிகார பீடத்தை தாக்கிவரும் தொடர் பீடிப்பின் மூலக்கருவாகும். செனேட்டர் லொயிட் பென்செென்ரால் எடுத்துக்காட்டப்பட்டது போல் 5./. பாதுகாப்பு செலவீனம் குறைப்பு எனது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இன்னும் 14 ரில்லியன் அமெரிக்கடாலர்களை செலவுக்கு விட்டுவைக்கும். அது கடந்த 5ஆண்டு செலவீனங்களின் 94 சதவீதமாகும்.

செயலிழந்துள்ள கெட்ட பேரரசு என்ற முன்னாள் சோவியத் ஒன்றியத்திற்கும் வொல்ரயரின் கடவுள் பற்றிய தர்க்கம் பொருந்தும். கடவுள் இல்லை என்றால் கடவுளை உருவாக்க

வேண்டும். குறிப்பாக தெரிவிக்கும் போது முன்னாள் கெட்ட பேரரசிலும் மூன்றாம் உலக நாடுகளிலும் இடம்பெறும் அதே சீர் குலைவு புச்சின் அமெரிக்காவிலும் நிகழ்வது கண்கூடாகத் தெரி கிறது. வேதனை அளிக்கும் இரண்டு ரில்லியன் டாலர்களுக்கு மேற்பட்ட பற்றாக்குறையினாலும் பாரிய சீரழிவுறும் சமூக அமை ப்பிலும் ஏற்படும் கவலைதரும் மாற்றங்களை ஒப்புநோக்கினால் இவை சம கால நிகழ்வுகள் ஆகாத ஆனால் சமயா சமயக் காரணிகளே, சோவியத் அமைப்பின் முடிவிற்கு பெருமளவு உதவியதைப் போல் செயற்பட்டுக் கொண்டு இருப்பது புலனா கிறது.

முதுமை நோய்வாய்ப்பட்டிருந்தும் தொடரும் ஆயுதச் செலவீனங்கள் அதன் உடைவை விரைவுபடுத்தும். சோபர்செவ் -ஜெஸ்சின் ஆகியோர் ஒவ்வொரு தொழிலாளியின் உற்பத்தி யைப் பெருக்குவதன் மூலம் தான் வாழ்க்கைத் தரத்தை உய ர்த்தலாம் என்ற சிக்கலான கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்திருப் பது போல், 1970 களிலும், 1980 களிலும் அமெரிக்க உற்பத்தி குறைந்திருந்ததுமல்லாமல் உண்மையான மணித்தியால வேலைக் கான ஊதியமும் சிறிதளவு அதிகரிப்பு அல்லது முற்றாக அதி கரிக்காமையும், தவிர்க்கப்பட முடியாத அளவிற்கு உச்சநிலையை நோக்கிச் செல்லும் வறுமைநிலை பூதாகாரமாகியுள்ளது.

இந்த நோயைத்தான் ஜனாதிபதி ஐசன்கோவர் மிகத் தீரத் துடன் எடுத்துக்காட்டினார். ஆனால் அதை வெற்றிபெறத்தான் முடியவில்லை.

செய்யப்படும் ஒவ்வொரு துவக்கும், கடலில் விடப்படும் ஒவ்வொரு போர்க்கப்பலும், ஏவப்படும் ஒவ்வொரு ஏவுகணையும் முடிவில் பார்க்கும்போது குளிரால்வாடி பசியோடு இருப்பவர்களி டமிருந்து எடுக்கப்படும் களவு ஆகும். ஆயுதபாணியான இவ்வுலகு பணத்தை மட்டும் செலவு செய்யவில்லை. அது தொழிலாளரின் வியர்வையையும், அறிவியலாளர்களின் அறிவாற்றல்களையும், குழந்தைகளின் நம்பிக்கைகளையும் விரயம் செய்கிறது.

இராணுவ கைத்தொழில் கூட்டமைப்புஎன்று அவரால் வர்ணிக்கப்பட்டதும் கட்டுமீறிய வளர்ச்சியையுடையதுமான அபா யத்துக்கு எதிரான அவரது எச்சரிக்கையின் முக்கிய வெளிப்பாடா கும் இது. வருங்காலத்தில் உருவாக இருந்த தன்னையே அழிக்கக் கூடிய இராட்சச வளர்ச்சியை அவர் மங்கலாகக்கண்டார் கொலம் பியா பல்கலைக் கழகத்தின் சேபோர் மெல்மனின் திடுக்கிடக்கூடிய

ஆய்வுகளின் படி உள்ள உண்மையான தொகைகள் இவற்றிற்கு சான்றுபகரும்.

1949 முதல் 1989 வரையான ஆயுதங்களுக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் (1989?) 8.2 பில்லியனாகும் இது இராணுவத்தோடு சம்பந்தப்படாத கைத்தொழிலிலுள்ள இயந்திர தளபாடங்களுக்கான செலவான7.2 பில்லியன் டொலர்களிலும் பார்க்க அதிகமானதாகும்.1951-1991வரை ஒவ்வொரு வருடமும் இராணுவ முதலீடுகள், கூட்டுக்கம்பனிகளின் ஒன்றுசேர்ந்த நிகரலாபங்களிலும் பார்க்க அதிகம்.

இத்தகைய கேனிசிய (Keynes)முதலாளித்துவ பட்டியல் கட்டுப்பாட்டு வாதம் சார்ந்த இராணுவ வெளிப்பாடுகள் அமெரிக்க ஆயுத உற்பத்திக் கைத்தொழிலில் சீரழிவை தடுக்கவில்லை. ஆனால் அதை விரைவுபடுத்தியது.1977-1987வரை உற்பத்தி தொழிலாளர்களின் 50 சதவீதத்தினர் இயந்திரக் கருவி கைத்தொழிலிருந்தும் 60சதவீதத்தினர் பண்ணை இயந்திரம் கைத்தொழிலிருந்தும் 68சதவீதமானோர் நிலநெய்வாயு தளபாடக் கைத்தொழிலிலிருந்தும் 60சதவீதத்தினர் அரங்கத் தளபாட கைத்தொழிலிலிருந்தும் 43சதவீதத்தினர் புடைவைத் தளபாடகைத்தொழிலிலிருந்தும் அகற்றப்பட்டார்கள்.

இப்பட்டியல் முழுமையானதல்ல. இப்பிளவுபட்ட நாடு கனை சர்வதேச விவகாரங்களில் இன்னமும் மூடத்தனமாக தனி ஒரு வல்லரசாக எண்ணுகிறது.

## முடிவுச் சிந்தனைகள்

சர்வதேச சாவு வணிகர் கூட்ட முற்பந்தியிலிருந்து 'கெட்ட பேரரசு' அகற்றப்பட்டது. கொண்டாடுவதற்குப் போதியகாரணமாகும்.ஆனால் அமெரிக்க இராணுவ கைத்தொழில் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட துன்பமும் அதனால்கிடைத்த வேதனையான பாடங்களும் அத்துடன் அது மூன்றாம் உலகநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பும் அமெரிக்க அரசியல் தலைவர்களால்இன்னும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயங்களாக இருக்கின்றன.

புச்சின் அமெரிக்காவில் மக்கள் விருப்பத்துடன் உண்டாகியுள்ள இராணுவ எதிர்ப்பும் ஏனைய தாக்கங்களும் வரும் மாதங்களிலும் ஆண்டுகளிலும் மிகவும் ஆற்றல் கொண்டவையாக முன்னேறி வளரும்.

★ ★ ★

# எத்தனை சொந்தங்கள்?

தொகையறா

பகலும் இரவுமாக பாடுபடும் பாட்டாளிக்கு
பஞ்சமும் பட்டினியும் கொஞ்சிக் குலாவுதடா...
கொஞ்சிக் குலாவுதடா... தம்பி

பாட்டு

வறுமை நமக்கு மாமன் முறை
சிறுமை நமக்கு தம்பி முறை
பெருமை நமக்கு அண்ணன் முறை
பசியும் பிணியும் பிள்ளைகள் முறை
எத்தனை சொந்தங்கள் நமக்கிருக்குது பாத்தீர்களா- நல்ல
ஏரைப்பிடிச்சு உழுகும் தங்கக்கம்பிகளா - (எத்தனை)

அத்தனை சொந்தங்கள் இருக்கும் போது
அசைக்க நம்மளை முடியுமா - நம்ம
அடுப்படியிலே படுத்திருந்தா
நல்ல பொழுது விடியுமா- தம்பீ (எத்தனை)

கோட்டும் சூட்டும் மாட்டுனவன்
ஒடம்பு எல்லாமுங் கொறையுதா - ஒங்
கோவணத் துணியை அலசிப்போட
சோப்பு வாங்க முடியுதா

ஒட்டுப் போட்டு ஒட்டுப்போட்டு
எலும்பும் தோலுமா அலையுறே -இப்ப
உருப்படாத ஜாதி சண்டையை
ஊருக்குள்ளே பரப்புறே - (அத்தனை) (எத்தனை)

பாடுபட்டவன் வீட்டுக்குள்ளே
ஓடு ஒடைஞ்சு கிடக்குது
தானியத்தைப் பதுக்கி வச்சவன் வீட்டுக்குள்ளே
எலிகள் தின்று கொழுக்குது - இங்கே
மூட நம்பிக்கை நம்மளை பிடிச்சு
முன்னேயும் பின்னேயும் இழுக்குது -நம்ப
முத்துமாரி பேனா அதைப் பார்த்து பார்த்துச் சிரிக்குது
(எத்தனை)

(நன்றி வரப்பு வெளியில் ஹைக்கை ரெண்டு-
பாவலர் ஓம் முத்துமாரி)

# விடுதலைப் புலிகளைச் சாராத குழுக்களில் என்ன செய்வதென தெரியாத நிலை

*— தாரகி —*

*(ஐலண்ட் - 12-4-9-)*

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இன்னும் இயங்கிக்கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்களின் நாட்கள் எண்ணப்படுகின்றன. விடுதலைப் புலிகள் பலவீனமடையவேண்டும், அத்துடன் தெரிவுக்குழு எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை முன்வைக்கவேண்டும். இவ்விரண்டும் இவ்வாண்டு முடிவதற்குள் நடக்கா விட்டால் விடுதலைப் புலிகள் அல்லாத மற்றைய குழுக்கள் ஒருசிலவற்றைத் தவிர, தங்கள் நிலைப்பாட்டைத் தொடர்வதற்கு வெகு சிரமப் படுவார்கள். அவர்களின் இக்கட்டான நிலை இப்போது,

அ) தொண்டமான் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக்கூறுவதால் தமிழர் தேசியத்திலே மற்றைய குழுக்களுக்கு எந்த பலமும் இல்லாது போவதும், வடகிழக்கைப் பொறுத்த அளவிலான நாளாந்த வேலைகளில் தமது நிலையை மேலெடுக்கமுடியாதிருப்பதும்,

ஆ) வடக்குக் கிழக்கு இணைப்பிற்கு தெரிவுக்குழுவின் தெளிவின்மையான நிலைப்பாடு:

இ) அவர்களது நிலைபற்றி இந்தியாவின் சந்தேகத்துக்குரிய நிலை:

ஈ) நிதிநெருக்கடிகள் மற்றும்,

உ) அரசாங்கத்தின் உள் அர்த்தங்கள் பற்றி அரிக்கும் சந்தேகம்; ஆகியன சம்பந்தப்பட்டவை.

விடுதலைப் புலிகள் ஒரங்கட்டப்பட்டால் எமது நிலை என்ன? அப்படிப் புலிகள் பலமிழக்காவிட்டால் தமிழர் பற்றிய நடைமுறைகளில் எமது பங்கு என்ன? இவ்விரண்டு அடிப்படைக் கேள்விகளும் புலிகளைச் சாராத அமைப்புக்களை அல்லற்படுத்துகின்றன.

முதற்கேள்வி பற்றி இருவேறு கருத்துக்கள் இருப்பதாகப்படுகிறது. விடுதலைப் புலிகள் அரசாங்கத்துக்கு எவ்விததாக்கத்தையும்

கொடுக்க முடியாத அளவிற்கு பலவீனப்படுத்தப்பட்டால் தெற்கில் உள்ள அரசியல்வாதிகளுக்கு இக்குழுக்களை பழைய நிலையில் செயல்படவிட ஒருவித நிர்ப்பந்தமும் இருக்காததுடன் குடியேற்றம்போன்ற உணர்ச்சிமிக்க விடயம்பற்றி அதிகம் பேசுவதற்கோ அல்லது முன்பு முற்பட்டதுபோல் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு கட்டு ஒழுங்கில் கூடிய தலையீடு காட்ட முனைந்தால் இவர்கள் வெகு இலகுவாக நசுக்கப்படலாம்,

ஆளும் கட்சிக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டது. தொடர்ந்து ஜே. வி. பி. நடவடிக்கையால் ஏற்பட்ட அச்சுறுத்தலை கொலையுண்ட துணைப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்னா விரைவில் இனங்கண்டு கொண்டார். திரு. விஜேயரத்னா அரச பாதுகாப்புப் படையினருக்கும், காவல்துறையினருக்கும் சாதாரண மக்கள் எதிரியிலும் பார்க்க கூட பயப்பட வேண்டும் என தீவிரமாக நம்பினார்;

## பயமும் பயங்கரமும்

தமது நடவடிக்கைகளுக்கு உதவுமுகமாக சாதாரண மக்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு இரு எதிரணிகளான பாதுகாப்புப் படையினரும் ஜே. வி. பி. யினரும் பயத்தையும் பயங்கரத்தையும் இரு ஆயுதங்களாக பாவித்தனர்.

அரச பாதுகாப்புத்துறையின் முக்கிய இளைப்பாறிய துணைக் காவல்துறை மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல, அமைச்சர் விஜேயரத்தினாவின் கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஓர் முக்கிய பங்கை வகித்தார். கடந்த இருவாரங்கள் ஆச்சரியங்களையும், திடுக்கீடுகளையும் கொண்டவையாக இருந்தன.

எதிர்க்கட்சியின் உதவியுடன் பிரேமதாச உடுகம்பொலவிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில், எதிர்பார்த்திராத பரிமாற்றங்கள் தொடர்ந்தன. இரு பகுதியினராலும் எடுத்துக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள், உரிமைகோரல்கள், எதிர் உரிமை கோரல்கள் ஆகியன அரசாங்கம் வெற்றிகரமாக நடத்திய கிளர்ச்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், ஊழல்களுக்கு எதிரான நடவடிக்கைகள், யூ. என். பி. அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்றவற்றை மையமாகக் கொண்டிருந்தன.

தெற்கிலும் கண்டியிலும் அநுராதபுரத்திலும் கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கிய திரு. உடுகம் பொல, அவர் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் அப்பகுதிகளில் நடைபெற்ற சட்டவிரோத கொலைகள் காரசாரமான விமர்ச னத்திற்கு உள்ளாகின பத்திரிகைகளுக்குக் கொடுத்த அறிக்கை யில் பிரதமர் விஜயதுங்க ''கறுப்புப் பூனைகள்'' திரு. உடுகம் பொல செயலாற்றிய எல்லாப்பகுதிகளிலும் தீவிரமாக இயங்கி னார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தை வீழ்த்த தீர்மானித்துள்ள குழுவில் திரு. உடுகம்பொலவும் ஓர் உறுப்பினர் என்றும் பிரதமமந்திரி கூறினார்.

அரசாங்கத்தின் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கையும் மரண குழுக்கள் அதில் ஏற்ற பங்கையும் பார்ப்போம். பாதுகாப்புப் படையினரும் காவல் துறையினரும், மரணக்குழுக்களும், ஜே. வி. பி. யினரின் கிளர்ச்சியை ஈவிரக்கமின்றி அழிப்பதில் வெற்றி கண்டார்கள்

இறந்தவர்களின் எண்ணிக்கை ஒருபோதும் தெரியவராது. அக்கால கட்டத்தில் கொழும்பிலும் மாகாணங்களிலும் உள்ள வெவ்வேறு தனிமையான இடங்கள் கொலையுண்ட இளைஞர் களை கவிழ்த்துப் போடும் இடங்களாக இருந்தன. ஒவ்வொரு நாளும் வீதியோரங்களில் சன்னம் துளைக்கப்பட்ட சடலங்கள் காணப்பட்டன. அக்காலத்தில் கொலைகளும் மாற்றுக்கொலை களும் மக்களின் கவனத்தை ஈர்த்தன. அடையாளம் காணமுடி யாத எரியுண்டிருந்த சடலங்கள், தலையில்லாத முண்டங்கள் ஆற்றில் மிதந்து சென்றமை போன்ற விடயங்களைப் பத்திரிகை கள் விபரித்தன.

அரசாங்கமும் கூட்டு எதிர்க்கட்சிகளின் உதவியுடன் திரு. உடுகம்பொலவும் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கையில் மரணக் குழுக்களின் பங்குபற்றி குற்றச்சாட்டுகளும் மாற்று குற்றச்சாட் டுகளும் செய்தனர்.

1989 மார்ச் 20 ல் எப்பாவெலயில் நடந்த கொலைகளுடன் ''கறுப்பு பூனை'' கள் கொடூரத்தில் புகழ்பெற்றார்கள். ஒரு பெண் உட்பட வஞ்சம் தீர்ப்பதற்காகச் செய்யப்பட்ட கொலை கள் சமூகத்தை திடுக்கிடச் செய்தது. எப்பாவெல கொலைகளி னால் இராணுவமும் குழப்பமடைந்தது. நான் அனுராதபுர மா

வட்டத்தின் இணைப்பு அதிகாரியாக இருந்த கேர்ணல் ஒரு வரை மார்ச் 21ல் எப்பாவெல கொலைகள்பற்றி தகவல்கேட்ட போது அவர் அதிர்ச்சியையும் கோபத்தையும் வெளிக்காட்டினார். தடைமுகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஆரேக் கணக்கானோரின் மறுவாழ்வு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு கொண்டிருந்த இவ் அலுவலர் இவ்வித வஞ்சம்தீர்க்கும் கொலைகள் அரசிற்கு ஜே. வி. பியை தோல்வியுறச்செய்ய உதவாது என்றார்.

1989 முற்பகுதியில் தொடங்கிய கண்காணிப்பு நடவடிக்கைகளில் ''கறுப்புப் பூனை'' களால் செய்யப்பட்ட எப்பாவெல கொலைகள் முதற்கட்டமானது 'கறுப்புபூனை'களுக்கு பின்னால் உள்ளூர் ஆளுங்கட்சி அரசியல்வாதி இருந்தனர் என்று உடுகம்பொல கூறுகிறார். இக்கூற்றை அரசாங்கம் மறுக்கிறது.

'கறுப்பு பூனை' கள் மாத்திரம் களத்தில் தனித்து நிற்கவில்லை என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும். ஏனையவர்களும் இருந்தார்கள். கறுப்பு பூனைகளிலும் பார்க்க சிலவேளைகளில் பயங்கரமானவர்களும் இருந்தனர். அந்நாட்களில் இலக்கதகடுகளற்ற வாகனங்களில் ஆயுதம் தாங்கியோர்களால் கைதாவதும் தடுத்து வைக்கப்படுவதும் சாதாரண நிகழ்ச்சிகள். அனுதாபிகள் என்று சந்தேகிக்கப்படுவோர்கள் பகல் வேலை நடவடிக்கைகளில் கடத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் எவ்வித தடயங்களுமின்றி காணாமல் போயினர்.

சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு எரிக்கப்பட்டன ஜே. வி. பி. யினரிடமிருந்து மற்றவர்கள் ஒதுங்கியிருக்க வேண்டும் என்னும் காரணத்திற்காக சிதைக்கப்பட்ட சடலங்கள் பார்வைக்கு விடப்பட்டன.

இரவு வேளைகளில் கொலைக் குழுக்களுக்கே உரித்தாயிற்று. அரசாங்கம் கிளர்ச்சிக்கு எதிர் நடவடிக்கைகளை கைக்கொள்ளும் வழிமுறைகள் பற்றி எதிர்க்கட்சிகளும் அரசும் சண்டையிட்டுள்ளன. எதிரணிகள் கொலைக் குழுக்களின் பின் அரசாங்கம் இருப்பதாக நம்புகிறது. எனினும் அரசாங்கம் அவ்வித எதிரணியின் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் முற்றாக மறுத்துவிட்டது.

சந்தேகப்பட்ட ஜே. வி. பி, யினர் ஆகியோரை ஒழிப்பதற்கும், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களை, கைதி

களை அல்லது தண்டனை விதிக்கப்பட்ட ஜே. வி. பி. யினரை அழிப்பதற்கும், சித்திரவதை செய்து கொள்வதற்கும், மற்றும் ஜே. வி. பி. யினரின் சுற்றத்தார் மீது தாக்குதல்களுக்கும் கொலைக் குழுக்கள் காரணமானார்கள்? இவர்கள் நீதிக்குப் புறம்பான கொலைகள் செய்தார்கள்.

''கறுப்பு பூனை'' செயற்பாடுகளின் பின்னணியில் உள்ளவர்கள் எவர் என விளங்கவில்லை. ஜே. வி. பி. யை தோற்கடிப்பதற்கு மறைமுகமாக நடவடிக்கைகளில் ஈடுபட்ட ''கறுப்பு பூனை'' கள் மற்றும் அமைப்புக்கள் போன்றவற்றின் செயற்பாடுகள் மர்மமாக உள்ளது.

## மரணக்குழுக்கள்

ஜே. வி. பி. யை அழிப்பதற்கு இந்த மரணக்குழுக்கள் முக்கிய பங்கு வகித்தன. மக்கள் புரட்சிகர (PRRA) ஜே. வி. பி. யினருக்கு எதிரானவர்களால், ஜே. வி. பி யினரையும் / டி. ஜே. பி. யினரையும் இவர்களின் சூழல்களில் அவர்களின் செயற்பாடுகளையொத்த நடவடிக்கைகள் மூலம் ஒழிப்பதற்கு ஏற்படுத்தப் பட்ட அமைப்பு.

மத்திய மலைகளின் கழுகுகள் (*Eagles*) உக்குச (*Ukkussa*) மற்றும் பச்சைப் புலிகள் ஆகிய வேறு மூன்று பிரிவுகள் ஜே. வி. பி. யினரையும் அவர்களின் சார்பானவர்களையும் கொடூரமாக தாக்கினார்கள்.

ஜே.வி.பியின் தொடர் நடவடிக்கையே இக் குழுக்களின் கொள்கைகளுக்கு உந்தின என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஜே.வி.பி. தலைமை, பாதுகாப்புப் படையினரினதும் காவல் துறையினரினதும் குடும்பத்தலைவர்களை கொல்லப் பயமுறுத்திய சில நாட்களில், ஜே. வி. பியினரின் மீதும் அவர்களைச் சார்ந்தோர் மீதும் தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டன!

வடகிழக்கு மாநிலத்தைத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் எல்லாம் கொலைக் குழுக்கள் செயல் பட்டன. குருநாகல், கம்பகா, களுத்துறை ஆகியவற்றுடன் ஏனைய இடங்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். கொலைஞர்கள் எப்போதும் சீருடைகள் அணியாதவர்களாகக் காணப்பட்

டார்கள். சில வேளைகளில் இராணுவ சீருடைகளை ஒத்த ஆனால் பட்டிகள் இல்லாத உடைகளையும் அணிந்திருந்தார்கள் ஜே வி பியினரை ஒழிப்பதில் சாதாரண உடைகளில் மறைந்திருந்த கொலைஞர்கள் பெரும் பங்கை ஏற்றனர்.

கொலைக் குழுக்களை அமைப்பதற்கு யார் உத்தரவு இட்டார்கள் அவ்வித கொலைக் குழுக்களை ஏற்படுத்தி, கொலைகளை செய்து, சிதைவுற்ற சடலங்களை வீதி யோரங்களில் பார்வைக்கு விட்டது போன்ற நடவடிக்கைகளுக்கு யார் பொறுப்பு என்ற கேள்விகளுக்கு மறுமொழி கிடைக்க வேண்டும்.

எதிரணியினர் திரு. உடுகம்பொல விடுத்த அறிக்கையின்படி அரசை பதவி விலகும் வண்ணம் கோரியிருக்கிறார்கள். அதே நேரம் அரசாங்கம் முன்னைய துணை காவல்துறை மா அதிபரின் கூற்றுக்களில் உண்மையில்லை என கூறுகிறது. ஆனால் ஒன்று மத்திரம் தெளிவாகிறது. கொழும்பில் சிக்கல்கள் தோன்றும் வேளைகளில் வடக்கில் உள்ள புலிகளுக்கு அவை நன்மை பயப்பனவாக இருக்கும்.

புலிகளின் கோட்பரப்புகை (பிரச்சாரம்) இயந்திரம் இந்த சந்தர்ப்பத்தை பாவித்து நாட்டின் மனித உரிமை மீறல் சாதனையை எடுத்துக் கூறுவதற்கு பயன் படுத்தலாம். அரசு மனித உரிமை மீறல் விடயத்தில் தமது செயற்பாட்டை மேம்படுத்தி வரும் வேளையில், கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் மறைமுக அரசியல் ஈடுபாடுகள் வெளியாகியுள்ளமை அரசின் நிலையை மேலும் சிக்கலாக்கும்.

# கொலைக் குழுக்கள்

—சமீந்திர பெடினன்டோ—

(ஐலண்ட் — 12. 04. 1992.)

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மார்ச் 20ல் தாங்கள் சென்று கொண்டிருந்த ஜீப் வண்டி எப்பாவெலவில் ஜே.வி.பி யினரால் தாட்டுவைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடியில் சிக்கியதன் காரணமாக மூன்று காவல்துறையினர் அதே இடத்தில் கொல்லப்பட்டும் வேறு மூவர் படுகாயமடைந்தனர். இது நடந்த சிலமணி நேரங்களுள் ''கறுப்பு பூனைகள்'' என்ற கொலைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் எப்பாவெலவில் ஒரு பெண் உட்பட 17 பேரை கொலை செய்தார்கள். கொலையுண்டவர்கள் ஜே.வி.பி உறுப்பினர்கள் எனவும், சார்பாளர்கள் எனவும் சந்தேகத்திற்கு உட்பட்டவர்களே.

மருதன் கடவெலவிற்கும் கல்குளம் என்ற இடத்திற்கும் இடையில் துவக்குச் சன்னங்களால் துளைக்கப்பட்டும் சிதைக்கப்பட்டதுமான 14 சடலங்கள் பாதுகாப்புப் படையினரால் கண்டெடுக்கப்பட்டன. பளுகன்வேவவில் 2 சடலங்களும் பெண்ணின் சடலம் தலாவையிலும் காணப்பட்டது. கொலைஞர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால் 'கறுப்பு பூனைகள்' சடலங்களின் அருகே விட்டுச் சென்ற கடிதத்துண்டு மூலம் கொலைகளுக்கு உரிமை கோரியிருந்தனர். அநுராதபுர மாவட்டத்திலுள்ள மகாவிலிச்சய காவல் துறை நிலைய பொறுப்பு மேலாளர் ஜே.வி.பி. யினர் கொலை செய்ததன் பின்னர் மகாவிலிச்சயவில் கொலைக் குழுவினர் ஏழு இளைஞர்களை வெட்டிக் கொலை செய்த சம்பவத்திற்கு சில நாட்களின் பின் எப்பாவெல கொலைகள் இடம் பெற்றன.

1987 யூலை மாத இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இந்திய படையினர் வந்தமை ஜே.வி.பியினரின் இரண்டாவது கலகத்தின் தொடக்கத்தை காட்டியது. அதன் சில மாதங்களுக்குள் ஜே. வி. பியினரும் அவர்களின் இராணுவ பிரிவான தேசபிரேமி ஜனதா வியாபாராவும் தொழும்பிலும் மாகாணங்களிலும் உள்ள அரச செயலுரிமைக்கு பயமுறுத்தல் கொடுத்தன. ஆளும் கட்சி அரசியல்வாதிகள் சுடப்பட்டனர். ஜே.வி.பி - டி.ஜே.வி. எண்ணங்களுக்கு மாறானவர்கள்

கொடூரமாக கொலையுண்டனர். பாதுகாப்பு படையினருக்கும் காவல்துறையினருக்கும் ஜே.வி.பி/டி.ஜே.வி நடமாட்டம் பற்றி தகவல் கொடுத்தோர் எனச் சந்தேகிக்கப்பட்ட சாதாரண மக்கள் கருணையின்றி கொலை செய்யப்பட்டனர்.

இக்கருத்தை கொண்டிருப்பவர்கள், தங்களின் தமிழ்தேசிய அமைப்புக்கள் தமது தராதரத்தைப் பாதிக்க எதுவரினும் விட்டுக் கொடுக்காமல், வடகிழக்கில் விடுதலைப் புலிகள் அகற்றப்பட்ட பின்னர் உள்ள அரசியல் நிலைப்பாட்டில் அரசாங்கத்தின் பாதிப்பு ஏற்படுத்தும் கொள்கைகளைஎதிர்ப்பதற்குசுதந்திரமான, பலமான நிலையில் இருக்கவேண்டும்என எண்ண முற்படுகிறார்கள்.

வடகிழக்கில் தமது நடவடிக்கைகள் விரிவடைவதை அனுமதிப்பதில் அவதானமாக இராணுவம் மற்றும் புலனாய்வுச் சேவைகள் இருப்பது ஏனெனில் தாம் அரசியல் எதிர்ப்புக்கோ அல்லது தாக்கத்திற்கோ உரிய ஆற்றலுள்ள தேசியவாத நிலைகளாக எழுவதை மழுங்கடிக்கும் மறைமுக எண்ணப்பாடு என விடுதலைப் புலிகள் சாராத அணியிலுள்ளோர் கருதுவதாகத் தெரிகிறது.

படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் அரசாங்கம் நடைமுறை சிவில் நிர்வாகத்தையும் சட்ட ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு முற்படுகையில் இக்குழுக்களின் பங்கு பணியை கட்டுப்படுத்தும் போது இக்கருத்து சிறிது வலுவடையலாம்.

விடுதலைப் புலிகளைப் பலவீனப்டுத்திய பின்னர் மற்றைய அமைப்புகளின் அந்தஸ்து பற்றியதாக உள்ளதேயானாலும் இரண்டாவது கருத்து முன்னையதை விட மிகவும்வேறுபாடானது. இக்கருத்தை முன்வைப்பவர்கள் தம்மை இராணுவ அரசியல் பொருளாதார உள்ளடக்கம் கொண்ட ஆற்றலுள்ளவர்களாக கட்டியெழுப்புவது பயனற்றதென்றும் அதேவேளை மாகாண சுயாட்சியை இந்தியாவின் போதியளவு இராசதந்திர அழுத்தத்துடன் ஜனநாயக முறையால் அடையமுடியும் என்பதுதான். ஜனநாயக அரசியல் பலம் இருந்தாலே போதுமானது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

நவீன அரசியல் போராட்டத்தில் ஆயுதங்கள் வைத்திருப்பது அவசியமற்றது. தமிழ் மக்களின் உரிமைகளுக்கு இணை உத்தரவாதியான இந்தியாவின் பங்களிப்பை வடகிழக்கில் ஜனநாயக சூழ்நிலையாலேயே மீள உருவாக்க முடியும் என தர்க்கிக்கிறார்கள்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளை சாராத குழுக்களின் அந்தஸ்து ஜனநாயகஅரசியலும் இந்தியாவைப் பெருமளவில் நம்பியிருப்பதிலேயும் தங்கியுள்ளது. இக்கருத்து சிறிலங்கா தமிழர் பிரச்சினையில் இந்தியா தற்சமயம் கொண்டுள்ள நிலையை தெளிவாக விளக்குகிறது. அதாவது தமிழ் தீவிரவாதிகளை ஆயுத பாணிகள் ஆக்கினால், இந்தியாவில் தமிழ் அதிதீவிரவாதத்தை உருவாக்கும். சிறிலங்காவில் செயலுரிமையை நிலைநாட்டுதற்கு சிறந்தவழி மாகாண சுயாட்சியில் கூடிய செயலுரிமையை விரும்பும் நியாயபூர்வமான சனநாடகவழியிலான தமிழ் குழுக்களுக்கு அரசியல் ஆதரவு அளிப்பதற்கும்.

எவ்விதமாயினும் வடகிழக்கை இணைப்பது பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இறுதி முடிவே இக்குழுக்களுக்கு மிக முக்கிய சிக்கலை உருவாக்கும்

அச்சிக்கலின் உருவாக்கம் இவ்விதமானதாகும். விடுதலைப் புலிகளைச் சாராத அநேகமாக ஈ.பி.டி.பி யை தவிர்ந்த அனைத்துக் குழுக்களும் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள வடகிழக்கு மாகாணங்களின் இணைப்பை தெரிவுக்குழுவின் பெரும்பான்மையினரின் முடிவு இல்லாமல் செய்யுமேயானால் அதை தாம் எதிர்ப்போம் எனக்கூறுகிறார்கள்.

ஆனால் அவ்விதம் அவர்கள் செய்வார்களேயானால் அது விடுதலைப்புலிகளுக்கு மிகுந்த அனுகூலத்தைக் கொடுக்கும். ஏனெனில் அரசாங்கத்துடன் மிகநெருக்கமாக இயங்கிவந்து, விட்டுக் கொடுக்கும் தீர்வுக்கு இணங்கி தயாராகியிருந்த குழுக்கள் பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் முன்வைக்கப்பட்ட தீர்வை ஏற்காதுவிட்டால் புலிகள் போரைத் தொடர்ந்து நடத்தவேண்டிய அரசியல் அத்தியாவசியம் தமக்கு உண்டு எனக் கூறுவர். அவ்வித நிராகரிப்பு அல்லது தெரிவுக்குழுவின் பெரும்பான்மை கருத்துக்கெதிரான விமரிசனம் கூட விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளுக்கு சர்வதேச அரங்குகளில் பாரிய அரசியல் நியாயத் தன்மையை ஏற்படுத்திக் கொடுக்கும். இதிலும் பாரதூரமானது என்னவென்றால், விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு சரியென மக்களுக்கு மெய்ப்பித்துக்காட்டும்.

இணைப்பில்லாத தெரிவுக்குழுவின் முடிவை ஏற்காதுவிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி மற்றைய குழுக்களுக்கு முழுமையாக தெரியும். வடக்குக்கிழக்கு மாகாணங்களுக்கிடையே வெலிஓயாவில் பாதுகாப்பு ஒழுங்குகளையும், அரண்க

ளையும் அமைத்துள்ள இராணுவத்திற்கும் இக்குழுக்களுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் எவ்விதமிருக்கும்? இணைப்புக் கோரிக்கை வெலிஓயா இராணுவ வலயத்தை இறுதியில் அகற்றுவதையே குறிக்கும் எனவே இணைப்பு வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டுடன் முசுலிம்களுக்கும், சிங்களவர்களுக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இச்சிக்கலில் விட்டுக் கொடுப்புடனான ஓர்நிலையை உண்டாக்க முயல்கிறார்கள்.

ஆனால் இன்றும் உத்தியோகப்பற்றற்ற நிலையில் விவாதிக்கப்பட்டுவரும் இந்த விட்டுக்கொடுப்பு அடிப்படையிலான உத்தேசத் தீர்வு அவர்களின் எதிர்காலத்தை காப்பாற்றுமா?

# கிளர்ச்சியாளர்களின் ஐந்து தங்ககங்களை (முகாம்) இராணுவம் கைப்பற்றியது

-றோகன் குணசேகரா-

(ஐலண்ட்– 22. 03. 1992)

வரண்ட பிரதேசத்திலுள்ள அடர்ந்த காடுகளினூடே செல்வது மிகவும் கடினமானதாகவும், சோர்வுதரக்கூடியதாகவும் இருந்தது. 20 அல்லது 30 யார் தூரத்தில் உள்ளவற்றையும், சில இடங்களில் இதற்குக் குறைந்த தூரத்தில் உள்ளவற்றயுமே பார்க்கக்கூடியாதயிருந்தது. மணலாற்றுக் காடுகளின் மத்தியில் உள்ள விடுதலைப் புலிகளின் தளங்களை அழிப்பதற்கு அடர்ந்த செடிகொடிகளின் ஊடே சென்ற 'ஒபறேசன் சிக்சர்'' (Operation Sixer) என்ற இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரைக் 'கண்ணுக்குத் தெரியக்கூடிய இடத்தில் இருங்கள்' என ஒரு மேலாளர் எச்சரித்தார்.

வடகிழக்கு கடற்கரையில் தூரத்திலிருக்கின்ற புறக்காவலரணுக்கும் மூன்று வாரங்கள் நீடித்த மின்னல் வேக (Lighting Strike) இராணுவ நடவடிக்கையின் போது சென்ற ஆண்டு அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் 14 தளங்கள் அமைந்துள்ள இடத்திற்குக் கிழக்கேயும், கொக்குத்தொடுவாய்க்கு வடக்கேயுள்ள காட்டுப்பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் தளங்களே இராணுவத்தினரின் இலக்காகவிருந்தது. விடுதலைப் புலிகள் சென்ற இரண்டு வாரங்களாக இந்தப் பகுதியில் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு வருகின்றார்கள் எனப் புலனாய்வுத் துறையினர் மூலம் கிடைத்த தகவல்களை அடுத்தே சென்ற செவ்வாய்க்கிழமை கொக்குத்தொடுவாயிலிருந்து 'ஒபறேசன் சிக்சர்' என்ற இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தங்களது புறக்காவலரண் ஒன்றின் மீது பாரிய தாக்குதல் நடவடிக்கையொன்றை மேற்கொள்ள விடுதலைப்புலிகள் தயாராகிறார்கள் என இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கருதினர்.

கரந்தடிப்படையினர் தளங்களை அமைப்பதற்கு உகந்த இடமாக வடகிழக்கிலுள்ள காடுகளிலுள்ள தரைவிளங்குகின்றது.




'வெலிஓயா' எல் வலயத்தின் எல்லை



தரையில் நடமாடுவதை வானிலிருந்து பார்க்க முடியாத வகை யில் காடு அடர்ந்திருக்கிறது. வானூர்தி ஓட்டிகளால் விடுதலைப் புலிகளின் பதுங்குகுழிகளையும், குடிசைகளையும் பார்க்க முடியா திருக்கின்றது.

அரி மற்றும் குமரன் ஆகிய முதல் இரண்டு தங்ககங்களை தாக்கியபோது விடுதலைப் புலிகள் மிகக் கடுமையாக எதிர்த்த னர் எனக் காட்டினாடே நிலச்சமன்பொறி (புல்டோசர்) உதவி யுடன் ஊடுருவிச் சென்று ஆறு படையணி பிரிகேட்டுக்கு தலை மைதாங்கிய பிரிகேடியர் றோகன் தளுவத்த (Brigadier Rohan Daluwatte) கூறினார். சரமாரியான ஆர். பி. ஜி பீரங்கிகள், எறி குண்டுகள் மற்றும் அருண் எறிகணைகள் ஆகியவற்றைப் படை யினர் சந்திக்க வேண்டியிருந்தது என அவர் மேலும் கூறினார்.

இந்த தங்ககங்களை அமைப்பதற்கு விடுதலைப் புலிகள் பெருந்தொகையான பணத்தை செலவழித்துள்ளதால் இவற்றைக் கைப்பற்ற எடுக்கும் எந்த ஒரு முயற்சியையும் அவர்கள் எதிர்க் காது இவற்றை விட்டுச் செல்லமாட்டார்கள் என வடபிராந்திய இராணுவப் பிரிவுக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல்டென்சில் கொப்பேகடுவ கூறினார். (1-ம்டிவிசன் படையணிபொறுப்பாளர்) தாங்கள் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இருக்க முடியாத ஒரு நிலை தோன்றினால் இங்கு வந்து தஞ்சம் அடையலாம் என்ற நோக்கிலேயே விடுதலைப் புலிகள் இந்தக் காடுகளுக்குள் தளங் களை அமைத்துள்ளார்கள் என வியாழக்கிழமை போர் முனை க்கு வருகைதந்து முப்படைத்தளபதி ஜெனரல் கமில்ரன் வன சிங்க கூறினார்.

தண்ணீரே இந்தப் பிரதேசத்தில் பெரும் சிக்கலாக உள் ளது. நிலம் வரண்டு போய் இருக்கின்றது. அடர்ந்த காட்டில் நெடிது வளர்ந்திருக்கும் மரங்கள் குடைபோல் சூரிய வெப்பத் திலிருந்து பாதுகாப்பு நல்குகின்றன. ஆனால் வெளியே வந்ததும் வெப்பம் தாங்க இயலாது இருக்கின்றது. படையினருக்கு இர ண்டு போத்தல் குடிநீரே கொடுக்கப்பட்டது. பல இன்னல்களுக்கு மத்தியில் காட்டை ஊடுருவி முன்னேறிச் செல்லும் படையின ருக்குப் பின்பக்கமாகபோர்முனையில் அவர்களுக்குத் தேவைப்ப டும் தண்ணீர் கொண்ட தாங்கிகள், உணவு மற்றும் வெடிமருந்து அடங்கிய உழவு இயந்திரங்கள் மற்றும் அவர்களுக்குத் தேவை யான வாகனங்கள் சென்றன.

அதிரடிப்படையினரை உள்ளடக்கிய மூன்று பட்டாயலின் காலாட்படை அணிகளைக் கொண்ட இந்தப் பிரிகேட்படையணியில் கவசவாகனத்தொகுதி, பீரங்கித்தொகுதி ஆகியவற்றுடன் இராணுவப் பொறியியலாளர்கள் சமிக்ஞை மற்றும் இராணுவ மருத்துவர் ஆகியோரும் இருந்தனர். கடல்மார்க்கமாக விடுதலைப்புலிகள் தப்பிச் செல்வதைத் தடுக்கவும் அவர்களைப் பலப்படுத்த கடல்மார்க்கமாக அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய உதவியைத் தடுக்கவும், பீரங்கிப்படகுகளின் உதவியும் மற்றும் சியாமார்செட்டி குண்டு வீச்சு வானூர்திகளின் உதவியும் வானூர்திகளின் உதவியும், பீரங்கிபொருத்திய உலங்கு வானூர்திகளின் உதவியும் படையினருக்குக் கொடுக்கப்பட்டன.

ஜனகபுர மற்றும் கஜபுர ஆகிய இராணுவமுகாம்களுக்கு ஊடாக அமைந்திருக்கும் மணலாற்றுக் குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பளிக்கும் இராணுவ முன்னணிப் பாதுகாப்பு எல்லையின் கிழக்கு முனையில் அமைந்துள்ள கொக்குத்தொடுவாய் கோவில் பிரதேசத்திலேயே !ஒப்பறேசன் சிக்சர்! என்ற இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முன்னணிப்பாதுகாப்பு எல்லைக்கு வடக்கேயுள்ள மணலாற்றுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட தளங்களை அழிப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும். 1அல்லது 1/2கிலோ மீற்றர் தூர இடைவெளியில் விடுதலைப்புலிகள் தங்ககங்கள் அமைந்திருப்பதால் அவருடைய எந்த ஒரு தங்கமும் தாக்கப்படும்போது மற்றதங்ககங்களிலிருந்து அவர்களுக்கு உதவி கிடைக்க வசதியாகவிருக்கின்றது. இருபது சதுரமைல் நிலைப்பரபபில் அமைந்துள்ள 14 தளங்களுக்கு இந்த தங்ககங்கள் துணையாக அமைக்கப்பட்ட தளங்களாகவே விளங்குகின்றன.

விடுதலைப்புலிகள் வடக்கிலிருந்து தெற்குக்கு நடமாடுவதை முன்னணிப் பாதுகாப்பு எல்லைகள் பெரிதும் கட்டுப்படுத்தியுள்ளது. அவர்களுடைய வழங்கல் பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் இந்த எல்லையில் அமைந்துள்ள அரண்களையே விடுதலைப் புலிகள் தாக்குவதாக இராணுவத் தளபதிகள் கூறுகின்றனர். விடுதலைப் புலிகள் வாகனங்கள் மற்றும் படகுகள் மூலம் பெரிய எண்ணிக்கையில் நடமாடுவது தடுத்துநிறுத்தப்பட்டுள்ளதாகவும் ஆனால் சிறியஎண்ணிக்கையான விடுதலைப்புலிகள் யாருக்கும் தெரியாது தொடர்ந்தும் நடமாடுவதாகவும்அவர்கள் கூறுகின்றார்கள். விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும் அவர்களிடமிருந்து எழுக்ககூடிய தாக்குதலைத் தடுக்கவும் இந்தப்பகுதி

யை தனது ஆதிக்கத்தில் வைத்திருப்பதே இராணுவத்தின் குறிக்கோளாக இருக்கின்றது. இந்தக்குறிக்கோள் நிறைவேற ஒன்றில் இராணுவத்தினர் முன்னணிப் பாதுகாப்பு எல்லை முன்பாக உள்ளபகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டும்அல்லது சென்றவாரம் மணலாறில் மேற்கொண்ட தாக்குதல் போன்ற தாக்குதல்களை விடுதலைப் புலிகளுக்கு எதிராக அடிக்கடி மேற்கொள்ள வேண்டும் என இராணுவமேலாளர்கள் கூறுகின்றார்கள்.

ஒரு தொகுதிப் படையினர் விடுதலைப் புலிகள் மீது விரிந்து தாக்குதலை மேற்கொள்ளும் அதே வேளையில் மற்றவர்கள் அவர்களுடைய தொடர்புகளைத் துண்டிப்பதற்குப் பின்பக்கம் செல்லத்தக்கவகையில் இந்த சமர் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்தது. கஜபுர இராணுவ தங்ககத்திலிருந்து நெடுங்கேணிப் பாதையூடாகவே இராணுவத்தினர் முன்னேறிவருவர் என விடுதலைப் புலிகள் எதிர்பார்த்தனர். ஆனால் படையினர் நிலச்சமன் பொறியின் துணையுடன் காட்டைச் செப்பனிட்டுக்கொண்டு முன்னேறினர். விடுதலைப் புலிகள் அவர்கள் மீது கடுமையான எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இராணுவத்தினரின் சீரமைக்கப்பட்ட உழவுஇயந்திரம் ஒன்றின்மேல் விடுதலைப் புலிகளுடைய மோட்டார்க் குண்டு ஒன்று காத்திரமாகப்பிரயோகமாக வீழ்ந்தது ரி 86 ரகக் காலாட்படைச்சண்டை வாகனமொன்றின் பாதுகாப்பிடத்தைத் துளைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளின் ஆர் பி யி. ஒன்று சென்றது. இதில் ஒரு வீரர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமுற்றும் மற்றும் இருவரின் செவிப்பறைகளும் பழுதடைந்து அதற்குள்ளிருந்த யாவரும் எரிகாயங்களுக்குள்ளானார்கள். ஒரு ரீ85 சுழற்பட்டி ரகக் காலாட்படை வாகனமும் ஆர் பி யி துண்டுகளால் சிறிது சேதமடைந்தது.

போர்களில் இன்றுவரை ஈடுபடுத்தாத ரீ 55ரகத் தாங்கிகளையும் இப்போது பாவனையிலிருக்கும் ரீ85 ரகக்காலாட்படைப் போர் வாகனங்களையும் எதிர்த்துப் போரிடத்தக்கவகையில் விடுதலைப்புலிகள் தாங்கி எதிர்ப்புப் படைப்பிரிவொன்றை உருவாக்கியுள்ளார்கள். அரி, குமரன் ஆகிய தங்ககங்களைக் கைப்பற்றுவதற்காக தென்னந்தோப்பில் நடைபெற்ற சமரின் போது ஏழு போராளிகளையும் இரண்டு செலுத்தும் கருவிகளையும் கொண்ட மூன்று ஆர்.பி.யி பிரிவுகளை விடுதலைப்புலிகள் களத்தில் நிறுத்தியிருந்தனர். விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்பட்ட ஆற்றல்வாய்ந்த தாங்கி எதிர்ப்புக்குண்டுகள், படையினரால் பயன்படுத்தப்பட்ட கவசவாகனங்களையும் தாங்கிகளையும்

இலகுவாகத் தாக்கக்கூடினவாக இருந்தன. விடுதலைப்புலிகளுடைய தாக்குதல்களால் புதிய கவசவாகன வண்டிகள் பாதிப்படையக்கூடியவையாயிருந்தபோதிலும் குண்டைத் திருப்பி அனுப்பக் கூடிய பாதுகாப்புக் கவசம் ஒன்றை இவற்றுடன் இணைப்பதன் மூலம் இவற்றின் பாதுகாப்பு நிலையை உயர்த்த முடியும். உதிரிப்பாகங்கள் இல்லாததன் காரணமாக இதன் கொள்வனவைப் பலர் முன்னர் விமர்சித்திருந்தபோதிலும், இத் தாங்கிகளின் செயற்றினில் தாங்கள் திருப்தியடைந்திருப்பதாக இந்தச் சமர்முனையில் பங்காற்றிய தாங்கிகளுக்குப் பொறுப்பான மேலாளர்கள் கூறுகின்றனர் இவ்வாகனங்களை உற்பத்தி செய்த நிறுவனத்தில் இருந்துவந்த குழுவொன்று, தற்பொழுது இந்த வாகனங்களைச் சீர்செய்து வருகின்றது இரவில் பார்க்க கூடியஉள்ளகச் செவ்வங்கள்(*Infra-red*)இந்த வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ளதால், கவசவாகனப்படை அணியினர் முதன்முதலாக இரவில் போரிடக்கூடிய ஆற்றலைப் பெற்றுள்ளனர்.

முதன்முதலாக 'ஒபறேசன் சிக்சர்' என்ற இராணுவ நடவடிக்கைக்குப் பின் பயன்படுத்தப்பட்ட இந்தப் புதிய கவச வாகனங்களின் உபயோகத்தைப் பற்றி இராணுவ மேலாளர் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளனர். இருள்சூழ்ந்த அதிகாலை வேளையில் விடுதலைப்புலிகளின் தளங்கள் மீது இராணுவத்தினரின் கவசவாகனங்கள் தாக்குதலை நடாத்தியது.விடுதலைப் புலிகளை அதிர்ச்சியடையச் செய்தது. இச்சம்பவம் வன்னியிலே நடந்தது. போரில் ஈடுபடுத்தி கவசவாகனங்கள் பெற்றுத்தந்த வெற்றிக்குக் காரணமாயிருந்தது பாரிய ஆயத்தங்களும், ஒத்திகைகளுமாகும்.

விடுதலைப் புலிகளால் இறுதி நேரம்வரை எதிர்த்துப் போராடும்படி பணிக்கப்பட்டதும் கடைசிநேரத்தில் அவர்களால் கைவிடப்பட்டதுமான சில தங்ககங்களே சென்றவாரம் தாக்கப்பட்டன. இந்த தங்ககங்களுக்குள் சென்ற படையினர் விடுதலைப்புலிகள் விட்டுச்சென்ற கறுவையக் கண்டனர். சுமார் 125 பேர்களுக்குச் சாப்பாடு கொடுக்கக்கூடிய அளவு பருப்பு ஒரு தங்ககத்தில் இருந்தது. இந்தப் பகுதியில் சுமார் 300லிருந்து 400 வரையிலான விடுதலைப்புலிகள் நடவடிக்கையிலீடுபட்டிருக்கலாமென இராணுவப் புலனாய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளார்கள். அரி மற்றும் குமரன் ஆகிய தங்ககங்களை கைப்பற்றுவதற்கு நடந்த சமரில் ஒரு மேலாளரையும் 27 வீரர்களையும் இராணுவம் இழந்ததுடன் 34 வீரர்கள் காயமடைந்தனர்.காய

முற்றவர்களில் பதின்மூன்று பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர். விடுதலைப்புலிகளின் பதினொரு உடல்கள் கைப்பற்றப்பட்டதுடன், ஐந்து பிரிவுகளின் தலைவர்கள் உட்பட 100 போராளிகள் இறந்ததாக அவர்களுடைய வானொலியை இடைமறித்துக் கேட்டபோது அறியமுடிந்தது.

நாலாயிரம் தொடக்கம் ஐயாயிரம் மீறறர் வரை அகலமான பிரதேசத்தில் படையணி 4 கிலோ மீற்றர் தூரம்வரை முன்னேறிச்சென்று வியாழக்கிழமை வரை விடுதலைப்புலிகளின் ஐந்து தங்ககங்களை கைப்பற்றியது. பெரும் எண்ணிக்கையான மிதிவெடிகளை விடுதலைப்புலிகள் புதைத்து வைத்திருந்த போதும், நிலச் சீர் பொறி மூலம் காட்டை அழித்துக்கொண்டு சென்றபடியால் இராணுவத்தினர் அவற்றில் இருந்து தப்பினர். வியாழக்கிழமை மாலை நடைபெற்ற பெரும் மோதலில் 55 விடுதலைப்புலிகளும், அதிரடிப்படையினர் உட்பட 9 இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். படையணி காட்டினூடே வடக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளையில், விடுதலைப் புலிகள் மணலாற்றுக் காட்டிலுள்ள தங்கள் தங்ககங்களைப் பாதுகாப்பதற்கு ஆனையிறவுக்கு தெற்கேயுள்ள தங்கள் தளங்களிலிருந்து உதவிகோரியிருந்தனர்.

# திரு. திலக் (Tilak) பின்னணியில் இருந்துகொண்டு 'கெல உறுமய' என்ற அமைப்பை உருவாக்குகின்றார்

(சண்டே டைம்சு 8-3-1992)

வெறும் பேச்சளவில் இல்லாது உண்மையாகவே 'கெல உறுமய' என்ற அமைப்பு சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் உருவாக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக்கட்சி மற்றும் அரசாங்கம் ஆகியவற்றிலிருந்து ஆரம்பத்தில் எழுந்த எதிர்ப்புகளை முறியடித்த இந்த அமைப்பு தனக்கென ஒரு யாப்பை உருவாக்கியதுடன் உத்தியோகத்தர் களையும் தெரிவுசெய்து இப்பொழுது சுறுசுறுப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

திரு. தொண்டமான் அவர்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்வைத்த திட்டத்தை எதிர்ப்பதை முக்கியமான நோக்கமாகக் கொண்டே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

சிங்களமக்களைப் பாதுகாக்கும் அமைப்பு (Sinhala Arashaha Sanvithanaya) மற்றும் கெல உறுமய ஆகியன காட்டிய கடும் எதிர்ப்புக் காரணமாகத் திரு. தொண்டமான் அவர்க ளுடைய திட்டம் இடை நிறுத்தப்பட்டிருந்த போதிலும் எதிர் காலத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை முன் னெடுத்துச் செல்வதற்கு 'கெல உறுமய' வை உருவாக்க இதன் அமைப்பாளர்கள் தீர்மானித்தனர்.

இந்த நோக்கைக் கருத்திற் கொண்டு இருபத்தெட்டு சுதந் திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக்கட்சி யைச் சேர்ந்த முன்னாள் துணை அமைச்சர்ஒருவர், புத்தபிக்குகள் ஆகியோரை உள்ளடக்கிய நூறு உறுப்பினர்கள் இந்தஅமைப்பை உருவாக்கத் திரு.யினதாச நியதபால அவர்களின் இல்லத்தில்பெப் ருவரி மாதம் 3-ம்திகதி செவ்வாய்க்கிழமை கூடினர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் யினதாச நியதபால, திலக் கருணாரத்ன, எசு.எல் குணசேகரா, கேமகுமர நாணயக்கார, டீ, எம். இரத்ன, நொயல்பத்மசிறி காரிய

வாசம், டீ. பீ. விக்கிரமசிங்க, இயரத்ன தென்னக்கோன், கப்பங்கம், நெவில் பர்ணாந்து, எசு. டீ. ஆர், இயரத்ன, எம். பி. கே டி. எசு. குணவர்த்தன, டிக்சன் பெரேரா, எச். யீ. சிறிசேன, சத சேன சகலசூரிய, எசு. பி. நாலின்ன, லயனல் இராசயக்ச, எசு. ஆர். எம். மத்தும பண்டார, பேர்ட்டி திசநாயக்கா எல். ஏ. பி. பெரேரா, யகத்பாலசூரியா, டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன, கபில் அபயரத்தின, சமல் ராசபக்ச, முனிதாச பிரேமச்சந்திர மற்றும் திருமதி கேமா இரத்னாயக ஆகியோர்களே இக்கூட்டத்தில் பங்குபற்றியவர்களாவர். இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் ஆனந்த தசநாயக்காவும், எச். லியனகே அவர்களும் கூட்டத்துக்குச் சமூகமளிக்க முடியாமைக்கு மன்னிப்புக்கோரி கடிதம் அனுப்பியிருந்தார்கள். இக்கூட்டத்தில் பங்குபற்றியவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் துணையமைச்சர் திரு. எம். குலரத்னவும் ஒருவர் ஆவர்.

இக்கூட்டத்தில் 'கெல உறுமய' வின் யாப்பு ஏற்கப்பட்டதுடன் உத்தியோகத்தர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பின்வரும் நோக்கங்களை ஊக்குவிப்பதற்கும், அடைவதற்கும் ஏதுவாக சட்டபூர்வமான வழிமுறைகள் யாவற்றையும் மேற்கொள்ளவேண்டும் என இந்த யாப்பில் கூறப்பட்டுள்ளது.

அ) இலங்கையின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு. ஒற்றையாட்சி முறை ஆகியவற்றைப் பாதுகாத்தல்.

ஆ) இனவாதத்தை ஒழித்தல், மற்றும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் வகுப்புவாதத்தை வளர்க்க உதவத்தக்க வகையிலும் இனரீதியாக இலங்கையின் எந்தப்பகுதியையும் பிரிக்கத்தக்க வகையில் இலங்கை அரசாங்கம் சட்டத்தைக் கொண்டுவர மேற்கொள்ளும் எந்தவிதமான நடவடிக்கையையும் கடுமையாகவும், விட்டுக்கொடாதும் எதிர்த்தல்.

இ (1) எந்த மொழியைப் பேசினாலும், அவர்கள் எந்தமதத்தைச் சார்ந்தவர்களானாலும், அவர்கள் என்ன அரசியல் கோட்பாட்டை கடைப்பிடிப்பவர்களானாலும் அவர்கள் என்ன வர்க்கத்தைச் சார்ந்தவர்களானாலும் இலங்கை, இங்கு வாழும் எல்லா இனங்களினதும் தாயகமாகும்.

(2) எந்த ஒரு இனத்தினதோ அல்லது இனங்களினதோ மரபுவழித் தாயகமென இலங்கையின் எந்தவொரு பகுதியையும் யாரும் கருதக்கூடாது.

(3) இலங்கையில் வாழும் ஒவ்வொரு இனம், மொழி, மதம் மற்றும் அரசியல் கோட்பாடு ஆகியவற்றைச் சார்ந்த மக்களுக்குச் சம உரிமை இருப்பதுடன், இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் வாழ உரிமையுடையவர்கள்.

ஈ) பிரிவினை கோரும் பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்குள்ளாக்கப்பட்ட மற்றும் அவர்களால் தாக்கப்படக்கூடிய நிலையிலுள்ளவர்களுமான வடக்கு கிழக்கு மற்றும் அவற்றின் எல்லையில் அமைந்துள்ள மாகாணங்களில் வசிக்கும் மக்களின் உரிமைகளுக்கும், முன்னேற்றத்துக்கும், நலன்களுக்கும் உத்தரவாதமளித்தல்.

களுத்துறை மாவட்டத்திலுள்ள முசுலிம் பிரதேச சபையின் தலைவரான திரு. எம். இசுமாயில் இந்த அமைப்பின் உதவிச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டதை கருத்தில் கொள்ளும் எவரும் இதை ஒரு இனவாத அமைப்பாகக் கருதமாட்டார்கள்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரும் களுத்துறை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான திரு. திலக் கருணாரத்ன, கெல உறுமய என்ற அமைப்பை உருவாக்குவதன் மூலம் கட்சியின் தலைமைப்பதவியை அடைய முயல்கின்றார் என்று எழுந்தசான்றில்லா செய்தியை இந்த அமைப்புமுறியடித்தது இந்தஅமைப்பின் உத்தியோகத்தர்களாகத் திரு. நியதபால தலைவராகவும், முன்னாள் அமைச்சரான திரு.எசு. டி. ஆர். ஜெயவர்த்தனா, உபதலைவராகவும் திருவாளர்கள் கருணாரத்னாவும், கேமாநாணயக்காராவும், இணைச் செயலாளராகவும், ''இறைமையுள்ளநாட்டுக்கு'' என்ற தலைப்பைக் கொண்ட புத்தகத்தை எழுதியவரும், திரு, மகிந்த குணரத்னாவின்மகனும், சட்டத்தரணியுமான திரு. மைத்திரி குணரத்னா உதவிச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்த அமைப்பை உருவாக்கியதன் பின் அதன் முதலாவது கூட்டத்தை பாராளுமன்ற எதிர்க்கட்சிக் கொறடாவான திரு. நிச்சர்ட் பத்திரானாவின் தேர்தல் தொகுதியான தென்மாகாணத்திலுள்ள அக்மீமனையில் மார்ச் மாதம் 14 ம் திகதி நடாத்தத் தீர்மானிக்கப்பட்டது. இந்த அமைப்பைக் கடுமையாக விமர்சித்து வந்த திரு. பத்திரானாவுக்கு இதுபெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

இந்த அமைப்பு இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்குத் தனது தொகுதியில் கூட்டம் நடாத்துவதாலும் அதில்

தான் பங்குபற்றாதிருப்பதாலும் ஏற்படக்கூடிய விளைவுகளைத் திரு. பத்திரானா நன்கு உணர்ந்திருந்தார்.

உடனடியாக நடவடிக்கையில் இறங்கிய திரு. பத்திரான இக்கூட்டத்தை தன்னுடைய தேர்தல் தொகுதியில் நடாத்தவேண்டாம் எனப் பாராளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக் கொண்டார். இதன் பலனாகத் தனது முதலாவது கூட்டத்தை அக்மீமனையில் நடாத்துவதில்லை எனவும் ஆனால் வேறொரு தினத்தில் அவ்விடத்தில் கூட்டம் நடாத்தப்படுமென்றும் செல உறுமய வியாழக்கிழமை தீர்மானித்தது.

இதேவேளை சுதந்திரக்கட்சியும் தன்னை மீண்டும் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

மார்ச் மாதம் 16 ந் திகதியிலிருந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும் பாதயாத்திரை, தொடர்ச்சியாக 18 நாட்கள் நடாத்தப்பட்டு கதிர்காமத்தில் கூட்டம் ஒன்று நடாத்துவதுடன் முடிவடையும் எனச் சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது. இந்தக் கட்சி அரசியலில் தீவிர அக்கறை கொண்டிருப்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

மார்ச் மாதம் 4 ம் திகதி புதன்கிழமை கூடிய சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுவும் இச்செயல் திட்டங்களை ஏற்றுக்கொண்டது.

கொள்கைத்திட்ட நகலுக்கு அங்கீகாரம் பெறமுயன்ற போதே இக்கட்சி பிரச்சினையை எதிர்நோக்கவேண்டியிருந்தது.

எதிர்க்கட்சிப் பதில் தலைவரான திரு. அனுரா பண்டாரநாயக்கா இலங்கைக்கு மார்ச் மாதம் 10 திகதி திரும்பி வரும் வரை இதை இடைநிறுத்திவைக்கும்படி இக்கொள்கைத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது திரு. காலிம் இசாக் யோசனை கூறினார்.

கட்சியின் யாப்பு இதைப்போன்ற கொள்கைத்திட்டமொன்றை ஏற்பதற்கு மத்திய குழுவுக்கு அங்கீகாரம் வழங்கவில்லை எனப் பல உறுப்பினர்கள் வாதிட்டார்கள்.

எந்த ஒரு நகல் திட்டமும் யாப்பின் 12 வது அத்தியாயத்தின் கீழுள்ள 3 வது பிரிவின்படி நிர்வாகக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதன்பின் 17 ம் அத்தியாயத்தின் கீழுள்ள எவ் (F) சரத்

தின்படிஅதுபொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என அவர்கள் வாதிட்டனர்.

தற்போதுள்ள நிலையில் செயற்குழுவும் சரியான முறையில் அமைக்கப்படவில்லையெனவும் புதிய தேர்தல் நடக்கும்வரை தான் குழுவின் தீர்மானங்களை ஏற்று நடக்கப்போவதில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மத்தியகுழு உறுப்பினர் ஒருவருக்குக் கூறியுள்ளார்.

கடந்த காலத்தில் அரசியல் விவகாரங்களிலும் பார்க்க உட்கட்சிப் பூசல்களினால் அவதியுற்றிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இவையெல்லாம் சிறிய விவகாரங்கள் ஆகும்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் இந்தக்கட்சி எப்படித் தனக்கு எதிரான கொள்கைப்பரப்புகையை முறியடித்து பொது மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# 'கெல உறுமய' கருத்துமுரண்பாடு கைவிடப்பட்டது

- றோகன் குணசேகரா - (ஐலன்ட் *08-03-1992)*

*அண்மையில் சகல இன மக்களினதும் எதிர்ப்பைப் பெற்ற 'கெல உறுமய' என்ற அமைப்மைப் பற்றிய கருத்து முரண் பாட்டை மேலும் தொடர்வதில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு தீர்மானித்துள்ளது. இந்த அமைப்பு இன வெறுப்பைத் தூண்டுவதும் சிறுபான்மையினரின் இனப்பிரச் சினை போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முட்டுக்கட்டை யாக உள்ளதென்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.*

*இந்த அமைப்பின் தீபமாக விளங்கும் திரு. திலக் கருண ரத்ன அவர்களை நேரில் செவ்விகண்டேன். இந்நேர் காணலின் போது திரு திலக் கருணாரத்ன தங்கள் நோக்கங்கள், அச்சங் கள் மற்றும் தற்பொழுது எரிமலைபோல் வெடிக்கும் நிலையில் உள்ள இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தங்கள் நினைப்பு பற்றி விபரிக்கின்றார்.*

கேள்வி:- 'கெல உறுமய' என்ற அமைப்பு இனக்காழ்பை அடிப்படையாகக் கொண்டது எனக் குற்றஞ்சாட்டப்படுகின் றது. 'கெல என்ற பதம் சிங்கள வல்லாதிக்கத்தை எடுத் துக் காட்டுகின்றது. இக் குற்றச்சாட்டுகளுக்கு உங்கள் பதில் என்ன? அத்துடன் பல்லின மக்களை உள்ளடக்கிய ஜனநாயகக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையுடன் உங்கள் கெல உறுமய எப்படி ஒத்துப் போகின்றது?.

பதில்:- கெல என்ற பதம், விசயன் இலங்கைக்கு வரமுன் இலங்கையிலிருந்த நான்கு இன மக்களைக் குறிக்கின்றது - நான்கு கெலக்கள். தற்போது நாங்கள் இந்தக் கெலவின் கருத்தை விரிவுபடுத்தி இங்கே வாழும் சகல சிக்கல்களை யும் உள்ளடக்கியுள்ளோம். அவர்கள் சிங்களவரா, தமிழரா, முசுலிம்களா, மலாயர்களா, பறங்கியர்களா, என்பதல்ல, எல்லோரும் இந்த நாட்டு மக்களாக இருக்கவேண்டும். அது ஒன்று தான் எங்கள் எதிர்பார்ப்பாகும். சகல மக்களும் அவர்கள் எந்த இனத்தையோ, மதத்தையோ, சாதி யையோ அல்லது அரசியலில் அவர்கள் எவ்விதக் கொள்கை

யைக் கடைப்பிடித்தாலும், அவர்கள் அனைவரும் சிறிலங்கா தங்கள் தாயகம் என்பதை ஏற்றுக்கொள்வதுடன், எந்த ஒரு பகுதியும் எந்த ஒரு சாதியினதோ அல்லது இனத்தினதோ மரபு வழித்தாயகம் என்பதாகக் கருதாது சகல இன மக்களுக்கும் சம உரிமை இருக்கவேண்டும் என்பதே எமது கொள்கையாகும்.

(2) கேள்வி:- அண்மையில் நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கட்சி பிளவுபடாதிருப்பதை நோக்கமாகக் கொண்டு கெல உறுமய குழுவினரைத் தடையின்றித் தங்கள் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல விடுவது அல்லது அவர்களின் செயல்பாடுகள் குறித்து பேசாமல் இருப்பது என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப்பீடம் தீர்மானித்தது என்று பேச்சு அடிபடுகிறதே?

பதில்:- இதில் உண்மையில்லை. தங்களுக்கு கெல உறுமயவோடு எவ்வித கருத்துவேறுபாடும் இல்லையென்று பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவும், பதில் தலைவர் கீர்த்தி இரத்னாயக்காவும் கூறுகின்றனர். எமது அமைப்பு ஓர் அரசியல் அமைப்பல்லவாதலால் நாங்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என நாங்கள் எப்பொழுதும் கூறிவந்துள்ளோம். சில மத்திய குழு உறுப்பினர்களால் இந்தச் சிக்கல் எழுப்பப்பட்டது. ஆனால் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இது கட்சியைப் பலப்படுத்த உதவும் என நினைக்கின்றார்கள். எந்தவொரு அரசியல் அமைப்பும் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் செயல்படவேண்டும் என்றும் கட்சிக்குள் வேறு அரசியல் அமைப்புக்கள் இயங்க இடமளிக்கப்படமாட்டாதென்றும் சுற்றறிக்கை மூலம் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது. எங்கள் அமைப்பு அரசியல் அமைப்பாக இல்லாததால் இந்தக் கட்டுப்பாட்டுக்குள் நாங்கள் வரவில்லை.

கட்சிக்குள் எங்கள் அமைப்பைப்பற்றிக் கருத்துப்போர் நடைபெறுகின்றதென்பதை ஒப்புக்கொள்கின்றேன். கருத்துவேறுபாடுகள் இருக்கும் பொழுது கருத்துப்போர் இருக்கத்தான் செய்யும். ஏன் இந்த கருத்துவேறுபாடுகள்? ஏனெனில் மத்திய குழுவில் இருக்கும் ஓரிரு உறுப்பினர்கள் தங்களால் தான் அமைப்புக்களை உருவாக்க முடியும் என்றும், மற்றவர்களால் அல்ல என அவர்கள் நினைக்கின்றார்கள். உதாரணத்துக்குப் பிரசைகள் முன்ன

ணியை (Citizen Front) எடுத்துக்கொள்ளலாம். இந்த முன்னணியை இரண்டு மத்தியகுழு உறுப்பினர்கள் உருவாக்கி ஆரம்பக் கூட்டத்தை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் கூடிக் கலந்துரையாடியுள்ளனர். இந்தப் பிரஜைகள் முன்னணி அமைப்பைப் பற்றி எவரேனும் எதுவித கேள்வியும் எழுப்பவில்லை. எங்களுக்கும் கட்சிக்குள் அதிகளவு ஆதரவுள்ளது. மார்ச் மாதம் 3 ம் திகதி நடந்த எமது முதல் கூட்டத்துக்கு 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் வருகை தந்துள்ளனர்.

(3) கேள்வி:- இப்படி இருக்கையில் கெல உறுமயவை மாத்திரம் ஏன் வேறுபடுத்தி நோக்குகிறார்கள்.

பதில்:- தற்போது கருத்துவேறுபாடு கிடையாது. நாம் கட்சியுடன் ஒத்துழைப்போம் என்பதையும், எம்மால் கட்சிக்கு எவ்விதத் தீங்கும் விளையாது என்பதையும் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது. நாங்கள் கட்சி வளர்ச்சி பெற உதவுகின்றோம். ஏனெனில் எங்களுக்குப் பெரும்பான்மை இன மக்களின் சார்பு பெருகிவருகின்றது. அத்துடன் முசுலிம் மக்களின் சார்பும் இருக்கின்றது. வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகள் முசுலிம்களைத் துன்புறுத்துகின்றனர். விடுதலைப் புலிகளினால் முசுலிம்களின் கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. எங்களது அமைப்பின் அலுவலர் தெரிவில் ஒரு முசுலிமைத் துணைத் தலைவராக ஆக்கியுள்ளோம். பண்டாரவளையில் நடந்த எமது ஆரம்பப் பொதுக்கூட்டத்துக்கு பெருமளவில் முசுலிம்கள் வருகை தந்துள்ளனர். முக்கியமான சிறுபான்மையினரில் முசுலிம் மன்றாயம் (சமூகம்) ஒன்றாகும்.

நல்நோக்குள்ள தமிழர்கள் எல்லோரும் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும். ஏனெனில் இனம், மதம், சாதி, அரசியல் என்ற வேறுபாடில்லாமல் இலங்கையிலுள்ள சகல மக்களும் எதுவித கட்டுப்பாடும் இன்றி சுதந்திரத்துடன் எங்கும் வாழவேண்டும் என்று நாம் போராடுகினறோம். ஆனால் தற்போது இவை சிங்களவருக்கும் முசுலிம்களுக்கும் மறுக்கப்பட்டுள்ளன. தாங்கள் நினைத்த இடங்களிலெல்லாம் தமிழர்கள் மாத்திரம் வாழமுடியும். உண்மையில் இது பாரபட்சமானது. தமிழர்களின் மரபுவழித் தாயகம், வடக்குக் கிழக்கு இணைப்பு ஆகிய கோட்பாடுகளை நாங்கள் எதிர்க்கின்றோம் ஏனெனில் எங்களின் கொள்கையான, சகல இனமக்களும் எங்கும் சுதந்திரமாக வாழலாம் என்ற கோட்பாட்டிற்கு இது எதிரானதாக உள்ளது. இப்படி இருக்கும்

பொழுது ஏன் இந்த மரபுவழித் தாயகம்? இதற்கு வரலாற்று பூகோள ரீதியான சான்றுகள் எதுவும் கிடையாது.

(4) கேள்வி:- உங்களுடைய அமைப்பு இனரீதியானதென்று அநேகர் நினைக்கின்றனர். உங்களுடைய செல உறுமய அமைப்புப் பற்றி அப்படியான ஒரு எண்ணம் மக்கள் மன தில் தோன்றியிருக்கின்றதென்று நினைக்கிறீர்களா?

பதில்:- அப்படித்தான் சொல்வார்கள். அரசாங்கம் இந்த அமைப்பைப் பற்றிக் கவலைப்படுகின்றது. ஓர் அமைப்பு வளர்ந்து பலமாக உருவாகும் போது அரசாங்கம் கவலைப் படுவது இயற்கை. இதனால் தான் ஏரிக்கரைப் பத்திரிகை கள் எங்களைக் கடுமையாக விமர்சிக்கின்றன. மறுபுறம் இடதுசாரிகளும் தங்களுக்குக் கிடைக்கும் அற்பசொற்ப ஆதரவுகளும் எங்களுக்குக் கிடைக்கின்றதென்று கவலைப் படுகின்றனர். கம்யூனிசக் கட்சியும் லங்கா சமசமாசக் கட்சியும் அண்மையில் இணைந்துகொண்டமை ஒரு கிழவ னும் கிழவியும் திருமணம் செய்ததற்கு ஒப்பாகும். இத்தம் பதிகளுக்குப் பிள்ளை பிறக்கப்போவதில்லை. இடதுசாரி களுக்குக் கிடைத்து வந்த சார்பு முடிவடைந்து விட்டது. இதனால் இடதுசாரிகளும் எங்களைக் கடுமையாக திறனாய்வு செய்கின்றனர்.

(5) கேள்வி:- ஆனால் தமிழர்கள் மத்தியிலும் உங்கள் அமைப் பைப்பற்றி தப்பெண்ணம் எழுகின்றதே? உங்கள் அமைப்பு இனவெறுப்பை தூண்டிவிடக்கூடும் என்று நினைக்கின்றார் கள். அவர்கள் இடையில் அச்சம் இருப்பதை ஒத்துக்கொள் கிறார்களா?

பதில்:- எமது குறிக்கோள்களையும் நாம் எதற்காகப் பாடு கிறோம் என்பதையும் தமிழர்களுக்கு தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் முழுமையாக தெளிவுபடுத்த முடிய வில்லை. வருங்காலத்தில் இதை நாம் தீர்க்க முயற்சிப்போம். பெரும்பான்மையினரின் உரிமைகளுக்கும் முசுலிம்களின் உரிமைகளுக்கும் பாடுபடுபவர்களை வகுப்புவாதிகளென்றும் தமிழர்களின் உரிமைகளுக்குப் பாடுபடுபவர்களை விடுதலை வீரர்கள் என்று சொல்வதும் ஒரு வேடிக்கையான நிலைப் பாடாகும். விடுதலைப் புலிகளின் நன்கு அமைக்கப்பட்ட அனைத்துலக தகவல் தொடர்பு சாதனங்களால் இந்நிலை உருவாகியுள்ளது. தமிழர்கள் நடுவில் எங்கள் அமைப்பைப் பற்றி அவநம்பிக்கை இருக்கிறது. நாம் அதைச் சீர் செய்ய வேண்டும்.

(6) கேள்வி:- உங்கள் அமைப்பு இனவெறுப்பு அற்றதென்றால் சிங்கள மக்களின் உரிமைகளுக்காக மட்டும் பாடுபடுவதில்லை என்றால் நீங்கள் ஏன் உங்கள் கொள்கைகளை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஊடாகப் பரப்பவில்லை?

பதில்:- எங்களுடைய அமைப்பு ஓர் அரசியல் அமைப்பல்ல. சகல இன மக்களையும், சகல கட்சிகளில் உள்ளவர்கள் எல்லோரையும் கெல உறுமய அமைப்பில் இணையும்படி வேண்டுகின்றோம். இதைச் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து கொண்டு செய்யமுடியாது. முன்னாளில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த திருமேர்வின் குலரத்தினா எங்கள் அமைப்பின் செயற்குழுவில் உப தலைவராக இருக்கின்றார். (இவர் கொள்கை சிக்கலால் ஐ. தே. கட்சியிலிருந்து வெளியேறியவர்) ஐக்கிய தேசியக் கட்சியில் பெரும் செல்வாக்குடன் இருந்தபோது விலகிய டாக்டர் நெருவிர் பர்னாந்து இப்போது எங்கள் அமைப்பில் இருக்கின்றார்.

(7) கேள்வி:- இந்த அமைப்பு எங்கே சென்றுகொண்டிருக்கின்றது? சிலர் இதில் இருந்து விலக ஆரம்பித்திருக்கின்றார்கள் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றனவே?

பதில்:- ஒருவரும் விலகவில்லை. எங்கள் உறுப்பினர் தொகை கூடியுள்ளது. மக்களுக்கு இனப்பிரச்சினையையிட்டும், அதன் தீர்வைப்பற்றியும் விரிவாக எடுத்துக் கூறி விளங்க வைப்பதே எங்கள் தலையாய நோக்கமாகும். மலைநாட்டில் தற்போது நடப்பவைபற்றி மக்களுக்கு முக்கியமாகத் தெரியப் படுத்தவேண்டும். மத்திய மாகாணம், ஊவாமாகாணத்தின் சில பகுதிகள் சப்பிரகமுவமாகாணம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு தமிழ் அரசு முதன் முறையாக மலைநாட்டில் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. எங்கள் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் தமிழர்களின் படையெடுப்புக்கள் அனுராதபுரம், பொலநறுவை ஆகியவற்றிற்குத் தெற்கே நடக்கவில்லை. பத்துலட்சம் வாக்காளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு தலைவரும், பலம் வாய்ந்த அமைச்சருமான திரு. தொண்டமான் அவர்களின் கட்சியே மலைநாட்டில் ஆட்சி புரிகின்றது. இதற்கு உதாரணமாக நுவரெலியாவிலிருந்த உதவி அரசாங்க அதிபர் பணிமனையைத் தனது கட்சி பலமாகவுள்ள கொட்டகலவுக்கு மாற்றி நுவரெலியா மாவட்டத்திலுள்ள சிங்களவர்களுக்கும், சில தமிழர்களுக்கும் இன்

னல்களை அவர் விளைவித்துள்ளார். நுவரெலியா மாநகரசபை முதல்வரும் அங்குள்ள பெரியோர்களும் எதிர்ப்புத் தெரிவித்தும் பயனளிக்கவில்லை. அடுத்ததாக கொட்டகலையிலுள்ள சிறிபாத உயர்கல்வி நிறுவனம் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியாக மாற்றப்பட்டுள்ளது. இங்கே இனரீதியான விகிதாசாரம் பேணப்படவில்லை. அத்துடன் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளாகிய மாணவர்களின் கல்வித் தகைமை குறைக்கப்பட்டுள்ளது மாணவர்களின் வயதெல்லை கூட்டப்பட்டுள்ளது. இது சிங்களவர்களுக்கும், முசுலிம்களுக்கும் பாரபட்சம் காட்டப்படுவதை எடுத்துக் காட்டுகின்றது.

திரு. தொண்டமான் அவர்கள் தோட்டங்களை தனியார் மயப்படுத்துவதற்கு சார்பாக இருக்கின்றார். இச்செயல் சிங்களவர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது. தோட்டங்களில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் இருப்பது அவர்களுக்குத் தெரியும். அத்துடன் தனியார்மயப்படுத்தப்படும் போது 200,000 ஊழியர்கள் தங்கள் தொழில்களை இழப்பர், என்பதும் அவருக்குத் தெரியும். இப்படி நடக்கப்போவது முன்கூட்டியே தெரிந்திருந்தும் திரு. தொண்டமான் தனியார் மயப்படுத்துவதற்கு சார்பாக இருக்கின்றார். இரண்டு கேள்விகள் எனது மனத்திரையில் எழுகின்றன. மேலதிக ஊழியர்களை வேறு இடங்களில் குடியமர்த்தத் திட்டமிட்டுள்ளாரா? அப்படியாயின் எங்கே குடியமர்த்தப்போகின்றார்? சிவனொளிபாத மலையைச் சுற்றியுள்ள காடுகள் மாத்திரம் எஞ்சியுள்ளன. தோட்டத்தொழிலாளர்கள் சென்ற 12மாதங்களாகக் காடுகளை அழித்து வருகின்றனர். அவர்கள் இவ்விடங்களில் குடியேற்றங்களை உருவாக்கப் போகின்றார்கள் என்பதுதான் எமது நிலைப்பாடாகும். மூன்று வாரங்களுக்கு முன் மேல் றநளையில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் காட்டுக்குள் மரங்களைத் தறிக்கும் போது வனபரிபாலன மேலாளராலும், காவல்துறையினராலும் கைது செய்யப்பட்டனர் எனப் பத்திரிகை வாயிலாக அறியமுடிகின்றது. கைதுசெய்யப்பட்ட தொழிலாளர்களைத் தோட்டத்திற்கூடாகக் காவல்துறை நிலையத்துக்கு அழைத்துச் செல்லும் பொழுது 500க்கும் அதிகமான தோட்டத்தொழிலாளர்கள் காவல்துறையினரைத் தாக்கி அவர்களை விடுவித்துள்ளனர். அரசாங்கம் இதற்கு நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை, இப்படியான நடவடிக்கைகள் சிங்களவர் வசிக்கும் இடங்களில் ஏற்பட்டால் என்ன நடந்திருக்கும்? முழுக்கிராம வாசிகளுமே கைதுசெய்யப்பட்டிருப்பார்கள். அத்துடன் அக்கிராமமும், முற்றாக எரிக்கப்பட்டோ, அழிக்கப்பட்டோ இருக்கும்.

# “தாக்குதல் நடவடிக்கை சிக்சர்”

—சர்மினந்த பர்டினாந்து — (ஐலண்ட் 22-03-1992)




சென்ற பத்து ஆண்டுகளாக விடுதலைப் புலிகளுடன் போரில் ஈடுபட்டதன் பின்பு அவர்களை இராணுவ ரீதியாகவும் 'அரசியல் ரீதியாகவும் தோற்கடிக்கக் கூடிய நிலைக்கு நாம் இப்பொழுது வந்துள்ளோமா? வான் மற்றும் கடற்படையின் உதவியுடன் பிரிகேட் படையணிகளை எதிர்க்கக் கூடியவகையில் விடுதலைப் புலிகள் ஆற்றல் மிக்கவர்களாக காலப்போக்கில் மெதுவாக ஆனால் உறுதியுடன் வளர்ந்துள்ளனர். முல்லைத்தீவுக்குத் தெற்கே 15 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதும் வடமாகாணத்தைச் சேர்ந்ததுமான ஒரு சிறிய பட்டணமாகிய கொக்குத்தொடுவாய்க்கு வடக்கே முப்படைகளும் ஒன்றிணைந்த பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளுமாறு சென்ற செவ்வாய்க்கிழமை அரசாங்கம் பணித்தது. விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க வேண்டுமென உறுதிபூண்ட அரசியல் தலைமைப் பீடம், சிறப்புப்படையினர் உட்பட 2000 க்கு மேலான படையினரைப் பெரிய போர்களில் ஈடுபடுத்தும் ரீ 55 (T55) ரகத் தாங்கிகள், ரீ 85 (T 85) ரகக் காலாட்படைப் போர் வாகனங்கள், 130 மில்லிமீற்றர் பீரங்கிகள் ஆகியவற்றுடனும், வான் படையின் உதவியுடனும் கொக்குத்தொடுவாய்க்குத் தெற்கே சொற்ப தூரத்திலிருக்கும் காட்டுப்பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சகல வசதிகளையும் அழிப்பதற்கு அனுப்பியது.

இப்படி அனுப்பப்பட்ட இராணுவத்தினர் விடுதலைப் புலிக ளின் பலத்த எதிர்ப்பை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. விடுத லைப் புலிகள் காட்டுப்பகுதியில் அமைத்துள்ள அவர்களின் பல மிக்க கட்டளை பிறப்பிக்கும், கட்டுப்படுத்தும் நிலையம் உட்பட மற்ற வசதிகளை ஊடுருவிச்சென்ற காலாட்படையினர் அவர்க ளது பெரிய எதிர்ப்பை எதிர்நோக்கினர். முதல் 24 மணித்தி யாலப் போரில் தாங்கிப் பிரிவைச் சேர்ந்த ஒரு கனிட்ட அதி காரி உட்பட 28 படையினர் கொல்லப்பட்டனர். காயமுற்றவர் களது தொகை அறுபதாக இருக்கலாமென மூத்த மேலாளர்கள் கூறினர்.

இந்தச் சமரில் இரண்டு தாங்கிகள் சேதப்படுத்தப்பட்டன. நூறு விடுதலைப் புலிகள் இறந்துள்ளதாகக் கூட்டுப்படைத் தலை மையகம் கூறியுள்ளது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்குப் படைகளை அனுப்ப முன்னர் வன்னி மானிலத்தை தனது மேலாதிக்கத்தின் கீழ் வைத் திருக்க அரசாங்கம் உறுதி கொண்டுள்ளது. வடக்கிலுள்ள மாவட் டங்களான வவுனியா, மன்னார், மற்றும் முல்லைத்தீவு ஆகிய வற்றைக் கொண்ட வன்னி, அரசாங்கத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

வன்னி மாநிலத்தில் முக்கியமான பட்டினங்களை இராணு வம் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றது. எஞ்சிய பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடற்கரை யோரங்களில் அமைந்துள்ள சிறிய முகாம்களில் இருந்து படை யினர் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். வடக் குக் கிழக்குப்போரை உறுதியுடன் நடாத்திச் செல்வதற்காகச் சிறிய தொழிற்சாலை உட்பட பயிற்சிக்கான வசதிகள், வழங்கல் நிலை யங்கள், தங்ககங்கள் (முகாம்) மற்றும் வசதிகளையும் காட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் வைத்திருக்கின்றனர். விடுதலைப் புலிகளால் காட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த வசதி களை அழிப்பதற்காக முற்றுகையிட்ட வேளைகளில் இராணுவத் தினர் பெரும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்ததுடன் பெரும் இழப்பையும் சந்திக்கவேண்டியிருந்தது.

''சிக்சர்'' (Sixer) எனப்பெயரிடப்பட்டு இப்பொழுது நடை பெற்றுவரும் முப்படைகளும் இணைந்த இந்த இராணுவ நட வடிக்கை, வன்னி மாநிலத்திலுள்ள முல்லைத்தீவுக்கு தெற்கே அமைந்துள்ளதும் வடமர்காணத்தைச் சேர்ந்ததுமான சிறிய பட் டணமான கொக்குத்தொடுவாய்க்கு வடக்கே அமைந்துள்ள விடு தலைப் புலிகளின் முக்கியமான பயிற்சி தங்ககங்களை வழங்கல் நிலையங்கள், மற்றும் வசதிகளை அழிப்பதற்காகவே மேற்கொள் ளப்படுகின்றது. இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணு

வத்தினருக்கும் அவர்களது தளபாடங்களுக்கும் விடுதலைப் புலிகள் பாரிய சேதங்களை சென்ற செல்வாய்க்கிழமை ஏற்படுத்தியிருந்தனர்.

## வெற்றி

இந்த நடவடிக்கை எதிரிகளுக்குப் பாரிய இழப்புகளை ஏற்படுத்தியிருப்பதாகவும், இதன் நோக்கம் நிறை வேற்றியிருப்பதாகவும் மூத்த இராணுவ மேலாளர் ஒருவர் கூறினார்.

தற்போதைய இராணுவ நடவடிக்கை முல்லைத்தீவு வெலிஓயா இராணுவ நடவடிக்கைகளில் ஆறுமாதங்களில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது நடவடிக்கையாகும். சிங்களக் குடியேற்றவாசிகளுக்கும் பிற தொடர்புகள் அற்ற இடங்களில் அமைந்துள்ள இராணுவ தங்ககங்களில் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்கியதும் நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகள் இருந்து இயங்கி வந்ததுமான காட்டுப்பகுதியில் அவர்களது தங்ககங்களை அழிப்பதற்காக பிரிகேட் சிறப்புப்படையணியைச் சேர்ந்த படையினர் உட்பட ஆயிரக்கணக்கான படையினரைச் சென்ற ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் அரசாங்கம் அனுப்பியது.

மின்னல் வேக நடவடிக்கை எனப்பெயரிடப்பட்ட அந்த நடவடிக்கையில் இராணுவத்தினர் வெற்றியீட்டியிருந்தனர். ஆனால் இழப்புக்கள் மிகவும் கூடுதலாக இருந்தது. எழுபதுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். போரில் ஈடுபட்ட சுமார் அறுநூறு இராணுவத்தினர் காயமுற்றனர். பலபடையினர் கண்ணிவெடியில் சிக்கிக் காயமுற்றனர். போர்முனையிலேயே 63 க்கும் மேலான படையினரின் உறுப்புக்களை கழற்ற வேண்டியிருந்தது.

விடுதலைப் புலிகள் தங்களுடைய கட்டளை பிறப்பிக்கும், கட்டுப்படுத்தும் நிலையம் உட்பட மற்ற வசதிகளை நோக்கி முன்னேறிய படையினரைத் தடுப்பதற்குப் பேரச்சம் தரும் வகையில் சமரை நடாத்தினர். இதில் பல விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டனர்.

முன்னைய நடவடிக்கையில் இருந்ததைப் போன்று இந்த 'சிக்சர்' நடவடிக்கையின் போதும் படையினர் விடுதலைப் புலிகளின் இடைவிடாத கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தைச் சந்திக்க வேண்டியிருந்தது. 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கிகள், ஆர். பி. ஜி ஏவுகணைகள் (RPG) உள்ளூர்த் தயாரிப்பு ஆயுதங்கள் மற்றும் நவீன ஆயுதங்களைத் தாங்கிய விடுதலைப் புலிகள் பேரச்சம் தரும் வகையில் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு கடுமையாக இருந்தது.

போர்த் தாங்கிகளும் காலாட்படையினரின் தாங்கிகளுமே விடுதலைப் புலிகளின் முக்கிய இலக்காக இருந்தன. இந்தத் தாங்கிகளால் எழக்கூடிய அச்சுறுத்தலை விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் நன்கு உணர்ந்திருக்கின்றது இவற்றை விடுதலைப் புலிகளுடைய கண்ணிவெடிகளால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அரசியல் தலைமைப்பீடம் தன்னாலியன்ற யாவற்றையும் செய்தால் அன்றி வடக்குக் கிழக்கில் நடைபெற்றுவரும் போரில் வெற்றி பெறுவதற்கு இந்த புதிய ஆயுதங்கள் அரசாங்கத்துக்கு உதவி செய்யமாட்டாது. கிளர்ச்சிக்கெதிரான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள இராணுவத்தினருடைய தன்மை, அவர்களுக்குத்தேவைப்படும் வழங்கல் வசதிகள், மற்றும் மக்கள் ஆதரவு ஆகியன முக்கியமாக விளங்குகின்றன.

## கொல்லப்பட்டனர்

கொக்குத்தொடுவாய்க்கு வடக்கேயுள்ள காடுகளில் கடும் சமர் நடந்து கொண்டிருந்த அந்த வேளையில் அந்த காயப்பட்ட படையினர் இடைவிடாது அனுராதபுர மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். வன்னிக்காடுகளில் இராணுவத்தினர் சமர் புரிய ஆரம்பித்த 24 மணித்தியாலங்களுக்குப் பின் 20 இராணுவத்தினரின் உடல்கள் அனுராதபுரத்துக்கு வந்து சேர்ந்தன இதில் பிணைக்கப்பட்ட யாவருக்கும் பாரிய அழிவை ஏற்படுத்தும் ஈழப்போரில் மிக அண்மையில் பலியானவர்களே இவர்கள்.

அனுராதபுர வானூர்தித் தளத்திலிருந்து மருத்துவமனைக்கு காயமடைந்த இராணுவவீரர்கள் இராணுவ நோயாளி வண்டிகள் (அன்புலன்சு) மூலம் விரைவாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்குப் படைகளை அனுப்பு முன்னர் வன்னியில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. விடுதலைப் புலிகளுடைய நடவடிக்கைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவர இந்தியா காலத்துக்குக் காலம் முன்வைத்த இணக்கப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றமையால் வேறுவழியில்லாது யாழ்ப்பாணத்தை இராணுவ ரீதியாகவே அரசாங்கம் வெற்றிகொள்ளவேண்டியுள்ளது யாழ்ப்பாணத்தைத் தாக்கி விடுதலைப்புலிகளை இல்லாதொழிப்பதற்கு இதுதான் நல்ல நேரமென பலர் நம்புகின்றனர்.

ஆனால் விடயத்தில் நாம் கவனமாக இருத்தல் வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளுமுன் வன்னியை நாம் கைப்பற்ற வேண்டியது மிக முக்கியமானது. வடக்குக்கு மிகவும் அண்மையிலுள்ள சிங்களக் குடியேற்றமான வெலிஓயா பகுதியில் சிங்களவர்களை விரட்டியடிக்க விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் உறுதிபூண்டுள்ளது. வெலிஓயா வன்னியின் ஒரு பகுதியாக உள்ளது.

# இந்திய மாகடல் பகுதியில் உருவாகும் ஆதிக்க சமநிலை

இந்திய மாகடல் பகுதியில் எதிர்காலத்தில் எழும் ஆதிக்க சமநிலையின் செல்வாக்கை பொறுத்துத் தான் சிறிலங்காவின் இந்தியவுடனான நீண்டகால உறவு தங்கியிருக்கும்.

தற்பொழுது எழுத்தளவிலான இச்சமநிலை இந்தியாவின் சார்பிலேயே சாய்ந்துநிற்கின்றது. இந்திய மாகடலின் ஓரங்களிலுள்ள ஏனைய நாடுகளை விட துணைகண்டத்தின் ஆதிக்கம் மேலாகவுள்ளது.

இந்த ஆதிக்கசமநிலை ஒவ்வொரு நாடும் தந்தமது நிலையை பலப்படுத்த முற்படும்போதும், சோவியத் அமைப்பின் சீர்குலைவு சர்வதேசவிவகாரங்களை பாதித்து முன்னெடுத்து செல்வதும், இந்த ஆதிக்கசமநிலையை தவிர்க்க முடியாதவாறு மாற்றியமைக்கும்.

சென்ற வாரம் இந்தியா தனது சுதந்திர நிலைப்பாட்டை வலியுறுத்தி அணுப்பரவலாக்கலுக்கு எதிரான உடன்படிக்கையில் கைச்சாத்திடாததன் மூலம் உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும் தனது நிலையை முன்னெடுத்துக் காட்டியுள்ளது.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், அமெரிக்க டியோகாசிய இராணுவத்தளம் அமைந்துள்ள சாகோச தீவுகளை தனதெனக் கோரும் இந்திய மாகடலிலுள்ள சிறிய தீவான மொறிசியஸ்சிற்கு இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்டார். மொரிசியஸ்சின் இவ் உரிமைக்கோரலுக்கு புதுடில்லி நீண்டகாலமாக சார்பாக இருந்து வந்துள்ளது.

மொறிசியஸ் தீவு தன்னை குடியரசாக பிரகடனப்படுத்தி கொண்ட மார்ச் 12ஆம் திகதி கொண்டாட்டங்களில் ராவ் பிரதம விருந்தாளியாக கலந்து கொண்டார். மகாத்மாகாந்தியின் 1929 ஆம் ஆண்டின் சத்தியாக்கிரக இயக்க ஆண்டு தினத்தைக் குறிக்கும் இத்திகதியில் குடியரசுப் பிரகடனம் செய்தமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை 86659
யாழ்ப்பாணம்

அக்காலகட்டத்தில் தமிழ் நாட்டில் இந்திய இராணுவத்திற்கு வங்காளவிரிகுடாவை கண்காணிக்க கூடியதும், இந்திய மாகடலில் தனக்கு ஓர் ''ஆதிக்க'' நிலையை உருவாக்கக் கூடியதுமான ஓர் புதிய தளம் திறக்கப்பட்டது.

பூமி கோளத்தின் தலைநகரான வாசிங்டனில் வெளிவிவகார செயலாளர் ஜே என்.டிக்சிற் அணுபரவலாக்கத்திற்கு எதிரான உடன்படிக்கையில் இந்தியா கைச்சாத்திடாததை மீண்டும் வலியுறுத்தி அணு ஆயுத பிரச்சனை தீர்வு பற்றி அமெரிக்கர்களுடனும் பாகிஸ்தானியர்களுடனும் இரு நாட்டு பேச்சுக்களை நடத்த வேண்டுமென்று வலியுறுத்தினார்.

அணுப்பரவலாக்கத்திற்கு எதிரான உடன்படிக்கையில் இரகசியமாக அணு ஆயுதங்களை உற்பத்தி செய்துள்ளது என சந்தேகிக்கப்படும் தென் ஆபிரிக்காவும், பிரான்ஸ் சீனா ஆகியவையும் கைச்சாத்திடுவதற்கு தீர்மானித்துள்ளன என்று அண்மையில் அறிவிக்கப்பட்ட போது இந்தியாவுக்கு இக்கட்டான நிலை ஏற்பட்டது. மேற்கூறிய நடவடிக்கை அணு ஆயுதங்களின் பரவலாக்கத்தை கட்டுப்படுத்தும் உடன்படிக்கையில், இந்தியாவும் பாகிஸ்தானும் கைச்சாத்திட வேண்டும் என்ற கருத்தை அதிகரித்தது.

பாகிஸ்தானை தண்டித்தது போல் இந்தியாவுக்கு அமெரிக்க இராணுவ உதவியை குறைப்பது குறைந்தளவு பாதிப்பையே ஏற்படுத்தும் காரணம் இந்தியாவிற்கான தற்போதைய அமெரிக்க இராணுவ உதவி கணிசமானதாக இல்லை.

சர்வதேச நாணய நிதியம்/ உலக வங்கி ஆகியவற்றின் உதவிகளுடன் இவ்வணு பரவலாக்கத்திற்கு எதிரான உடன்படிக்கையும் தொடர்பு படுத்தப்பட்டால் இந்தியாவின் நிலை சிக்கலாகலாம்.

இவ் உடன்படிக்கை பாரபட்சமானது. அது ஐந்து பெரிய நாடுகளின் அணு உற்பத்தி ஏகபோக உரிமையை வளர்ப்பதாகவும், அவர்கள் தொடர்ந்தும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யவும், ஏனைய நாடுகளை அவ் உற்பத்தியில் ஈடுபட தடை செய்வதாயும் உள்ளது என்று இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது.

பிரான்சும், சீனாவும், இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்டாலும் அணு ஆயுத பாதுகாப்பை கைவிட தேவையில்லை.

# இந்து சமுத்திரப் பிராந்திய சமநிலை வலு

| | சிறிலங்கா | இந்தியா | பாகிஸ்தான் | அவுஸ்திரேலியா | தென்னாபிரிக்கா | இந்தோனேசியா | ஈரான் | சவூதி அரேபியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| சனத்தொகை | 17 மில்லியன் | 900 மில்லியன் | 115 மில்லியன் | 17 மில்லியன் | 37 மில்லியன் | 182 மில்லியன் | 54 மில்லியன் | 10 மில்லியன் |
| கடன்பழு டாலர்கள் | 6 பில்லியன் | 70 பில்லியன் | 20 பில்லியன் | 121 பில்லியன் | 21 பில்லியன் | 58 பில்லியன் | 6 பில்லியன் | 23 பில்லியன் |
| பாதுகாப்புச்செலவினம் | 400 மில்லியன் | 09 ,, | 3 பில்லியன் | 8 ,, | 4 ,, | 2 பில்லியன் | 4 பில்லியன் | 27 பில்லியன் |
| ஆயுதபடையினர் | 130,000 | 1.2 மில்லியன் | 5,65,000 | 68,000 | 72,000 | 278,000 | 528,000 | 77,000 |
| தாங்கிகள் | 25 | 3100 | 1980 | 103 | 250 | 130 | 740 | 700 |
| போர்விமானம் | 7 | 630 | 327 | 158 | 259 | 81 | 200 | 253 |
| போர்க்கப்பல் | | 28 | 13 | 10 | | 17 | 8 | 8 |
| நீர்மூழ்கி | | 17 | 6 | 6 | 3 | 2 | | |
| விமானம்தாங்கிகள் | | 2 | | | | | | |
| அணுஆயுதம் | | இருக்கலாம் | இருக்கலாம் | | இருக்கலாம் | | | |
| ஏவுகணை | | தயாரிக்க முடியும் என நம்பப்படுகின்றது | தயாரிக்க முடியும் என நம்பப்படுகின்றது | தயாரிக்க முடியும் | தயாரிக்க முடியும் என நம்பப்படுகின்றது | | ஸ்கட் குறித்து ஆராய்ச்சி செய்கின்றது | சில்க்வாம் |

தென் ஆபிரிக்கா இவ்வுடன்படிக்கையில் வெளிப்படையில் கைச்சாத்திட இணங்கினாலும் அது பல அணுகுண்டுகளை உற்பத்தி செய்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது அதே நேரத்தில் ஈரான், சீனா, உதவியுடன் அணு ஆயுத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

எழுத்தளவில் இந்தியாவின் ஆயுதம் தரித்த படையினர் போர்த்தாங்கிகள், தாக்கும் வானூர்திகள். போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையளவிலான மேலாண்மை கவர்ச்சிகரமிக்கதே.

இக்கணக்குகள் மயக்கம் தருபவையாக உள்ளன ஏனெனில் அவை சீனாவின் பயமுறுத்தல்களை பிரதிபலிக்கவில்லை. மேலும் இப்பகுதியில் மறைந்திருக்கும் ஆற்றலை உள்ளடக்கிய ஏனைய நாடுகள் யாவும், தத்தமது ஆயுதபடைகளை வலுப்படுத்தவும் கேந்திர முக்கியத்துவ ஆளுமையை வளர்க்கவும் ஏதுவான நோக்கங்களைக் கொண்ட இராணுவப் பெருக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

இந்தியாவின் தற்போதைய கேந்திர வடிவான எல்லைகள் மலாக்கா நீரிணை, பேபல் மண்டேப் பிரதேசம் வரையும் விஸ்தரித்துள்ளது இவ்விரண்டு பகுதியையும் நீண்ட தூர கண்காணிப்பு வானூர்திகளாலும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்வானூர்திகளாலும் கண்காணிக்க முடியும்.

இந்தியாவின் வான்படையால் வான்வெளியில் படையினர் இருக்குமிடங்களுக்கு தாங்கிகளைக் கொண்டு செல்லக்கூடியதாக இருப்பது அல்ந்மாறுன் நிக்கோபர் தீவுகளில் நிறுவப்படும் கடந்தகால போர்பயிற்சிகலாசாலையையும் அதன் ஆளுமையையும் மேலும் விரிவுபடுத்தும்.

இப்பிராந்தியத்தின் ஏனைய நாடுகளும் கடந்தபத்து ஆண்டுகாலத்தில் வாளாவிருக்க வில்லை. அவைகளின் ஆதிக்க சமநிலை மாறி வருகிறது.

சவுதிஅரேபியாவும் ஈரானும் வரையறுக்கப்பட்ட தூரத்திற்குச் செல்லும் ஏவுகணைகளை வைத்திருக்கின்றன அதேவேளை இந்தியா உட்பட மற்றும் நான்கு நாடுகள் ஏவுகணைகளைத் தயாரிக்கும் திறனைப்பெற்றுள்ளன

இந்நாடுகளில் அநேகமாக எல்லாமே செயற்கைக்கோள்களை உற்பத்தி செய்யவும் அவற்றை ஏவும்திறனையும் கொண்டிருக்கின்றன.

ஆனால் அந்நாடுகள் எல்லாம் எதிர்கால வளர்ச்சியை தடை செய்யும் பல மில்லியன் டாலர்களுக்கு கடனாளியாக உள்ளன.

# எங்கே பஞ்சம்?

எங்கே இருக்குது பஞ்சம் - இப்ப
எதுலே நமக்குப் பஞ்சம் - நான்
ஏட்டிக்குப் போட்டியா கேக்க மாட்டேனுங்க
எனக்குத் தெரியணும் கொஞ்சம்

(எங்கே)

அங்கே இங்கே என்று எங்கே அலைந்தாலும்
எல்லா வேலைக்கும் லஞ்சம் - நம்ம
லஞ்சம் கொடுத்தாலும் காரியம் ஆகலே
லஞ்சத்துக் கிருக்கா பஞ்சம் -நம்ம நாட்டிலே
லஞ்சத்துக்கிருக்கா பஞ்சம்...

(எங்கே)

ஒத்த ரூபாய்க்குள்ள சினிமா டிக்கெட்டை
பத்து ரூபா சொல்லி விக்கிறான் -அதை
சத்தமில்லாம வாங்கிட்டு போறவன்
ஒக்கார சீட்டுல்லே நிக்கறான் - மனுஷன்
ஒக்காரச் சீட்டுல்லே நிக்கறான்

(எங்கே)

கள்ளக்காதலுக்குப் பஞ்சமா - குடும்பக்
கட்டுப்பாட்டுக்குத்தேம் பஞ்சமா - இந்த
பொல்லாத ஒலகத்தில் கணக்கெடுத்துப்பாரு
புள்ளே பெறப்பது கொஞ்சமா - நம்ம நாட்டுலே
புள்ளே பெறப்பது கொஞ்சமா

(எங்கே

சட்டங்களுக்குத்தேம் பஞ்சமா - கள்ளச்
சாராயத்துக்குத்தேம் பஞ்சமா
கோர்ட்டிலே கேசுகள் பஞ்சமா - லாட்டரி
சீட்டுக்களுக்குத்தேம் பஞ்சமா - நம்ம நாட்டுலே
லாட்டரிச் சீட்டுகளுக்குத்தெம் பஞ்சமா

(எங்கே)

வாகனங்களுக்குப் பஞ்சமா - நவ
நாகரீகத்துக்குப் பஞ்சமா - இங்கே
வரதட்சணைக்குப் பஞ்சமா - அதை
வாங்குகிற ஆளுக பஞ்சமா - நம்ம நாட்டுலே
வரதட்சணை வாங்குகிற ஆளுக பஞ்சமா

(எங்கே)

நம்ம உழைப்புகளுக்குப் பஞ்சம் - மனித
ஒற்றுமைகளுக்குப் பஞ்சம்
உண்மைக்கு இங்கே பஞ்சம்
நன்மைக்கு இங்கே பஞ்சம்
உழைக்கும் வர்க்கம் ஆளனும் - நம்ம
ஒற்றுமையாக வாழணும் - இதை
உரைத்திடும் முத்துமாரி சொல்லு போல
உள்ளதைச் சொல்லி வளரணும்

(எங்கே)

(-நன்றி வரப்புவெளியில் ரெக்கை
இரண்டு பாவலர் ஓம் முத்துமாரி)

# நானே பேனா

நெஞ்சில் நெருப்புக்கோடு
கிழித்த என் விரலும் சூடு

முள்மூடிய பலாத்தோலுக்குள்
தேனைச் சிறைப்பிடித்த சுளைபோலே
என் கலை வாழ்க!

நான் வெறுக்கும் என்னை
அதோ!
சீற்று விசிறியால்
சிதமிசைக்கும் தென்னை!

ஒரு சின்ன ஊசியில்
பெரிய கிழிசலைத்
தைக்க முடியும் - என்ற
நம்பிக்கையில் தான்......

பாக்கெட்டில் இருக்கும் போது
அது பேனா
வார்த்தைகளை வார்க்கும் போது
நானே பேனா!

(உயிரின் கையெழுத்து சூர்யபாலன்)

320.5
C